# தாரகை

1



ஸிட்னி ஷெல்டன்

தமிழில் ரா.கி. ரங்கராஜன்

# தாரகை

(முதல் பாகம்)

மூலம்

ஸிட்னி ஷெல்டன்

தமிழில்

ரா.கி. ரங்கராஜன்

**மின்னூலாக்கம் : செல்லா**

அநுராகம்

10 கண்ணதாசன் சாலை

தியாகராய நகர்

சென்னை – 600 017

**Rs. 70.00**

**THARAGAI (Part - I)**
by
Sydney Sheldon

*Translated by*

**Ra.Ki. Rangarajan**

First Edition 2000

*Published by*

**ANURAGAM**
10 Kannadhasan Salai
T.Nagar Chennai - 600 017

*Typeset by*

**Saguram Graphics**
Chennai - 600 024

*Printed at*

**Sakthi Printers**
Chennai - 600 021

## ஆசிரியரின்
## பிற மொழிபெயர்ப்பு நூல்கள்

மேடம் - *மூலம்* ஜெஃப்ரே ஆர்ச்சர்

கண்ணுக்குத் தெரியாதவன்
காதலிக்கிறான்
- *மூலம்* எச்.எஃப். ஸெயிண்ட்

ஒரு தாய், ஒரு மகள் - *மூலம்* டேனியல் ஸ்டீல்

# முன்னுரை

நூலகம்

முதல் பக்கத்தைப் படிக்க ஆரம்பித்தால் கடைசிப் பக்கம்வரை முடிக்காமல் புத்தகத்தை மூட முடியாது என்னும் படியான அளவுக்கு விறுவிறுப்புடன் கதை எழுதும் வல்லமை படைத்தவர் ஸிட்னி ஷெல்டன். அதே சமயம் அவர் எழுத்தில் சமூகப் பிரச்சனையும் இருக்கும். 'தாரகை' கதையும் அப்படிப் பட்டதுதான், கள்ளம் கபடமில்லாத ஓர் இளம் பெண் எப்படி யெல்லாம் வஞ்சிக்கப்படுகிறாள் என்பதைக் கூறுவதோடு, பெண்களுக்கான அமெரிக்கச் சிறைகளில் என்ன கொடுமை கள் நடக்கின்றன என்பதையும் விவரிக்கிறார். அரக்கர் களுக்கு நடுவே இருதயம் படைத்த நல்லவர்கள் இருப்பதை யும் சொல்ல மறக்கவில்லை.

கதாநாயகி ட்ரேஸி, வஞ்சித்தவர்களைப் பழி வாங்குவது என்ற தீர்மானத்துடன், அபார மூளையின் துணை கொண்டு கிரிமினல் காரியங்களில் இறங்குகிறாள். வெற்றியும் பெறுகிறாள். இனிமேல் மனசுக்குகந்த காதலனை மணந்து, நேர்மையான குடும்ப வாழ்க்கை வாழ்வது என்ற முடிவோடு இருக்கையில், மறுபடி ஒரு சபலம் வருகிறது - நாவலின் கடைசி வரிகளில். அந்தச் சபலத்துக்கு அவள் இரையாய்ப் போகிறாளா இல்லையா என்பதைச் சொல்லாமலே விட்டு விட்டார் ஸிட்னி ஷெல்டன். சரியான கில்லாடிதான்!

அமரர் எஸ்.ஏ.பி என்னை ஊக்குவித்து மொழி பெயர்க்கச் செய்த கதை இது. அவருடைய திருவடிகளில் இதை நன்றியுடன் சமர்ப்பித்து, அழகிய முறையில் பிரசுரித் துள்ள கலைஞன் பதிப்பகத்துக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*சென்னை - 40* ரா. கி. ரங்கராஜன்

*25.07.2000*

# தாரகை

## (முதல் பாகம்)

1

நியூ ஆர்லியன்ஸ் நகரில், பிப்ரவரி மாதம் இருபதாம் தேதி, வியாழக்கிமை, இரவு பதினொரு மணி.

கனவில் மிதப்பவள் போல டோரிஸ் தன் உடைகளை மெல்லக் களைந்தாள். முழு நிர்வாணமாக ஆன பின்னர், பிரகாசமான சிவப்பு உள்ளாடையை அணிந்து கொண்டாள்.

அப்போது தான் ரத்தம் தெரியாது.

தன் படுக்கை அறையைக் கடைசி முறையாக நோட்டமிட்டாள். சென்ற முப்பது வருடமாகத் தனக்கு மிக அருமையானதாக ஆகிவிட்ட அந்த அறை சுத்தமாயும் கச்சிதமாயும் இருக்கிறதா என்று மீண்டுமொரு முறை பார்த்துக் கொண்டாள்.

படுக்கையருகே இருந்த மேஜையின் இழுப்பறையை வெளியிழுத்தாள். ஜாக்கிரதையாகத் துப்பாக்கியை எடுத்தாள். பளபளப்பான கறுப்பு நிறத்தில் பயங்கரமான சில்லிப்புடன் இருந்தது அது.

டெலிபோனுக்குப் பக்கத்தில் அதை வைத்து விட்டு பிலடெல்பியாவில் இருக்கும் தன் பெண்ணுக்கு டயலைச்

---

**ஸிட்னி ஷெல்டன் எழுதிய IF TOMORROW COMES என்ற ஆங்கில நாவலைத் தழுவியது.**

சுழற்றினாள். தொலைவிலே மணி அடிப்பதன் எதிரொலி கேட்டது. பின்னர் ஒரு மென்மையான குரல், "ஹலோ," என்றது.

"ட்ரேஸி... உன் குரலைக் கேட்க வேண்டும் போலிருந்தது, கண்ணே."

"அட! நைஸ் ஸர்ப்ரைஸ் தான் அம்மா."

"தூக்கத்திலிருந்து உன்னை எழுப்பிவிட்டேனா? இல்லையே?"

"இல்லேம்மா. சும்மா படித்துக் கொண்டிருந்தேன். படுக்கப் போகலாமா என்று நினைத்திருந்த சமயம் மணியடித்தது. நானும் சார்லஸும் டின்னர் சாப்பிட வெளியே போகலாம் என்றிருந்தோம். ஆனால் பருவ நிலை சரியில்லை. பனி கொட்டோ கொட்டென்று கொட்டுகிறது. அங்கே எப்படிம்மா இருக்கிறது?"

'ஐயோ கடவுளே! இப்போது போய் நாங்கள் பருவ நிலையைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம்!' என்று டோரிஸ் எண்ணிக் கொண்டாள். அவளுக்கு என்னென்னவோ சொல்ல வேண்டுமென்று பார்க்கிறேன். முடியவில்லை....

"அம்மா! டெலிபோனை வைத்துவிட்டாயா?"

ஜன்னலுக்கு வெளியே வெறித்து நோக்கினாள் டோரிஸ். "இங்கே மழை பெய்து கொண்டிருக்கிறது, ட்ரேஸி:"

ஹூம்! இன்னும் சற்றைக்கெல்லாம் நடக்கப் போகிற நிகழ்ச்சிக்குப் பொருத்தமான பின்னணி தான் இந்த மழை!

"என்னம்மா அங்கே சத்தம்?" என்று கேட்டாள் ட்ரேஸி.

"அது இடியின் சத்தம், ட்ரேஸி," என்றவள், குரலில் வலுக் கட்டாயமாக ஓர் உற்சாகத்தை வரவழைத்துக் கொண்டாள். "அது இருக்கட்டும் அங்கே பிலடெல்பியாவில் என்ன நடந்து கொண்டிருக்கிறது? அதைச் சொல்லு."

"அம்மா! தேவதைக் கதைகளில் வருவாளே ராஜ குமாரி, அந்த மாதிரி எனக்கு இருக்கிறதம்மா!" என்றாள் ட்ரேஸி. "இத்தனை சந்தோஷமாக யாரும் இருக்க முடியும் என்று நான் நினைத்ததேயில்லை. நாளை ராத்திரி சார்லஸின் அப்பாவையும் அம்மாவையும் நான் சந்திக்கப் போகிறேன்." அவள் குரலில் ஓர் ஆழம் ஏற்பட்டது. "அவர்கள் பழமையில் ஊறின பெரிய புள்ளிகளாம். எனக்குள்ளே பெருச்சாளிகள் ஓடுகிற மாதிரி இருக்கிறது!"

"கவலைப்படாதே. உன்னை அவர்களுக்கு நிச்சயம் பிடிக்கும், டார்லிங்."

"தன் அப்பா அம்மாவைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று தான் சார்லஸும் சொல்கிறார். சார்லஸ் என்னைக் காதலிக்கிறார். எனக்கு அவர் மீது உயிர். அம்மா, நீ அவரை எப்போது பார்க்கப் போகிறாய் என்று எனக்கு ஒரே துடிப்பாயிருக்கிறது! அற்புதமான மனிதரம்மா!"

"கேட்கவே சந்தோஷமாயிருக்கிறது ட்ரேஸி." என்றாள் டோரிஸ். சார்லஸை அவள் பார்க்கப் போவதேயில்லை. மடியில் பேரக் குழந்தையை வைத்துக்கொண்டு ஒரு நாளும் அவள் சீராட்டப் போவதில்லை.

"ட்ரேஸி! உன்னை அடைவதற்கு அவர் எவ்வளவு அதிர்ஷ்டம் செய்திருக்க வேண்டும்! அது அவருக்குத் தெரியுமா?"

"அதைத்தான் நான் விடாமல் சொல்லிக் கொண்டிருக்கிறேனே!" ட்ரேஸி சிரித்தாள். "என்னைப் பற்றிப் பேசினது போதும். உன்னைப் பற்றிச் சொல்லு. அங்கே எப்படி இருக்கிறது?"

"டோரிஸ், நீங்கள் ரொம்ப ஆரோக்கியமாக இருக்கிறீர்கள்," என்று டாக்டர் சொன்னது நினைவு வந்தது. "நூறு வயது வாழப் போகிறீர்கள். நிச்சயம்."

நூறு வயதாம்! வாழ்க்கையின் சின்னச் சின்னக் குரூரங்களில் இதுவும் ஒன்று!

"எனக்கென்ன, ட்ரேஸி! ஜம்மென்று இருக்கிறேன்," என்றாள், "உன்னோடு பேசுவதால்' என்று எண்ணிய வண்ணம்.

"யாராவது பாய்ஃபிரெண்டு கிடைத்தானா இல்லையா?" என்று ட்ரேஸி கேலி செய்தாள்.

ட்ரேஸியின் அப்பா இறந்து போய் ஐந்து வருடமாகிறது. வேறொரு ஆடவனுடன் வெளியே போவதைப் பற்றி டோரிஸ் நினைத்துக் கூடப் பார்த்ததில்லை.

பேச்சை மாற்றினாள் டோரிஸ். "உன் வேலை எப்படி இருக்கிறது? இப்போதும் சந்தோஷமாய்த்தான் இருக்கிறதா?"

"வேலையில் எனக்குக் கொள்ளைப் பிரியம். கல்யாணத்துக்குப் பிறகும் நான் வேலை பார்க்கலாம் என்று சார்லஸ் சொல்லியிருக்கிறார்."

"பிறர் மனசைப் புரிந்து கொள்ளக்கூடிய மனிதராக அவர் இருப்பார் போலிருக்கிறது."

"போல என்ன, அசலே அப்படித்தான். நீயே பார்க்கப் போகிறாய், பாரேன்!"

இடி உரக்கக் கை தட்டிற்று, அரங்கிற்கு வெளியே யாரோ கரகோஷம் செய்கிற மாதிரி.

நேரமாகிறது.

சொல்வதற்கு இனி எதுவும் இல்லை. கடைசி முறையாக விடை பெற வேண்டியதுதான். "குட் பை, என் கண்ணே," என்றாள் டோரிஸ், தன் குரலில் எச்சரிக்கையுடன் நிதானத்தைக் கைக் கொண்டவளாக.

"கல்யாணத்தின்போது நாம் பார்க்கலாம். அம்மா, நானும் சார்லஸும் தேதி நிச்சயம் செய்ததும் உனக்குப் போன் செய்கிறேன்."

"சரி." கடைசியாக இன்னும் ஒன்று சொல்ல வேண்டியது பாக்கி இருக்கிறது.

"ட்ரேஸி, உன்னை நான் ரொம்ப ரொம்ப ரொம்ப நேசிக்கிறேன் கண்ணே."

ஜாக்கிரதையாக ரிசீவரைத் திரும்ப வைத்தாள்.

துப்பாக்கியை எடுத்துக் கொண்டாள்.

**பி**லடெல்பியாவில் பிப்ரவரி இருபத்தொன்றாம் தேதி, வெள்ளிக்கிழமை. காலை எட்டு மணி.

ட்ரேஸி தன் வீட்டை விட்டுத் தெருவில் இறங்கினாள் - மெல்லிய மழை பெய்து கொண்டிருந்தது.

ட்ரேஸி தான் வேலை பார்க்கும் பாங்க்கை நோக்கி சுறுசுறுப்புடன் நடை போட்டுக் கொண்டிருந்தாள். இரைந்து பாடவேண்டும் போல அவள் மனது உல்லாசமாயிருந்தது. பளிச்சென்று மழைப் பூட்ஸும் அணிந்திருந்தாள். மஞ்சள் நிற மழைத்தொப்பி தலையில் அணிந்திருந்தாள். ஆனால் அவளுடைய அடர்ந்த கூந்தலை அதனால் அடக்கி மறைக்க முடியவில்லை.

அவளுக்கு வயது இருபதுக்குக் கொஞ்சம் மேலே யிருக்கும். ஜீவனுள்ள, புத்திசாலித்தனமான முகம். உதடுகள் உணர்ச்சி நிறைந்திருந்தன. அவளுடைய மின்னும் கண்கள் கோபமாயிருந்தால் ஒரு விதமாயும், களைப்பாயிருந்தால் வேறு விதமாயும், பரபரப்பாயிருந்தால் இன்னொரு வித மாயும் நிறம் மாறும்.

இப்போது, ட்ரேஸி தெருவில் நடந்து செல்கையில் அத்தனை பேரும் அவளுடைய முகத்தில் படர்ந்துள்ள மகிழ்ச்சியைப் பார்த்துப் பொறாமையுடன் புன்னகை செய்தார்கள். ட்ரேஸியும் பதிலுக்குப் புன்னகை செய்தாள்.

'அப்பப்பா! ஒருத்தி இத்தனை சந்தோஷமாக இருப்பது ரொம்ப அக்கிரமம்!' என்று எண்ணிக் கொண்டாள் ட்ரேஸி. 'காதலிக்கிறவனை மணக்கப் போகிறேன் நான்! அவனுடைய குழந்தையை நான் சுமக்கப் போகிறேன். இதைக் காட்டிலும் வேறென்ன வேண்டும்?'

பாங்க்கை நெருங்குகையில் தன் கைக்கடியாரத்தைப் பார்த்துக் கொண்டாள் அவள். எட்டு இருபதாகியிருந்தது.

அவள் வேலை பார்க்கும் பிலடெல்பியா ட்ரஸ்ட் அண்ட் ஃபிடிலிடி பாங்க்கின் கதவுகள் திறக்க இன்னும் பத்து நிமிடமாகும்.

சரியாய் எட்டரை மணிக்குக் கதவுகள் திறந்தன. மழையின் கொடுமையைப் பற்றி ஆளுக்கு ஆள் விமரிசனம் செய்தபடி எல்லாரும் உள்ளே நுழைந்தார்கள்.

தன் மழைக் கோட்டு, தொப்பி முதலியவற்றைக் கழற்றி வைத்துவிட்டுத் தன் இடத்துக்குச் சென்றாள் ட்ரேஸி. ஒரு பாங்க்கிலிருந்து இன்னொரு பாங்கிற்கும், ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கும் ஏராளமான நிதிகளை மாற்றும் பிரிவில் அவள் வேலை பார்த்தாள். முன்பெல்லாம் இது சற்று 'போர்' என்று அவளுக்குத் தோன்றுவதுண்டு. இப்போது கம்ப்யூட்டர் முறைகள் வந்தபின் அவளுக்கு வேலை ரொம்பப் பிடித்து விட்டது. பாங்க் ஒன்று தான் அவளுக்கு ஜீவனாக இருந்தது அதாவது சார்லஸ் அவள் வாழ்க்கையில் பிரவேசிக்கும் வரை.

அவனுடைய கொள்ளுத்தாத்தா காலத்திலிருந்து நடந்து வரும் பெரிய நிறுவனத்தின் பிரதிநிதி என்ற முறையில் அவன் அடிக்கடி ட்ரேஸி வேலை பார்க்கும் பாங்க்கிற்கு வருவது உண்டு. ஒரு முறை அவன் ஒரு கருத்தரங்கில் பேசி முடித்த போது, ட்ரேஸி தைரியமாக அவனிடம் சென்று அவன் கருத்துக்கள் சரியில்லை என்று அவனுடன் வாதாடினாள்.

அதன் பிறகு இருவரும் அடிக்கடி சந்திப்பதும் வெளியே செல்வதும் தொடங்கியது.

முதலில் ட்ரேஸிக்கு அவனிடம் காதல் ஏற்படவில்லை.

ஒரு நாள் ஓட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது மேஜையின் குறுக்காக அவளை நோக்கிக் குனிந்த அவன், "உனக்குத் தெரியுமோ ட்ரேஸி? ஆஸ்பத்திரியில் தப்பான குழந்தையைத் தன்னிடம் தந்து விட்டார்கள் என்பது தான் என் அப்பாவின் எண்ணம்!" என்று சிரித்தான்.

"என்னது?"

"ஆமாம். நான் தப்பிப் பிறந்தவன் என் குடும்பத்தில். பணம் தான் வாழ்க்கையில் சகலமும் என்று நான் நினைப்பது கிடையாது. ஆனால் இப்படி நான் சொன்னதாக என் அப்பா விடம் சொல்லிவிடாதே! "

இப்படி அவனுடைய பேச்சுகள் ட்ரேஸியை அவன் பால் ஈர்த்தன.

ஆனால் பழம் பெரும் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த இவனை மணந்தால் வாழ்க்கை எப்படி இருக்குமோ என்றும் எண்ணிக் கொண்டாள்.

ட்ரேஸியின் தந்தை தன் வாழ்நாள் பூரா போராடி ஒரு சிறு பிஸினஸை நடத்தியவர். சார்லஸின் குடும்ப பிஸினஸோடு ஒப்பிட்டால் அது தூசி மாதிரி. சார்லஸின் குடும்பமும் நம் குடும்பமும் ஒரு நாளும் ஒட்டாது என்று அவளுக்குத் தோன்றியது. எண்ணெயும் தண்ணீரும் போல - சார்லஸின் குடும்பம் எண்ணெய்.

'பின்னே ஏன் முட்டாள்தனமாக இவர் பின்னே சுற்றிக் கொண்டிருக்கிறேன்!' என்று அடிக்கடி தன்னைத் தானே அவள் கடிந்து கொண்டாள். ஆனால் அவனுடன் நெருங்கிப் பழகுவதை அவளால் நிறுத்த முடியவில்லை.

பிலடெல்பியாவில் ஓர் இடம் பாக்கி இல்லாமல் அவர்கள் சுற்றினார்கள்.

அவளுக்குத் தேகப் பயிற்சிகள் பிடிக்கும். காலையும் மாலையும் ஜாகிங் செய்வாள். அவனுக்கு அதில் ஈடுபாடு கிடையாது. ருசியான உணவில் அவனுக்கு ஆசை உண்டு. அவன் தங்கியிருந்த தனி ஜாகைக்குச் சென்று விதவிதமாகச் சமையல் செய்து அவனுக்கு வழங்கியிருக்கிறாள். அவனுக்கு எதிலும் நேரம் தவறக் கூடாது. ரொம்பக் கண்டிப்பு. ஒரு முறை அவள் பதினைந்து நிமிடம் தாமதமாகச் சென்ற போது அன்று பூரா அவன் கடுகடுவென்றே இருந்தான். இனி ஒரு போதும் தாமதமாக இருப்பதில்லை என்று அவள் சத்தியம் பண்ணிக் கொண்டாள்.

அவள் கொஞ்சமும் எதிர்பாராத சமயத்தில் கர்ப்பமுற்றாள்.

என்ன செய்வதென்று அவளுக்குப் புரியவில்லை. அதுவரை சார்லஸ் அவர்களுடைய கல்யாணத்தைப் பற்றிப் பேசியது கிடையாது. கர்ப்பமாகியிருப்பதைக் காரணம் காட்டி அவனை நிர்ப்பந்திக்க அவளுக்குப் பிடிக்கவில்லை. கருக் கலைப்பு செய்து கொள்ளலாமா என்றும் யோசித்தாள். அவளால் தகப்பனில்லாமலே குழந்தையைப் பெற்று வளர்க்க முடியும். ஆனால் அது பிற்காலத்தில் குழந்தையின் வாழ்க்கையைப் பாதிக்காதா?

கடைசியில் சார்லஸிடம் விஷயத்தைச் சொல்வதென்று தீர்மானித்தாள்.

அன்றிரவு தன் அபார்ட்மெண்டுக்கு அவனைச் சாப்பிட அழைத்திருந்தாள். அவனுக்குப் பிடித்த வகையாகச் சமைத்த போதிலும் அவளுக்கிருந்த மனக் குழப்பத்தில் ஒன்றிரண்டு தீய்ந்து கூடப் போய் விட்டன.

சாப்பாடு பரிமாறும் போது எப்படியெப்படிப் பக்குவமாக அவனிடம் பேச வேண்டும் என்று மனத்துக்குள் ஒத்திகை பண்ணி வைத்திருந்தாள். ஆனால் அவ்வளவும் மறந்து, படக்கென்று வார்த்தைகள் வந்துவிட்டன. "சார்லஸ், வெரி ஸாரி... நான்... நான் காப்பமாயிருக்கிறேன்..."

வெகு நீண்ட நேரத்துக்கு அங்கே மௌனம் நிலவியது. ட்ரேஸிக்குப் பொறுக்க முடியவில்லை. ஆனால் அவள் பேச வாயைத் திறந்த அதே கணம் அவன் சொன்னான்: "நாம் கல்யாணம் செய்து கொள்வோம். அவ்வளவு தானே?"

ட்ரேஸியின் இதயமெங்கும் ஒரு நிம்மதி வியாபித்தது. "வந்து... நான் உங்களைக் கட்டாயப்படுத்தவில்லை... நீங்கள் என்னை மணந்து கொண்டுதான் ஆக வேண்டுமென்பதில்லை..."

கையை உயர்த்தி அவள் பேச்சை நிறுத்தினான் அவன். "ட்ரேஸி, நான் உன்னை மணக்க விரும்புகிறேன். நீ எனக்கு

அற்புதமான மனைவியாக இருப்பாய்...'' பின்னர், “ஆனால் என் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் கொஞ்சம் ஆச்சரியமாகத் தான் இருக்கும்'' என்று மெல்லப் புன்சிரிப்புடன் சொன்ன படி அவளை முத்தமிட்டான்.

ட்ரேஸி அமைதியாகக் கேட்டாள்: “ஏன்? எதற்கு அவர்கள் ஆச்சரியப்பட வேண்டும்?''

அவன் பெருமூச்சு விட்டான்: “டார்லிங், உன் வாழ்க்கை எப்படிப் பட்டதாக இருக்கப் போகிறது என்பதைப் பற்றி நீ உணரவில்லை. ஸ்டான்ஹோப்கள் அதாவது எங்கள் குடும்பத்தினர் பிலடெல்பியாவில் எங்களுக்கேற்ற அந்தஸ்தில் உள்ளவர்களைத் தான் மணப்பது வழக்கம். இது நான் சொல்கிற வார்த்தையில்லை. அவர்கள் சொல்வது...''

ட்ரேஸி மெதுவே ஊகித்தாள். “அதாவது... உங்களுக் கேற்ற மனைவியை அவர்கள் ஏற்கெனவே தேர்ந்தெடுத்தா யிற்று என்கிறீர்களா?''

அவன் அவளைத் தன் கைகளுக்குள் சிறைப் படுத்திக் கொண்டான். “அவர்கள் எக்கேடோ கெடட்டும். நான் யாரை என் மனைவியாகத் தேர்ந்தெடுத்திருக்கிறேன் என்பது தான் முக்கியம். வருகிற வெள்ளிக்கிழமை என் அம்மாவுட னும் அப்பாவுடனும் நீ விருந்து சாப்பிட வா. அவர்கள் உன்னைச் சந்திக்க வேண்டிய சமயம் வந்தாயிற்று. வருகிற வெள்ளிக்கிழமை. மறந்து விடாதே.''

அந்த வெள்ளிக்கிழமைதான் அவளுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

## 2

ஒன்பது மணிக்கெல்லாம் பாங்க் களை கட்டத் தொடங்கியது. ட்ரேஸிக்கு வேலை சரியாயிருந்தது. பண மாற்றுதல்களில் குறிப்பு எண் சரியாக இருக்கிறதா என்று கம்ப்யூட்டரில் ஒருமுறைக்கு இரு முறையாகச் சரிபார்க்க வேண்டியிருந்தது.

காலை வேளை பறந்தோடி விட்டது.

இடைவேளையின் போது முடியலங்கார நிலையத்திற்கு செல்ல வேண்டும் என்று திட்டமிட்டிருந்தாள் அவள்.

சார்லஸின் பெற்றோர்களைப் பார்க்கும்போது ஜம்மென்று போக வேண்டாமா? அவர்களுக்கு என்னைப் பிடிக்கும்படி செய்தாக வேண்டும். அவர்கள் சார்லஸுக்காக எந்தப் பெண்ணை வேண்டுமானாலும் பார்த்திருக்கட்டும். எனக்கு அக்கறையில்லை. என்னைத் தவிர வேறெந்தப் பெண்ணாலும் சார்லஸைச் சந்தோஷமாய் வைத்திருக்க முடியாது...

ஒரு மணிக்கு, வெளியே புறப்படத் தயாராக அவள் ரெயின் கோட்டை மாட்டிக் கொண்ட சமயம், டெஸ்மண்ட் தமது அறைக்கு வரும்படி அவளுக்குச் சொல்லி யனுப்பினார். பாங்க்கின் மூத்த அதிகாரி அவர்.

"உட்காரம்மா ட்ரேஸி," என்றார், அவள் உள்ளே நுழைந்ததும். பாங்க் ஊழியர்கள் ஒவ்வொருவரின் பெயரையும் அறிந்து வைத்திருக்கிறோம் என்பதில் அவருக்குத் தனிப் பெருமை. "மழையும் கிழையுமாக இருக்கிறது இன்றைக்கு. இல்லை?"

"ஆமாம் சார்."

"இருந்தாலும் பாங்க்கில் எப்பவும் கூட்டம் தான்," என்று சில்லறைப் பேச்சு சிறிது நேரம் பேசிவிட்டு, அவளை நோக்கி மேஜையின் குறுக்காகக் குனிந்தார். "நீயும் சார்லஸ் ஸ்டான்ஹோப்பும் கல்யாணம் செய்து கொள்வதாக இருக்கிறீர்களாமே?"

ட்ரேஸிக்கு ஆச்சரியமாயிருந்தது. "அதை நாங்கள் இன்னும் அறிவிக்கவில்லையே? உங்களுக்கு எப்படி..."

டெஸ்மண்ட் புன்னகை பூத்தார். "எனக்கு ரொம்ப சந்தோஷம் ட்ரேஸி., தேனிலவுக்குப் பிறகு இங்கே வேலைக்குத் திரும்பி வருவாய் இல்லையா? நாங்கள் உன்னை இழக்க விரும்பவில்லை. நீ எங்கள் பாங்க்கின் மிக முக்கியமான ஊழியர்களில் ஒருத்தி."

"சார்லஸூம் நானும் இதைப் பற்றிப் பேசிவிட்டோம் சார். நான் தொடர்ந்து இங்கே வேலை செய்தால் சந்தோஷம் தான் என்று சார்லஸ் சொல்லியிருக்கிறார்."

டெஸ்மண்ட் புன்னகை செய்தார். அவர் முகத்தில் திருப்தி நிலவியது. சார்லஸின் குடும்பம் நிதியுலகத்தில் பெரும் புள்ளி. அவர்களுடைய அக்கவுண்ட். இந்தக் கிளைக்கு வருமானால் ரொம்பப் பெரிய விஷயம்.

மகிழ்ச்சியுடன் நாற்காலியில் சாய்ந்து கொண்டார். "நீ தேனிலவுக்குப் போய் விட்டுத் திரும்பும் போது உனக்கு ஒரு நல்ல பிரமோஷன் காத்திருக்கும், ட்ரேஸி. கூடவே கணிசமான சம்பள உயர்வும் கிடைக்கும்."

"ஓ! நன்றி சார்! ரொம்ப நன்றி!" தன் உழைப்பினால் தான் இந்த உயர்வு கிடைக்கிறது என்று அவள் நம்பினாள். அது அவளுக்குப் பெருமையாக இருந்தது. சார்லஸிடம் உடனே சொல்ல வேண்டும் போலிருந்தது. தன் மீது மகிழ்ச்சி மழையைக் கொட்டுவதென்று எல்லா அதிர்ஷ்ட தேவதைகளுமாகச் சேர்ந்து தீமானித்து விட்ட மாதிரி இருந்தது அவளுக்கு.

**சா**ர்லஸின் குடும்பம் நகரத்தின் படாடோபமான பகுதியில் இருந்தது. அந்தப் பகுதியை ட்ரேஸி பலமுறை கடந்து சென்றிருக்கிறாள். 'இப்போது இந்த இடம் என் வாழ்க்கையின் ஒரு பகுதியாக ஆகப் போகிறது' என்று இன்று எண்ணிக் கொண்டாள்.

யூனிபார்ம் அணிந்த வேலையாள் கதவைத் திறந்து, "குட் ஈவனிங் மிஸ் ட்ரேஸி," என்று அவளை வரவேற்றான்.

வேலைக்காரனுக்குக் கூட என் பெயர் தெரிந்திருக்கிறது...

சலவைக் கல் பதித்த கூடத்தின் வழியே அவளை அழைத்துச் சென்றான் வேலையாள். ஒவ்வோர் இடமும் அவளுடைய பாங்க்கைப் போல் இரண்டு மடங்கு பெரிதாக இருந்தது. ட்ரேஸிக்குக் கலவரம் ஏற்பட்டது. என் உடைகள்

ரொம்ப மட்டம். உயர்ந்த ரகமாக அணிந்து வந்திருக்க வேண்டும்.

அவளுக்கு முழங்கால்களில் நடுக்கம் ஏற்பட்ட மாதிரி இருந்தது.

சார்லஸின் அப்பா ஸ்டான்ஹோப்புக்கு அறுபது வயதிருக்கும். கண்டிப்பான தோற்றத்துடன் இருந்தார். வெற்றிகரமான தொழிலதிபர் என்பது பார்த்த மாத்திரத்தில் தெரிந்தது. இன்னும் முப்பது வருடம் போனால் சார்லஸும் கூட இப்படித்தான் இருப்பார்... சார்லஸைப் போலவே கண்கள், மோவாய், முடி... ட்ரேஸிக்கு அவரிடம் உடனேயே ஒரு பிரியம் ஏற்பட்டு விட்டது. நம் குழந்தைக்கு அருமை யான தாத்தாவாக இவர் இருப்பார்...

சார்லஸின் அம்மா சற்றுக் குள்ளமாயும்கொஞ்சம் குண்டாயும் இருந்தாள். இருந்தாலும் அவளிடம் ஒரு கம்பீரம் தெரிந்தது. இந்தம்மாள் உறுதியானவர், நம்பக மானவர் என்று ட்ரேஸி எண்ணிக் கொண்டாள். நம் குழந்தைக்கு அருமையான பாட்டியாக இருப்பாள்...

சார்லஸின் அம்மா அவள் கையைப் பற்றிக் குலுக்கினாள். "நீ வந்ததில் எங்களுக்குச் சந்தோஷம். உன்னுடன் கொஞ்சம் தனியே பேச வேண்டுமென்று சார்லஸிடம் சொல்லியிருந்தேன். அதில் உனக்கொன்றும் ஆட்சேபம் இல்லையே?"

"நிச்சயமாய் ஆட்சேபம் இருக்காது," என்றார் சார்லஸின் அப்பா. "உட்காரம்மா ட்ரேஸி. அதுதானே உன் பெயர்?"

"ஆமாம் சார்."

அவளுக்கெதிரிலிருந்த சோபாவில் இருவரும் அவளைப் பார்த்தாற்போல் உட்கார்ந்தார்கள். 'ஏதோ என்னைக் கூண்டிலேற்றி விசாரணை செய்யப் போகிற மாதிரியல்லவா இருக்கிறது!' என்று நினைத்தாள் அவள்.

முழங்கால்களின் நடுக்கம் அதிகரிப்பது போலிருந்தது. தன் கைகளால் அதை மறைத்துக் கொள்ள முயன்றாள்.

"அப்புறம்?" என்றார் ஸ்டான்ஹோப் உற்சாகமான குரலில். "நீயும் சார்லஸும் மணந்து கொள்ள விரும்பு கிறீர்களா?"

'விரும்புகிறீர்களா' என்ற சொல் ட்ரேஸிக்கு என்னவோ போலிருந்தது. மணந்து கொள்ளப் போகிறோம் என்று சார்லஸ் இவர்களிடம் இன்னும் சொல்ல வில்லையா என்ன?

"ஆமாம்," என்றாள்.

"நீயும் சார்லஸும் அப்படியொன்றும் அதிக நாள் பழகியிருக்க மாட்டீர்களே? இல்லையா?" என்றாள் சார்லஸின் அம்மா.

"நாங்கள் ஒருவரையொருவர் காதலிக்கிறோம் என்று உணர்ந்து கொள்ளும் அளவுக்குப் பழகியிருக்கிறோம்..."

"காதல்?" ஸ்டான்ஹோப் முணுமுணுத்தார்.

அவருடைய மனைவி, "நான் அப்பட்டமாகவே சொல்கிறேனே? சார்லஸ் சொன்ன போது எனக்கும் அவன் அப்பாவுக்கும் அதிர்ச்சியாகத் தான் இருந்தது," என்றாள். பிறகு ஒரு நிதானமான புன்னகையுடன் "சார்லாட்டைப் பற்றி உன்னிடம் சார்லஸ் சொல்லியிருப்பானே? இல்லையோ?" என்றவள், ட்ரேஸியின் முகத்தைக் கவனித்து விட்டு, "அதனா லென்ன, பரவாயில்லை. சார்லஸும் சார்லாட்டும் சேர்ந்தே வளர்ந்தவர்கள். இரண்டு பேருக்கும் ரொம்ப நெருக்கம். உண்மையைச் சொல்வதானால், தங்கள் நிச்சயதார்த்தத்தை இந்த வருடம் அவர்கள் அறிவிக்கப் போகிறார்கள் என்று எல்லாரும் எதிர்பார்த்திருந்தோம்," என்றாள்.

அந்தச் சார்லாட்டைப் பற்றி விவரிக்கத் தேவை யில்லை. ட்ரேஸிக்கே புரிந்தது. பக்கத்து வீடு. பணக்காரி. சார்லஸைப் போல அதே போன்ற சமூக அந்தஸ்து. தலை சிறந்த கல்லூரி களில் படிப்பு. குதிரைச் சவாரி, ஏகப்பட்ட கோப்பைகள்...

"உன் குடும்பத்தைப் பற்றிச் சொல்லு," என்றார் ஸ்டான் ஹோப்.

'கடவுளே! இது ஏதோ சினிமா போல் அல்லவா இருக்கிறது?' என்று ட்ரேஸி கோபமாய் நினைத்துக் கொண்டாள்.

"நீ பிறந்தது எந்த ஊரில் அம்மா?" என்றாள் சார்லஸின் அம்மா.

"லூயிஸ்யானாவில்... என் அப்பா ஒரு மெக்கானிக்." அந்த வார்த்தையை அவள் சேர்த்திருக்கத் தேவையில்லை. ஆனால் அடக்க முடியாமல் வந்துவிட்டது.

"என்ன! மெக்கானிக்கா?"

"ஆமாம். நியூ ஆர்லியன்ஸில் ஒரு சின்னத் தொழிற் சாலை ஆரம்பித்து, பெரிதாக விரிவுபடுத்தினார். அவர் இறந்த பிறகு என் அம்மா நிர்வாகத்தை மேற்கொண்டாள்..."

"வந்து... தொழிற்சாலையென்றால்... என்ன மாதிரி பொருள்கள் உற்பத்தி செய்கிறார்கள்?"

"எக்ஸாஸ்ட் பைப்... காருக்கு வேண்டிய உதிரிப் பாகங்கள்..."

ஸ்டான்ஹோப்பும் அவர் மனைவியும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"ஓகோ."

அந்தக் குரலின் தொனி ட்ரேஸியிடம் ஓர் இறுக்கத்தை ஏற்படுத்தியது. இவர்களிடம் எனக்கு நேசம் பிறக்க ரொம்ப நாளாகும் போலிருக்கிறதே என்று எண்ணிக் கொண்டாள். எதிரிலிருந்த இரண்டு அனுதாபமற்ற முகங் களையும் கண்டபோது, சம்பந்தமில்லாமல் பேசத் தொடங்கினாள் "உங்களைப் பார்த்தால் என் அம்மா மாதிரியே இருக்கிறது. அவளும் நல்ல அழகு, புத்திசாலித் தனம், இனிமை... அவள் தெற்கத்திக்காரி. சின்னவள். உங்கள் உயரம் தான் இருப்பாள்..." என்று தன்னையும் அறியாமல் சொல்லிக் கொண்டே போனாள். ஆனால் அந்தக் கொடூர மான நிசப்தத்தின் அழுத்தத்தில் அவள் பேச்சு நசுங்கி மறைந்தது.

எவ்வித உணர்ச்சியுமில்லாமல் ஸ்டான்ஹோப் சொன்னார். "நீ கர்ப்பமாக இருக்கிறாயென்று சார்லஸ் சொன்னான்..."

சே! ஏன்தான் அந்த விஷயத்தைச் சார்லஸ் சொன்னானோ என்று ட்ரேஸி மனத்துக்குள் நொந்து கொண்டாள். அவள் கருவுற்றிருப்பதை அவர்கள் அங்கீகரிக்கத் தயாராயில்லை. அப்பட்டமாக அது தெரிந்தது. அவள் கர்ப்பத்துக்கும் தங்கள் பிள்ளைக்கும் சம்பந்தமே கிடையாது என்பது போல இவர்கள் இருக்கிறார்கள். அது ஓர் அவமானச் சின்னம் என்று நினைக்கிறார்கள்...

"எனக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை... இந்தக் காலத்தில் போய்..." என்று சார்லஸின் அம்மா ஆரம்பித்தாள். அதற்குள் சார்லஸ் உள்ளே வந்தான். அவனைப் பார்த்தபோது ஏற்பட்ட அந்த ஆனந்தத்தைப் போல வாழ்க்கையில் யாரைப் பார்த்த போதும் ஏற்பட்டதில்லை என்று ட்ரேஸிக்குத் தோன்றியது.

"எப்படி இருக்கிறார்கள் என் அம்மா அப்பா?" என்று மலர்ந்த முகத்துடன் கேட்டான் சார்லஸ்.

ட்ரேஸி எழுந்தோடிச் சென்று அவன் கைகளில் தஞ்சம் புகுந்தாள். "அருமையானவர்கள், டார்லிங்," என்றாள். அவனை நெருங்கி நின்று கொண்டாள். நல்ல காலம், சார்லஸ் அவன் பெற்றோர்களைப் போல இல்லை. ஒரு நாளும் இருக்க மாட்டான். இவர்கள் குறுகிய உள்ளம் படைத்தவர்கள்... இதயமில்லாதவர்கள்... பணக்கார ஜம்பம்...

**வி**ருந்துண்ண அமர்ந்தார்கள். அற்புதமான விருந்துதான். ஆனால் ட்ரேஸிக்கு இருந்த பதற்றத்தில் சாப்பிடவே முடியவில்லை. அவர்கள் அரசியலையும், நிதி விஷயங்களையும், உலக நிலைமைகளையும் அலசிக் கொண்டிருந்தார்கள். மரியாதைக்காகப் பேசுகிற பேச்சு...

நாப்கினைக் கசக்கிக் கொண்டிருந்த ட்ரேஸியின் கைகளை மேஜைக்கு அடியில் மெல்ல அழுத்தினான் சார்லஸ்.

அவளை நோக்கிப் புன்னகை செய்து ரகசியமாய்க் கண் சிமிட்டினான்.

ட்ரேஸியின் நெஞ்சு கும்மென்று பூரித்தது.

"எங்கள் கல்யாணம் எளிமையாக நடைபெற வேண்டும் என்று நானும் ட்ரேஸியும் நினைக்கிறோம்..." என்றான் சார்லஸ்.

"நான்ஸென்ஸ்!" என்றாள் அவன் தாய். "நம் குடும்பத்தில் எளிமையான திருமணம் என்பதே கிடையாது. நூற்றுக்கணக்கான நண்பர்கள் வருவார்கள்..." என்றவள் ட்ரேஸியின் தோற்றத்தை மதிப்பீடு செய்கிறவள் போல் ஒரு பார்வை பார்த்துவிட்டு, "கல்யாண இன்விடேஷன்களை உடனேயே அனுப்பி விட்டால் நல்லது என்று தோன்றுகிறது," என்றாள். பிறகு "அதாவது நீ ஒப்புக் கொண்டால்," என்றாள்.

"ஓ! நிச்சயமாய்," என்றான் சார்லஸ்.

**சா**ர்லஸ் அவளை அவளுடைய சிறிய அபார்ட்மெண்ட்டில் கொண்டுபோய் விட்ட போது நள்ளிரவுக்கு மேல் ஆகிவிட்டது.

"என் அம்மாவும் அப்பாவும் நல்லபடி பழகினார்களா, ட்ரேஸி? பல சமயம் அவர்கள் புர்ரென்று இருப்பதுண்டு..."

"சே, சே! ரொம்பப் பிரியமாயிருந்தார்கள்," என்று அவள் பொய் சொன்னாள்; வாசல் கதவை அடைந்ததும், "உள்ளே வருகிறீர்களா சார்லஸ்?" என்றாள்.

தன்னை இறுக அணைத்துக் கொண்டு, 'ஐ லவ் யூ. டார்லிங். உலகத்தில் யாராலும் நம்மை பிரிக்க முடியாது' என்று அவன் சொல்ல வேண்டுமென அவள் விரும்பினாள்.

ஆனால் அவன், "இன்றிரவு வேண்டாம். நாளைக்குக் காலையில் எனக்கு ஏகப்பட்ட வேலை இருக்கிறது," என்றான். "நாளைக்குப் பேசலாம்," என்று கூறிவிட்டு, அவளை லேசாக முத்தமிட்டு விட்டு அவன் புறப்பட்டான்.

வீடு தீப்பற்றி எரிகிறதா என்ன? ஏன் இப்படித் தீயணைப்பு வண்டிகள் அலறுகின்றன?

ட்ரேஸி திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள்.

தூக்கக் கலக்கமும் அறையின் இருட்டும் சில வினாடிகளுக்கு அவளைத் திகைக்க வைத்தன. பிறகு தான் இடைவிடாமல் டெலிபோன் அடிப்பதை உணர்ந்தாள்.

படுக்கைக்குப் பக்கத்திலிருந்த கடியாரம் விடிகாலை இரண்டரை மணி என்று காட்டியது. இந்த வேளையில் யார்...

டெலிபோனை எடுத்தாள்.

"மிஸ் ட்ரேஸி?" என்றது குரல்.

"ஆமாம்..." அவள் இதயம் படபடத்தது.

"நியூ ஆர்லியன்ஸ் போலீஸ் இலாகாவிலிருந்து இன்ஸ்பெக்டர் மில்லர் பேசுகிறேன். மிஸ் ட்ரேஸி தானே?"

"அ... ஆமாம்..."

"உங்களுக்கு ஒரு வருத்தமான செய்தி தெரிவிக்க வேண்டியிருக்கிறது, மிஸ் ட்ரேஸி."

அவள் கைகள் போனை இறுகப் பற்றின.

"உங்கள் அம்மாவைப் பற்றி..."

"அவளுக்கு... என்ன அவளுக்கு... ஏதாவது விபத்தா"

"அவர் இறந்துவிட்டார் மிஸ் ட்ரேஸி."

"இல்லை! இருக்காது!" வீரிட்டாள் ட்ரேஸி.

## 3

அம்மா இறந்து விட்டாளா? என்ன சொல்கிறார் இந்தப் போலீஸ் அதிகாரி?

போனைப் பிடித்திருந்த ட்ரேஸியின் கை வெடவெட வென்று நடுங்கியது.

இருக்காது, இருக்காது! இது ஏதோ விஷமக்காரனின் பேச்சு! நம்மைப் பயமுறுத்துவதற்காக எவனோ பைத்தியக் காரன் விளையாடுகிறான்! அம்மாவுக்கு ஒன்றும் நேர்ந்தி ருக்காது. உயிரோடு, நன்றாகத் தான் இருப்பாள். 'உன்னை நான் ரொம்ப நேசிக்கிறேன் கண்ணே' என்று நேற்றுத் தானே டெலிபோனில் சொன்னாள்...

"ஹலோ மிஸ் ட்ரேஸி... ஹலோ..."

ட்ரேஸி உணர்வு பெற்றாள். "முதல் விமானத்தில் வந்து சேர்கிறேன், சார்."

தள்ளாடி எழுந்தவள், சமையலறைக்குச் சென்று உட்கார்ந்து கொண்டாள்.

அம்மா இறந்து விட்டாளாவது!

நெருக்கம் மிகுந்த, நேசம் நிறைந்த உறவு அவளுக்கும் அம்மாவுக்கும். சிறுமியாக இருந்தபோது எந்தப் பிரசினையானாலும் ட்ரேஸி அம்மாவிடம் தான் ஓடி வருவாள். பள்ளிக்கூடத்தைப் பற்றியும், கூடப் படிக்கும் மாண வர்களைப் பற்றியும் விவாதிப்பாள். பிற்பாடு பெரியவளான போது ஆண்களைப் பற்றிப் பேசுவாள். அப்பா இறந்தபோது அவருடைய பிஸினஸை விலைக்கு வாங்கப் பல பேர் பல வழிகளில் முயன்றார்கள். நிறையவே பணம் தருவதாய்ச் சொன்னார்கள். அதை வைத்துக் கொண்டு எஞ்சிய காலம் பூரா வசதியாக வாழ்ந்திருக்க முடியும். ஆனால் டோரிஸ் பிடிவாதமாக விற்க மறுத்து விட்டாள். "உன் அப்பா கட்டி வளர்த்த பிஸினஸ் இது. அவருடைய உழைப்பையெல்லாம் நான் வீதியிலே வீசியெறியத் தயாராயில்லை," என்றவள் அத்தோடு நின்று விடவில்லை. நிறுவனம் செழித்து வளரவும் பாடுபட்டாள்.

'அம்மா! அம்மா!'

ட்ரேஸியின் நெஞ்சு கதறியது. 'உன்னை ரொம்ப ரொம்ப நேசிக்கிறேன் கண்ணே' என்று அவள் சொன்னது காதில் எதிரொலித்தது. 'கடைசியில் என் காதலன்

*சார்லஸைப் பார்க்காமலே போய் விட்டாயே, அம்மா! உன் பேரக் குழந்தையைப் பார்க்காமலே போய் விட்டாயே!'*

*விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.*

*காப்பி சாப்பிட்டால் தேவலை போலிருந்தது. ஒரு கப் தயாரித்துக் கொண்டாள். ஆனால் அது சில்லென்று ஆறிக் கொண்டிருந்தது. அவள் இருட்டிலேயே உட்கார்ந்திருந்தாள்.*

*உடனேயே சார்லஸைக் கூப்பிட்டுச் சொல்ல வேண்டும். பக்கத்தில் அவன் இருந்தால் எவ்வளவு ஆறுதலாயிருக்கும்?*

*ஏறிட்டுக் கடியாரத்தை நோக்கினாள். விடிகாலை 3.30 மணி காட்டியது. இப்போது அவனை எழுப்ப வேண்டாம் என்று தோன்றியது. நியூ ஆர்லியன்ஸுக்குப் போன பின் அங்கிருந்து போன் செய்து கொள்ளலாம்.*

*கல்யாண ஏற்பாடுகளை இது பாதிக்குமோ என்று ஒரு நிமிடம் எண்ணினாள். மறு நிமிடமே 'சீ! என்ன நினைப்பு!' என்ற குற்ற உணர்வு தோன்றியது. இந்த மாதிரிச் சமயத்தில் போய் எப்படித்தான் எனக்குக் கல்யாணத்தைப் பற்றிய எண்ணம் தோன்றுகிறதோ!*

*"நீங்கள் இங்கே வந்ததும் ஒரு டாக்ஸி பிடித்துக் கொண்டு நேரே போலீஸ் தலைமையகத்துக்கு வந்து விடுங்கள்," என்று இன்ஸ்பெக்டர் மில்லர் சொல்லியிருந்தது நினைவு வந்தது.*

*ஏன் போலீஸ் தலைமையகத்துக்கு வரவேண்டும்? எதற்காக? அப்படி என்ன தான் நடந்தது?*

**நி**யூ ஆர்லியன்ஸ் விமான நிலையத்தில் இறங்கி, தன் சூட்கேசுக்காகக் காத்திருந்தாள் ட்ரேஸி. அவளைச் சுற்றிலும் பொறுமையற்ற பயணிகள் அவளை மோதி இடித்துக் கொண்டு சென்றார்கள் அவளுக்கு மூச்சுத் திணறியது. லக்கேஜ்கள் குவிந்துள்ள பகுதிக்குச் செல்ல முயன்றாள். ஆனால் அவள் முன்னேற யாரும் இடம் தரவில்லை.

இன்னும் கொஞ்ச நேரத்தில் நாம் என்ன எதிர்நோக்கப் போகிறோமோ என்ற தவிப்பில் நிமிடத்துக்கு நிமிடம் அவள் பதைப்பு அதிகரித்தது.

'அப்படி எதுவும் இருக்காது... எங்கேயோ ஏதோ தவறு ஏற்பட்டிருக்கிறது...' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள். ஆயினும் 'உங்களுக்கு ஒரு வருத்தமான செய்தியைச் சொல்ல வேண்டியிருக்கிறது... உங்கள் அம்மா இறந்து விட்டார் மிஸ் ட்ரேஸி... இதைச் சொல்ல எனக்குக் கஷ்டமாயிருக்கிறது...' என்ற இன்ஸ்பெக்டரின் சொற்கள் அவள் தலைக்குள் சுழன்று ஒலித்துக் கொண்டிருந்தன.

கடைசியில் ஒரு வழியாய்த் தன் சூட்கேஸைத் தேடிப் பிடித்து எடுத்துக் கொண்டாள். டாக்ஸியில் ஏறிக் கொண்டு, இன்ஸ்பெக்டர் சொல்லியிருந்த விலாசத்தைக் கூறினாள்.

இன்ஸ்பெக்டர் மில்லருக்கு நடு வயதிருக்கும். நிறையத் தொல்லைக்குள்ளானவர் போல அலுப்பும் சலிப்புமாக இருந்தார். தான் பார்க்கும் உத்தியோகம் அவருக்குப் பிடிக்க வில்லை என்று தோன்றியது.

"விமான நிலையத்துக்கு வர முடியவில்லை, ஸாரி," என்றார் ட்ரேஸியிடம். "உங்கள் அம்மாவின் உடைமை களைச் சோதனை போட்ட போது உங்கள் ஒருத்தரின் விலாசம் தான் கிடைத்தது."

"ப்ளீஸ் இன்ஸ்பெக்டர், என்ன என் அம்மாவுக்கு என்ன நேர்ந்தது? அதைச் சொல்லுங்கள்."

"அவர் தற்கொலை செய்து கொண்டார்."

சில்லென்ற பனி உடல் முழுதும் ஓடியது ட்ரேஸிக்கு. "இருக்காது ஒரு நாளும் இருக்காது! எதற்காக அவள் தற்கொலை செய்து கொள்ள வேண்டும்? வாழ்க்கையில் அவளுக்கு எல்லா வசதிகளும் இருக்கிறபோது -"

"உங்களுக்கு ஒரு கடிதம் எழுதி வைத்திருக்கிறார்," என்றார் இன்ஸ்பெக்டர்.

**ச**வக் கிடங்கு வெகு குளிர்ச்சியாக, உணர்ச்சியில்லாமல், அச்சுறுத்துவதாக இருந்தது. ட்ரேஸியை நீண்ட கூடத்தின் வழியே அழைத்துச் சென்றார்கள். மருந்து தெளித்துச் சுத்தப் படுத்தியிருந்த பெரிய சூனியமான அறையை அடைந்தார்கள்.

சட்டென ட்ரேஸி உணர்ந்தாள்.

அறை சூனியமாக இருக்கவில்லை.

மரணம் நிரம்பியிருந்த அறை

வெள்ளை அங்கி உடுத்தியிருந்த ஓர் ஊழியர், அறையின் சுவரை நெருங்கி, ஒரு கைப்பிடியைப் பிடித்துப் மிகப் பெரிய இழுப்பறையொன்றை வெளியிழுத்தார்.

"வந்து பார்க்கிறீர்களா?"

'வேண்டாம்! வேண்டாம்! அந்தப் பெட்டிக்குள் இருக்கும் வெறுமையான, உயிரற்ற உடலை நான் பார்க்க விரும்பவில்லை!'

ட்ரேஸியின் உள்ளம் அலறியது. அந்த அறையை விட்டு வெளியே ஓடிவிட வேண்டும் போலிருந்தது.

காலத்தின் முள்ளைத் திருப்பிப் போட்டு, தீயணைப்பு வண்டியில் மணியோசை போலச் சில மணி நேரத்துக்கு முன் கேட்டதே, அந்த நேரத்துக்கே போக வேண்டும் போலிருந்தது. 'கடவுளே! அது நிஜமாகவே தீயணைப்பு வண்டியின் ஓசையாய் இருக்கக் கூடாதா? நிஜமாகவே டெலிபோன் மணியாக இல்லாமல் இருக்கக் கூடாதா? நிஜமாகவே அம்மா இறந்து போகாமல் இருக்கக் கூடாதா?'

மெல்ல மெல்ல அந்த இழுப்பறையை நோக்கி நடந்தாள். எடுத்து வைத்த ஒவ்வோர் அடியும் அவளுடைய இதயம் அலறியது.

கடைசியில் அந்த உயிரற்ற உடம்பைப் பார்த்தாள்.

அவளைப் பெற்ற உடம்பு! அவளை வளர்த்த உடம்பு! அவளுடன் சேர்ந்து சிரித்த உடம்பு! அவளை நேசித்த உடம்பு!

குனிந்து அம்மாவின் கன்னத்தில் முத்தமிட்டாள். சில்லென்று ரப்பர் மாதிரி இருந்தது கன்னம்.

"அம்மா... அம்மா..." ட்ரேஸி கிசுகிசுத்தாள். "ஏனம்மா? இப்படிச் செய்து கொண்டாய்? ஏன்?"

"பிரேத பரிசோதனை செய்ய வேண்டியிருந்தது... அரசாங்கச் சட்டம்..." சவக் கிடங்கு ஊழியர் சொல்லிக் கொண்டிருந்தார்.

இன்ஸ்பெக்டர் அந்தக் கடிதத்தை ட்ரேஸியிடம் நீட்டினார்.

**"என் கண்ணே ட்ரேஸி, என்னை மன்னித்துவிடு, நான் தோற்றுவிட்டேன். உனக்குப் பாரமாக இருக்க நான் விரும்பவில்லை. இதுதான் சிறந்த வழி. கண்ணே, உன்னை \நான் எவ்வளவு நேசிக்கிறேன்!**

அம்மா."

ட்ரேஸிக்கு எதுவும் விளங்கவில்லை.

இழுப்பறைக்குள் கிடக்கும் அந்த உடலைப் போலவே இந்தக் கடிதமும் உயிரற்றதாக, அர்த்தமில்லாததாக இருந்தது.

பிற்பகல்.

சவ அடக்கத்துக்கான ஏற்பாடுகளைச் செய்து முடித்த பின், ஒரு டாக்ஸியில் தன் வீட்டுக்குச் சென்றாள்.

அந்த வீட்டில்தான் ட்ரேஸி வளர்ந்தாள். கதகதப்பான, மனதுக்கு ஆறுதல் தரும் எண்ணங்கள்...

போன வருஷம் பூரா அவள் இங்கே வரவில்லை. இப்போது வீட்டின் எதிரில் டாக்ஸி நின்றபோது அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

புல்வெளியில் ஒரு பலகை நடப்பட்டு, அதில்

'வீடு விற்கப்படும் நியூ ஆர்லியன்ஸ் ரியல்ட்டி கம்பெனி' என்ற அறிவிப்பு எழுதப்பட்டிருந்தது.

*விற்பனையா! ஒரு நாளும் இருக்காது. "இந்த வீட்டை நான் விற்கவே மாட்டேன். நாம் எல்லாரும் சேர்ந்து வாழ்ந்து சந்தோஷமாயிருந்த இடம் இது" என்று அம்மா அடிக்கடி சொல்லுவாளே...*

*இன்னதென்று விளங்காத, காரணமில்லாத பயமொன்று உள்ளத்தை நிறைக்க, பிரம்மாண்டமான மக்னோலியா மரத்தைத் தாண்டி வீட்டு வாசலை நெருங்கினாள்.*

*அத்தனை அறைகளும் காலியாக இருந்தன. மேஜை, நாற்காலி, சோபா, முக்காலி எதுவும் கிடையாது. அத்தனை அழகான கலைப் பொருள்களும் எங்கே போயின!*

*ட்ரேஸி ஒவ்வோர் அறையாக ஓடி ஓடிப் பார்த்தாள். அவளுடைய திகைப்பு வினாடிக்கு வினாடி அதிகரித்தது.*

*கீழே அழைப்பு மணியை யாரோ அடித்தார்கள்.*

*மயக்கத்தில் நடப்பவள் போல ஒவ்வொரு படியாக இறங்கினாள்.*

*கதவுக்கு வெளியே ஆட்டோ நின்றிருந்தார் அவர்களுடைய விட்னி கார் கம்பெனியின் ஃபோர்மனாய் வெகு நாளாக இருந்து வருகிறவர் அப்பா இறந்து அம்மா நிர்வாகத்தை மேற்கொண்ட பிறகும் தொடர்ந்து கம்பெனியில் பணியாற்றி வருகிறவர் சற்றே தொப்பை விழுந்திருந்தாலும் ஒல்லியான கிழவர். தலை பெரிதும் வழுக்கையாயிருந்தது.*

*ட்ரேஸி இரு கைகளாலும் நெஞ்சை அழுத்திக் கொண்டாள்.*

*"ட்ரேஸி... கொஞ்சம் முந்தி தான் எனக்குத் தகவல் கிடைத்தது... என் வருத்தத்தை எப்படிச் சொல்வதென்றே தெரியவில்லை..." என்றார்..*

*"ஆட்டோ... உங்களைப் பார்த்ததில் எனக்கு எத்தனை தைரியமாக இருக்கிறது தெரியுமா? வாருங்கள், உள்ளே வாருங்கள்" காலியாக இருந்த முன்னறைக்கு அவரை அழைத்து வந்தாள். "ஸாரி, நாற்காலி எதுவும் இல்லை... தரையில் உட்காரலாமா?"*

"அதனாலென்ன?" என்றார். இருவரும் தரையில் எதிரெதிராக உட்கார்ந்து கொண்டார்கள். இருவர் கண்களும் கலங்கியிருந்தன.

"ஆட்டோ... இங்கே என்ன தான் நடந்தது? எனக்குப் புரியவில்லை. அம்மா தற்கொலை செய்து கொண்டாள். ஆனால் உங்களுக்கே தெரியும், தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்கு அம்மாவுக்கு எந்தப் பிரசினையும் கிடையாது." திடீரென ஒரு சந்தேகம் உதித்தது. "அல்லது அம்மாவுக்கு உடம்பு சரியில்லையா? எதாவது பயங்கரமான -"

"இல்லையில்லை. அப்படி எதுவுமில்லை." ஆட்டோ வேறெங்கோ பார்த்தபடி சொன்னார். எதையோ சொல்ல முடியாமல் அவர் சங்கடப்படுவது தெரிந்தது.

ட்ரேஸி மெல்லக் கேட்டாள்: "ஆட்டோ... என்ன நேர்ந்ததென்று உங்களுக்குத் தெரியும். உண்டா இல்லையா?"

கண்ணீர் தளும்பும் விழிகளால் அவர் அவளைப் பார்த்தார் "சமீப காலமாக என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று உங்கள் அம்மா உங்களிடம் சொல்லவில்லை. உங்களுக்குக் கவலை தர அம்மா விரும்பவில்லை..."

"எனக்குக் கவலையா! எதைப் பற்றி? சொல்லுங்கள், ஆட்டோ, ப்ளீஸ்."

"ட்ரேஸி, ஜோ ரோமானோ என்ற ஆளைப் பற்றி நீ கேள்விப் பட்டிருக்கிறாயா?" என்று கேட்டார்.

## 4

ட்ரேஸி திகைத்தாள்.

ஜோ ரொமானோவா? யார் அவன்? அம்மாவின் தற்கொலைக்கும் அவனுக்கும் என்ன சம்பந்தம்?

அம்மாவின் கம்பெனியில் வேலை பார்த்த போர்மன் ஆட்டோ அவளை வருத்தத்துடன் பார்த்தபடி தொடர்ந்

தார். "இந்த ரொமானோ என்பவன் ஆறு மாதத்துக்கு முன்பு உங்கள் அம்மாவைச் சந்தித்து, கம்பெனியை விலைக்கு வாங்கிக் கொள்ள விரும்புவதாகக் கேட்டான். அம்மா விற்க இஷ்டப்படவில்லை. ஆனால் கம்பெனியின் மதிப்பைப் போல் பத்து மடங்கு தருவதாக ரொமானோ சொன்னதும் அம்மாவால் மறுக்க முடியவில்லை. ஏகப்பட்ட சந்தோஷம். அத்தனை பணத்தையும் பாங்க்கிலும் பத்திரங்களிலும் முதலீடு செய்து விட்டால் அந்த வருமானத்தில் ஆயுளுக்கும் அவரும் நீங்களும் வசதியாக வாழலாமே என்று நினைத்தார். இந்த விஷயத்தை உங்களுக்குத் திடீரென்று சொல்லி உங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்த வேண்டும் என்பது அவர் எண்ணம். எனக்குக்கூடச் சந்தோஷம் தான். மூன்று வருஷத்துக்கு முன்பே நான் ரிடையராக வேண்டியவன். உங்கள் அம்மாவை விட்டுப் போக மனமில்லாமல் வேலையில் இருந்தேன். இந்த ரொமானோ..." - காறித் துப்பாத குறையாக அந்தப் பெயரைச் சொன்னார் ஆட்டோ - "என்ன செய்தான் தெரியுமா? முன்பணமாக ஒரு சிறு தொகையைக் கொடுத்தான். மிச்சப் பணம் மொத்தமும் போன மாதம் கொடுத்திருக்க வேண்டும்..."

ட்ரேஸி பொறுமை இழந்தாள். "சரி, என்ன ஆச்சு, ஆட்டோ? சொல்லுங்கள்?"

"ரொமானோ கம்பெனி நிர்வாகத்தை மேற்கொண்டான். பழைய ஆட்கள் எல்லாரையும் வீட்டுக்கு அனுப்பிவிட்டு, தன் ஆட்களை வேலைக்கு அமர்த்தினான். கம்பெனியின் சொத்துக்களை விற்றுச் சூறையாடினான். ஏராளமான புதிய கருவிகளை வாங்கி, அவைகளையும் விற்றான். ஆனால் வாங்கின பொருள்களுக்கு ஒரு பைசா கூடக் கொடுக்கவில்லை. சப்ளை செய்தவர்கள் தங்களுக்குப் பணம் வரத் தாமதமாகிறதே என்று கவலைப்படவில்லை. ஏனெனில் உங்கள் அம்மா தான் நிர்வாகம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்பது அவர்கள் நினைப்பு. கடைசியில் பாக்கியைத் தீர்க்கும்படி அவர்கள் அம்மாவை

நெருக்கியதும், அம்மா ரொமானோவிடம்போய்க் கேட்டாள். அவன் ஒரு பெரிய குண்டைத் தூக்கிப் போட்டான். கம்பெனியை வாங்க வேண்டாமென்று முடிவு செய்து விட்டானாம். அவளிடமே கம்பெனியைத் திருப்பித் தந்துவிடப் போகிறேன் என்றான். இதற்குள் கம்பெனி பைசா பிரயோசனமில்லாததாக ஆகிவிட்டது. உங்கள் அம்மா கொடுக்க வேண்டிய பாக்கிகளோ ஐந்து லட்சம் டாலர். எப்படி அதைக்கொடுக்க முடியும்? ட்ரேஸி, எப்படியாவது கம்பெனியைக் காப்பாற்ற வேண்டுமென்று உன் அம்மா பட்ட பாடு! எனக்கும் என் மனைவிக்கும் உயிரே போய் விட்டது, அவருடைய கஷ்டத்தைப் பார்த்து. எந்த வழியும் இல்லை. உங்கள் அம்மா ஒட்டாண்டியானார். கம்பெனி, இந்த வீடு, ஏன் கார்கூட.... கடன்காரர்கள் எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள்."

"ஐயோ கடவுளே!"

"பாக்கியையும் கேளுங்கள். அரசாங்கத்திடமிருந்து உங்கள் அம்மாவுக்கு ஒரு நோட்டீஸ் வந்தது. மோசடி செய்த குற்றத்துக்காக அம்மா மீது வழக்குத் தொடரப்படும் என்றும், அம்மாவுக்குச் சிறைத் தண்டனை கிடைக்கும் என்றும் நோட்டீசில் சொல்லியிருந்தார்கள். உண்மையில் அந்த நோட்டீஸைக் கண்டபோதே உங்கள் அம்மாவின் பாதி உயிர் போய்விட்டது."

ட்ரேஸியின் உள்ளம் கோபத்தில் கொதித்துக் கொண்டிருந்தது. ஆனால் என்ன செய்வதென்று அவளுக்குத் தெரியவில்லை. "கடன்காரர்களிடம் அம்மா உண்மையைச் சொல்ல வேண்டியதுதானே? ரொமானோ தன்னை ஏமாற்றி விட்டான் என்பதை விளக்க வேண்டியது தானே?"

போர்மன் ஆட்டோ தலையை அசைத்து அவள் சொன்னதை மறுத்தார். "ரொமானோ வேலை செய்தது ஆர்ஸெட்டி என்ற ஆளுக்காக. அந்த ஆர்ஸெட்டி தான் இந்த நியூ ஆர்லியன்ஸ் நகரத்தை ஆட்டிப் படைப்பவன். இந்த மாதிரி அவன் பல கம்பெனிகளை ரொமானோவின்

உதவியுடன் ஏமாற்றியிருக்கிறான் என்று பிற்பாடு எனக்குத் தெரிந்தது. ஆனால் அதற்குள் காலம் கடந்து விட்டது. உங்கள் அம்மா நீதிமன்றத்துக்குப் போயிருந்தால் கூட இந்தச் சிக்கல்களெல்லாம் அவிழப் பல வருடங்களாகும். அவ்வளவு காலம் போராட உங்கள் அம்மாவிடம் பணமும் கிடையாது."

"அம்மா ஏன் என்னிடம் சொல்லவில்லை? ஏன் எதுவுமே சொல்லவில்லை?" என்று விம்மினாள் ட்ரேஸி நெஞ்சு பிளக்கும் வேதனையுடன்; அம்மாவைப் பற்றிய வேதனையுடன்

"உங்கள் அம்மா தன்மானம் நிரம்பியவர், அதனால் தான் சொல்லவில்லை. அத்தோடு நீங்கள் மட்டும் என்ன செய்து விடப் போகிறீர்கள்? யாரும் எதுவும் செய்ய முடியாத விஷயம் இது."

'இல்லை, ஆட்டோ. நீங்கள் நினைப்பது தப்பு!' என்று ட்ரேஸி ஆத்திரத்துடன் எண்ணிக் கொண்டாள். "நான் அந்த ரொமானோவைப் பார்க்க வேண்டும். எங்கே அவன் வீடு?"

"ஜாக்ஸன் ஸ்கொயருக்கு அருகே அவன் எஸ்டேட் இருக்கிறது. ஆனால் நீங்கள் அங்கே போவதால் ஒரு பயனும் ஏற்படாது. நான் சொல்வதைக் கேளுங்கள்."

ட்ரேஸி அவருக்குப் பதில் சொல்லவில்லை. அவள் இதுவரை அறிந்திராததோர் உணர்ச்சி அவளுக்குள் கொப்புளித்துக் கொண்டிருந்தது; வெறுப்பு.

அவளுக்கு அவகாசம் தேவைப்பட்டது. யோசிப்பதற்கு அவகாசம் அடுத்த நடவடிக்கையைத் திட்டமிடுவதற்கு அவகாசம்.

துரதிர்ஷ்டம் பிடித்த தன் வீட்டுக்குள் மீண்டும் நுழைய அவளுக்குப் பிடிக்கவில்லை. ஒரு சிறிய ஓட்டலில் அறை எடுத்துக் கொண்டாள்.

அன்று அந்த ஊரில் திருவிழாவும் ஊர்வலமும் நடந்திருந்ததால் அதன் ஓசைகள் இன்னும் கேட்டுக் கொண்டிருந்தன. விமான நிலையத்திலிருந்து வரும்போது

அந்த ஊர்வலத்தில் சிக்குண்டு அவளுடைய பெட்டி பறிபோய் விட்டது.

லக்கேஜ் எதுவுமில்லாமல் நின்ற ட்ரேஸியைச் சந்தேகத்துடன் நோக்கினார் ஒட்டல் குமாஸ்தா. "நாற்பது டாலர் வாடகை. அதை முன்கூட்டியே தந்துவிட வேண்டும்," என்றார்.

பணம் செலுத்திவிட்டு அறையை அடைந்தவள், தன் பாங்க் அதிகாரி டெஸ்மண்டுக்கு டெலிபோன் செய்து, சில நாட்களுக்கு வேலைக்கு வர இயலாது என்பதைத் தெரிவித்தாள்.

அவர் தன் எரிச்சலை மறைத்துக் கொண்டு, "கவலைப் படாதே, ட்ரேஸி. நீ வருகிற வரையில் உன் வேலையை வேறு யாராவது பார்த்துக்கொள்ளும்படி ஏற்பாடு செய்கிறேன்." என்றார்.

அடுத்து, சார்லஸுக்குப் போன் போட்டாள்.

"சார்லஸ் டார்லிங்," என்று அவள் ஆரம்பித்ததுமே அவன் படபடவென்று பேசினான்; "ட்ரேஸி, நீ இப்ப எங்கேயிருந்து பேசுகிறாய்? காலையிலிருந்து என் அம்மா உன்னைத் தேடிக் கொண்டிருக்கிறாள். இன்று உன்னோடு பகலுணவு சாப்பிடுவதென்று அவள் திட்டம். நீங்கள் இரண்டு பேரும் சேர்ந்து கவனிக்க வேண்டிய கல்யாண ஏற்பாடுகள் எவ்வளவோ இருக்கிறது..."

"ஸாரி, டார்லிங். நான் இப்ப நியூ ஆர்லியன்ஸில் இருக்கிறேன்."

"என்னது! நியூ ஆர்லியன்ஸா! அங்கே என்ன வேலை உனக்கு?"

"என் அம்மா இறந்து விட்டாள்..." சொல்லும் போதே அவளுக்குத் தொண்டையை அடைத்தது.

"ஓ!" அவன் குரலின் தொனி உடனே மாறியது. "ரொம்ப ஸாரி, ட்ரேஸி. திடீரென்று இறந்து விட்டாரா? இளம் வயசாகத்தான் இருக்கும். இல்லை?"

'ஆமாம், மிக இளம் வயது' என்று ட்ரேஸியின் உள்ளம் அழுதது. "ஆமாம்.. சின்ன வயதுதான்," என்றாள்.

"என்ன நடந்தது? உனக்கு... எப்படி இருக்கிறாய்?"

அம்மா தற்கொலை செய்து கொண்டு இறந்து போனாள் என்று சார்லஸிடம் சொல்ல ஏனோ அவளுக்கு மனம் வரவில்லை. 'அம்மாவை இப்படியெல்லாம் கொடுமைப் படுத்தி விட்டார்கள் பாவிகள்' என்ற பயங்கரக் கதையைச் சார்லஸிடம் சொல்லிக் கதற வேண்டும் போலிருந்தது. எனினும் அடக்கிக் கொண்டாள்.

'இது என்னுடைய பிரச்சினை என்னுடைய சுமை. இதைச் சார்லஸின் தலையில் சுமத்துவது நியாயமல்ல' என்று முடிவு செய்து கொண்டாள். "கவலைப் படாதீர்கள் டார்லிங். நான் நல்லபடி இருக்கிறேன்.' என்றாள்.

"நான் வேண்டுமானால் அங்கே வரட்டுமா, ட்ரேஸி?"

"தாங்க்யூ, வேண்டாம். நான் பார்த்துக் கொள்கிறேன். நாளைக்கு அடக்கம் செய்ய ஏற்பாடு பண்ணி விட்டேன். திங்கள்கிழமை பிலடெல்பியாவுக்கு வந்து விடுவேன்."

பேசி முடித்த பின், படுக்கையில் விழுந்தாள். அவள் எண்ணங்கள் சிதறின. கூரையில் பதிந்திருந்த சதுர ஓடுகளை எண்ண ஆரம்பித்தாள். ஒன்று, இரண்டு, மூன்று... ரொமானோ... நாலு, ஐந்து... ரொமானோ... ஆறு, ஏழு... ரொமானோவைப் பழி வாங்காமல் விடமாட்டேன்!

அதை எப்படிச் செய்யப் போகிறோமென்ற திட்ட மெதுவும் அவளிடம் இருக்கவில்லை.

சாயந்தரம் ஒட்டலை விட்டு வெளியே புறப்பட்டவள், கடைத் தெரு வழியே மெல்ல நடந்தாள். ஒரு கடை வந்ததும் சற்றே தயங்கி நின்றாள்.

சவம் போல் வெள்ளை வெளேரென்று இருந்த கடைக்காரர், "என்னம்மா வேணும்?" என்று கேட்டார்.

"நான்... எனக்கு ஒரு துப்பாக்கி வேண்டும்," என்றாள் ட்ரேஸி.

"என்ன மாதிரியான துப்பாக்கி?"

"அதான்... வந்து... ஒரு ரிவால்வர்..."

"முப்பத்திரண்டா, நாற்பத்தைந்தா, அல்லது..."

ட்ரேஸி முன்னே பின்னே எந்தத் துப்பாக்கியையும் தொட்டது கிடையாது. "வந்து... முப்பத்திரண்டு போதும்,' என்றாள்.

"முப்பத்திரண்டில் நல்ல ரிவால்வர் வைத்திருக்கிறேன். இருநூற்று முப்பத்தொன்பது டாலர் ஆகும். அல்லது நூற்று ஐம்பத்தொன்பது டாலரில் இன்னொன்று இருக்கிறது..."

ட்ரேஸி அவ்வளவு ரொக்கம் எடுத்து வரவில்லை. "இன்னும் கொஞ்சம் மலிவாக உங்களிடம் இல்லயா?"

அவர் தோள்களைக் குலுக்கிக் கொண்டு, "மலிவா யிருந்தால் தரமாக இருக்காது, அம்மா. ஒன்று செய்கிறேன். உங்களுக்காக நூற்றைம்பது டாலருக்குத் தருகிறேன். ஒரு பெட்டி தோட்டாவும் கொடுக்கிறேன்," என்றார்.

"சரி."

அவர் தனக்குப் பின்னால் இருந்த மேஜை மீதிருந்து ஒரு ரிவால்வரைத் தேர்ந்தெடுத்து வந்து தந்தார். "எப்படிச் சுடுவதென்று உங்களுக்குத் தெரியும். இல்லையா?"

"வந்து... விசையை அழுத்த வேண்டும்.. அவ்வளவு தானே?"

"தோட்டாவை எப்படிப் போடுவதென்று காட்டு கிறேன்." என்றார் கடைக்காரர்.

வேண்டாம் என்று சொல்ல நினைத்தாள் ட்ரேஸி. 'இந்த ரிவால்வரை நான் உபயோகிக்கப் போவதில்லை. சும்மா ஒருத்தரைப் பயமுறுத்தப் போகிறேன்,' என்று சொல்ல எண்ணினாள். ஆனால் அது சுத்த மடத்தனமாக இருக்கும் என்று தோன்றவே, "சரி, காட்டுங்கள்," என்றாள்.

*கடைக்காரர் ரிவால்வரைத் திறந்து, தோட்டாக்களை நிரப்பிக் காட்டினார்.*

*"தாங்க்யூ," அவள் பர்ஸைத் திறந்து பணத்தை எண்ணிக் கொடுத்தாள்.*

*"உங்கள் பெயரும் விலாசமும் சொல்லுங்கள். போலீஸில் கேட்பார்கள்."*

*அதுவரை அவளுக்கு அது தோன்றவில்லை. ரொமானோவைத் துப்பாக்கியைக் காட்டி மிரட்டுவது ஒரு கிரிமினல் குற்றம் என்பது ஞாபகம் வந்தது. இருக்கட்டும். அவன் தான் கிரிமினல். நான் அல்ல.*

*கடைக்காரர் அவளையே பார்த்தபடி, "பெயர்?" என்றார்.*

*"ஸ்மித்... ஜோன் ஸ்மித்."*

*அதை அட்டையில் குறித்துக் கொண்டு, "விலாசம்?" என்றார்.*

*"டெலிமன் ரோடு. முப்பத்திரண்டு."*

*ஜோன் ஸ்மித் என்ற பெயரில் அவள் கையெழுத்துப் போட்டாள். "அவ்வளவுதானே?"*

*"அவ்வளவுதான்." ரிவால்வரை ஜாக்கிரதையாக அவளிடம் கொடுத்தார் கடைக்காரர்.*

*ஒரு வினாடி அதை வெறித்துப் பார்த்துவிட்டு, பர்ஸுக்குள் போட்டுக் கொண்டாள் ட்ரேஸி. விடுவிடு வென்று கடையை விட்டு இறங்கினாள்.*

*"ஜாக்கிரதையம்மா!" என்று கடைக்காரர் குரல் கொடுத்தார். "ரிவால்வரில் தோட்டா போட்டிருக்கிறது. ஜாக்கிரதை!" என்றார்.*

## 5

ரொமானோ வசித்த ஜாக்ஸன் ஸ்கொயர் என்னும் இடம் நியூ ஆர்லியன்ஸ் நகரத்தின் மையப் பகுதியில் இருந்தது. அழகிய பழைய மாளிகைகளும் பங்களாக்களும் நிறைந்த இடம். சந்தடி மிகுந்த வீதிகளிலிருந்து ஒதுங்கி, ஓங்கி உயர்ந்த வனப்பான மக்னோலியா மரங்களின் பின்னே மறைந்திருந்தது.

சற்று இருட்டட்டும் என்று ட்ரேஸி காத்திருந்தாள். திருவிழாவின் கூச்சல்கள் வெகு வெகு எட்டத்தில தேய்ந்து மறைந்து கொண்டிருந்தன. விளக்குகளின் வெளிச்சம் படாதவாறு நிழலில் நின்றபடி ரொமானோவின் வீட்டை நோட்டமிட்டபோது-

கைத்துப்பாக்கியின் கனம் தன் பர்ஸை அழுத்திக் கொண்டிருப்பதை உணர்ந்தாள்.

ரொம்பக் கச்சிதமாக அவள் ஒரு திட்டம் போட்டிருந்தாள்.

ரொமானோவிடம் நல்லபடி பேசிப் பார்ப்பது அம்மாவுக்கு அவன் ஏற்படுத்தியுள்ள கெட்ட பெயரை நீக்கும்படி கேட்க வேண்டியது. ஒப்புக் கொண்டால் சரி, இல்லாவிட்டால் துப்பாக்கியை நீட்டி அவனை மிரட்டி, தான் செய்த குற்றங்களை எழுத்து மூலம் அவன் ஒப்புக் கொள்ளும்படி செய்யவேண்டியது. அந்த ஒப்புதல் கடிதத்தை இன்ஸ்பெக்டர் மில்லரிடம் கொடுக்க வேண்டியது. அவர் ரொமானோவைக் கைது செய்வார். அம்மாவுக்கு ஏற்பட்ட அவப் பெயர் நீங்கி விடும்.

இப்போது துணைக்குச் சார்லஸ் இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று அவள் மனம் தவித்தது. வேண்டாம். இந்தக் காரியத்தை நாமே தனியாகச் செய்வதுதான் நலம். சார்லஸை இதில் சம்பந்தப் படுத்தக் கூடாது. எல்லாம்

முடியட்டும். ரொமானோ சிறையில் அடையட்டும். பிறகு சார்லஸிடம் சொல்லிக் கொள்ளலாம்.

சாலையில் யாரோ நடந்த வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் போகும் வரை காத்திருந்தாள்.

தெரு வெறிச்சோடி விட்டது.

வீட்டுப் படியேறி அழைப்பு மணியை அழுத்தினாள். பதில் இல்லை. திருவிழாவுக்காக எங்காவது போயிருக் கிறானோ என்னவோ. பரவாயில்லை. அவன் வரட்டும். காத்திருக்கலாம். எந்நேரமானாலும் அவன் வீடு திரும்பும் வரை காத்திருக்கத்தான் போகிறேன்.

திடீரென்று வெராந்தா விளக்கு எரிந்தது. கதவு திறந்தது. ஓர் ஆள் நின்றிருந்தான்.

அவனுடைய தோற்றம் ட்ரேஸிக்கு வியப்பளித்தது. காலோடு தலை கொடூரம் நிறைந்த ஒரு வில்லத்தனமான ஆளைத்தான் அவள் எதிர்பார்த்திருந்தாள். இவனோ இனிய தோற்றத்துடன், கல்லூரிப் பேராசிரியரைப் போல அமைதி யான முகத்துடன் இருந்தான். 'ஹலோ, என்ன வேணும் உங்களுக்கு?" என்றான். அவன் குரல் தாழ்வாயும், சினேக பாவத்துடனும் இருந்தது.

"நீங்கள் தான் ஜோசப் ரொமானோவா?" என்றாள். அவள் குரல் தடுமாறியது.

"ஆமாம். என்ன காரியமாய் வந்திருக்கிறீர்கள்?" என்று சரளமாயும் சகஜமாயும் அவன் கேட்டான். இந்த ஆளிடம் அம்மா ஏமாந்து போனதில் ஆச்சரியமில்லை என்று தோன்றியது.

"நான்.. நான் உங்களுடன் கொஞ்சம் பேச வேண்டும், மிஸ்டர் ரொமானோ," என்றாள்.

அவளை ஒரு வினாடி உற்றுக் கவனித்தான் அவன். "ஓ, தாராளமாய் உள்ளே வாருங்கள், ப்ளீஸ்."

ட்ரேஸி உள்ளே சென்றாள். மிக அழகான சோபாக்கள் நிறைந்து நேர்த்தியாக இருந்தது அந்த அறை. ரொமானோ

ரொம்ப வசதியாகத் தான் வாழ்கிறான். 'ஏன் மாட்டான்? இத்தனையும் அம்மாவின் பணம்!' என்று கசப்புடன் நினைத்துக் கொண்டாள் ட்ரேஸி.

"இப்போதுதான் ஏதாவது பானம் அருந்தலாமா என்று நினைத்துக் கொண்டிருந்தேன். நீங்கள் வந்தீர்கள், என்ன சாப்பிடுகிறீர்கள்?"

"எதுவும் வேண்டாம்."

அவன் அவளைத் திகைப்புடன் பார்த்தான். "நீங்கள் என்ன காரியமாய் என்னைப் பார்க்க வந்திருக்கிறீர்கள் மிஸ்..."

"நான் ட்ரேஸி விட்னி. டோரிஸ் விட்னியின் பெண்."

சற்று நேரம் அவளை வெறித்து நோக்கியபடி இருந்தான் அவன். பின்னர் ஞாபகம் வந்ததன் அறிகுறி அவன் முகத்தில் மின்னலாக அடித்தது. "ஓ, ஆமாமாம். நானும் கூடக் கேள்விப்பட்டேன் உங்கள் அம்மாவைப் பற்றி. பரிதாபம் தான்," என்றான்.

பரிதாபம்! அம்மாவைச் சாகடித்தவன் இவன். ஆனால் இவன் சொல்வதெல்லாம் 'பரிதாபம்!'

"மிஸ்டர் ரொமானோ, என் அம்மா மோசடிகள் செய்ததாக அரசாங்கம் குற்றம் சாட்டியிருக்கிறது. அது உண்மையில்லை என்பது உங்களுக்குத் தெரியும். என் அம்மாவுக்கு ஏற்பட்ட கெட்ட பெயரை நீக்கியாக வேண்டும். அதற்கு நீங்கள் உதவி செய்ய வேண்டும்."

அவன் தோள்களைக் குலுக்கிக் கொண்டான். "ஊரில் திருவிழா நடைபெறுகிறது. இந்தச் சமயத்தில் நான் பிஸினஸ் விஷயங்கள் பேசுவதில்லை. விரதம்." அலமாரியை நோக்கிச் சென்றவன் இரண்டு கிளாஸ்களில் பானங்கள் நிரப்பத் தொடங்கினான். "ஏதாவது சாப்பிடுங்கள் முதலில். உங்கள் மனம் சிறிது அமைதி அடையட்டும்."

இவன் வழிக்கு வரமாட்டான்

ட்ரேஸி தன் பர்ஸைத் திறந்து ரிவால்வரை வெளியே எடுத்தாள். அவனை நோக்கி நீட்டினாள். "என் மனசுக்கு

*எப்போது அமைதி ஏற்படும் தெரியுமா, ரொமானோ? என் அம்மாவை நீ எப்படியெல்லாம் மோசம் செய்தாய் என்பதை ஒப்புக் கொண்டு உன் கைப்பட வாக்குமூலம் எழுதித் தர வேண்டும். அப்போதுதான்."*

*ரொமானோ திரும்பினான். அவள் கையில் துப்பாக்கி இருப்பதைக் கண்டு திடுக்கிட்டான். "துப்பாக்கியை உள்ளே போடுங்கள், மிஸ் ட்ரேஸி. ஒரு வேளை வெடித்து விடக் கூடும்."*

*"வெடிக்கத்தான் போகிறது நான் சொன்னபடி நீ செய்யாவிட்டால்," என்றாள் ட்ரேஸி. "எப்படி எங்கள் கம்பெனியைச் சீரழித்தாய், எப்படி மோசடி செய்தாய், எப்படி என் அம்மாவைத் தற்கொலை செய்து கொள்ளும்படி பண்ணினாய் என்பதையெல்லாம் நீ எழுதித் தர வேண்டும்."*

*அவளை அவன் எச்சரிக்கையுடன் நோக்கியவாறு இருந்தான். அவன் கண்களில் சலிப்புத் தென்பட்டது. "நான் முடியாது என்று சொன்னால்?"*

*"சொன்னால் உன்னைக் கொலை செய்யப் போகிறேன்." துப்பாக்கி பிடித்திருக்கும் கை நடுங்குவதை அவள் உணர்ந்தாள்.*

*"உங்களைப் பார்த்தால் கொலை செய்கிறவள் மாதிரி தெரியவில்லை, மிஸ் ட்ரேஸி." கையில் கிளாசுடன் அவளை நோக்கி மெல்ல முன்னேறி வந்தான் அவன். அவன் குரல் மென்மையாயும் மனப்பூர்வமாயும் தொனித்தது. "உங்கள் அம்மாவின் மரணத்துக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது. நான் சொல்வதை நம்புங்கள். நான்..." சடேரெனக் கையிலிருந்த பானத்தை அவள் முகத்தை நோக்கி அடித்தான்.*

*சில்லென்ற மது அவள் கண்களைச் சுளீரென்று தாக்கியது. அதே வினாடி அவள் கையிலிருந்த துப்பாக்கியையும் அவன் தட்டிவிட்டான். அது எகிறிப் போய் விழுந்தது.*

"உன் அம்மா ஒரு விஷயத்தை என்னிடம் மறைத்து விட்டாள்," என்றான் கோரமான இளிப்புடன். "இவ்வளவு சிக்கென்று ஒரு மகள் தனக்கு இருப்பதை அவள் சொல்லவே யில்லையே?"

அவளை இறுக்கி அணைத்து, இரண்டு கைகளையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். அவனிடமிருந்து விடுபட்டுப் பின்வாங்க அவள் முயன்றாள். ஆனால் அவன் அவளைச் சுவரோடு சுவராக வைத்து அழுத்திக் கொண்டான்.

"உனக்கு ரொம்பத் துணிச்சல்தான், குட்டி. துணிச்ச லான பெண்களைக் கண்டால் எனக்கு ஒரு மாதிரி ஆகி விடுவது வழக்கம்." அவன் குரல் கரகரவென்றிருந்தது. அவனுடைய உடம்பு தன் உடம்பை அழுத்துவதை அவள் உணர்ந்தாள். நெளிந்து திமிறி விடுபட முயன்றாள். ஆனால் அவன் பிடி இரும்புப் பிடியாக இருந்தது.

"கொஞ்சம் ஜாலியாய் இருக்கலாமென்று தானே நீ வந்தாய்? நல்லது, ரொமானோ ஜாலி கொடுக்கப் போகிறேன்."

அவள் பெரிதாய்க் கூச்சலிட நினைத்தாள். ஆனால் வெறும் விசும்பலாகத்தான் வந்தது. "விடு! விடு என்னை!"

அவன் அவள் பிளவுசைக் கிழித்தான். "ஆ! என்ன ஒரு அழகான காட்சி!" என்று கிசுகிசுத்தபடி அவளைக் கசக்க முனைந்தான். "என்னை எதிர்த்துப் போராடு பேபி! எனக்கு அது ரொம்பப் பிடிக்கும்!"

"விடு! விடு!"

அவளை மேலும் மேலும் இறுக்கினான். அவளுக்கு உடம்பெல்லாம் வலித்தது. அவளைத் தரையில் சாய்த்து அழுத்திக் கொண்டான் அவன்.

"ஒரு நிஜமான ஆண் பிள்ளையை நீ இதுவரை பார்த்திருக்க மாட்டாய். இல்லையா?" அவனுடைய கனமான தேகம் அவளை நசுக்கியது. அவன் கைகள் அவள் தொடை களைத் தடவின.

ட்ரேஸிக்குக் கண்மூடித்தனமான வெறி ஏற்பட்டது. ஒரே தள்ளாக அவனைப் பிடித்துத் தள்ளினாள். அவள் விரல்கள் எதையோ தொட்டன.

கீழே விழுந்திருந்த துப்பாக்கி!

சட்டென்று அதை எடுத்து விசையை அழுத்தினாள். பெருத்த ஓசையுடன் தோட்டா வெடித்தது.

"ஐயோ!" ரொமானோ கூவினான். அவன் பிடி தளர்ந்தது. அவன் எகிறித் துடித்து அப்பால் போய் விழுவதை அவள் கண்டாள். செக்கச் சிவந்த திரவம் அவள் பார்வையை மறைத்தது.

அவன் தன் விலாவைப் பிடித்துக் கொண்டு அலறினான். "என்னைச் சுட்டு விட்டாய்! சுட்டு விட்டாயடி தேவடியாப் பெண்ணே!"

ட்ரேஸி பிரமை பிடித்தவள் போல் நிலை குத்தி நின்றாள். அவளால் நகரக் கூட முடியவில்லை. வயிற்றைப் பிசைந்தெடுத்தது. தாள முடியாத வலி கண்ணை அடைத்தது. தட்டித் தடுமாறி எழுந்து கதவைத் திறந்த போது, ஒரு பாத்ரூம் தெரிந்தது. வாஷ் பேசினில் தண்ணீரை நிரப்பிக் கண்களில் அடித்துக் கொண்டாள்.

கண்ணாடியில் முகத்தைப் பார்த்துக் கொண்டாள். கொள்ளிக் கட்டையாகக் கண்கள் சிவந்து வெறித்திருப்பது தெரிந்தது.

கடவுளே! கடவுளே! நான் என்ன செய்து விட்டேன்! ஒரு ஆளைக் கொலை பண்ணிவிட்டேனே!

மறுபடியும் முன்னறைக்கு ஓடி வந்தாள். ரொமானோ தரையில் கிடந்தான். வெள்ளை விரிப்பில் ரத்தம் பரவிக் கொண்டிருந்தது.

வெளிறிப் போன முகத்துடன் அவன் எதிரே நின்றவள். "ஸாரி!" என்றாள் பலவீனமாக. "உங்களைக் கொலை செய்ய வேண்டுமென்று நான் நினைக்கவில்லை..."

"ஆம்புலன்ஸ்... ஆம்புலன்ஸ் கூப்பிடு..." என்றான். அவன் குரல் பிசிறியது.

டெலிபோனுக்கு ஓடினாள். டயல் செய்தாள். தொண்டை அடைத்துக் கொண்டது. "உடனே ஆம்புலன்ஸ் அனுப்புங்கள். ஜாக்ஸன் ஸ்கொயர்... நாலு இரண்டு ஒன்று. இங்கே ஒருவர் சுடப்பட்டுக் கிடக்கிறார்."

ரிஸீவரைத் திரும்ப வைத்து விட்டு ரொமானோவைப் பார்த்தாள்.

தெய்வமே! இவன் செத்துவிடக் கூடாது. நான் கொலை செய்ய நினைக்கவில்லை... நினைக்கவில்லை...

அவன் உயிரோடுதான் இருக்கிறானா? முழந் தாளிட்டுக் குனிந்து தரையில் கிடப்பவனைப் பார்த்தாள்.

அவன் கண்கள் மூடியிருந்தன ஆனால் மூச்சு வந்து கொண்டிருந்தது.

"ஆம்புலன்ஸ் வந்து கொண்டிருக்கிறது," என்று அவனுக்கு உறுதி கூறிவிட்டு, வெளியே பாய்ந்தாள்.

ஓடக் கூடாது. பார்க்கிறவர்களின் கவனம் தன்மீது திரும்பும்.

கிழிந்திருந்த பிளவுஸை மறைப்பதற்காகக் கோட்டை இழுத்து மூடிக் கொண்டாள். நாலு வீடுகள் தாண்டியதும் ஒரு டாக்ஸி எதிர்ப்பட்டது கையை ஆட்டினாள். அவன் நிற்கவில்லை.

## 6

ஓடிவிட வேண்டும்! இந்த இடத்தை விட்டு ஓடிவிட வேண்டும்!

ட்ரேஸி பதைத்தாள். டாக்ஸிக்காகத் தவித்தாள். ஆனால் பல டாக்ஸிகள் நிற்காமலே போய்க் கொண்டிருந்தன.

*கடைசியில் ஒரு டாக்ஸி நின்றது. தாவி ஏறிக் கொண்டு, "விமான நிலையத்துக்குப் போ! சீக்கிரம்!" என்றாள்.*

*டாக்ஸி ஓடிக் கொண்டிருந்த போது அவள் மனம் பலவாறாகக் குழம்பியது. நல்ல வேளை ஆம்புலன்ஸ் வந்து விட்டது. ரொமானோவை விரைவாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போய்க் காப்பாற்றுவார்களா? அல்லது தாமதம் ஏற்பட்டு, ரொமானோ இறந்து விடுவானோ?*

*அவன் இறந்து விட்டால் என் மீது கொலைப் பழி விழும். துப்பாக்கியை அங்கேயே விட்டு விட்டு வந்து விட்டேனே? அதில் என் கைரேகைகள் இருக்குமே?*

*ரொமானோ என்னைக் கற்பழிக்க முயன்றான். அப்போது தற்செயலாகத் துப்பாக்கி வெடித்துவிட்டது என்று போலீசில் சொல்லலாம். ஆனால் அவர்கள் நம்ப வேண்டுமே?*

*ரொமானோவுக்கு அருகே அந்தத் துப்பாக்கி... அதை அவள் விலை கொடுத்து வாங்கிய விஷயம்...*

*கொலை நடந்து இப்போது எவ்வளவு நேரம் ஆகி யிருக்கும்? அரை மணி? ஒரு மணி?*

*எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் இந்த நியூ ஆர்லியன்ஸை விட்டுப் போய்விட வேண்டும்...*

*கைப்பையிலிருந்து கண்ணாடியை எடுத்து, அலங் கோலமாக இருந்த முகத்தைச் சரிசெய்து கொண்டாள்.*

*சே! ரொமானோவை ஒப்புக் கொள்ள வைக்கலாம் என்று முயற்சி செய்தது சுத்த முட்டாள் தனம். எல்லாமே தப்பாய்ப் போய்விட்டது. இதையெல்லாம் சார்லஸிடம் எப்படித்தான் சொல்லப் போகிறேனோ? அவருக்குப் பெரும் அதிர்ச்சியாக இருக்கும். ஆனால் எல்லாவற்றையும் விளக்கிச் சொன்னால் புரிந்து கொள்வார். அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொல்வார்.*

**வி**மான நிலையத்தை அடைந்தது டாக்ஸி.

நடந்ததையெல்லாம் அவளாலேயே நம்ப முடியவில்லை.

இதே விமான் நிலையத்தில் வந்து இறங்கியது இன்று காலையில் தானே? இந்த ஒரே நாளைக்குள்ளா அவ்வளவு அமளி ஏற்பட்டு விட்டது? அம்மாவின் தற்கொலை... திருவிழாக் கூட்டம்... 'என்னைச் சுட்டு விட்டாயேடி தேவடியாப் பெண்ணே' என்ற ரொமானோவின் அலறல்...

டிக்கெட் வாங்குமிடத்தை நோக்கி நடந்தாள். ஒவ்வொருவரும் தன்னை முறைத்துப் பார்த்துக் குற்றம் சாட்டுகிற மாதிரி தோன்றியது. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கிறது என்று எண்ணிக் கொண்டாள். ரொமானோ இப்போது எப்படி இருக்கிறான் என்பதைத் தெரிந்து கொண்டால் தேவலை போலிருந்தது. ஆனால் அவனை எந்த ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றார்களே, தெரியவில்லையே? யாரை விசாரிப்பது?

ரொமானோவுக்கு ஒன்றும் நேர்ந்திருக்காது. நல்லபடி இருப்பான். அம்மாவின் சவ அடக்கத்துக்காகச் சார்லஸும் நானும் மறுபடியும் இங்கே வருவோம். அதற்குள் ரொமானோ நல்லபடி ஆகியிருப்பான்...

வெள்ளை வெளேரென்ற விரிப்பில் செக்கச் செவேலென்று ரத்தம் பரவ அவன் விழுந்து கிடந்த காட்சி கண் முன்னே நின்று கொண்டேயிருந்தது. அதை ஒதுக்க முயன்றாள்.

முதலில் ஊருக்குப் போய், சார்லஸைப் பார்க்க வேண்டும். பிறகு எல்லாம் சரியாகி விடும்.

டிக்கெட் கவுண்ட்டரை அடைந்தாள். "பிலடெல்பியாவுக்கு ஒரு டிக்கெட் கொடுக்க முடியுமா? அடுத்த ஃப்ளைட்டுக்கே வேண்டும்..."

டிக்கெட் விற்பவர் தன் கம்ப்யூட்டரைப் பார்த்து, "இன்னும் சற்று நேரத்தில் ஒரு விமானம் புறப்படுகிறது. உங்கள் அதிர்ஷ்டம் அதில் ஒரு சீட் இருக்கிறது," என்றார்.

"எப்போது புறப்படும்?"

"இன்னும் இருபது நிமிடங்களில்."

பணத்தை எடுப்பதற்காக ட்ரேஸி பையைத் திறந்த போது, யாரோ அருகில் வந்து நிற்கிற மாதிரி அவள் உள்ளுணர்வு கூறியது.

இரண்டு போலீஸ் அதிகாரிகள்-

அவளுக்கு இந்தப் புறம் ஒருவரும் அந்தப் புறம் ஒருவருமாக நின்று கொண்டார்கள். "ட்ரேஸி விட்னி?" என்று அவளை ஒருவர் கேட்டார்.

ஒரு வினாடி அவள் இதயத் துடிப்பு நின்றது. இல்லை என்று மறுத்து விடலாம். அது மடத்தனம்... "ஆமாம்." என்றாள்.

"உங்களைக் கைது செய்கிறோம்."

சில்லென்ற விலங்குகள் தன் மணிக்கட்டை இறுக்கு வதை உணர்ந்தாள் ட்ரேஸி.

ஒரு போலீஸ்காரரின் கையுடன் அவள் கைவிலங்கு பிணைக்கப்பட்டதும்... விமான நிலையத்தின் வாசலுக்கு அவள் அழைத்துச் செல்லப்பட்டதும்... விமான நிலையத்தில் கூடியிருந்தவர்கள் தன்னைத் திரும்பிப் பார்த்து முறைப்பதும்...

எல்லாம் வேறு யாருக்கோ நடப்பதை ஸ்லோ மோஷனில் தான் பார்க்கிறமாதிரி இருந்தது. கறுப்பும் வெளுப்புமான போலீஸ் வண்டியில், இரும்பு வலை போட்ட பின்பகுதியில் அவளை ஏற்றினார்கள். சிவப்பு விளக்குப் பளிச்சிட்டது. சைரன் ஊளையிட்டது. போலீஸ் வண்டி பறந்தது.

எவருடைய பார்வையிலும் படாமல் மறைந்துவிட மாட்டோமா என்றிருந்தது அவளுக்கு. இருக்கையின் மூலையில் பதுங்கிக் கொண்டாள்.

ரொமானோ இறந்து விட்டான். நான் கொலைகாரியாகி விட்டேன். இல்லையில்லை. இது தற்செயலாக

நேர்ந்த விபத்து. என்ன நடந்தது, எப்படி நடந்தது என்பதை விளக்கிச் சொல்வோம். நம்புவார்கள். நம்பத்தான் வேண்டும்.

அந்தப் போலீஸ் ஸ்டேஷன் கட்டிடம் எவரையும் அச்சுறுத்தும் வண்ணம் கடுமையான தோற்றம் கொண்டிருந்தது. உள்ளே கூட்டம்நிரம்பி வழிந்தது. விபச்சாரிகள், தரகர்கள், அடிதடிக்கு அஞ்சாத ரவுடிகள், அவர்களிடம் அடி வாங்கிய அப்பாவிகள்...

ட்யூட்டியிலிருந்த போலீஸ் அதிகாரியின் முன்னே ட்ரேஸியைக் கொண்டு போய் நிறுத்தினார்கள்.

"இந்தப் பெண்பிள்ளை தான் சார் ட்ரேஸி விட்னி. தப்பியோட விருந்தாள். விமான நிலையத்தில் பிடித்து விட்டோம்..."

"நானொன்றும் தப்பியோட-

"விலங்கைக் கழற்று," என்றார் அதிகாரி.

விலங்குகள் அகற்றப்பட்டன. பிறகுதான் ட்ரேஸிக்குப் பேச்சு வந்தது. "அது ஒரு விபத்து. அவரை நான் கொல்ல வேண்டுமென்று நினைக்கவில்லை. அவர் என்னைப் பலாத்காரம் பண்ணப் பார்த்தார்..." ஜன்னி பிடித்த மாதிரி உரக்க ஒலித்த குரலை அவளால் கட்டுப் படுத்த முடியவில்லை.

"நீதான் ட்ரேஸியா?" என்று நறுக்கெனக் குறுக் கிட்டார் போலீஸ் அதிகாரி.

"ஆமாம்."

"லாக்கப்பில் தள்ளு."

"இல்லையில்லை! ஒரு நிமிஷம் பொறுங்கள்," என்று ட்ரேஸி மன்றாடினாள். "ஒருத்தரை நான் கூப்பிட வேண்டும்... டெலிபோன் செய்ய எனக்கு உரிமை உண்டு!"

போலீஸ் அதிகாரி பல்லைக் கடித்தார் "ஓகோ, போலீஸ் நடைமுறையெல்லாம் உனக்கு அத்துப்படியா? ஏன் கண்ணு, இதுவரை எத்தனை தடவை ஜெயிலுக்குப் போயிருக்கிறாய்?"

"போனதேயில்லை. இதுதான்..."

"ஒரே ஒரு போன் செய்யலாம். மூன்றே நிமிடம் தான் பேச வேண்டும்."

அவளுக்கிருந்த பதைப்பில் சார்லஸின் போன் நம்பர் ஞாபகம் வரமாட்டேன் என்றது. பிலடெல்பியாவுக்கு உண்டான 'கோடு' எண்ணே நினைவு வரவில்லை. இரண்டு - ஐந்து ஒன்றா? இல்லை. அவள் உடம்பு நடுங்கிக் கொண்டிருந்தது.

"சொல்லும்மா! உனக்காக ராத்திரி பூரா காத்திட்டி ருக்க முடியாது."

இரண்டு ஒன்று ஐந்து... ஆமாம். நினைவு வந்து விட்டது. "இரண்டு - ஒன்று - ஐந்து - ஐந்து - ஐந்து - ஒன்று சைபர் ஒன்று."

போலீஸ் அதிகாரி டயலைச் சுழற்றி அவளிடம் போனைக் கொடுத்தார்.

மணி அடிக்கும் சத்தம் கேட்டது. கேட்டுக் கொண்டே யிருந்தது. பதில் இல்லை. சார்லஸ் வீட்டுக்குப் போய் விட்டார் போலிருக்கிறது.

"மூன்று நிமிடம் முடிஞ்சிட்டுது." போனை வாங்கிக் கொள்ளக் கை நீட்டினார் போலீஸ் அதிகாரி.

"கொஞ்சம் பொறுங்கள்," என்றாள். சட்டென்று ஞாபகம் வந்தது. இரவு வேளைகளில் சார்லஸ் போனை எடுத்து வைத்து விடுவது வழக்கம் தூக்கம் கெடக் கூடாதென்று.

"என்னம்மா, முடிச்சியா இல்லையா?"

ட்ரேஸி அவரை நிமிர்ந்து பார்த்து, "முடிந்து விட்டது," என்றாள் தாழ்ந்த குரலில்.

ஒரு போலீஸ்காரர் அவளை அடுத்த அறைக்கு அழைத்துச் சென்றார் அங்கே அவள் பெயர், முகவரி முதலியவற்றைக் குறித்துக் கொண்டு கைரேகையைப் பதிவு செய்து கொண்டார்கள். பின்னர் ஒரு வெராந்தா வழியே

அவளை அழைத்துச் சென்று, லாக்கப்பில் வைத்துப் பூட்டினார்கள் அந்த அறையில் வேறு யாரும் இருக்க் வில்லை.

"காலையில் உன்னை விசாரிப்பார்கள்," என்று சொன்ன பின் அவளைத் தனியே விட்டுவிட்டுச் சென்றார் போலீஸ்காரர்.

'இதெல்லாம் நிஜமாய் நடக்கவில்லை... அவ்வளவும் பயங்கரக் கனவு...' என்று ட்ரேஸி எண்ணிக் கொண்டாள். 'கடவுளே, இது எதையும் நிஜமாகப் பண்ணிவிடாதே... பண்ணி விடாதே...'

இல்லை. எல்லாம் உண்மை. நிஜம். அதே அந்த நாற்றம் பிடித்த கட்டில் உண்மை. சீட் இல்லாத டாய்லெட் உண்மை. இந்தக் கம்பிகள் உண்மை.

**வி**டிந்தது. காலை ஆறு மணிக்கு ஒரு காவலாள் அலுப்பும் சலிப்புமாக அவளுக்குக் காலை உணவு கொண்டு வந்து தந்தான்.

ஒன்பது மணிக்கு ஒரு பெண் அதிகாரி வந்தாள்.

"போகலாம் வா, கண்ணு," என்று கூறிக் கதவைத் திறந்தாள்.

"நான் போன் செய்யணும்," என்றாள் ட்ரேஸி. "ஒரு முக்கிய-"

"எல்லாம் அப்புறம்," என்றாள் அவள். "உனக்காக மாஜிஸ்திரேட் காத்திட்டிருக்கிறார் தாமதமானால் அவருக்குக் கோபம் வரும்."

ட்ரேஸியை வெராந்தா வழியே நீதிமன்ற அறைக்கு அழைத்துச் சென்றாள்.

மிக வயதான ஒரு ஜட்ஜ் அங்கே இருந்தார். அவர் கையும் தலையும் விலுக்விலுக்கென்று ஆடிக் கொண்டிருந்தன. அவர் எதிரே அரசாங்க வக்கீலான டாப்பர் என்பவர் நின்றிருந்தார். நாற்பது வயதைத் தாண்டிய ஒல்லியான மனிதர்.

"ட்ரேஸி விட்னி!" என்று கோர்ட் சேவகன் கூவியதும், நீதிபதியிடம் முன்னே போய் நின்றாள் ட்ரேஸி. மேஜை மீதிருந்த காகிதத்தைப் பார்வையிட்ட வண்ணம் இருந்தார் நீதிபதி. அவர் தலை மேலும் கீழுமாக ஆடிக் கொண்டிருந்தது.

இதுதான் சரியான சமயம் என்று ட்ரேஸிக்குத் தோன்றியது. நடந்ததையெல்லாம் ஒரு சரியான அதிகாரியின் முன்னே விளக்குவதற்கு இதுதான் தகுந்த சந்தர்ப்பம். தன் கைகள் நடுங்காமலிருப்பதற்காக இறுகப் பிடித்துக் கொண்டாள். "யுவர் ஆனர்... நடந்தது கொலை அல்ல. அவனை நான் சுட்டேன். ஆனால் அது ஒரு விபத்து தான். அவனைப் பயமுறுத்தத்தான் நான் நினைத்தேன். அவன் என்னைக் கற்பழிக்க முயன்றான். ஆனால்...."

அரசாங்க வக்கீல் குறுக்கிட்டார். "யுவர் ஆனர், நீதிமன்றத்தின் பொன்னான நேரத்தை வீணடிப்பதில் அர்த்தமில்லை. இந்தப் பெண் ரொமானோவின் வீட்டுக்குள் திருட்டுத்தனமாய்ப் போயிருக்கிறாள். கையில் ஆயுதம் துப்பாக்கி வைத்திருந்தாள். அங்கேயிருந்து ஐந்து லட்சம் டாலர் பெறுமானமுள்ள ரெனாயிர் ஓவியமொன்றைத் திருட முயன்றிருக்கிறாள். அப்போது ரொமானோ இவளைக் கையும் களவுமாகப் பிடித்து விட்டார். உடனே இவள் துப் பாக்கியால் அவரைச் சுட்டு வீழ்த்திவிட்டுத் தப்பியோடி யிருக்கிறாள்..."

ரெனாயிர் ஓவியமா? ஐந்து லட்சம் டாலர் பெறுமான முள்ளதா?

என்ன சொல்கிறார்கள் இவர்கள்?

ட்ரேஸிக்கு எதுவும் புரியவில்லை.

## 7

என்ன சொல்கிறார்கள் இவர்கள்?

ஐந்து லட்சம் டாலர் பெறுமானமுள்ள ஓவியத்தை இவள் திருடிக்கொண்டு வந்தாளாவது!

ட்ரேஸிக்கு எதுவும் புரியவில்லை. அவள் முகம் சவமாக வெளுத்துப் போயிற்று. "நீங்கள்... நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்றாள்.

அரசாங்க வக்கீல் உறுமினார். "இவள் ரொமானோவைக் காயப்படுத்திய கைத்துப்பாக்கி இருக்கிறது. அதில் இவளுடைய கைரேகைகள் இருக்கின்றன."

'காயப்படுத்திய' என்றா சொல்கிறார்! அப்படியானால் ரொமானோ உயிருடன் தான் இருக்கிறான்! கடவுள் காப்பாற்றினார். நான் யாரையும் கொலை செய்யவில்லை!

அரசாங்க வக்கீல் தொடர்ந்தார். "யுவர் ஆனர், இவள் ஓவியத்தை எடுத்துக் கொண்டு தப்பிவிட்டாள். இந்நேரம் அந்த ஓவியம் திருட்டுப்பொருள் வியாபாரம் செய்யும் ஆளிடம் போயிருக்கும். ஆக, கொலை முயற்சி, ஆயுதம் தாங்கிய கொள்ளை ஆகிய குற்றங்களை இந்தப் பெண் செய்திருக்கிறாள். ஐந்து லட்சம் டாலர் ஜாமீன் கட்டினாலொழிய இவளை விடுவிக்கக் கூடாதென்று கனம் கோர்ட்டாரைக் கேட்டுக் கொள்கிறேன்."

அதிர்ச்சியில் சிலையாகிவிட்ட ட்ரேஸியை நோக்கி நீதிபதி திரும்பினார். "என்னம்மா, உனக்கு வக்கீல் யாராவது இருக்கிறார்களா?"

அவர் கேட்பது அவள் காதிலேயே விழவில்லை.

நீதிபதி குரலை உயர்த்திக் கேட்டார். "உன்னைத் தாம்மா, வக்கீல் யாராவது இருக்கிறார்களா என்று கேட்டேன்!"

ட்ரேஸி தலையை அசைத்தாள். "இல்லை... வந்து... இவர் சொல்வது உண்மையல்ல. நான் ஒரு போதும்-"

"வக்கீலுக்குக் கொடுக்கப் பணம் இருக்கிறதா உன்னிடம்?"

பாங்க்கில் அவளுடைய சம்பளப் பணம் இருந்தது. சார்லஸைக் கேட்டால் பணம் தருவார்.

"வந்து... யுவர் ஆனர். ஆனால் எனக்குப் புரியவில்லை...?"

"உனக்காகக் கோர்ட்டே ஒரு வக்கீலை அமர்த்திக் கொடுக்கும். ஐந்து லட்சம் டாலர் உன்னால் ஜாமீன் கொடுக்க முடியாதாகையால் உன்னைச் சிறைக்கு அனுப்பு கிறேன். ஊம்! அடுத்த கேஸ்!"

"பொறுங்கள்! பொறுங்கள்! எல்லாம் ஏதோ தவறுதல்... நான்..."

நீதிமன்ற அறையிலிருந்த ட்ரேஸியைச் சிறைக்கு அழைத்துச் சென்றார்கள். ஆனால் அவளுக்கு எதுவும் உணர்வில் உறைக்கவில்லை.

**கோ**ர்ட்டார் அவளுக்காக நியமித்த வக்கீலின் பெயர் பெர்ரி போப். முப்பத்தைந்து வயதுக்கு மேலிருக்கும். முகத்தில் புத்திக்கூர்மையும் கண்களில் அனுதாபமும் தென்பட்டன. கண்டதுமே அவனைப் பிடித்துவிட்டது ட்ரேஸிக்கு.

சிறைக்குள் வந்து, ட்ரேஸியின் கட்டிலருகே நின்று அனுதாபமான குரலில் பேசினான். "ஊருக்கு வந்து இருபத்து நாலு மணி நேரம் ஆவதற்குள் பெரிய பரபரப்பை ஏற்படுத்தி விட்டாயேம்மா!" என்று சிரித்தான். "ஆனால் உன் அதிர்ஷ்டம் உனக்குச் சரியாய்ச் சுடத் தெரியவில்லை. ரொமானோவுக்கு மேலோடு தான் காயம் பட்டிருக்கிறது. அவன் உயிருக்கு ஆபத்தில்லை." புகைக் குழாயை வெளியே எடுத்தவன், "நான் புகை பிடிப்பதில் உனக்கு ஆட்சேபணையில்லையே?" என்றான்.

"இல்லை."

குழாயில் புகையிலைத் தூளை அடைத்துப் பற்ற வைத்துக் கொண்டு ட்ரேஸியைக் கூர்ந்து கவனித்தான். "வெளிப் பார்வைக்கு நீ கிரிமினல் மாதிரி தெரியவில்லை. மிஸ் ட்ரேஸி."

"நான் குற்றவாளி இல்லை! சத்தியமாகச் சொல்கிறேன்!"

"நீ சொல்வது உண்மைதான் என்று முதலில் என் மனசுக்குத் திருப்தி ஏற்பட வேண்டும்," என்றான் அவன். "என்ன நடந்ததென்று சொல்லு. ஆரம்பத்திலிருந்து சொல்லு. அவசரமில்லை. மெதுவாகவே சொல்லு..."

ட்ரேஸி சொன்னாள். அனைத்தையும் சொன்னாள். அவள் பேசி முடிக்கும் வரை ஒரு வார்த்தை கூடக் குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டிருந்தான் பெர்ரி. பிறகு சுவரில் சாய்ந்து கொண்டு நின்றான். அவன் முகத்தில் கடுமை நிலவியது. கீழ்க் குரலில், "தேவடியாப் பையன்!" என்றான்.

ட்ரேஸி தலையை இரு கைகளிலும் புதைத்துக் கொண்டாள். "அவர்கள் என்மீது என்ன குற்றம் சாட்டுகிறார் களென்றே எனக்குப் புரியவில்லை." நிமிர்ந்த போது அவள் கண்களில் குழப்பம் கூத்தாடியது. "என்னமோ ஓவியம் என்கிறார்கள். எனக்கு எந்த ஓவியத்தையும் தெரியாது."

"ரொம்ப ஸிம்பிள். உன் அம்மாவை உபயோகப் படுத்திக் கொண்ட மாதிரியே உன்னையும் உபயோகப் படுத்திக் கொண்டிருக்கிறான். அவன் போட்டிருந்த திட்டத்துக்கு நீ ரொம்ப எளிதாய்ப் பலியாகிவிட்டாய்."

"புரியவில்லையே?"

"விளக்கமாகச் சொல்கிறேன், கேள். அந்த ரெனாயிர் ஓவியத்தின் மீது அவன் ஐந்து லட்சம் டாலருக்கு இன்ஷ்யூர் செய்திருக்கிறான். ஓவியத்தை அவனே எங்கேயோ ஒளித்து வைத்துவிட்டு, நீ திருடியதாகப் பழி போட்டு, ஐந்து லட்சம் டாலரை இன்ஷ்யூரன்ஸ்காரர்களிடம் பெற்றுக் கொள்வான். இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி அவனை விட்டு விட்டு உன்னைத் தான் பிடித்துக்கொள்ளும். சந்தடிகள் ஓய்ந்த பிறகு அவன் அந்த ஓவியத்தை ரகசியமாக விற்று இன்னொரு ஐந்து லட்சம் டாலர் சம்பாதித்து விடுவான். நீ தன்னந்தனியே அவனை மடக்கலாமென்று திட்டம் போட்டது அவனுக்கு லாபமாகி விட்டது. ஏம்மா, ஒருத்தனிடம் துப்பாக்கி முனையில் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினால் அது எங்கேயாவது செல்லுமா? அது கூடவா உனக்குத் தெரியவில்லை?"

"தெரியவில்லைதான். ஆனால் அவன் உண்மையை ஒப்புக்கொண்டால் அதன் பிறகு யாராவது புலன் விசாரணை செய்வார்கள் என்று நினைத்து விட்டேன்..."

அவனுடைய புகைக் குழாய் அணைந்து போயிருந்தது. மறுபடி பற்ற வைத்துக் கொண்டான். "அவன் வீட்டுக்குள் நீ எப்படி நுழைந்தாய்?"

"அழைப்பு மணியை அழுத்தினேன். ரொமானோ கதவைத் திறந்து உள்ளே அழைத்துச் சென்றான்."

"அவன் சொல்லுகிற கதையே வேறு. வீட்டின் பின் புறமிருக்கிற ஜன்னல் கண்ணாடி சிதறி உடைந்திருக்கிறது. நீதான் அதை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்திருக் கிறாயாம். ரெனாயிர் ஓவியத்துடன் நீ வெளியே நழுவுவதை அவன் பார்த்தானாம். உன்னைப் பிடிக்க முயன்ற போது நீ சுட்டுவிட்டு ஓடிவிட்டாயாம். போலீசில் அப்படித்தான் சொல்லியிருக்கிறான்."

"பொய்! பொய்! நான்-"

"அது சரிம்மா. அவன் சொல்கிற பொய்தானே பொருத்தமாய் இருக்கு. அவன் வீட்டில் நீ, உன் கையில் துப்பாக்கி! அதிருக்கட்டும் ரொமானோ எப்படிப்பட்ட ஆள் என்று உனக்குக் கொஞ்சமாவது தெரியுமா?"

ஊமையாய்த் தலையை அசைத்தாள் ட்ரேஸி.

"சொல்கிறேன், கேட்டுக் கொள். உலகம் எப்படி யென்று உனக்கு அப்போதுதான் புரியும். ஆர்ஸெட்டி குடும்பம் தான் இந்த ஊரையே ஆட்டிப் படைக்கிறது. ஆர் ஸெட்டியின் கண்ணசையா விட்டால் இங்கே எதுவும் அசைய முடியாது. கட்டிடம் கட்டப் பர்மிஷன் வேணுமா? சாலை போட அனுமதி தேவையா? விபசார விடுதி, சூதாட்டக் கிடங்கு, போதை வியாபாரம் எது நடத்த வேண்டுமென்றாலும் சரி, ஆர்ஸெட்டி வைத்ததுதான் சட்டம். அவனுடைய அடியாட்களில் ஒருவனாக வாழ்க் கையை ஆரம்பித்தவன் இந்த ரொமானோ. இன்று

ஆர்ஸெட்டி கும்பலில் அவன் நம்பர் ஒன்." அவளை வியப்புடன் பார்த்தான் அவன். "நீ என்னடா வென்றால் ரொமானோவின் வீட்டுக்குள் நுழைந்து துப்பாக்கியை நீட்டியிருக்கிறாய்?"

உடலும் உள்ளமும் களைத்து மரத்துப் போனவளாக உட்கார்ந்திருந்தாள் ட்ரேஸி. "நான் சொன்னதை நீங்களாவது நம்புகிறீர்கள். இல்லையா?"

அவன் புன்னகை செய்தான். "நிச்சயமாய் நம்புகிறேன். நீ போட்ட திட்டம் மகா அபத்தமாயிருக்கிறது. ஆகவே உண்மையாகத்தான் இருக்க வேண்டும்."

"நீங்கள் எனக்கு உதவி செய்வீர்களா?"

அவன் மெதுவாய்ச் சொன்னான்: "முயற்சி செய்து பார்க்கிறேன். அவர்கள் அத்தனை பேரையும் கம்பிக்குப் பின்னால் தள்ளினால் தான் எனக்குத் திருப்தி. இந்த ஊரையும், இந்த ஊரில் உள்ள பெரும்பாலான நீதிபதிகளை யும் ஆட்டிப் படைக்கிறது அந்தக் கும்பல். விசாரணைக்கு உன் வழக்கு வந்தால், உன்னைக் குழி தோண்டிப் புதைத்து விடுவார்கள். என்றென்றைக்கும் நீ வெளியே வர முடியாது."

ட்ரேஸி திகைப்புடன் அவனை ஏறிட்டுப் பார்த்தாள். "விசாரணைக்கு வந்தால் என்று சொல்கிறீர்களே? பின்னே வராமல்?"

அந்தச் சிறிய அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாக நடந்தான் பெர்ரி. "நீ ஜூரர்கள் முன்னால் போய் நிற்பதை நான் விரும்பவில்லை. ஏனெனில் ஜூரர்கள் அத்தனை பேரும் அவனுடைய ஆட்கள் தான். ஹென்றி லாரன்ஸ் என்று ஒரு நீதிபதி இருக்கிறார். ஆர்ஸெட்டியால் விலைக்கு வாங்க முடியாத ஒரே நீதிபதி அவர்தான். உன்னுடைய வழக்கை அவர் கேட்கும்படி செய்யமுடியுமா என்று பாக்கிறேன். முடிந்தால் உனக்கு நிச்சயம் உதவியாக இருக்கும். அவரோடு தனிப்பட்ட முறையில் பேசுவது தப்பான காரியம்தான். இருந்தாலும் பேசிப் பார்க்கிறேன். ஆர்ஸெட்டியிடமும்

ரொமானோவிடமும் என்னைப் போலவே அவருக்கும் ரொம்ப வெறுப்பு. முதலில் லாரென்ஸைப் பார்க்கிறேன்."

சொல்லிவிட்டுச் சென்றவன், ட்ரேஸி டெலிபோனில் சார்லஸுடன் பேச ஏற்பாடு செய்து தந்தான்.

"மிஸ்டர் சார்லஸின் ஆபீஸ்." சார்லஸின் செகரட்டரி யினுடைய பழக்கமான குரல்.

"ஹாரியட்! நான் தான் ட்ரேஸி பேசுகிறேன். சார்லஸ்-"

"ஓ! நீங்களா மிஸ் ட்ரேஸி! உங்களுடன் டெலிபோனில் பேச அவர் பண்ணாத முயற்சியில்லை. ஆனால் உங்கள் டெலிபோன் நம்பர் தெரியவில்லை. சார்லஸின் அம்மா வேறே, உங்களுடன் கல்யாண ஏற்பாடுகளைப் பற்றிப் பேச வேண்டும் என்று ரொம்பக் கவலையாக இருக்கிறார். நீங்கள் அவரைக் கூப்பிட்டுப் பேசினால் -"

"ஹாரியட், நான் சார்லஸுடன் உடனே பேச வேண்டும். ப்ளீஸ்."

"ரொம்ப ஸாரி மிஸ் ட்ரேஸி. அவர் ஒரு கூட்டத்துக் காக ஹூஸ்டனுக்குப் போயிருக்கிறார். இப்ப பாதி வழி போயிருப்பார். நீங்கள் உங்கள் டெலிபோன் நம்பரைச் சொன்னால் -"

"வந்து ட்ரேஸி யோசித்தாள். ஜெயில் டெலிபோன் நம்பரைக் கொடுப்பது சரியில்லை. சார்லஸ் பதறிப் போவார். முதலில் அவருக்கு நாமே எல்லா விஷயத்தையும் விளக்கி விட வேண்டும்.

"நானே மறுபடியும் கூப்பிடுகிறேன்." மெதுவே ரிசீவரை வைத்தாள்.

நாளைக்கு... நாளைக்கு... சலிப்புடன் அவள் எண்ணிக் கொண்டாள். எல்லாவற்றையும் நாளைக்குச் சார்லஸிடம் விளக்கிக் கொள்ளலாம்.

அன்று பிற்பகல் ட்ரேஸியை இன்னும் சற்றுப் பெரிய அறைக்கு மாற்றினார்கள். உயர்தர ஓட்டலிலிருந்து சுவை

யான உணவு சுடச்சுட வந்தது. புத்தம் புதிய பூங்கொத்தும் வந்தது. அத்துடன் இருந்த அட்டையில் -

'உற்சாகமாக இரு அந்த அயோக்கிய ராஸ்கல்களை நாம் ஒழித்துக்கட்டத் தான் போகிறோம். பெர்ரி.'

அடுத்த நாள் காலை அவன் ட்ரேஸியைப் பார்க்க வந்தான். அவன் முகத்திலிருந்த புன்னகையைக் கண்டதுமே நல்ல செய்தி கொண்டு வந்திருக்கிறானென்று ட்ரேஸிக்குத் தெரிந்தது.

"அதிர்ஷ்டம் நம் பக்கம் இருக்கிறது," என்றான் அவன் உற்சாகமாக. "ஜட்ஜ் லாரென்ஸை இப்போது தான் பார்த்துவிட்டு வந்தேன். அரசாங்க வக்கீல் டாப்பர் காச்சு மூச்சென்று கத்தினான். ஆனால் ஜட்ஜ் ஒரு உடன்பாடு செய்து கொள்ளச் சம்மதித்தார்."

"உடன்பாடா? என்ன உடன்பாடு?"

"ஜட்ஜ் லாரென்ஸிடன் உன் கதை மொத்தத்தையும் சொன்னேன். நீ குற்றம் செய்ததாக ஒப்புக் கொண்டால் போதும் என்று சொல்லிவிட்டார்."

ட்ரேஸி அதிர்ச்சியுடன் கத்தினாள். "என்ன? குற்றம் செய்ததாக ஒப்புக் கொள்ள வேண்டுமா?"

## 8

ட்ரேஸி திகைத்து நின்றாள். குற்றத்தை ஒப்புக் கொள்ளும்படி அல்லவா சொல்கிறார் இந்த வக்கீல்!

"நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை... செய்ததாக ஏன் ஒப்புக் கொண்டு..." என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கையில்...

வக்கீல் பெர்ரி கையை உயர்த்தினான் "நான் சொல்வதை முழுக்கக் கேளுங்கள். நீங்கள் குற்றத்தை ஒப்புக் கொள்வதால் வழக்கு நடத்தும் செலவை அரசாங்கத்துக்கு மிச்சப்படுத்திக்

கொடுக்கிறீர்கள். அதற்காகவே உங்கள் மீது நீதிபதிக்கு நல்லெண்ணம் ஏற்படும். நீங்கள் ஓவியத்தைத் திருடவில்லை என்பதை ஜட்ஜ் லாரென்ஸ் நம்பும்படி செய்திருக்கிறேன். அவருக்கு ரொமானோவைப் பற்றித் தெரியும். ஆகவே நான் சொன்னதை நம்புகிறார்..."

"ஆனால் நான் குற்றத்தை ஒப்புக் கொண்டால்..." ட்ரேஸி மெதுவாகக் கேட்டாள் "என்னை என்ன செய்வார்கள்?"

"ஜட்ஜ் லாரென்ஸ் உங்களை மூன்று மாதச் சிறைத் தண்டனையோடு விட்டுவிடுவார்."

"சிறையா?"

"பொறுமையாய்க் கேளுங்கள். தண்டனை அளித்து விட்டு, அதை ஸஸ்பெண்ட் செய்துவிடுவார். அதாவது, அந்த மூன்று மாதம் நீங்கள் இந்த மாநிலத்துக்கு வரக்கூடாது. வெளி மாநிலத்திலே இருக்கலாம்."

"ஆனால்... ஆனால்.. நான் குற்றவாளி என்று ரெகார்டு ஆகி விடுமே?"

பெர்ரி பெருமூச்சுவிட்டான். "துப்பாக்கி முனையில் கொள்ளையடித்ததாகவும், பிடிபடும்போது கொலை செய்ய முயன்றதாகவும் உங்கள் மீது வழக்கு நடந்தால், தீர்ப்பு என்னவாக இருக்கும் தெரியுமா? பத்து வருடச் சிறைத் தண்டனையாக்கும்!"

ஐயோ! பத்து வருஷம் சிறையில்!

பெர்ரி பொறுமையுடன் அவளையே நோக்கியவாறு இருந்தான். பிறகு சொன்னான்:

"எனக்குத் தோன்றிய சிறந்த யோசனை இதுதான் அதனால் சொன்னேன். முடிவெடுப்பது உங்கள் இஷ்டம். இந்த அளவு உங்கள் தலை தப்பினதே பெரிய அதிசயம். சீக்கிரமாய் அவர்களுக்குப் பதில் தெரிவிக்க வேண்டும். உங்களுக்கு என் யோசனை பிடிக்காவிட்டால் விட்டு விடுங்கள். வேறொரு வக்கீலைப் பார்க்கணும் என்றாலும் -"

"வேண்டாம்," என்றாள். ட்ரேஸி. பெர்ரி நாணயமானவன் என்று தோன்றியது. இப்போதுள்ள சூழ்நிலையில், இவ்வளவு மடத்தனமாகக் காரியம் செய்து நாம் மாட்டிக் கொண்டிருக்கிற சந்தர்ப்பத்தில் , இவன் தன்னால் எவ்வளவு முடியுமோ அவ்வளவும் செய்திருக்கிறான். சார்லஸிடம் பேசினால் நல்லது... ஆனால் இப்போதே அவளுடைய பதில் தெரிய வேண்டும் என்கிறார்களே? நல்ல காலம், மூன்று மாதச் சிறைத் தண்டனையோடு போகிறது. அதுவும் சஸ்பெண்ட் செய்யப்பட்டு வெளி மாநிலத்தில் இருக்க வேண்டும் என்கிறார்கள். இதுவே நமக்கு பெரிய அதிர்ஷ்டம்தான்...

"சரி. நான்... நான் உங்கள் ஏற்பாட்டுக்கு ஒப்புக் கொள்கிறேன்."

"புத்திசாலிப் பெண்," என்று பெர்ரி பாராட்டினான்.

நீதிமன்றத்திலிருந்து வெளி வரும் வரை யாருக்கும் போன் செய்ய அனுமதி கிடையாது என்று சொல்லி விட்டார்கள்.

ட்ரேஸி நீதிபதியின் அறைக்குச் சென்றாள். அவளுக்கு ஒருபுறம் அரசாங்க வக்கீல் டாப்பரும் மறுபுறம் அவளுக்காக அரசாங்கம் நியமித்துத் தந்த பெர்ரியும் நின்றிருந்தார்கள்.

நீதிபதி லாரென்ஸ் அடர்ந்த முடியும் சுருக்கமில்லாத முகமும் கொண்டவராக இருந்தார். கண்ணியமான தோற்றம். ஐம்பது வயது இருக்கும்.

ட்ரேஸியைப் பார்த்து அவர் கேட்டார்: "நீ குற்றம் செய்யவில்லை என்று முதலில் சொல்லியிருந்தாய். இப்போது அதை மாற்றிக் கொண்டு, குற்றம் செய்ததாய் ஒப்புக் கொள்கிறாய் என்று கோர்ட்டாருக்குத் தகவல் வந்திருக்கிறது. சரியா?"

"சரிதான், யுவர் ஆனர்."

"சம்பந்தப்பட்ட எல்லாரும் இதற்குச் சம்மதிக்கிறீர்களா?"

பெர்ரி தலையசைத்து "ஆமாம், யுவர் ஆனர்," என்றான்.

அரசாங்க வக்கீல், "அரசாங்கத்துக்குச் சம்மதம்," என்றான்.

ஒரு நீண்ட நிமிடத்துக்கு ஜட்ஜ் லாரென்ஸ் மௌனமாக இருந்தார். பிறகு முன்புறம் குனிந்து ட்ரேஸியின் கண்களை நேருக்கு நேராகப் பார்த்தார்.

"நமது இந்த மகத்தான நாடு இன்று பரிதாபமான நிலையில் இருக்கிறதென்றால், அதற்குக் காரணம் ஊரெங்கும் திரிந்து கொண்டிருக்கும் அயோக்கியர்கள்தான். எந்த அட்டூழியம் வேண்டுமானாலும் செய்துவிட்டு ஜாலியாய்த் தப்பிப் போகலாம் என்று அந்த அயோக்கியர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். சட்டத்தை எள்ளி நகையாடு கிறார்கள். சில சட்டங்களும் அவர்களைத் தாஜா செய்வதாக அமைந்துள்ளன. ஆனால் அது இந்த மாநிலத்தில் நடவாது. கொள்ளையடிக்க முயன்று, கையும் களவுமாகப் பிடிபட்டு, பச்சைப் படுகொலை செய்து விட்டுத் தப்பலாமென்று சிலர் நினைக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள். சரியானபடி தண்டிக்கப்பட வேண்டுமென்பதுதான் நமது கொள்கை."

பரபரவென்று ஒரு கலவர உணர்வு ட்ரேஸியினுள் பரவியது. தன் வக்கீலான பெர்ரியின் பக்கம் திரும்பினாள். அவன் பார்வையோ நீதிபதியின் மீதே பதிந்திருந்தது.

"இந்த நகரத்தின் தலைசிறந்த மனிதரான ஒருவரை - பல நல்ல காரியங்கள் செய்து வள்ளலென்று பெயர் பெற்றுள்ள ரொமானோவை - கொலை செய்ய முயன்றது உண்மை தான் என்று இந்தப் பெண் ஒப்புக் கொண்டிருக்கிறாள். ஐந்து லட்சம் டாலர் பெறுமானமுள்ள ஒரு கலைச் செல்வத்தைத் திருட முயல்கையில் அவர் வந்து விட்டதால் அவரை துப்பாக்கியால் சுட்டிருக்கிறாள்." ஜட்ஜின் குரல் கடுமையாக உயர்ந்தது. "இதோ பாரம்மா, அந்த ஐந்து லட்சம் டாலர் பணத்தை நீ ஜாலியாய் அனுபவிக்கலாமென்று மனக் கோட்டை கட்டாதே. இந்தக் கோர்ட் அதற்கு இடம்

கொடுக்கப் போவதில்லை. அந்தப் பணத்தை நீ அனுபவிக்க இன்னும் பதினைந்து வருடம் பிடிக்கும்! ஆமாம்! இந்த மாநிலத்தின் பெண்களுக்கான சிறையில் நீ பதினைந்து வருடம் இருக்கப் போகிறாய்! இதுதான் என் தீர்ப்பு!"

நீதிமன்றமே சுழன்றது ட்ரேஸிக்கு.

ஏதோ தமாஷ் நாடகம் நடத்துகிறார்கள்! இந்த ஜட்ஜ் அதிலே ஒரு பாத்திரம்! ஆனால் தான் பேச வேண்டிய வசனங்களைத் தப்புத் தப்பாகச் சொல்கிறார்! வேறு சரியான வசனங்களைச் சொல்ல வேண்டும்...

இதையெல்லாம் விளக்குவதற்காகப் பெர்ரியை நோக்கித் திரும்பினாள். ஆனால் அவன் அவள் பார்வையைத் தவிர்த்து, தன் ப்ரீஃப்கேசில் இருந்த காகிதங்களை அடுக்குகிற மாதிரி முகத்தைத் திருப்பிக் கொண்டிருந்தான்.

ஜட்ஜ் லாரென்ஸ் மேஜையிலிருந்த காகிதங்களை எடுத்துக் கொண்டு இருக்கையிலிருந்து எழுந்து விட்டார்.

உடம்பெல்லாம் மரத்துப் போனவளாக நின்றாள் ட்ரேஸி. என்ன இதெல்லாம்? என்ன நேர்ந்து கொண்டிருக்கிறது எனக்கு? எதுவும் புரியவில்லை.

கோர்ட் சேவகன் நெருங்கி வந்து அவள் கைகளைப் பற்றினான். "உம், வா!" என்றான்.

"இல்லை! இல்லை!" ட்ரேஸி கத்தினாள். "யுவர் ஆனர், ஏதோ பயங்கரமான தவறு நடந்திருக்கிறது. தயவு செய்து நான் சொல்வதைக் கேளுங்கள்!"

கோர்ட் சேவகனின் பிடி அவள் கையை இறுக்கியதும் அவளுக்கு எல்லாம் புரிந்தது.

தவறு எதுவும் நடக்கவில்லை என்பது புரிந்தது.

எல்லாருமாகச் சேர்ந்து அவளைத் தந்திரமாக ஏமாற்றி விட்டார்கள். அவளை அழித்து ஒழிக்கப் போகிறார்கள்.

அம்மாவை ஒழித்த மாதிரியே நம்மையும் ஒழிக்கப் போகிறார்கள் என்று ட்ரேஸிக்குப் புரிந்தது.

ட்ரேஸியின் குற்றமும் அதற்குத் தரப்பட்ட தண்டனையும் நியூ ஆர்லியன்ஸ் செய்தித் தாளின் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்தில் வெளியாயிற்று. போலீசார் தந்த புகைப் படமும் செய்தியுடன் இடம் பெற்றது.

அந்தச் செய்தியைப் பார்த்து நாடெங்குமுள்ள மற்றப் பத்திரிகைகளும் உடனே பிரசுரித்தன. பெண்களுக்கான சிறைச்சாலைகளுக்குச் செல்ல அவள் வெளிவந்தபோது டெலிவிஷன் நிருபர்கள் அவளைச் சூழ்ந்து கொண்டார்கள்.

அவமானம் தாங்காமல் முகத்தை மறைத்துக் கொண்டாள். அப்படியும் கூடக் காமெராக்கள் அவளை விடவில்லை. ரொமானோ ஒரு பெரிய புள்ளி. அவனைப் பற்றிய எந்தச் செய்தியும் பெரிய செய்தி தான். அதுவும் ஓர் அழகான இளம் கொள்ளைக்காரி அவனைக் கொலை செய்ய முயன்றாள் என்றால் அது மாபெரும் செய்தி.

நாலு பக்கமும் தன்னைப் பகைவர்கள் சுற்றி வளைத்துக் கொண்டிருப்பதாக ட்ரேஸிக்குத் தோன்றியது.

'என்னை விடுவிக்கக் கூடியவர் சார்லஸ் ஒருவர் தான்' என்று திரும்பத் திரும்பத் தனக்குள் சொல்லிக் கொண்டாள். தெய்வமே. அருள் செய். சார்லஸ் வர வேண்டும். என்னைச் சிறைத் தண்டனையில் இருந்து விடுவிக்க வேண்டும். என் குழந்தை சிறையிலே பிறக்கக் கூடாது...

மறுநாள் பிற்பகல் தான் போன் செய்ய அவளை அனுமதித்தார் போலீஸ் அதிகாரி.

சார்லஸின் செகரட்டரி போனை எடுத்து "சார்லஸின் அலுவலகம்," என்று சொன்னதும்-

"ஹாரியட், நான்தான் ட்ரேஸி பேசுகிறேன். மிஸ்டர் சார்லஸுடன் உடனே நான் பேச வேண்டும்."

"ஒரு நிமிஷம், மிஸ் ட்ரேஸி," என்றாள் சார்லஸின் செக்ரட்டரி. அவள் குரலில் ஏதோ தயக்கம் தென்பட்ட மாதிரி இருந்தது. "வந்து... மிஸ்டர். சார்லஸ் இருக்கிறாரா, பார்க்கிறேன்."

நரக வேதனையில் நீண்ட நேரம் தவித்த பின் சார்லஸின் குரல் கேட்டது.

என்ன நிம்மதி! அழுகை வெடித்துக் கொண்டு வந்தது. "சார்லஸ்-"

"ட்ரேஸி! நீதானே, ட்ரேஸி!"

"ஆமாம் டார்லிங். ஐயோ, சார்லஸ்! உங்களுடன் பேச வேண்டுமென்று-"

"ட்ரேஸி! எனக்குப் பைத்தியம் பிடித்து விடும் போலிருக்கிறது. உன்னைப் பற்றிப் பத்திரிகைகளில் கன்னா பின்னாவென்று செய்திகள் வந்திருக்கிறதே! என்னால் அதை நம்பவே முடியவில்லை!"

"அது எதுவும் உண்மையில்லை சார்லஸ்! எதுவுமே உண்மையில்லை!"

"நீ ஏன் உடனே என்னைக் கூப்பிடவில்லை?"

"முயற்சி செய்தேன். நீங்கள் கிடைக்கவில்லை. நான்-"

"இப்போது நீ எங்கே இருக்கிறாய்?"

"நான் - நான் நியூ ஆர்லியன்ஸ் ஜெயிலில் இருக்கிறேன். நான் செய்யாத ஒரு காரியத்துக்குத் தண்டனை கொடுத்துச் சிறைக்கு அனுப்பியிருக்கிறார்கள்." தன்னையும் மீறி விம்மி அழுதாள் ட்ரேஸி.

"இரு, இரு. என் கேள்விக்குப் பதில் சொல்லு. நீ யாரையோ துப்பாக்கியால் சுட்டதாகப் பேப்பரில் செய்தி போட்டிருக்கிறார்களே, அது தப்பான செய்திதானே?"

"இல்லை. சுட்டது உண்மைதான். ஆனால்-"

" என்ன! சுட்டது உண்மையா?"

"இல்லை- அதாவது, நீங்கள் நினைக்கிற மாதிரி நடக்கவில்லை. எல்லாவற்றையும் உங்களிடம் நேரில் விளக்குகிறேன்-"

"ட்ரேஸி, நீ ஓர் ஓவியத்தைத் திருட முயன்றதாகவும், ஓர் ஆளைக் கொலை செய்ய முயன்றதாயும் கோர்ட்டில் ஒப்புக் கொண்டாயாமே, உண்மையா?"

"ஆமாம், சார்லஸ். ஆனால் ஏன் ஒப்புக்கொண்டே னென்றால்-"

"கடவுளே! உனக்கு அவ்வளவு பண நெருக்கடி என்றால் என்னைக் கேட்டிருக்கலாமே, ட்ரேஸி? அதுவும் ஒருவனைக் கொலை செய்ய முயற்சி... என்னாலும் நம்ப முடியவில்லை. என் அம்மா அப்பாவாலும் நம்ப முடியவில்லை. இன்று காலை இங்கே வெளியாகியுள்ள பேப்பரில் இதுதான் கொட்டை எழுத்துச் செய்தி. எங்கள் குடும்பத்துக்கு இப்படி யொரு அவமானம் நேர்ந்திருப்பது இதுதான் முதல் தடவை!"

உணர்ச்சி வசப்பட்டுத் கூச்சல் போட்டுவிடக் கூடா தென்று அவள் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். "டார்லிங், உங்கள் உதவி எனக்குக் கட்டாயம் தேவை. உடனே புறப்பட்டு இங்கு வாருங்கள். நீங்கள் வந்தால் எல்லா வற்றையும் சரிசெய்து விடலாம்."

வெகு நேரத்துக்கு நிசப்தம் நிலவியது. சார்லஸ் சொன்னான்: "சரி செய்வதற்கு எதுவும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. எல்லாக் குற்றத்தையும் செய்ததாக நீயே ஒப்புக் கொண்டான பிறகு என்னத்தைச் சரிசெய்வது? எங்கள் குடும்பத்துக்குத் தலைக் குனிவு ஏற்பட்டது ஏற்பட்டதுதான். உனக்கும் அது புரிந்திருக்கும். பயங்கரமான அதிர்ச்சி எங்களுக்கெல்லாம். நானும் உன்னை உள்ளபடி தெரிந்து கொள்ளாமல் இருந்திருக்கிறேன், பார்!"

ஒவ்வொரு சொல்லும் இடியாக இறங்கியது ட்ரேஸிக்கு.

## 9

மிகவும் நம்பியிருந்த சார்லஸா இப்படி இரக்க மில்லாமல் பேசுகிறார்! உலகமே இடிந்து தன் மேல் விழுவது போலிருந்தது ட்ரேஸிக்கு. வாழ்க்கையில் இன்றைக்கு இருப்பது போலத் தன்னந்தனியளாக என்றைக்குமே இருந்ததில்லை என்று தோன்றியது.

இனி யாரை அணுகமுடியும்? என்ன உதவி கேட்க முடியும்?

கடைசியில் இன்னொரு கேள்வி பாக்கி இருந்தது. அதையும் கேட்டாள். "வந்து... என் வயிற்றில் உள்ள சிசு-அதற்கு என்ன வழி சார்லஸ்?"

"உனக்கு என்ன செய்ய வேண்டுமென்று தோன்று கிறதோ அப்படிச் செய்ய வேண்டியதுதான்," என்றான் சார்லஸ். "ஸாரி, ட்ரேஸி."டெலிபோனை வைத்து விட்டான்.

செத்துவிட்ட ரிசீவரைக் கையில் வைத்துக் கொண்டு மரம்போல் நின்றாள் ட்ரேஸி.

பின்னால் ஒரு கைதி காத்துத் கொண்டிருந்தாள். "என்னம்மா கண்ணு, பேசி முடிச்சிட்டியா, இல்லையா? நான் என் வக்கீலுடன் பேசணும்."

அவள் தன் அறைக்குத் திரும்பியபோது, காவல்காரப் பெண் சொன்னாள். "காலையிலே புறப்பட வேண்டும். தயாராக இரு. ஐந்து மணிக்கு வந்து கூப்பிடுகிறோம்."

ட்ரேஸியை பார்ப்பதற்காகக் கிழவர் ஆட்டோ வந்திருந்தார். சில மணி நேரங்களுக்கு முன் பார்த்தவர் தான். ஆனால் இப்போது பல வருடங்கள் மூப்படைந்து விட்ட மாதிரி இருந்தார்.

"எனக்கும் என் மனைவிக்கும் ஏகப்பட்ட வருத்தம், அம்மா. ஆனால் ஒன்று, உங்கள் மீது எந்தத் தப்பும் இல்லை யென்று எங்களுக்குத் தெரியும்."

ஐயோ! இதே வார்த்தையைச் சார்லஸ் சொல்லி யிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!

"நாளை உங்கள் அம்மாவின் சவ அடக்கத்துக்கு நானும் என் மனைவியும் போகிறோம், ட்ரேஸி," என்றார் ஆட்டோ.

உங்களுக்குத் தெரியாது, ஆட்டோ! என் அம்மா மட்டும் சாகவில்லை, நானும் செத்து விட்டேன். இரண்டு பேரையும் சேர்த்தே புதைக்க வேண்டும். ட்ரேஸியின் நெஞ்சு விசும்பியது.

*குறுகலான சிறைப் படுக்கையில் அன்று இரவு முழுவதும் அவள் கொட்டக் கொட்ட விழித்தபடியே இருந்தாள். சார்லஸுடன் பேசிய பேச்சைத் திரும்பத் திரும்ப மனத்துக்குள் எண்ணிப் பார்த்துக் கொண்டாள். சே! என்ன நடந்ததென்று நான் விளக்குவதற்குக் கொஞ்சம் கூடச் சார்லஸ் சந்தர்ப்பம் தரவில்லையே!*

*தான் சுமந்து கொண்டிருக்கும் குழந்தையைப் பற்றியே அவள் சிந்தனை ஓடியது.*

*பல பெண்கள் சிறையில் குழந்தை பெற்றிருக்கிறார்கள் என்று அவள் படித்திருக்கிறாள். ஆனால் அதெல்லாம் எந்தக் காலத்திலோ யாருக்கோ எங்கேயோ நேர்ந்த செய்தியாகத் தோன்றியதே தவிர, அது போல் தன் வாழ்க்கையிலேயே நடக்குமென்று அவள் நினைத்ததேயில்லை.*

*'உனக்கு என்ன தோன்றுகிறதோ அப்படிச் செய்து கொள்!' என்று சார்லஸ் சொல்லிவிட்டான்.*

*குழந்தை பெற்றுக் கொள்ளவே ட்ரேஸி பெரிதும் விரும்பினாள். ஆனால்... குழந்தையை நம்மிடம் விட்டு வைக்க மாட்டார்கள். ஏனெனில் பதினைந்து வருட காலம் சிறையில் நாம் இருக்க வேண்டும். ஆகவே குழந்தையை எடுத்துப் போய் அனாதைப் பள்ளியில் சேர்த்து விடுவார்கள்.*

*அதுவும் ஒரு விதத்தில் நல்லதுதான். தன் அம்மாவைப் பற்றி அதற்குத் தெரியாமலே போகட்டும்.*

*ட்ரேஸி விம்மி விம்மி அழுதாள்.*

*காலை ஐந்து மணிக்கு ஓர் ஆண் அதிகாரியும் ஒரு பெண் காவலரும் வந்தார்கள்.*

*"கோர்ட்டாரின் உத்தரவுப்படி உன்னை உடனடியாகத் தெற்கு லூயிஸ்ானா பெண்கள் சிறைச்சாலைக்கு மாற்றியிருக்கிறோம்..புறப்படு."*

*சிறைத் தாழ்வாரத்தின் வழியே அவளை அழைத்துச் சென்றார்கள். வரிசையாய் இருந்த சிறைகளில் கைதிகள்*

நிரம்பியிருந்தார்கள். அவளைப் பார்த்துச் சீட்டியடித்தார் கள். ஊளையிட்டார்கள்.

"ஊருக்குப் போறியாம்மா? ஜாலியாப் போயிட்டு வா!" என்றான் ஒருவன்.

"அந்த ஓவியத்தை எங்கே ஒளிச்சு வைச்சிருக்கேன்னு சொல்லு. நான் அதை விற்க ஏற்பாடு செய்யறேன். உனக்குப் பாதி, எனக்குப் பாதி," என்றான் இன்னொருவன்.

"இந்தாம்மா பொண்ணு. நீ போற ஜெயிலில் எர்னஸ் டின்னு ஒரு பொம்பளை இருக்கு. எனக்கு ரொம்ப வேண்டியவள். என் பேரைச் சொல்லு, உன்னை நல்லா கவனிச்சிப்பாள்," என்றான் மூன்றாமவன்.

வெளியே மஞ்சள் நிறத்தில் சிறைச்சாலை பஸ் நின்றிருந்தது. வலை போட்ட ஜன்னல்கள். இஞ்சின் உறுமிக் கொண்டிருந்தது. உள்ளே அரை டஜன் பெண் கைதிகள் இருந்தார்கள். ஆயுதம் தாங்கிய இரண்டு பேர் காவல் புரிந்தார்கள்.

அந்தப் பெண்களின் முகத்தைக் கவனித்தாள் ட்ரேஸி. ஒருத்தியின் முகத்தில் முரட்டுத்தனம் குடி கொண்டிருந்தது. ஒருத்தி அலுத்துச் சலித்துக் காணப்பட்டாள். மற்ற நால்வரும் நிராசையில் மனம் வெறுத்தவர்களாகத் தோன்றினார்கள்.

எல்லாருக்கும் இதுவரை வாழ்ந்த வாழ்க்கை ஒரு முடி வுக்கு வந்தாயிற்று. எல்லாரும் சமூகத்தால் புறக்கணிக்கப் பட்டவர்கள். விலங்குகளைப் போலக் கூண்டில் அடைத்து வைக்கப்பட்டவர்கள்.

இவர்கள் என்ன குற்றம் இழைத்திருப்பார்கள்? நம்மைப் போலவே நிரபராதியான ஒருத்தியும் இவர்களில் இருப் பாளா? ட்ரேஸி மனத்துக்குள் நினைத்துக் கொண்டாள்.

முடிவில்லாமல் பஸ் போய்க் கொண்டேயிருந்தது. பஸ்ஸினுள் வெப்பமாயும் அடைசல் நாற்றமாயும் இருந்தது. ஆனால் ட்ரேஸிக்கு எதுவும் உறைக்கவில்லை. தன்னுடன் வரும் மற்றப் பிரயாணிகளை மறந்தாள். பச்சைப் பசேலென்ற

கிராமப் புறங்களின் வழியே பஸ் சென்று கொண்டிருப்பதை மறந்தாள்.

அவள் தன்னுள் தானே மூழ்கிப் போனாள்.

வேறு வேறு காலங்களில் வேறு வேறு இடங்களில் நிகழ்ந்தவை அவள் நினைவில் எழும்பின.

அவள் சிறுமியாக இருக்கிறாள். அப்பாவும் அம்மாவும் அவளைக் கடற்கரைக்கு அழைத்துச் சென்றிருக்கிறார்கள். அப்பா அவளைத் தோள்மீது தூக்கி வைத்துக் கொண்டு அலைகளில் இறங்குகிறார். ட்ரேஸி பயந்து கூச்சலிடுகிறாள். 'சீ! நீ என்ன பச்சைக் குழந்தையா?' என்று சொன்னபடி அவளைத் தண்ணீருக்குள் அமுக்குகிறார் அப்பா. சில்லென்ற தண்ணீர் தலைக்கு மேல் ஓட அவளுக்குத் திகில் ஏற்பட்டு, மூச்சுத் திணறுகிறது. அப்பா அவளை வெளியே தூக்கி யெடுத்து மறுபடியும் தண்ணீருக்குள் முக்குகிறார். அன்று முதல் அவளுக்குத் தண்ணீர் என்றாலே பயம்...

கல்லூரி அரங்கம்

மாணவர்களும் மாணவிகளும் அவர்களுடைய பெற்றோர்களுமாகக் கூட்டம் நிரம்பி வழிகிறது. பிரிவு உபசார நிகழ்ச்சி. மாணவர்களின் சார்பில் ட்ரேஸி பேசுகிறாள். எதிர்கால லட்சியங்கள், கடந்த கால அனுபவங்கள், திட்டங்கள், கனவுகள் அனைத்தும் அவள் பேச்சில் இடம் பெறுகின்றன. முதல்வர் அவளைப் பாராட்டிப் பரிசு தரு கிறார். அதைக் கொண்டுபோய் அம்மாவிடம் கொடுக்கி றாள். "பத்திரமாக வைத்துக் கொள் அம்மா." பெருமையில் அம்மா முகம் மேலும் அழகாய்த் தெரிகிறது...

அடுத்த நினைவு

"அம்மா, நான் பிலடெல்பியாவுக்குப் போகப் போகி றேன். அங்கே ஒரு பாங்க்கில் எனக்கு வேலை கிடைத்தி ருக்கிறது."

ட்ரேஸியின் நெருங்கிய தோழி யொருத்தி போன் செய்து வாழ்த்துக் கூறுகிறாள். பிலடெல்பியா அருமையான

ஊர் ட்ரேஸி, கலை நிகழ்ச்சிகள் நிறைய உண்டு. அழகான இடங்கள் ஏராளம். பெண்கள் குறைவு. ஆண்கள் உன்னை அப்படியே விழுங்கி விடுவார்கள்.

அடுத்து, சார்லஸின் காதல்... அவனுடன் ஏற்பட்ட உறவுகள்.

"இந்தாம்மா! உனக்கென்ன, காது செவிடா? எத்தனை நேரமாய்க் கூப்பிடுகிறேன்!' என்றான் காவலர்களில் ஒருவன்.

ட்ரேஸி நிமிர்ந்து நோக்கினாள். ஓங்கி உயர்ந்த கட்டிடத்தின் முன்னே பஸ் நின்றிருந்தது. எங்கு பார்த்தாலும் இரும்பு முள்வேலிகள். கண்ணுக்கெட்டிய தூரத்துக்குச் சிறைச் சாலையைச் சேர்ந்த விவசாயப் பண்ணை.

"வந்தாச்சு," என்றான் காவலன்.

ஆம். வந்தாயிற்று. நரகத்துக்கு வந்தாயிற்று.

புதிதாக வந்த கைதிகளை நிறுத்தி வைத்து ஒரு பெண் அதிகாரி சொன்னாள்.

"இனிமேல் நீங்கள் வெளியுலகத்தை அடியோடு மறந்துவிட வேண்டும். இங்கே சட்ட திட்டங்கள் உண்டு. நீங்கள் அதற்கு அடங்கி நடக்க வேண்டும். எப்ப எழுந்திருக்கணும், எப்ப சாப்பிடணும், எப்ப வேலைக்குப் போகணும், எப்ப டாய்லெட்டுக்குப் போகணும் என்றெல்லாம் நாங்கள் சொல்லுவோம். அதற்குக் கட்டுப்பட்டு நடக்காவிட்டால் உங்கள் உயிர் உங்களிடம் இருக்காது. எல்லாம் இங்கே அமைதியாக நடக்க வேண்டும். கலாட்டா கிலாட்டா பண்ணுகிறவர்களை என்ன செய்யணும் என்று எங்களுக்குத் தெரியும். புரிகிறதா?" ட்ரேஸியை ஒரு வினாடி பார்த்த பிறகு அவள் தொடர்ந்தாள். "உங்களை இப்ப மருத்துவப் பரிசோதனைக்கு அழைத்துச் செல்வார்கள். அதற்குப் பிறகு குளித்து விட்டு, உங்கள் சிறைகளுக்குச் செல்ல வேண்டும். உங்கள் வேலைகள் என்னென்ன என்பதை நாளைக் காலை தெரிவிப்போம். அவ்வளவு தான்."

அந்தப்பெண் அதிகாரி திரும்பிச் செல்லவிருந்தபோது ட்ரேஸியின் பக்கத்தில் இருந்த ஒரு நோஞ்சான் பெண், "மன்னிக்கணும், அம்மா. வந்து-" என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தாள்.

அந்தப் பெண் அதிகாரி விருட்டென்று திரும்பி வந்தாள். அவள் முகத்தில் கோபம் கொப்புளித்தது. "உன் ஓட்டை வாயை மூடிக் கொள். உன்னை ஏதாவது கேட்டால்தான் பேச வேண்டும். தெரிகிறதா? உனக்கு மட்டுமில்லை. இங்கே இருக்கிற எல்லாத் தேவடியாளுக்கும் சேர்த்துத்தான் சொல்கிறேன்!"

அவளுடைய குரலும் சொற்களும் ட்ரேஸியை அதிர்ச்சி கொள்ள வைத்தன.

பெண் அதிகாரி தன் பின்னேயிருந்த இரண்டு பெண் காவலர்களைக் கூப்பிட்டாள். "இந்தச் சிறுக்கிகளை யெல் லாம் இங்கிருந்து இழுத்துக் கொண்டு போய்த் தொலை!"

ட்ரேஸியையும் மற்றவர்களையும் ஆட்டு மந்தையை விரட்டுகிற மாதிரி வெளியே அழைத்துச் சென்றார்கள்.

## 10

ஒரு பெரிய அறையை அடைந்தார்கள். அங்கே குண்டான நடுத்தர வயது மனிதரொருவர் ஒரு மேஜையின் முன் உட்கார்ந்திருந்தார்.

காவலர்களில் ஒருத்தி, "வரிசையாய் நில்லுங்கள்!" என்று சொல்லி அவர்களை நீண்ட வரிசையாக நிறுத்தினாள்.

குண்டு மனிதர், "என் பெயர் டாக்டர் கிளாஸ்கோ. எல்லாரும் அவிழ்த்துப் போடுங்கள்!"

எல்லாப் பெண்களும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். ஒருத்தி, "அவிழ்த்துப் போடுவதென்றால்..." என்றாள்.

டாக்டர் சீறினார். "அவிழ்த்துப் போடுவதென்றால் அர்த்தம் தெரியாதா உனக்கு? மொத்த டிரெஸ்ஸையும் அவிழ்த்துப் போடு என்கிறேன்!"

ஒவ்வொருவராய் உடைகளைக் களையத் தொடங்கினார்கள். சிலர் கூச்சப்பட்டார்கள். சிலர் ஆத்திரப் பட்டார்கள். சிலர் எதுவும் வெளிப்படுத்தவில்லை. ட்ரேஸியின் இடப் பக்கம் இருந்தவள் நாற்பது வயதைக் கடந்தவள். வலப் பக்கம் இருந்த பெண்ணுக்குப் பதினேழு வயதுகூட இருக்காது. பரிதாபமான நோஞ்சானாக இருந்தாள்.

வரிசையில் இருந்த முதல் பெண்ணை டாக்டர் அழைத்தார். "மேஜைமீது படுத்து, காலை அகட்டி வளையத்தில் மாட்டிக் கொள்."

அந்தப் பெண் தயங்கினாள்.

"ஊம். ஆகட்டும்!"

அவள் படுத்துக்கொண்டு டாக்டர் சொன்னபடி செய்தாள். டாக்டர் ஒரு குழாயை அவள் பிறப்புறுப்பினுள் செலுத்தி விட்டு, "உனக்குப் பெண் பிள்ளை சீக்கு எதுவும் இல்லையே?" என்றார்.

"இல்லை."

அடுத்த பெண் மேஜையில் படுத்தாள். டாக்டர் அதே குழாயை அவளுக்கும் செலுத்தப் போனார். "இருங்கள், இருங்கள்!" என்று ட்ரேஸி கூவினாள்.

டாக்டர் வியப்புடன் திரும்பிப் பார்த்தார். "என்ன?"

எல்லாரும் ட்ரேஸியையே நோக்கினார்கள்.

"டாக்டர், அந்தக் குழாயை ஸ்டிரிலைஸ் பண்ணாமலே உபயோகிக்கிறீர்களே!"

டாக்டரின் முகத்தில் ஒரு கேலிச் சிரிப்புப் பரவியது.

"ஓ! நம்ம வீட்டுக்கு ஒரு லேடி டாக்டர் வந்திருக் காங்களா! பலே பலே!" என்றார்.

*டாக்டரின் முகம் சிவந்தது. "ஓகோ, கிருமிகளைப் பற்றிக் கவலைப்படுகிறீர்களா டாக்டரம்மா? கடைசியில் போய் நில்லுங்கள்."*

*"என்ன?"*

*"இங்கிலிஷ் தெரியாதா? லைனில் கடைசியில் போய் நில்லு என்றேன்."*

*ட்ரேஸிக்கும் தெரியவில்லை. இருந்தாலும் அவர் சொன்னபடி கடைசியில் போய் நின்றாள்.*

*"சரி, அடுத்த பெண்," என்று கூப்பிட்டார் டாக்டர். அந்தப் பெண் மேஜை மீது படுத்து, டாக்டர் அவளை பரிசோதித்த பிறகே ட்ரேஸிக்கு விளங்கியது, தன்னை ஏன் கடைசியாக நிற்கச் சொன்னாரென்று. அவ்வளவு பேரையும் ஸ்டிரிலைஸ் பண்ணாத குழாயினால் பரிசோதித்த பிறகு அவளை அதே குழாயில் பரிசோதனை செய்யப்போகிறார்! அவளுள் சீற்றம் பொங்கிக் கொண்டு வந்தது. அது மட்டுமல்ல, அவர்களைத் தனித்தனியே பரிசோதிக்காமல் எல்லாப் பெண்களையும் அவ்வளவு பகிரங்கமாகப் பரிசோதனை செய்து அவமானப் படுத்துகிறார். இவர்களும் அதைப் பொறுத்துக் கொள்கிறார்கள். எல்லாருமாகச் சேர்ந்து எதிர்த்தால் ஒரு வேளை -*

*அதற்குள் அவள் முறை வந்து விட்டது.*

*"வாங்க, டாக்டரம்மா. மேஜை மீது படுங்கள்," என்றார் டாக்டர்.*

*ட்ரேஸி சிறிது தயங்கினாள். ஆனால் வேறு வழி இருக்க வில்லை. மேஜை மீது ஏறிப் படுத்துக் கண்களை மூடிக் கொண்டாள். தன் கால்களை டாக்டர் அகட்டுவதை உணர்ந்தாள். பரிசோதனைக் குழாயை உட்செலுத்தி அவளுக்கு வலி ஏற்படுத்துகிற மாதிரி குத்திக் குத்திப் பரிசோதனை செய்தார் டாக்டர் - வேண்டுமென்றே. பல்லைக் கடித்துக் கொண்டாள்.*

"உனக்குப் பெண் பிள்ளை சீக்கு இருக்கிறதா?" என்று டாக்டர் கேட்டார்.

"இல்லை," என்றாள். தான் கர்ப்பமாக இருக்கிறதை இவரிடம் சொல்ல வேண்டாமே என்று தீர்மானித்துக் கொண்டாள். இவன் அரக்கன். என்ன வேண்டுமானாலும் செய்வான். பிற்பாடு வார்டனிடம் இதுபற்றிப் பேசிக் கொள்ளலாம்.

முரட்டுத்தனமாகப் பரிசோதனைக் குழாயை வெளி யெடுத்தார் டாக்டர் கிளாஸ்கோ. பின்னர் கையுறைகளை மாட்டிக் கொண்டு, "குப்புறப் படு. ஆசனவாயைச் சோதனை பண்ண வேண்டும்," என்றார்.

"எதற்காக?" என்று தன்னையும் மீறிக் கேட்டு விட்டாள் ட்ரேஸி.

டாக்டர் கிளாஸ்கோ அவளை முறைத்துப் பார்த்தார். "எதற்குன்னா கேட்கிறீங்க, டாக்டரம்மா? சொல்கிறேன். பலவற்றை ஒளித்து வைத்திருக்க ஆசன வாய்தான் ரொம்பச் சௌகரியம். உங்களைப் போன்ற சீமாட்டிகளிடமிருந்து எடுத்த ஏராளமான கஞ்சாப் பொட்டலங்கள், போதைப் பொடிகள் பிரமாதமான கண்காட்சியாய் வைத்திருக்கிறேன் புரிகிறதா? படு குப்புற!"

விரல்களை நுழைத்து அவளையும் மற்றப் பெண்களை யும் பரிசோதித்தார் டாக்டர். ட்ரேஸிக்குக் குமட்டிக் கொண்டு வந்தது. குபுக்கென்று வாந்தி வந்துவிட்டது வாய் வரையில். திணறினாள்.

"ஏய்! இங்கே வாந்தி எடுத்தாயோ, அதை உன் மூஞ்சி பூரா பூசி விடுவேன்!" என்றார் டாக்டர். பிறகு காவலர்கள் பக்கம் திரும்பி, "இவர்களைக் குளியலறைக்கு இழுத்துப் போ. இவர்களோட நாற்றம் என் குடலைப் பிடுங்குகிறது."

"அவர்கள் தங்கள் தங்கள் உடைகளைச் சுருட்டி எடுத்துக் கொண்டார்கள். நிர்வாணமாகவே குளியல் அறைக்கு அழைத்துச் சென்றாள் காவலிலிருந்த பெண். அங்கே ஒரு டஜன் ஷவர் குழாய்கள் இருந்தன.

*"துணியை மூலையில் வைத்து விட்டுக் குளியுங்கள்" என்றாள் காவல் பெண். "சோப்பு இருக்கிறது. காலோடு தலை நன்றாயத் தேய்த்துக் குளியுங்கள். தலையை அலசிக் கொள்ளுங்கள்."*

*கரடுமுரடான சிமெட்டித் தரையில் நின்று கொண்டு ஷவரைத் திருப்பிக் கொண்டாள் ட்ரேஸி. சில்லென்ற தண்ணீர் பீய்ச்சியடித்தது. கரகரவென்று உடம்பைத் தேய்த்துக் கொண்டபோது அவள் உள்ளம் வலித்தது. 'சே! என்ன மனிதர்கள் இவர்களெல்லாம்? தங்களைப் போல இவர்களும் மனிதப் பிறவிதானே என்ற எண்ணமே இல்லாமல் நடந்து கொள்கிறார்களே! ஐயோ! இந்த நரகத்தைப் பதினைந்து வருட காலம் பொருத்துக் கொள்வதா? எப்படி முடியும்?"*

*ஒரு காவலாள் கத்தினான். "ஏய்! நேரமாகிறது! வெளியே வா."*

*ட்ரேஸி வெளியே வந்ததும் ஒரு மெல்லிய, கசங்கிப் போன துவாலையை அவளிடம்கொடுத்தார்கள். ஈரத்தை அரை குறையாகத் துடைத்துக் கொண்டாள்.*

*அங்கிருந்து அடுத்த அறைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே இருந்த பெண் காவலர் ஒவ்வொருவரையும் அளவெடுத்துப் பார்த்து, இரண்டு காக்கி யூனிபாரம் கொடுத்தாள். ஒவ்வொரு ஜோடி ஜட்டி, ப்ரா, ஷூ, நைட் கவுன், ஸானிடரி பெல்ட். பிறகு ஒரு டூத் பிரஷ்ஷும், அழுக்குத் துணிகளைப் போட ஒரு பையும் தந்தார்கள்.*

*உடுத்தி முடிந்ததும் அடுத்த அறை.*

*அங்கே முக்காலியில் ஒரு காமெரா நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது.*

*"சுவரை ஒட்டினாற் போல் போய் நில்லு."*

*ட்ரேஸி நின்றாள்.*

*"நன்றாய் முகத்தை நிமிர்த்திக் காட்டு."*

*காமெராவை நேராகப் பார்த்தாள்.*

க்ளிக்.

“முகத்தை வலது பக்கம் திருப்பு.

க்ளிக்.

“இடது பக்கம்.”

க்ளிக்.

“மேஜைக்கு வா.”

கைரேகை எடுக்கும் உபகரணங்கள் அந்த மேஜைமீது இருந்தன.

ட்ரேஸியின் விரல்களை இங்க்பேடின் மீது புரட்டி, வெள்ளை அட்டையில் அழுத்திப் பதித்தார்கள்.

“இடது கை. வலது கை. அதோ அந்தக் கந்தல் துணியில் கையைத் துடைத்துக் கொள் அவ்வளவுதான்.”

‘ஆமாம். அவ்வளவுதான்’ என்று உள்ளம் மரத்துப் போனவளாக எண்ணிக்கொண்டாள் ட்ரேஸி. அவ்வளவு தான். இனி ட்ரேஸி என்ற பெண் இல்லை. அவளுக்கு முகம் கிடையாது. பெயர் கிடையாது. அவள் ஒரு பெண். அவ்வளவு தான்.

ஒரு கார்டு அவளை நிறுத்தினான். “நீதானே ட்ரேஸி? வார்டன் உன்னைப் பார்க்க வேண்டுமாம். என் பின்னால் வா.”

கும்மென்று ஓர் உற்சாகம் வந்தது ட்ரேஸியின் இதயத்தில்.

‘அப்படியானால் சார்லஸ் ஏதோ ஏற்பாடு செய்திருக் கிறார்! சார்லஸ் நம்மைக் கைவிட்டு விடவில்லை. நானும் அவரை விடமாட்டேன். அவரும் என்னை விடமாட்டார் திடீரென்று ஏற்பட்ட அதிர்ச்சியில் தான் அப்படி நடந்து கொள்ள வைத்ததே தவிர வேறில்லை. அப்புறம் யோசித்து வந்திருக்கிறார். என் மீதுள்ள காதலை உணர்ந்திருக்கிறார். அதனால் தான் வார்டனுடன் பேசி, ட்ரேஸி விஷயத்தில் பயங்கரமான தவறு நேர்ந்துவிட்டது. என்று எடுத்துச்

சொல்லியிருக்கிறார்.' இப்போது அவளை விடுவிக்கப் போகிறார்கள்.

ஆண் காவலர்களும் பெண் காவலர்களும் ஆயுதம் தாங்கிக் காவல் புரியும் இரண்டு வாசல்களைத் தாண்டி வேறொரு வழியாக அவளை அழைத்துச் சென்றார்கள்.

இரண்டாவது வாசலைக் கடந்த போது, எதிரில் வந்த ஒரு பெண்கைதி மீது கிட்டத்தட்ட மோதிக்கொண்டு விட்டாள் ட்ரேஸி.

அம்மா! என்ன பிரம்மாண்டமான உருவம்! இவ்வளவு பெரிய பெண்ணை ட்ரேஸி பார்த்ததே கிடையாது. உயரம் ஆறடிக்கு மேல் இருக்கும். எடை முன்னூறு பவுண்டுக்கு மேல் இருக்கும். மஞ்சள் கண்கள். முகத்தில் அம்மை வடு.

தடுமாறிப் போன ட்ரேஸியைப் பிடித்து நிறுத்தி இழுத்து அணைத்துக்கொண்டாள் அவள். காவல் பெண்ணை நோக்கி, "ஹை! ஒரு புதுக் குட்டி வந்திருக்குதா? என்னோடு தங்க வைச்சிடு. என்ன?" என்றாள்.

"ஸாரி, பெர்த்தா அக்கா, அவளுக்கு ஏற்கெனவே வேறே இடம் கொடுத்தாச்சு."

பெர்த்தாக்கா ட்ரேஸியின் கன்னத்தை வருடினாள். ட்ரேஸி சரேலென விலகிக் கொண்டதும் சிரித்தாள். "பரவாயில்லே கண்ணு. இந்தப் பெர்த்தாக்கா உன்னை அப்புறமாய்க் கவனிப்பாள். நிறைய டயம் இருக்கு. எங்கே போயிடப்போறே?"

வார்டனின் அறையை அடைந்தாள். ஒரு மெல்லிய எதிர்பார்ப்பில் ட்ரேஸியின் இதயம் படபடத்தது. சார்லஸே வந்திருப்பாரோ ஒரு வேளை? அல்லது தன் வக்கீலை அனுப்பியிருப்பாரோ?

வார்டனின் செகரட்டரி காவலாளியிடம் சொன்னான்: "இங்கேயே இரு. உள்ளே சொல்கிறேன்."

அந்தச் சிறைச்சாலை வார்டனின் பெயர் ஜார்ஜ். பழைய மேஜை மீதிருந்த காகிதங்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார். நாற்பத்தைந்து வயதிருக்கும். மென்மையான முகத்தில் வாழ்க்கையில் அடிபட்ட கோடுகள் நிறைந்திருந்தன.

இந்தப் பெண்கள் சிறைக்கு அவர் வந்து ஐந்து வருடமாகிறது. நவீன குற்றவியல் துறையில் தேர்ச்சி பெற்று இங்கே வந்திருந்தவர். வந்த புதிதில் அவர் உள்ளத்தில் லட்சியங்கள் நிறைந்திருந்தன. சிறையில் பிரமாதமான சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும். என்ற நோக்கத்துடன் வந்திருந்தார்.

ஆனால் தோற்றுப் போனார்.

அவருக்கு முன்பு பதவி வகித்த மற்றவர்களைப் போலவே அவரும் தன் லட்சியங்களில் தோல்வியடைந்தவர்.

## 11

வார்டன் ஜார்ஜ் சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்திருந்தார்.

இந்தச் சிறைச்சாலை கட்டப்பட்ட சமயம், ஒவ்வோர் அறைக்கும் இரண்டு கைதிகள் வீதம் அடைப்பதாகத் திட்டம். இப்போது ஒவ்வோர் அறையிலும் நாலு கைதிகள், சில சமயம் ஆறு பேர்கூட இருந்தார்கள். நாடெங்குமுள்ள எல்லாச் சிறைகளிலும் இதே நிலைமை தான் என்று ஜார்ஜ் அறிவார். சிறைகளில் கைதிகள் அதிகம். பணிபுரிவோர் குறைவு. தினம் தினம் ஆயிரக்கணக்கான கைதிகள் சிறைகளில் அடைக்கப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவித வேலையும் கிடையாது. மனத்துக்குள் வெறுப்பை வளர்த்துக் கொள்வதையும், பழி தீர்ப்பதற்குத் திட்டம் தீட்டுவதையும் தவிர எந்த வேலையும் இல்லை. மிருகத்தனமான, முட்டாள் தனமான அமைப்பு... என்ன செய்ய முடியும்?...

செக்ரட்டரிக்கு மணியை அழுத்தினார். "அந்தப் பெண்ணை உள்ளே அனுப்பு."

செகரட்டரி கதவைத் திறந்தார். ட்ரேஸி உள்ளே வந்தாள்.

சிறைச் சாலையின் மட்டமான யூனிபாரத்தில் எதிரே வந்து நிற்கும் பெண்ணைப் பார்த்தார் ஜார்ஜ். இவ்வளவுக்குப் பிறகும்கூட இந்தப் பெண் அழகாக இருப்பது ஆச்சரியம் தான். இளமையான, கள்ளம் கபடமில்லாத முகம். ஆனால், பாவம், எத்தனை நாளைக்கு இப்படி இருக்குப் போகிறாள்?

ட்ரேஸியிடம் அவருக்கு அக்கறை ஏற்பட்டிருந்தது. அவளுடைய வழக்குப் பற்றிய விவரங்களைப் பத்திரிகை களில் படித்திருந்தார். அவள் செய்திருக்கும் முதல் குற்றம் இது தான். யாரையும் அவள் கொலை செய்யவில்லை. அப்படி யிருக்க இவளுக்குப் பதினைந்து வருடச் சிறைத் தண்டனை விதித்திருப்பது ரொம்பக் கொடுமை. இவள்மீது குற்றம் சாட்டியவன் ரொமானோ என்பதைப் பார்க்கும் போது இந்தத் தண்டனையைப் பற்றிச் சந்தேகப்பட வேண்டி யிருக்கிறது. ஆனால் நான் என்ன செய்ய முடியும்? இங்கே வரும் கைதிகளின் உடல்களுக்குத்தான் நான் பொறுப்பு.

"உட்காரம்மா," என்றார்.

முழங்கால் ஏகமாய் வலித்துக் கொண்டிருந்ததால் ட்ரேஸி மகிழ்ச்சியுடன் உட்கார்ந்தாள்.

'இப்போது சார்லஸைப் பற்றி இவர் சொல்லப் போகிறார். எவ்வளவு சீக்கிரம் விடுதலையாவோம் என்பதைச் சொல்லப் போகிறார்,' என்று அவள் மனம் எண்ணியது.

"உன்னுடைய வழக்கு விவரங்களைப் படித்தேன்," என்றார் ஜார்ஜ்.

ட்ரேஸிக்கு மேலும் உற்சாகம் ஏற்பட்டது. வழக்கு விவரங்களைப் படிக்கும்படி சார்லஸ்தான் சொல்லியிருக்க வேண்டும்.

ஜார்ஜ் சொன்னார்: "நீ ரொம்பக் காலத்துக்கு எங்களுடன் இருக்கப் போகிறாயென்று தெரிகிறது. பதினைந்து வருட சிறைத் தண்டனையாச்சே?"

அவர் பேச்சின் அர்த்தத்தை விளங்கிக் கொள்ள ஒரு நிமிடம் பிடித்தது ட்ரேஸிக்கு. எங்கோ ஏதோ கோளாறு பயங்கரமான கோளாறு.

"நீங்கள்... உங்களுடன் சார்லஸ் பேசவில்லையா?" பதற்றத்தில் அவளுக்குத் திக்கியது.

அவர் அவளை வெறித்துப் பார்த்தார்.

"சார்லஸா? யாரவன்?" என்றார்.

அந்தக் கணமே ட்ரேஸிக்குப் புரிந்து விட்டது. சார்லஸ் தனக்காக ஏதோ செய்திருப்பார் என்று எண்ணியதெல்லாம் வெறும் மனக்கோட்டை! வயிற்றைப் புரட்டியது ஏமாற்றம்.

"ப்ளீஸ்! தயவு செய்து நான் சொல்வதைக் கேளுங்கள். நான் நிரபராதி. ஜெயிலுக்கு வர வேண்டியவளே அல்ல..."

வார்டன் ஜார்ஜ் தனக்குள் கசப்புடன் சிரித்துக் கொண்டார்.

"நான் நிரபராதி! நான் குற்றம் செய்யாதவள்!"

இதே சொல்லை எவ்வளவு முறை கேட்டாகி விட்டது! நூறு தரம் இருக்குமா? ஆயிரம் தடவை?

அவர் சொன்னார்: "நீ குற்றவாளி என்று நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டது. இங்கே இருக்கிறவரையில் நல்ல படியாய் நடந்து கொள்ளப் பார். அது தான் நான் உனக்குச் சொல்லக் கூடிய சிறந்த புத்திமதி. எவ்வளவுக்கெவ்வளவு சிறை வாழ்க்கைக்கு ஒத்துப் போகிறாயோ அவ்வளவுக் கவ்வளவு உனக்கு நல்லது. சிறையில் கடியாரம் கிடையாது. காலண்டர் தான் உண்டு. புரிகிறதா?"

'பதினைந்து வருடம்! முடியாது! என்னால் பதினைந்து வருடம் இங்கே அடைபட்டுக் கிடக்க முடியாது!' ட்ரேஸி தவிப்புடன் எண்ணிக் கொண்டாள் இதைக் காட்டிலும்

*இறந்து போவதே மேல். கடவுளே! எனக்கு மரணத்தைக் கொடு. இல்லையில்லை. நான் சாகக் கூடாது. என்னோடு என் குழந்தையுமல்லவா இறந்துவிடும், அது கூடாது. சார்லஸ், இது என் குழந்தை மட்டுமல்ல. உங்கள் குழந்தையும் கூட ஏன் நீங்கள் இங்கே வரவில்லை? வந்து ஏன் எனக்கு உதவி செய்யவில்லை?*

முதல் தடவையாகச் சார்லஸ் மீது அவளுக்கு வெறுப்புப் பிறந்தது.

வார்டன் தொடர்ந்து கூறினார்: "உனக்கு ஏதாவது பிரத்தியேகமான பிரசினை இருந்தால் அதாவது, நான் உதவி செய்யக் கூடியதாக இருந்தால் என்னிடம் வந்து சொல்லு:"

அப்படிச் சொன்னாரே தவிர தன் வார்த்தைகள் எவ்வளவு அர்த்தமற்றவை. என்று வார்டனுக்குத் தெரிந்திருந்தது.

இந்தப் பெண் அழகாக இருக்கிறாள். இளமையாக இருக்கிறாள். புத்தம் புதியவளாக இருக்கிறாள். இந்தச் சிறைச்சாலையிலுள்ள கேடு கெட்ட கைதிகள் இவள் மீது மிருகம் மாதிரி பாய்வார்கள். இவளைப் பத்திரமாக வைப்பதற்கு எந்தத் தனியறையும் இங்கே கிடையாது. ஒவ்வோர் அறையும் ஒவ்வொரு பிசாசின் ஆதிக்கத்தில் இருக்கிறது.. குளியலறைகளிலும், கழிப்பறைகளிலும், இரவு வேளைகளில் கூடங்களிலும் நடந்த கற்பழிப்புச் சம்பவங் களைப் பற்றிப் பல வதந்திகளை வார்டன் கேள்விப் பட்டிருந்தார். ஆனால் எல்லாம் வதந்தி அளவிலேயே நின்று விடுமே ஒழிய விசாரணைக்கு வந்ததில்லை. காரணம். அந்தக் கொடுமைகளுக்ககு இரையானவர்கள் ஒன்று வாயை மூடிக் கொண்டு விடுவார்கள். அல்லது செத்து விடுவார்கள்.

மென்மையாகச் சொன்னார் வார்டன்: "நீ நல்லபடி நடந்து கொண்டால் பன்னிரண்டு பதிமூன்று வருடங்களில் உனக்கு விடுதலை..."

"முடியாது! என்னால் முடியாது!" நிராசையின் உச்சத்தில் வெடித்துக்கொண்டு வந்தது ட்ரேஸியின் கூச்சல்.

அந்த அறையின் எல்லாச் சுவர்களும் நெருங்கி நெருங்கி வந்து தன்னை இறுக்குவது போல் தோன்றியது ட்ரேஸிக்கு. தன்னையும் மீறி எழுந்து நின்று அலறினாள். அந்தச் சத்தத்தைக் கேட்டு ஒரு காவலாளி உள்ளே வந்து அவள் கைகளைக் கெட்டியாய்ப் பிடித்தான்.

"மெதுவாய் அழைத்துப் போ," என்று அவனுக்குக் கட்டளையிட்டார் ஜார்ஜ். பிறகு ட்ரேஸி அழைத்துச் செல்லப் படுவதைப் பார்த்தவாறு, ஏதும் செய்ய இயலாத வராக மௌனமாய் உட்கார்ந்திருந்தார்.

வரிசையாய்ச் சிறைக் கொட்டடிகள் நிறைந்த பல கூடங்களின் வழியே ட்ரேஸியை அழைத்துச் சென்றார்கள்.

எவ்வளவு வகை வகையான கைதிகள்! பழுப்பு, வெள்ளை, கறுப்பு, மஞ்சள் நிறம் கொண்ட கைதிகள். ட்ரேஸி அவர்களைத் தாண்டிச் செல்கையில் பல பெண் கைதிகள் பலவிதமான உச்சரிப்பில் கூவினார்கள். என்ன கூவுகிறார்கள் என்று முதலில் புரியவில்லை.

"புது... புது....

தன் அறையை அடைந்த பிறகு தான் ட்ரேஸிக்கு விளங்கிற்று எல்லாப் பெண்களும் என்ன சொல்கிறார்கள் என்று.

'புதுச் சரக்கு! புதுச் சரக்கு!'

'ஸி' பிளாக்கில், ஒவ்வோர் அறைக்கும் நாலு கைதிகள் என்று மொத்தம் அறுபது பெண்கள் இருந்தார்கள்.

நீண்ட கூடத்தின் வழியே ட்ரேஸியை அழைத்துச் செல்கையில் பல முகங்கள் கம்பி இடுக்குவழி துருத்திக் கொண்டு அவளைப் பார்த்தன. சில முகங்களில் அலட்சியம். சில முகங்களில் காமம். சில முகங்களில் வெறுப்பு.

இன்னதென்று தெரியாத விசித்திரமானதோர் உலகத்தில், தண்ணீருக்கடியில் திணறிக் கொண்டிருப்பது போலிருந்தது ட்ரேஸிக்கு. மெதுவே மெதுவே விரியும் ஒரு சொப்பனத்தில், அன்னியமான பாத்திரம் மாதிரி உணர்ந்தாள். பொறியில் சிக்கிய உடலுக்குள் வீரிட்டெழும் கூச்சல்களை அடக்கி அடக்கி அவள் தொண்டை ரணமாகியிருந்தது.

வார்டன் கூப்பிடுகிறாரென்று போனபோது ஒரு மெல்லிய நம்பிக்கை பாக்கி இருந்தது. அதுவும் அறுந்து விட்டது. இப்போது எதுவும் இல்லை. அடுத்த பதினைந்து வருடத்துக்கு இங்கே அடைபட்டுக் கிடக்கப் போகிறோம் என்ற பயங்கர நிலைமையைத் தவிர எதுவுமேயில்லை.

காவல் பெண் கதவைத் திறந்து, "உள்ளே போ!" என்றாள்.

கண்களைக் கொட்ட விழித்து ஏறிட்டு நோக்கினாள் ட்ரேஸி. அந்த அறைக்குள் மூன்று பெண் கைதிகள் இருந்தார்கள் அவளையே மௌனமாக நோக்கியபடி.

"ஊம், போ," என்றாள் காவல் பெண்.

ட்ரேஸி சிறிது தயங்கிவிட்டு, அறைக்குள் காலடி வைத்தாள். அவளுக்குப் பின்னே கதவு படீரென்று சாத்திக் கொண்டது.

அவள் ஜாகை!

அந்த அறை ஒரே அடைசலாக இருந்தது. சுவரை ஒட்டி நெருங்கினாற்போல் நாலு கட்டில்கள். ஒரு சிறிய மேஜை. அதற்கு மேலே உடைந்த கண்ணாடி. நாலு சிறிய அலமாரிகள். அறையின் கோடியில் மூடப்படாத கழிப்பிடம்.

அவளுடைய சிறைத் தோழிகள் சிறிது நேரம் அவளையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பிறகு ஒருத்தி மௌனத்தைக் கலைத்து, "நமக்காக ஒரு புதுப் பெண்ணு வந்திருக்குது!" என்றாள். அவள் குரல் ஆழமாயும் கரகரப்பாயும் இருந்தது. நெற்றிப் பொட்டிலிருந்து கழுத்து வரை ஒரு நீண்ட வெட்டுத் தழும்பு மட்டும் இல்லை

யென்றால் அவள் அழகான பெண்ணாக இருந்திருப்பாள். கண்ணைப் பார்த்தால் மூப்புத் தெரிந்தது. உடம்பு இளமை யாயிருந்தது.

நடுவயதை எட்டிய இரண்டாமவள், "வாம்மா, வா. என்ன குற்றத்துக்காக உனக்குத் தண்டனை கிடைத்தது கண்ணு?" என்றாள்.

ட்ரேஸி உறைந்து போயிருந்தாள். எந்தப் பதிலும் சொல்ல முடியவில்லை. மூன்றவாமவள் ஒரு நீக்ரோப் பெண். ஏறத்தாழ ஆறடி உயரம் இருந்தாள். கண்கள் கூர்மையாகவும் முகம் உணர்ச்சியற்றும் இருந்தன. தலை மொட்டையடிக்கப் பட்டிருந்ததால், மங்கல் வெளிச்சத்தில் மண்டை பளபளத்தது.

"அதோ அந்த மூலையில் தான் உன் கட்டில்," என்றாள்.

அதை நோக்கி ட்ரேஸி நடந்தாள். அந்தக் கட்டில் மகா அசிங்கமாக இருந்தது. இதற்கு முன்னால் எவ்வளவு பேர் அங்கே படுத்து மல ஜலம் கழித்தார்களோ படுக்கையைத் தொடக் கூடப் பிடிக்கவில்லை.

"இங்கே... இதில் என்னால் தூங்க முடியாது..."

தன்னையும் மறந்து தனது அருவருப்பை வெளியிட்டு விட்டாள்.

குண்டுப் பெண் விகாரமாக இளித்தாள். "வேண்டாம், கண்ணு. நீ அங்கே படுக்க வேண்டாம். என் மேலே படுத்துக்க!"

சட்டென்று சிறையின் அந்தரங்கங்கள் ட்ரேஸிக்குப் புரிந்தன. புரிந்தபோது யாரோ பலமாக அறைந்து கீழே தள்ளினாற் போல இருந்தது.

மூன்று பேரும் அவளையே முறைத்தபடி, அவளையே கவனித்தபடி நின்றிருந்தார்கள் தான் நிர்வாணமாக நிற்கிறாற்போல் குன்றிப் போனாள் ட்ரேஸி.

'புதுச் சரக்கு!' என்று கைதிகள் கூறியது நினைவு வர -

அவளைத் திகில் பற்றியது.

'சீசீ! அப்படியெல்லாம் இருக்காது என் எண்ணம் தவறு' என்று தனக்குள் தைரியம் சொல்லிக் கொண்டாள். 'கடவுளே. என் பயம் அனாவசியமானதாக இருக்க வேண்டும்...'

ஒரு வழியாகச் சமாளித்துக்கொண்டு, "வேறே சுத்தமான படுக்கை வேண்டுமென்றால் நான் யாரைக் கேட்க வேண்டும்?" என்றாள்.

"கடவுளை!" என்று சிரித்தாள் நீக்ரோக்காரி. "ஆனால் அவரை இந்தப் பக்கம் பார்த்து ரொம்பக் காலமாகிறது."

## 12

ட்ரேஸி மறுபடி படுக்கையைப் பார்த்தாள். கரப்பான் பூச்சிகள் ஓடிக் கொண்டிருப்பது தெரிந்தது. 'இந்த இடத்தில் என்னால் இரு க்க, முடியாது' என்று எண்ணிக் கொண்டாள். இருந்தால் பைத்தியம் பிடித்துவிடும்.

அவள் மனத்திலோடும் எண்ணத்தைப் புரிந்து கொண்டவள் போல நீக்ரோக்காரி சொன்னாள்: "நீ இங்கேதான் கண்ணு இருந்தாகணும்."

'சிறை வாழ்க்கைக்கு நீ ஒத்துப் போவதுதான் நல்லது - சற்று முன் வார்டன் ஜார்ஜ் சொன்னது ஞாபகம் வந்தது.

நீக்ரோக்காரி தொடர்ந்தாள்: "என் பெயர் எர்ன்ஸ்டின்." முகத்தில் நீண்ட தழும்புள்ளவளைக் காட்டி, "அவள் பெயர் லோலா. இந்தக் குண்டுப் பெண் பெயர் பாலிட்டா. மெக்ஸிகோக்காரி. உன் பெயர் என்ன?"

"நான் என் பெயர் ட்ரேஸி," என்றாள். தன் பெயர் தனக்கே மறந்து விடுமோ என்ற பயங்கர நினைப்பொன்று அவள் உள்ளத்தில் எழுந்து வயிற்றைப் பிசைந்தது. கட்டிலின் முனையைப் பிடித்துக்கொண்டு நிதானப் படுத்திக் கொண்டாள்.

“எங்கேயிருந்து வருகிறே கண்ணு?” என்று குண்டுப் பெண் கேட்டாள்.

“ஸாரி... நான் பேசுகிற மாதிரி நிலைமையில் இல்லை,” என்றாள் ட்ரேஸி. நிற்கக்கூட முடியாமல் திடீரென்று ஒரு பலவீனம் அவளை வாட்டியது. அந்த அசிங்கமான படுக்கையின் ஓரத்தில் பொத்தென்று உட்கார்ந்தாள். முகத்தில் பொடிக்கும் வியர்வை முத்துக்களை ஸ்கர்ட்டினால் துடைத்துக்கொண்டாள்.

‘என் குழந்தை... நான் கர்ப்பமாக இருக்கிறேன்’ என்று வார்டனிடம் சொல்லியிருக்க வேண்டும். சுத்தமான வேறு அறை எனக்குக் கொடுத்திருப்பார். ஏன், எனக்கென்று ஒரு தனி அறைகூடக் கொடுக்கக் கூடும்.

வெளியே தாழ்வாரத்தில் காலடிச் சத்தம் கேட்டது. ஒரு காவல் பெண் ட்ரேஸியின் அறையைத் தாண்டிச் சென்று கொண்டிருந்தாள். ட்ரேஸி கதவுக்கு விரைந்தாள். “மன்னிக் கணும் அம்மா. வார்டனை நான் பார்க்க வேண்டும். நான் -”

“அப்படியா! இதோ போய் உடனே அவரை இங்கே அனுப்பி வைக்கிறேன்,” என்று அந்தக் காவல்காரி கேலியாகச் சிரித்துவிட்டு நிற்காமல் நடந்தாள்.

“இல்லேம்மா. என்ன விஷயம் என்றால், நான்-”

அவள் போய்விட்டாள்.

விரல்களைப் பந்தாக்கி வாயில் அடைத்துக் கொண்டாள் ட்ரேஸி. இல்லாவிடில் ஓவென்று கூச்சலிட்டு விடுவோம் என்று தோன்றியது.

“என்ன கண்ணு, உடம்பு சரியில்லையா? வாந்தி வருதா?” என்று லோலா கேட்டாள்.

இல்லையென்று ட்ரேஸி தலையை அசைத்தாள். அவளால் பேச முடியவில்லை. தன் படுக்கையை நோக்கி நடந்தாள். ஒரு நிமிடம் அதைப் பார்த்தாள். பிறகு மெல்ல அதன்மீது படுத்துக்கொண்டாள்.

இனி எந்த நம்பிக்கையும் கிடையாது. சரணாகதிதான். கண்களை மூடிக் கொண்டாள்.

தன்னுடைய பத்தாவது பிறந்த நாள் ஞாபகம் வந்தது. வாழ்க்கையிலேயே மறக்க முடியாத தினம்.

'விருந்து சாப்பிட நாம் அன்டாய்ன் ஒட்டலுக்குப் போகப் போகிறோம்' என்று அவள் அப்பா சொல்லியிருந்தார். ட்ரேஸிக்கு ஒரே பிரமிப்பு. அன்டாய்ன் என்பது மாபெரும் ஒட்டல். செழிப்பு, பகட்டு, அழகு எல்லாம் நிறைந்த ஒரு தனி உலகம் அது. அங்கா போகப் போகிறோம்? ட்ரேஸிக்கும் அம்மாவுக்கும் திகைப்பு. அப்பா அந்த அளவுக்குப் பணக்காரரல்ல என்று அவர்களுக்குத் தெரியும். 'அடுத்த வருஷம் நாம் வெளியூருக்கு உல்லாசப் பிரயாணம் செல்லலாம்' என்று ஒவ்வொரு வருஷமும் பல்லவி பாடிக் கொண்டேயிருப்பார்கள். ஆனால் முடியாது. இப்போது என்னடாவென்றால் ஒரு பெரிய ஓட்டலுக்கு விருந்துண்ணப் போகிறார்கள்!

ட்ரேஸிக்குப் புதிய பச்சை வண்ண ஃப்ராக் அணிவித்தாள் அம்மா.

'நியூ ஆர்லியன்ஸ்லேயே மிக அழகான இரண்டு பெண்களுடன் நான் வெளியே போகிறேனாக்கும்!' என்று அப்பா பெருமையடித்துக் கொள்வார். 'பார்ப்பவனெல்லாம் பொறாமையால் வெந்து சாகப் போகிறான்!' என்பார்.

அப்பா அழைத்துப் போன அந்த ஒட்டல் அசல் சொர்க்கலோகம் தான். அவ்வளவு அழகு, ஆடம்பரம், அலங்காரம். 'ராஜாக்களும் ராணிகளும் இங்கே தான் சாப்பிட வருவார்கள்' என்று ட்ரேஸி எண்ணிக் கொண்டாள். அழகழகான ஆண்களையும் பெண்களையும் பார்த்த பரவசத்தில் அவளால் சாப்பிடக் கூட முடியவில்லை. 'நான் பெரியவளானதும் ஒவ்வொரு ராத்திரியும் இங்கே வரப் போகிறேன். அம்மாவையும் அப்பாவையும் அழைத்துக் கொண்டு வரப்போகிறேன்' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

"ட்ரேஸி, எதுவுமே சாப்பிடவில்லையே நீ" என்றாள் அம்மா. அவளைத் திருப்திப் படுத்துவதற்காக இரண்டு வாய் சாப்பிட்டாள். பத்து மெழுகுவத்திகள் எரிய ஒரு கேக் வைத்திருந்தது. வெயிட்டர்கள் 'ஹாப்பி பர்த் டே' பாடினார்கள். ஒட்டலுக்கு வந்திருந்தவர்கள் திரும்பிப் பார்த்துக் கை தட்டினார்கள்.

ராஜகுமாரி போல ட்ரேஸிக்கு ஒரு பெருமிதம் ஏற்பட்டது.

வெளியே ஏதோ ஒரு வண்டி மணியடித்துக் கொண்டு செல்லும் ஓசை...

மணியின் ஓசை வரவரப் பலத்தது. இடைவிடாமல் அடித்தது.

"சாப்பாட்டு நேரம்," என்று சொன்னாள் எர்னஸ்டின்.

அந்தப் பிளாக்கிலிருந்த அறையெங்கும் கதவுகள் திறக்கப்பட்டன. கைதிகள் உணவுக்காகச் சென்று கொண்டிருந்தார்கள். ட்ரேஸி தன் கட்டிலிலேயே படுத்திருந்தாள். கடந்த காலத்தின் நினைவுகளை இழக்க விரும்பவில்லை.

"ஏய்! தின்னப் போ!" என்று லோலா மறுபடியும் கூவினாள்.

சாப்பாட்டைப் பற்றி நினைக்கும் போதே ட்ரேஸிக்குக் குமட்டிக் கொண்டு வந்தது. "எனக்குப் பசிக்கவில்லை," என்றாள்.

குண்டுப் பெண்ணான பாலிடா, "ஏய்? உனக்குப் பசிக்கிறதா இல்லையா என்று அவர்களுக்குக் கவலை கிடையாது. நீ சாப்பாட்டுக் கூடத்துக்குப் போய்த்தான் ஆக வேண்டும்!" என்றாள்.

வெளியே கூடத்தில் கைதிகள் க்யூ வரிசையில் நிற்கத் தொடங்கினார்கள்.

"பேசாமல் எழுந்து வா, இல்லாவிட்டால் உன் தோலை உரித்து விடுவார்கள்." என்று எர்னஸ்டின் எச்சரித்தாள்.

'என்னால் நகர முடியாது. நான் இங்கேயே இருக்கப் போகிறேன்,' என்று நினைத்துக் கொண்டாள் ட்ரேஸி.

மற்ற மூவரும் வெளியே போய் வரிசையில் நின்று கொண்டார்கள். ஒரு குள்ளமான குண்டான காவல்காரி ட்ரேஸி படுக்கையில் படுத்திருப்பதைப் பார்த்ததும். "ஏய், மணி அடித்தது காதில் விழவில்லை? எழுந்து வெளியே போ!" என்றாள்.

"தாங்க் யூ. எனக்குப் பசிக்கவில்லை. தயவு பண்ணி மன்னியுங்கள்," என்றாள் ட்ரேஸி.

அவள் சொன்னதை நம்ப முடியாமல் காவல்காரியின் கண்கள் விரிந்தன. புயல் போல வேகமாய் உள்ளே வந்து ட்ரேஸியின் அருகில் நின்றாள். "ஏம்மா, உன் மனசிலே பெரிய மகாராணின்னு நினைப்பா? உன் ஆகாரத்தை இங்கே கொண்டு வந்து கொடுத்து உபசாரம் பண்ணணுமா? மரியாதையாய் எழுந்து லைனில் போய் நில்லு. போனால் போகிறதென்று இதைப் பற்றி நான் மேலிடத்துக்குப் புகார் பண்ணாமல் விடுகிறேன். இன்னொரு தரம் இப்படிப் பண்ணினாயோ, உன்னை எங்கே அனுப்புவோம் தெரியுமா? ஜாக்கிரதை!"

ட்ரேஸிக்கு எதுவும் புரியவில்லை. தனக்கு நேருவது எதையுமே அவளால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. படுக்கையை விட்டு எழுந்தவள் பெரும்பாடு பட்டுக் கைதிகளின் வரிசையில் போய் நின்று கொண்டாள். தனக்கு முன்னாலிருந்த நீக்ரோ பெண் எர்னஸ்டிடம், "நான் ஏன்...." என்று ஏதோ கேட்க ஆரம்பித்தாள்.

"உஷ்!" என்று கீழ்த் தொண்டையில் சீறினாள் அவள். "க்யூவில் யாரும் பேசக் கூடாது!"

காவல் போட்ட இரண்டு வாசல்களைத் தாண்டி, குறுகிய கூடத்தின் வழியே எல்லாரும் அழைத்துச் செல்லப் பட்டார்கள். சாப்பாட்டு அறை மர மேஜைகளும் மர நாற்காலிகளுமாய் விஸ்தாரமாயிருந்தது. மூலையில் ஒரு

மேஜை மீது உணவு வைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொருவராய் அங்கே சென்று உணவை வாங்கிக் கொண்டார்கள். வாடிப்போன கறி, காய்களும், நீர்த்துப்போன பானமும் பசியைத் தூண்டக் கூடியதாக எதுவும் இல்லை. தகரத் தட்டுக்களில் அந்த உணவைப் பொத் பொத்தென்று வைத்தார்கள். வழங்கியவர்களும் கைதிகள் தான். "ஊம், நகரு, நகரு! அடுத்தது... அடுத்தது..." என்று கூவிக் கொண்டே இருந்தார்கள்.

உணவைப் பெற்றுக் கொண்ட ட்ரேஸி எங்கே போவதென்று தெரியாமல் சிறிது நின்றாள். லோலாவும் பாலிட்டாவும் ஒரு மேஜையடியில் உட்கார்ந்திருப்பது கண்ணில் பட்டது. சுமார் இருபது பெண் கைதிகள் பசியுடன் அள்ளி அள்ளி விழுங்கிக் கொண்டிருந்தார்கள்.

ட்ரேஸி கையிலிருந்த தட்டைப் பார்த்தாள். அடிவயிற்றிலிருந்து ஒரு குமட்டல் கிளம்பித் தொண்டை வரை வந்து விட்டது. வேண்டாம் என்கிற மாதிரி மேஜை மீது தட்டை நகர்த்தினாள்.

பாலிட்டா சட்டென்று எழுந்து அந்தத் தட்டைப் பறித்துக் கொண்டாள். "உனக்கு வேண்டாமென்றால் என்கிட்டே கொடு. நான் சாப்பிடுகிறேன்."

லோலா, "ஏய் பெண்ணே! நீ சாப்பிட்டுத்தான் ஆகணும். இல்லாவிட்டால் இங்கே உயிரோடு இருக்க முடியாது," என்றாள்.

'நான் உயிரோடு இருக்க விரும்பவில்லை.' என்று ட்ரேஸி விரக்தியாக எண்ணிக் கொண்டாள். நான் இறந்து போகவே விரும்புகிறேன். இந்த மாதிரி வாழ்க்கையை எப்படித்தான் இந்தப் பெண்கள் பொறுத்துக் கொள்கிறார்களோ? இவர்களெல்லாம் எத்தனை காலமாக இங்கே இருக்கிறார்கள்! எத்தனை மாதங்களாக? எத்தனை வருடங்களாக?

அறையில் உள்ள அந்த அசிங்கமான படுக்கை ஞாபகம் வந்தது. அதில் ஊர்ந்து கொண்டிருந்த பூச்சிகளும் புழுக்

களும்... தொண்டை கிழிய கூச்சலிட வேண்டும் போலிருந்தது ட்ரேஸிக்கு. தன்னை மீறிக் கத்திவிடப் போகிறோமே என்று மோவாயை அழுத்திப் பிடித்துக் கொண்டாள்.

"நீ சாப்பிடாமலிருப்பதைப் பார்த்தார்களோ அவ்வளவு தான்! உன்னைத் தனிமைச் சிறைக்கு அனுப்பி விடுவார்கள்!" என்றாள் பாலிட்டா. "தனிமைச் சிறை என்றால் எப்படி இருக்கும், தெரியுமா? நரகம் தான்!" என்றவள் ட்ரேஸியை நோக்கிக் குனிந்து சொன்னாள். "இதுதான் நீ ஜெயிலுக்கு வருவது முதல் தடவை, இல்லையா? உனக்கு ஒரு ரகசியம் சொல்கிறேன், கேள். எர்னஸ்டின் இருக்கிறாள் இல்லையா, அவள் வைத்ததுதான் இங்கே சட்டம். அவள்கிட்டே நீ நல்லபடி நடந்துக்க, பிறகு உனக்கு ஒரு கவலையும் இல்லை."

அவர்கள் சாப்பாட்டு அறைக்குள் நுழைந்த முப்பதாவது நிமிடம் பெருத்த ஓசையுடன் மணி அடித்தது. எல்லாப் பெண்களும் எழுந்து போய்விட்டார்கள். பாலிட்டா தனக்கு அடுத்த தட்டிலிருந்த கடைசிப் பட்டாணியை எடுத்து லபக்கென்று வாயில் போட்டுக் கொண்டாள். எல்லாரும் வரிசையாக நின்று தங்கள் தங்கள் அறைக்குப் போகத் தொடங்கினார்கள். சாப்பாடு முடிந்து விட்டது. மணி நாலு.

ட்ரேஸி தன் அறையை அடைந்தபோது அவளுக்கு முன்பே எர்னஸ்டின் வந்துவிட்டிருந்தாள். சாப்பாட்டுக் கூடத்தில் அவளைப் பார்க்கவேயில்லை என்பது அப்போது தான் ட்ரேஸிக்கு ஞாபகம் வந்தது. எங்கே தான் போயிருந்தாளோ!

ட்ரேஸிக்கு அவசரமாய் டாய்லெட் போக வேண்டியிருந்தது. அறையின் மூலையிலிருந்த கழிப்பிடத்தைப் பார்த்தாள். மற்றப் பெண்களின் முன்னிலையில் அங்கே செல்ல அவளுக்குக் கூச்சமாயிருந்தது. விளக்குகள் அணைக்கட்டும். பிறகு போகலாம்.

"நீ ஒன்றுமே சாப்பிடவில்லை என்று சொல்கிறார்களே? அது ரொம்ப முட்டாள்தனம்," என்றாள் எர்னஸ்டின்.

"நான் வார்டனைப் பார்க்க வேண்டும். அதற்கு என்ன செய்யணும்?" என்று ட்ரேஸி கேட்டாள்.

"எழுத்து மூலமாய் எழுதித் தர வேண்டும். அந்தக் காகிதத்தைக் காவலாட்கள் டாய்லெட் பேப்பராக உபயோகித்துக் கொள்வார்கள்," என்று எர்னஸ்டின் சிரித்தாள். "வார்டனைப் பார்க்க வேண்டும் என்று எவள் சொன்னாலும் சரி, அது ஏதோ தொல்லைக்கு ஆரம்பம் என்பது அவர்கள் எண்ணம்." ட்ரேஸியை நெருங்கி வந்தாள். "இங்கே உன்னை வம்பில் மாட்டக் கூடிய விஷயம் ரொம்ப இருக்கு. நீ அதிலிருந்தெல்லாம் தப்பிக்க வேண்டுமென்றால் உனக்கு ஒரு சினேகிதி தேவை."

மறுபடி அவள் சிரித்த போது ஒரு தங்கப் பல் தெரிந்தது.

## 13

எட்டே முக்காலுக்குச் சிறையெங்கும் மணி அடித்தது. ட்ரேஸியுடன் இருந்த மூவரும் தங்கள் ஆடைகளைக் களைந்து நைட்கவுன் மாட்டிக் கொண்டார்கள். ட்ரேஸி அசையவில்லை.

"ஏய்! இன்னும் பதினைந்து நிமிஷத்தில் எல்லாரும் படுத்தாக வேண்டும்," என்றாள் லோலா.

பாரா வந்த காவல்காரி ட்ரேஸி சும்மா உட்கார்ந்திருப் பதைக் கண்டு, "இந்தாம்மா! டிரெஸ் மாத்திக்க!" என்றவள், எர்னஸ்டினை நோக்கி, "நீ அவளுக்குச் சொல்லவில்லை?" என்று கேட்டாள்.

"ஓ, சொல்லி விட்டோம்."

காவல்காரி ட்ரேஸியை நோக்கிச் சொன்னாள். "இதோர் பார், உன்னைப் போல முரண்டு பிடிக்கிறவர்களை எப்படி வழிக்குக் கொண்டு வருவது என்று எங்களுக்குத் தெரியும். சொன்னபடி நடக்காவிட்டால் உரித்து உப்புக் கண்டம் போட்டு விடுவோம். உஷார்!"

காவல்காரி போய்விட்டாள். ட்ரேஸி மெல்ல எழுந்து கொண்டாள். அவர்களுக்கு முதுகைக் காட்டியபடி தன் ஆடைகளைக் களைந்தாள். முரட்டு நைட்கவுனை மாட்டிக் கொண்டாள்.

மூன்று பேரின் கண்களும் தன்னையே வெறித்து நோக்குவது தெரிந்தது. அவள் உடல் நடுங்கியது.

"நீ ரொம்ப அழகா இருக்கிறே," என்றாள் பாலிட்டா.

"ஆமாமாம், ரொம்ப அழகு," என்று லோலா ஆமோதித்தாள்.

ட்ரேஸிக்கு காலோடு தலை ஒரு நடுக்கம் பரவிற்று.

எர்னஸ்டின் அவளருகே வந்து, அவளைக் கூர்ந்து பார்த்தாள். "நாங்கள் மூன்று பேரும் உன் சினேகிதிகள். உன்னை நாங்கள் ஜாக்கிரதையாய்க் கவனிச்சுக்கப் போகிறோம்." என்றாள். உற்சாகத்தினால் அவள் குரல் கரகரத்தது.

ட்ரேஸி வெடுக்கென்று திரும்பினாள். "போங்கள்! என்னிடம் வராதீர்கள். உங்கள் மூன்று பேரையும் தான் சொல்கிறேன். போங்கள். நான்.. நான்... நீங்கள் நினைக்கிற மாதிரியான பெண் அல்ல."

நீக்ரோக்காரி சூள் கொட்டினாள். "நாங்கள் நினைக்கிற மாதிரியான பெண்ணாக உன்னைப் பண்ண முடியும் கண்ணு!"

"சரி, விடு. என்ன அவசரம்? நிறைய டயம் இருக்கிறது." என்று இன்னொருத்தி சொன்னாள்.

விளக்குகள் அணைந்தன.

'இருட்டுதான் எனக்குச் சத்துரு' என்று ட்ரேஸி எண்ணிக் கொண்டாள். உடம்பு மொத்தமும் படபடக்க, கட்டிலின் முனையில் உட்கார்ந்திருந்தாள். மற்ற மூவரும் தன்மீது பாயக் காத்திருக்கிறார்கள் என்று அவள் உள்ளுணர்வு சொல்லியது. ஒரு வேளை நாம் தான் கற்பனை

செய்து கொள்கிறோமோ? பயம் அவளைக் கவ்வியிருந்ததால் ஒவ்வொரு சிறு அசைவும் அபாயமாகத் தோன்றியது. அவர்கள் நம்மைப் பயமுறுத்தினார்களா என்று யோசித்துப் பார்த்தாள். இல்லையென்றே தோன்றியது. வெறுமே சினேகிதமாயிருக்கத்தான் முயன்றிருப்பார்கள். ஏன் பயங்கர அர்த்தமெல்லாம் கற்பித்துக் கொள்ள வேண்டும்? சிறைச் சாலைகளில் பெண்ணைப் பெண்ணே கெடுக்கும் நிகழ்ச்சி களைப் பற்றி அவள் கேள்விப் பட்டதுண்டு. ஆனால் லட்சத்திலே ஒன்றிரண்டு அப்படி இருந்திருக்கலாம். சிறை யிலே அப்படி யெல்லாம் நடக்கும்படி விட மாட்டார்கள்.

இருந்தாலும் ஏதோ ஒரு சந்தேகம் அவளை அரித் தெடுத்தது. எனவே ராத்திரி பூரா தூங்காமல் விழித்திருப்பது என்று தீர்மானித்தாள். யாராவது அவளை நோக்கி அடி எடுத்து வைத்தாலும் போதும், கூச்சலிட்டுக் காவலாளை வரவழைக்க வேண்டியதுதான். கைதிகளுக்கு எதுவும் நேராதபடி பார்த்துக் கொள்வது காவலாட்களின் கடமை யாயிற்றே!

அனாவசியமாய்க் கவலைப்படுகிறோம் என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள். எதற்கும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது...

ஒவ்வொரு சின்ன ஓசையையும் செவிமடுத்தபடி கட்டிலின் விளிம்பில் இருட்டில் உட்கார்ந்திருந்தாள் ட்ரேஸி. ஒவ்வொருத்தியாக டாய்லெட்டுக்குப் போய், கழிப்பிடத்தை உபயோகப்படுத்திவிட்டுத் தங்கள் படுக்கைகளுக்குத் திரும்பும் சந்தடி கேட்டது.

வயிற்று உபாதை தாள முடியாமல் போகவே ட்ரேஸியும் டாய்லெட்டுக்குச் சென்றாள். தண்ணீர் கொட்ட முயன்றாள். குழாய் வேலை செய்யவில்லை. நாற்றம் தாள முடியாததாக இருந்தது. தன் கட்டிலுக்கு வேகமாகத் திரும்பி, முன்போல் உட்கார்ந்து கொண்டாள்.

விரைவில் பொழுது புலர்ந்து வெளிச்சம் வந்துவிடும் என்று நினைத்துக் கொண்டாள். விடிந்ததும் வார்டனைப்

பார்க்க வேண்டும். நாம் கர்ப்பமாயிருப்பதைச் சொல்ல வேண்டும். காலையில் எல்லாம் சரியாகி விடும். காலையில்...

ஒவ்வொரு நிமிடத்தையும் மனதுக்குள் எண்ணிக் காத்திருந்தாள் ட்ரேஸி. ஆனால் விடிகாலை மூன்று மணிக்கு மேல் அவளால் விழித்திருக்க முடியவில்லை. தூங்கிப் போனாள்.

திடீரென்று தன் வாயை யாரோ அழுந்தப் பொத்துவதை உணர்ந்து திடுக்கிட்டு எழுந்தாள். ஆனால் எழுந்திருக்க முடியவில்லை. இரண்டு இரும்புக் கரங்கள் அவள் தோள்களை அமுக்கிப் பிடித்திருந்தன. வாய் விட்டு அலற முயன்றாள். அதுவும் முடியவில்லை. தன் நைட் கவுனும் உள்ளாடைகளும் இழுத்துக் கிழிக்கப்படுவதை உணர்ந்தாள். முரட்டுக் கைகள் அவள் உடலெங்கும் துழாவித் துளைத்தன.

அந்த மூன்று பெண் கைதிகள்!

அவர்களிடமிருந்து விடுபடுவதற்காகப் பயங்கரமாய் போராடிப் பார்த்தாள்.

"ஏய்! சும்மா இரு!" என்று ஒரு குரல் இருட்டில் கிசுகிசுத்தது. "நாங்கள் உன்னை ஒன்றும் செய்ய மாட்டோம்."

குரல் வந்த திசையைக் குறி வைத்து எட்டி உதைத்தாள் ட்ரேஸி.

"அடி! இந்த முண்டையைக் கீழே தள்ளுங்கடி!" என்றது அந்தக் குரல்.

ஒரு பயங்கரமான குத்து ட்ரேஸியின் வாயின் மீது விழுந்தது. இன்னொரு அரக்கத்தனமான குத்து அவள் வயிற்றைத் தாக்கியது. யாரோ அவளைத் தரையோடு தரையாகத் தள்ளி அழுத்தினார்கள்.

ஒரு வினாடி ட்ரேஸி அவர்களிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள். ஆனால் ஒரு வினாடி தான் ஒருத்தி பாய்ந்து வந்து அவளைப் பிடித்து, கதவின் கம்பி மீது அவள் தலையை மோதினாள். மூக்கிலிருந்து ரத்தம் வழிவது தெரிந்தது ட்ரேஸிக்கு. மறுபடியும் கான்கிரீட் தலைக்குத்

தள்ளப்பட்டாள். அவள் தலையையும் கைகளையும் ஆணி அடித்தாற்போல் தரையில் வைத்து அழுத்திக் கொண் டார்கள்.

வெறி பிடித்தவள் போல் ட்ரேஸி போராடினாள். ஆனால் அந்த மூன்று பேருக்கு முன்னால் ஒண்டியாய் சமாளிக்க முடியவில்லை. சிலீரென்ற கைகளும் சூடான நாக்குகளும் அவள் முகத்தின் மீது விளையாடின.

ட்ரேஸி நெளிந்தாள். துடித்தாள். திமிறினாள். கத்து வதற்காக வாயைத் திறந்தாள். ஒரு கை அவள் வாயை அடைத்தது. உடனே தன் பலம் கொண்ட மட்டும் அந்தக் கையைக் கடித்தாள்.

“ஸ்! ஆ!” ஒரு சீறல் வெடித்தது.

மறுவினாடி மேலும் மேலும் குத்துக்கள், அவள் முகத்தின் மீதும் வயிற்றின் மீதும் இறங்கின.

தாள முடியாத வேதனையில் அவள் மயங்கி, மயங்கி, கடைசியில் நினைவு அற்றுப் போனாள்...

**கா**லையில் மணியடிக்கும் ஓசை கேட்டு அவள் கண் விழித்தாள்.

தான் அலங்கோலமாகத் தரையில் கிடப்பதும், மற்ற மூவரும் அவரவர் படுக்கையில் ஏதுமறியாதவர்கள் போல் உட்கார்ந்திருப்பதும் தெரிந்தது.

வெளியே வெராந்தாவில் காவல்காரி, “எழுந்திருங்கள்! எழுந்திருங்கள்!” என்று கூவிக் கொண்டே சென்றாள். ட்ரேஸியின் அறையைத் தாண்டியவள், ட்ரேஸி தரையில் கிடப்பதைக் கண்டாள்.

கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தாள். ட்ரேஸியைச் சுற்றி ரத்தம் பரவியிருப்பதையும், ட்ரேஸியின் முகம் காயமடைந்திருப்பதையும் ஒரு கண் வீங்கியிருப்பதை யும் கண்டு திடுக்கிட்டாள். “என்ன இங்கே அமளி? என்ன நடந்தது?” என்று கத்தினாள்.

"கட்டிலிலிருந்து கீழே விழுந்து விட்டாள் போலிருக் கிறது," என்று எர்னஸ்டின் சொன்னாள்.

காவல்காரி ட்ரேஸியின் முழங்கையைப் பிடித்துத் தூக்கி உட்கார்த்தி வைத்தாள். வேதனையில் ட்ரேஸிக்கு மயக்கம் வந்தது.

"ஏய்! என்ன நடத்து?"

ஒற்றைக் கண்ணால் ட்ரேஸி மெதுவே பார்த்தாள். அறையின் வடிவம் மங்கலாகப் புலப்பட்டது.

அவள் சொல்லப் போகும் பதிலை எதிர்பார்த்து மூன்று கைதிகளும் மௌனமாகக் காத்திருப்பதைக் கண்டாள்.

"நான்... நான்..." என்று சொல்ல முயன்றாள். ஆனால் தொண்டையிலிருந்து எந்த வார்த்தையும் வெளிப்பட வில்லை. மறுபடியும் முயன்றாள். அவளையும் மீறி உள்ளுக் குள்ளிருந்து ஒரு சக்தி எழுந்து, அவளைப் பேச வைத்தது, "கட்டிலிலிருந்து விழுந்து விட்டேன்..."

காவல்காரி கடுகடுவென்று சொன்னாள். "உன் மனசில் ரொம்பப் புத்திசாலி என்று நினைப்போ? உன்னையெல்லாம் தனிமைச் சிறையில் அடைத்தால் தான் புத்தி வரும்."

இருட்டு, இருட்டு, இருட்டைத் தவிர வேறில்லை. தாயின் கருப்பைக்கே திரும்பிவிட்ட மாதிரி இருந்தது ட்ரேஸிக்கு.

இந்தத் தனிமைச் சிறையில் கட்டிலோ அலமாரியோ எதுவுமில்லை. கழிப்பிடமாக ஒரு பொந்து இருந்தது. சில்லென்ற தரையில் ஒரு நைந்து கிழிந்த பாய் போடப் பட்டிருந்தது.

இருட்டில் படுத்திருக்கையில் பல பல வருஷங்களுக்கு முன், அவள் சின்னஞ் சிறுமியாக இருந்தபோது அப்பா சொல்லிக் கொடுத்திருந்த நாட்டுப் பாடல்கள் அவள் நினைவுக்கு வந்தன. மெல்ல அவற்றைப் பாடிக் கொண்டாள். இப்படியே இருந்தால் விரைவில் பைத்தியம் பிடித்து விடும்

என்பது அவளுக்கு உறைக்கவில்லை எங்கே இருக்கிறோம் என்பதை அவளால் உணர முடியவில்லை. தன் உடம்பு அனுபவித்த மிருகத்தனமான கொடூரங்கள் மட்டுமே நினைவிலிருந்தன. படுக்கையிலிருந்து விழுந்து விட்டேன் போலிருக்கிறது. ஆமாம், ஆமாம். அதுதான் இவ்வளவு காயங்கள். பரவாயில்லை. அம்மா இருக்கிறாள். என்னைப் பார்த்துக் கொள்வாள்... 'அம்மா, அம்மா, நீ எங்கே இருக்கிறே?' என்ற உடைந்த குரலில் கூப்பிட்டாள். பதிலே தும் வரவில்லை. மறுபடியும் மயக்கத்திலாழ்ந்தாள்.

நாற்பத்தெட்டு மணி நேரம் அப்படியே இருந்தாள். மரண வேதனைகள் குறைந்து வலிகளை உணர்ந்தாள். கண் களைத் திறந்தாள். சுற்றிலும் சூனியத்தையே கண்டாள். சிறை யின் வெளி வடிவம் கூடப் புலப்படவில்லை. அவ்வளவு இருட்டு.

வெள்ளமாய்ப் பாய்ந்து வந்தன நினைவுகள்.

அவளை டாக்டரிடம் கொண்டு சென்றது ஞாபகம் வந்தது. டாக்டரின் குரலைக் கேட்டது ஞாபகம் வந்தது. "இடுப்பிலும் மணிக் கட்டிலும் எலும்பு முறிந்திருக்கிறது. கட்டுப் போடுவோம். சிராய்ப்புக் காயங்கள் ரொம்ப ஜாஸ்தி. ஆனால் சீக்கிரமே ஆறிவிடும்... குழந்தைதான் பாவம் இறந்துவிட்டது..."

"குழந்தை... என் குழந்தை... ட்ரேஸி தேம்பினாள். "ஐயோ என் குழந்தையைக் கொன்று விட்டார்கள்..."

## 14

ட்ரேஸி விம்மி விம்மி அழுதாள். இழந்து விட்ட குழந்தையை எண்ணி அழுதாள். தன்னை எண்ணி அழுதாள். இந்தக் கேடுகெட்ட உலகத்தை எண்ணி அழுதாள்...

உடம்பு மொத்தத்தையும் கிடுகிடுக்க வைப்பது போன்ற வெறுப்பு அவள் உள்ளத்தில் எழுந்தது. அவள் எண்ணங்கள்

*திகுதிகுவென்று கொழுந்துவிட்டு எரிந்தன. அந்தத் தீயில் எல்லா உணர்ச்சிகளும் கருகிச் சாம்பலாகி, ஒன்றே ஒன்று தான் மிஞ்சி நின்றது!*

*பழிக்குப் பழி!*

*ஆனால் தனது அறையிலிருந்த அந்த மூன்று பெண் களுக்கு எதிராக அல்ல. அவர்களும் இவளைப் போலவே பலியாடுகள்.*

*அவள் பழிவாங்க எண்ணியது அந்த ஆண்களை. அவளை இந்த நிலைமைக்குக் கொண்டு வந்த, அவளுடைய வாழ்க்கையை நாசம் செய்த*

*ரொமானோ 'இப்படியொரு அழகான மகள் இருப்பதை உன் அம்மா சொல்லவேயில்லையே...'*

*ஆர்ஸெட்டி 'ரொமானோ வேலை செய்வது ஆர்ஸெட்டிக்காக, நியூ ஆர்லியன்ஸ் நகரத்தை ஆட்டிப் படைப்பவன் ஆர்ஸெட்டி தான்...'*

*பெர்ரி கோப் - 'குற்றம் செய்ததாக ஒப்புக் கொண்டால் நீதிமன்றம் உன்னை மன்னிக்கும்...'*

*ஜட்ஜ் லாரன்ஸ் - 'உனக்குப் பதினைந்து வருடம் சிறைத் தண்டனை விதிக்கிறேன்...'*

*இவர்கள் தான் அவளுடைய பகைவர்கள்.*

*பிறகு இருக்கவே இருக்கிறான் சார்லஸ். அவள் சொல்வதைக் காது கொடுத்துக் கேட்கக் கூடத் தயாரா யில்லாதவன். 'உனக்கு அவ்வளவு பண நெருக்கடி யென்றால் என்னிடம் சொல்லியிருக்கலாமே... நீ எப்படிப் பட்டவள் என்பதை உள்ளபடி நான் அறிந்து கொள்ளாமற் போனேன்... குழந்தையா... அதை என்ன வேண்டுமானாலும் செய்து கொள்...'*

*இவர்களைப் பழி தீர்க்காமல் விடமாட்டேன்! ஒவ்வொருவரையும்! ஒவ்வொருவரையும்!*

*எப்படிச் செய்யப் போகிறோம்? அது அவளுக்குத் தெரியவில்லை. ஆனால் பழி வாங்கப் போகிறோம் என்று*

மட்டும் அவளுக்குத் தெரிந்தது. நாளைக்கு... நாளைய தினம் என்று ஒன்று வருமானால்...

காலம் என்பது அர்த்தமில்லாததாகப் போய் விட்டது.

ட்ரேஸி அடைபட்டிருந்த தனிமைச் சிறையில் மருந்துக்குக் கூட வெளிச்சம் கிடையாது. எனவே இரவுக்கும் பகலுக்கும் வித்தியாசம் தெரியவில்லை. இந்தச் சிறையில் எத்தனை காலமாக அடைபட்டிருக்கிறோம் என்ற கணக்கும் தெரியவில்லை.

கதவின் அடிப்புறத்தில் இருந்த ஒரு பொந்து வழியாக, சில்லிட்டுப் போன உணவுகள் உள்ளே தள்ளப்படும்.

பசி என்பது சுத்தமாக மறந்து விட்டது ட்ரேஸிக்கு இருந்தாலும் ஒவ்வொரு கவளத்தையும் வலுக்கட்டாயமாக விழுங்கினாள்.

'நீ சாப்பிட்டாக வேண்டும். இல்லாவிடில் இங்கே உயிரோடு இருக்கமுடியாது.' என்று நீக்ரோக்காரி சொன்னது நினைவு வந்தது.

இன்று அது புரிந்தது. தான் திட்டமிட்டிருப்பதை நிறைவேற்ற வேண்டுமானால் உடம்பின் ஒவ்வோர் அணுவிலும் பலம் இருக்க வேண்டும் என்பதை அவள் இப்போது உணர்ந்து கொண்டாள்.

பதினைந்து வருடச் சிறைத் தண்டனை; பணம் கிடையாது; நண்பர்கள் கிடையாது; எந்தவித உதவியும் கிடையாது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், வேறொருவரா யிருந்தால் இத்துடன் நம் வாழ்க்கை முடிந்தது என்று எண்ணியிருப்பார்கள்.

ஆனால் உள்ளுக்குள்ளே ஓர் ஊற்றுக் கிணறு இருப்பது போல அவளுக்குள் சக்தி வளர்ந்தது. எப்படியும் நான் உயிர் வாழத்தான் போகிறேன் என்று அவள் தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

தைரியமே என் கவசம். வேறு எந்தத் துணையுமின்றி நிர்வாணமாக நான் என் எதிரிகளைச் சந்திப்பேன்.

அயர்லாந்துக்காரர்களின் ரத்தமும், பிரிட்டிஷ் காரர்களின் ரத்தமும் ஸ்காட்லந்துக்காரர்களின் ரத்தமும் என் உடம்பில் கலந்து ஓடுகிறது. அந்த என் முன்னோர்களின் தலைசிறந்த குணங்கள், அறிவு, தைரியம், மன உறுதி ஆகியவை எனக்கும் இருக்கின்றன. அவர்களைப் போலவே நானும் வாழ்ந்து காட்டுவேன். என் முன்னோர்கள் பஞ்சங் களையும், கொள்ளை நோய்களையும் வெள்ளங்களையும் எதிர்நின்று சமாளித்து உயிர் வாழ்ந்தார்கள். நானும் அவர் களைப் போலவே வென்று காட்டுவேன்...

ஆடு மேய்த்தவர்கள், வேட்டைக்காரர்கள், விவசாயிகள், வியாபாரிகள், டாக்டர்கள், ஆசிரியர்கள் இப்படிப் பல்வேறு முன்னோர்களின் ஆவிகள், தன்னோடு இந்த இருட்டுப் பொந்தில் இருப்பது போல் ட்ரேஸி உணர்ந்தாள். இன்று அவளில் ஒரு பாகமாக அவர்கள் இருக்கிறார்கள்.

'உங்கள் நம்பிக்கையை நான் பொய்ப்பிக்க மாட்டேன்.' இருட்டை நோக்கிக் கிசுகிசுத்தாள் ட்ரேஸி.

எப்படித் தப்பிப்பது என்று திட்டமிடத் தொடங் கினாள்.

அதற்கு முதல் வேலையாகத் தன் உடம்பைப் பழையபடி வலுவுள்ளதாகச் செய்து கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தாள்.

அவள் இருந்த அறை மிகக் குறுகலாக இருந்தது. இங்கே விஸ்தாரமான உடற்பயிற்சிகள் செய்வது இயலாத காரியம். ஆனால் அவள் ஏற்கெனவே கற்றிருந்த கராத்தே பயிற்சி களைச் செய்வது எளிது. அதற்கு அதிக இடம் தேவையில்லை.

ஆரம்பப் பயிற்சிகளைச் செய்யத் தொடங்கினாள். லாகவமாகவும் மெதுவாகவும் செய்ய முடிந்தது. தன் ஆசானின் கட்டளைக் குரல்கள் இப்போது கூட ஒலிப்பது போலிருந்தது அவளுக்கு.

ஒரு சுற்று முடிக்க ஒரு மணி நேரம் பிடித்தது. அது முடிந்தபோது ட்ரேஸி முற்ற முழுக்கக் களைத்துப் போனாள்.

ஆனால் ஒவ்வொரு காலையும் பிற்பகலும் பயிற்சிகளைச் செய்யச் செய்ய உடம்பு இஷ்டப்படி வளைந்தது. தேகம் பல மடைந்தது.

உடலுக்குப் பயிற்சி செய்யாத நேரங்களில் மனத்துக்குப் பயிற்சி தரத் தொடங்கினாள்.

இருட்டில் படுத்தபடி சிக்கலான கணக்குகளைப் போட்டுப் பார்த்தாள். தான் வேலை பார்த்த பாங்க்கில் உள்ள கம்ப்யூட்டரை மனத்துக்குள் இயக்கினாள். நெட்டுருவாகி யிருந்த கவிதைகளை ஒப்பித்தாள். கல்லூரியில் நடித்த நாடகங்களின் வசனங்களைச் சொன்னாள். வெவ்வேறு குரல்களில், வெவ்வேறு உச்சரிப்பில் சொல்ல அவளுக்குத் தெரியும். அதே போல் இன்றும் பேசிப் பார்த்தாள். ஒரு முறை அவளை ஹாலிவுட் தரகரொருவர் திரைப்படத்தில் நடிப்பதற்கு அழைத்தார். "ரொம்ப நன்றி. எனக்கு அதெல்லாம் வேண்டாம். பத்திரிகைகளில் பெயர் அடி படுவது பிடிக்காது," என்று மறுத்து விட்டாள்.

'இன்று காலைப் பேப்பரில் நீ தான் தலைப்புச் செய்தி,' என்று சார்லஸ் சொன்னது ஞாபகம் வந்தது.

அவனைப் பற்றிய நினைவுகளை ஒதுக்கித் தள்ளினாள். இப்போதைக்கு மனத்தின் சில கதவுகளை மூடியே வைக்க வேண்டும்.

வேறு சில உளப் பயிற்சிகளையும் செய்தாள். மிக மிக அசாத்தியமான விஷயத்தை மிக மிக அசாத்தியமான நபருக்கு கற்பிப்பது எப்படி? உதாரணமாக -

கத்தோலிக்கர்களுக்கும் பிராடெஸ்டண்டுகளுக்கும் உள்ள வித்தியாசத்தை ஓர் எறும்புக்குக் கற்பிப்பது.

பூமி சூரியனைச் சுற்றுகிறது என்பதை ஒரு வண்டுக்குப் புரிய வைப்பது.

கம்யூனிசத்துக்கும் ஜனநாயகத்துக்கும் உள்ள வேற்று மையை ஒரு பூனைக்கு விளக்குவது.

இப்படியெல்லாம் பயிற்சிகள் செய்தபோதிலும், ஒரே ஒரு விஷயத்தில்தான் அவள் உள்ளம் வேரூன்றியிருந்தது. ஒவ்வொருவராக, ஒவ்வொருவராகத் தன் பகைவர்களை ஒழிப்பது எப்படி என்பதே அது.

இந்தத் தனிமைச் சிறையில் எவ்வளவு கைதிகள் மன மொடிந்து செத்திருக்கிறார்கள் என்று ட்ரேஸிக்குத் தெரியாது. அப்படியே தெரிந்திருந்தாலும் அவளுக்கு அதைப் பற்றிக் கவலையில்லை.

ஏழாவது நாள் கதவு திறக்கப்பட்டது. குபீரென்று பாய்ந்த வெளிச்சம் ட்ரேஸியின் கண்களைக் கூச வைத்தது.

ஒரு காவலாள் வெளியே நின்றிருந்தான். "எழுந்து வா," என்றவன் உள்ளே வந்து அவளுக்கு உதவிக்காகக் கையை நீட்டினான். ட்ரேஸி தானே சரேலென எழுந்து, எந்தத் துணையுமின்றி நடந்து வெளியே செல்வது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. இதே தனிமைச் சிறையிலிருந்து பல கைதிகளை அவன் வெளியேற்றி அழைத்தும் சென்றதுண்டு. அவர்கள் ஒன்று, ஒடிந்து போயிருப்பார்கள். அல்லது எதிர்ப்புத் தெரிவிப்பார்கள். இந்தக் கைதியிடம் இரண்டும் காணப்படவில்லையே! இவளிடம் ஒரு கண்ணியம் தென் பட்டது. ஒரு தன்னம்பிக்கை தெரிந்தது. அதெல்லாம் இந்தச் சிறையில் கேள்விப்பட்டிராத விஷயம்.

ட்ரேஸி வெளியே சென்று நின்றுகொண்டு, கண்களை அந்த வெளிச்சத்துக்குப் பழக்கிக் கொண்டாள்.

'அடேங்கம்மா! எத்தனை அழகான பெண்!' என்று காவலாள் எண்ணிக் கொண்டான். 'கொஞ்சம் குளித்து டிரெஸ் செய்து கொண்டாளானால் ஜம்மென்று எங்கே வேண்டுமானாலும் கூட்டிக்கொண்டு செல்லலாம். சில சலுகைகள் காட்டினால் போதும் மசிந்து விடுவாள்....'

"உன்னைப் போல அழகான பெண் இப்படியெல்லாம் கஷ்டப்படக் கூடாது." என்றான் ட்ரேஸியிடம். "நீயும் நானும் சினேகிதமாக இருப்போம். உனக்கு இந்த மாதிரி கஷ்டம் இன்னொரு தரம் வராமல் நான் பார்த்துக் கொள்வேன்."

ட்ரேஸி அவனை முறைத்துப் பார்த்தாள். அந்தப் பார்வையைக் கண்டதுமே, இந்தப் பேச்சைத் தொடரக் கூடாது என்று அவனுக்குப் புரிந்துவிட்டது. மாடிக்கு அவளை அழைத்துச் சென்று ஒரு காவல்காரியிடம் ஒப்படைத்தான்.

காவல்காரி முகம் சுளித்து, "கடவுளே! என்ன நாற்றம் நாறுகிறாய்! உள்ளே போய்க் குளித்துத் தொலை. உன் அழுக்கு டிரெஸ்களையெல்லாம் கொளுத்திப் போடுகிறேன்." என்றாள்.

குளிர்ந்த நீரில் ஷவர் குளியல் ட்ரேஸிக்கு அற்புதமாயிருந்தது. முடியை நனைத்து, கல்போன்ற சோப்பில் காலோடு தலை அழுந்தத் தேய்த்துக் கொண்டாள்.

துவட்டிக் கொண்டு வேறு உடை அணிந்து கொண்ட போது காவல்காரி அவளுக்காகக் காத்திருந்தாள். "வார்டன் உன்னைப் பார்க்க வேண்டுமாம்," என்றாள்.

ஹூம்! இதே சொற்களை முந்தின தடவை கேட்ட போது, தனக்கு விடுதலை கிடைக்கப் போகிறது என்று நம்பினோமே....

இனி ஒருபோதும் அந்த மாதிரி அசட்டுத்தனமாக நம்ப மாட்டேன்...

**வா**ர்டன் ஜார்ஜின் அறைக்குள் அவள் நுழைந்தபோது ஜன்னலுக்கருகே அவர் நின்றிருந்தார். திரும்பி அவளை நோக்கினார். "உட்காரம்மா, ப்ளீஸ்," என்றார்.

ட்ரேஸி ஒரு நாற்காலியில் உட்கார்ந்தாள்.

"ஒரு மாநாட்டுக்காக நான் வாஷிங்டனுக்குப் போயிருந்தேன். இன்று காலையில் தான் வந்தேன். என்ன நடந்ததென்று ரிப்போர்ட் தந்திருக்கிறார்கள். உன்னைத் தனிமைச் சிறைக்கு அனுப்பியிருக்கக் கூடாது," என்றார்.

அவள் அவரையே பார்த்தவாறு உட்கார்ந்திருந்தாள். உள்ளத்து உணர்ச்சிகளைக் காட்டும்படியாக அவள் முகத்தில் எந்தச் சலனமும் இருக்கவில்லை.

மேஜை மீதிருந்த காகிதத்தை ஒரு முறை பார்த்தார் வார்டன். "உன்னைப் பலாத்காரப் படுத்தியிருக்கிறார்கள் என்று இந்த ரிப்போர்ட் கூறுகிறது."

"இல்லை, சார்," என்றாள் ட்ரேஸி.

புரிந்து கொண்டதற்கு அடையாளமாய் அவர் தலையாட்டினார். "உன் பயம் புரிகிறது. ஆனால் இந்தச் சிறைச்சாலைக்கு நான்தான் நிர்வாகியே தவிர இதைக் கைதிகள் நிர்வாகம் நடத்துவதற்கு விட மாட்டேன். உனக்குத் தீங்கிழைத்தவர்களை நான் தண்டிக்க விரும்புகிறேன். ஆனால் அதற்கு நீ வாக்குமூலம் கொடுக்க வேண்டும். உனக்குப் பாதுகாப்புத் தர ஏற்பாடு செய்கிறேன். உண்மையில் என்ன நடந்ததென்பதையும், யார் அதற்குப் பொறுப்பாளிகள் என்பதையும் உள்ளது உள்ளபடி சொல்லு."

அவர் கண்களை நேருக்கு நேராகச் சந்தித்தாள் ட்ரேஸி. "நான் தான் சார் பொறுப்பாளி. கட்டிலிலிருந்து விழுந்து விட்டதனால் காயம் ஏற்பட்டது."

வார்டனின் முகத்தில் ஏமாற்றம் படருவது ட்ரேஸிக்குத் தெரிந்தது.

"நிச்சயமாய்த்தான் சொல்கிறாயா?"

"ஆமாம் சார்."

"உன் மனம் மாறப் போவதில்லை?"

"மாறாது சார்."

வார்டன் ஜார்ஜ் பெருமூச்சு விட்டார். "நல்லது, உன்னை வேறொரு அறைக்கு அனுப்பி வைக்கிறேன்."

"வேறு அறைக்கு மாற்ற வேண்டாம் சார்."

அவர் மேலும் வியப்புடன் அவளைப் பார்த்தார். "பழைய அறைக்கேயா மறுபடியும் போகிறேன் என்கிறாய்?"

"ஆமாம் சார்."

அவருக்குப் புதிராயிருந்தது.

'ஒருவேளை எல்லா அமளியும் இந்தப் பெண் வரவழைத்துக் கொண்டதுதானோ என்னவோ! இந்தப் பொம்பளைக் கைதிகள் என்ன நினைக்கிறார்கள்; என்ன பண்ணுகிறார்கள் என்பது கடவுளுக்குத்தான் வெளிச்சம். எங்காவது ஆண் கைதிகள் உள்ள சிறைச்சாலைக்கு நம்மைப் பதவி மாற்றினால் நன்றாயிருக்கும்' என்று அவர் நினைத்துக் கொண்டார். ஆனால் அவர் மனைவிக்கும் சரி. அவருடைய குழந்தை சிறுமி ஆமிக்கும் சரி, இந்த இடம் ரொம்பப் பிடித்திருக்கிறது.

எதிரில் உட்கார்ந்திருக்கும் இளம் பெண்ணைத் தர்ம சங்கடத்துடன் நோக்கினார். "சரி, நீ போகலாம். ஆனால் வம்பு எதுவும் வரவழைத்துக் கொள்ளாமல் இரு."

"சரி சார்."

ட்ரேஸி தன் பழைய அறையை அடைந்ததும் ரகசியமாக ஒரு காரியம் செய்தாள்.

## 15

தனது பழைய சிறை அறைக்குள் திரும்பியபோது, அங்கே நேரிட்ட பயங்கர அனுபவங்கள், மண்டையில் அடித்த மாதிரி ட்ரேஸிக்கு நினைவு வந்தன.

மூன்று கைதிகளும் வேலை செய்வதற்காக வெளியே சென்றிருந்தார்கள்.

ட்ரேஸி தன் கட்டிலில் படுத்து, கூரையைப் பார்த்தபடி, அடுத்து நடக்க வேண்டியதைத் திட்டமிட்டாள். பிறகு கட்டிலின் கீழே குனிந்து ஆராய்ந்தாள். கட்டிலின் இரும்புச் சட்டம் ஒன்று லூஸாக இருப்பது தெரிந்தது. அதைக் கழற்றி எடுத்துக் கொண்டு, படுக்கையின் கீழே மறைத்துக் கொண்டாள்.

காலை பதினொரு மணிக்குச் சாப்பாடு மணி அடித்தது. வெராந்தா க்யூவில் முதலில் போய் நின்று கொண்டவள் ட்ரேஸிதான்.

சாப்பாட்டுக் கூடத்தில் பாலிடாவும் லோலாவும் ஒரு மேஜையடியில் இருந்தார்கள். எர்னஸ்டினைக் காணவில்லை.

பழக்கமில்லாத கைதிகள் நிறைந்திருந்த மேஜைக்குப் போய் ட்ரேஸி உட்கார்ந்து கொண்டாள். உணவு சிறிது கூடச் சுவையாக இல்லை. என்றாலும் ஒரு பருக்கை விடாமல் விழுங்கினாள்.

பிற்பகல் பூரா தன் அறையில் தனியாகவே இருந்தாள். இரண்டே முக்கால் மணிக்கு மூன்று பேரும் வந்தார்கள்.

ட்ரேஸியைக் கண்டதும் பாலிடா ஆச்சரியத்துடன் இளித்தாள். "கண்ணாட்டி, எங்களிடமே திரும்பி வந்துட்டியே, பலே, பலே! அன்னைக்கு நடந்தது உனக்குப் பிடிச்சுப் போச்சு இல்லையா?"

"அதே மாதிரி அடிக்கடி உன்னைக் கவனிச்சுக்கிறோம்," என்றாள் லோலா.

அவர்களுடைய பேச்சுத் தன் காதில் விழுந்ததாக ட்ரேஸி காட்டிக் கொள்ளவில்லை. நீக்ரோக்காரி தான் அவளுக்கு இலக்கு. அவள் வரட்டும் என்று காத்திருந்தாள். அவள் இந்தச் சிறைக்கு மறுபடி வந்ததே அந்த நீக்ரோக்காரி எர்னெஸ்டினுக்காகத்தான். ட்ரேஸி அவளை ஒரு நிமிஷம்கூட நம்பத் தயாராயில்லை. ஆனால் அவள் உதவி ட்ரேஸிக்கு தேவைப்பட்டது.

'உனக்கு ஒரு விஷயம் சொல்கிறேன், கேள். எர்னஸ்டின் வைத்ததுதான் இங்கே சட்டம்' என்று மெக்ஸிகோக்காரி சொன்னது அவள் நினைவுகளில் பதிந்திருந்தது.

இரவு சூழ்ந்தது. விளக்குகள் அணைக்கப்படுவதற்குப் பதினைந்து நிமிடம் முன் எச்சரிக்கை மணி அடித்தது. ட்ரேஸி தன் கட்டிலிலிருந்து எழுந்து உடைமாற்றிக் கொண்டாள். இம்முறை அவள் அனாவசியமாய்க் கூச்சப் பட்டுக் கொண்டிராமல் உடைகளைக் களைந்தாள். அவளுடைய உடலின் அழகைக் கண்டு மெக்ஸிகோக்காரி மெல்ல விசிலடித்தாள். லோலா பலமாய்ப் பெருமூச்சு விட்டாள்.

ட்ரேஸி நைட்கவுன் மாட்டிக்கொண்டு கட்டிலில் படுத்தாள். விளக்குகள் அணைந்தன. அறையெங்கும் இருட்டு அப்பிக் கொண்டது.

முப்பது நிமிடம் சென்றது. ட்ரேஸி படுத்தபடியே இருந்தாள், மற்றவர்களின் மூச்சுக் காற்றைச் செவிமடுத்த வண்ணம்.

"கண்ணு, உனக்கு இன்று ராத்திரி குஷி தரப் போகிறேன். நைட்கவுனைக் கழட்டிடு!" என்று இருட்டில் பாலிடா கிசு கிசுவென்று சொல்வது கேட்டது. "உனக்குப் பல விஷயம் சொல்லித் தரப்போகிறோம்!" என்று கூறிவிட்டு லோலா கிளு கிளுவென்று சிரித்தாள்.

ஆனால் நீக்ரோக்காரியிடமிருந்து ஒரு வார்த்தைகூட வரவில்லை.

காற்றின் அசைவிலிருந்து பாலிடாவும் லோலாவும் தன்னை நெருங்கி வருவதை உணர்ந்தாள் ட்ரேஸி. அவர்களுக்காகத் தயாராய்க் காத்திருந்தாள். மறைவாய் வைத்திருந்த இரும்புச் சட்டத்தை எடுத்தாள்.

தன் பலமனைத்தையும் பிரயோகித்து, சத்தம் வந்த திசையில் ஒரு வீச்சு வீசினாள். இரண்டு பெண்களில் ஒருத்தியின் முகத்தை அது தாக்கியது. வலி தாங்க மாட்டாமல் அவள் கூச்சலிட்ட சமயம், ட்ரேஸி இன்னொருத்தியைக் காலால் எட்டி உதைத்தாள். அவள் தலைகுப்புறத் தரையில் விழுவது இருட்டில் தெரிந்தது.

"இன்னொரு தரம் கிட்ட வந்தாயோ கொலைதான்!" என்றாள் ட்ரேஸி.

"ஏய், தேவடியா!"

மீண்டும் தன்னை நோக்கி அவர்கள் வருவது தெரிந்தது. இரும்புச் சட்டத்தை உயர்த்திப் பிடித்துக் கொண்டாள்.

நீக்ரோக்காரி எர்னெஸ்டின் குரல் திடீரென்று கேட்டது. "ஏய், போதும். அவளிடம் போக வேண்டாம்."

*"எர்னி, எனக்கு ரத்தம் கொட்டுது. அவளுக்குப் பாடம் கற்பிக்காமல் விட மாட்டேன்."*

*"மூடு வாயை! சொன்னதைக் கேள்."*

*நீண்ட நேரத்துக்கு நிசப்தம் நிலவியது. பிறகு இரண்டு பெண்களும் பெருமூச்சு விட்டவாறு தங்கள் கட்டில் களுக்குத் திரும்பிச் செல்லும் ஓசை கேட்டது.*

*ட்ரேஸி தன் கட்டிலில் படுத்தாள். ஆனால் அடுத்து என்ன நேரப் போகிறதோ என்ற எதிர்பார்ப்பில் அவள் உடல் விறைத்திருந்தது.*

*எர்னஸ்டின் சொன்னாள்: "கண்ணு, உனக்கு ரொம்ப தில்தான்."*

*ட்ரேஸி மௌனமாக இருந்தாள்.*

*"வார்டனிடம் நீ எங்களைக் காட்டிக் கொடுக்க வில்லை." இருட்டில் நீக்ரோக்காரியின் மெல்லிய சிரிப்பொலி கேட்டது. "நீ மட்டும் காட்டிக் கொடுத்திருந் தால் இந்நேரம் செத்திருப்பாய்."*

*அவள் சொன்னது உண்மை தான் என்று ட்ரேஸி எண்ணிக் கொண்டாள்.*

*"உன்னை வேறு அறைக்கு மாற்றுகிறேன் என்று வார்டன் சொன்னாராமே? ஏன் வேண்டாமென்றாய்?"*

*இவளுக்கு எல்லாம் தெரிந்திருக்கிறதே! ட்ரேஸி தன் வியப்பைக் காட்டிக் கொள்ளாமல், "இங்கே தான் திரும்பி வர வேண்டுமென்று விரும்பினேன்," என்றாள்.*

*"அப்படியா? எதற்காக?" என்று வினவியபோது நீக்ரோக்காரியின் குரலில் திகைப்புத் தென்பட்டது.*

*இந்தக் கேள்விக்காகத்தான் ட்ரேஸி காத்திருந்தாள்.*

*"நான் இங்கிருந்து தப்ப வேண்டும். அதற்கு உன் உதவி தேவை," என்றாள்.*

இரண்டு நாள் சென்றது. ஒரு காவல்காரி வந்தாள் "ட்ரேஸி, உன்னைப் பார்க்க ஒருவர் வந்திருக்கிறார்."

வியப்புடன் அவளை நிமிர்ந்து நோக்கினாள் ட்ரேஸி. "என்னைப் பார்க்கவா?"

'யாராக இருக்கும்?'

சட்டென்று தோன்றியது. ஒருவேளை சார்லஸோ?

ஆகக்கூடி வந்தே விட்டாரா? ஆனால் காலம் கடந்து விட்டது. வரமாட்டாரா வரமாட்டாரா என்று தவித்துக் கொண்டிருந்த சமயத்தில் வரவில்லை. இப்போது அவர் உதவி தேவையில்லை. எவர் உதவியும் தேவையில்லை.

காவல்காரியைப் பின்தொடர்ந்து பார்வையாளர்களின் அறைக்குச் சென்றாள்.

சார்லஸ் அல்ல.

முற்றிலும் அன்னியமான ஒருவன். சிறிய மர மேஜையின ருகே உட்கார்ந்திருந்தான். அப்படியொரு மனிதனை ட்ரேஸி பார்த்ததே கிடையாது. குள்ளமான, குண்டான தோற்றம். நெற்றி புடைத்திருந்தது. கசப்பை வெளிப்படுத்தும் சிறிய வாய். சோடாப் புட்டிக் கண்ணாடி.

ட்ரேஸியைக் கண்டதும் அவன் எழுந்திருக்கவில்லை. "என் பெயர் டேவிட் கூப்பர். உன்னிடம் பேசுவதற்கு வார்டன் அனுமதி தந்திருக்கிறார்," என்றான்.

"எதைப் பற்றி?" - ட்ரேஸி சந்தேகக் குரலில் வினவினாள்.

"இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்காகத் துப்பறிகிறவன் நான். ரொமானோவின் வீட்டில் திருட்டுப்போன ரெனாயிர் ஓவியத்தை எங்கள் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியிடம் ரொமானோ இன்ஷ்யூர் செய்திருந்தான். அதைப் பற்றி..."

ட்ரேஸியிடமிருந்து ஒரு நெடு மூச்சு வெளிப்பட்டது. "நான் உங்களுக்கு உதவி செய்வதற்கில்லை. அதை நான் திருடவில்லை." சொல்லி விட்டு வாசலை நோக்கித் திரும்பினாள்.

கூப்பரின் அடுத்த வார்த்தை அவளை நிற்க வைத்தது.

"நீ அதைத் திருடவில்லை என்று எனக்குத் தெரியும்." என்றான் அவன்.

ட்ரேஸி திரும்பி அவனைப் பார்த்தாள். அவளுடைய உணர்வுகள் குத்திட்டு நின்றன.

"அந்த ஓவியத்தை யாருமே திருடவில்லை. உன்னை வேண்டுமென்றே சிக்க வைத்திருக்கிறார்," என்றான் அவன்.

ட்ரேஸி மெல்ல நாற்காலியில் உட்கார்ந்தாள்.

**கூ**ப்பர் ஒரு வினோதமான பிறவி, யாருடனும் பேச மாட்டான். அலுவலகத்தில் பார்ட்டிகளிலோ மீட்டிங்கு களிலோ கலந்து கொள்ள மாட்டான். அவனுக்கு மனைவி இருக்கிறாளா, குழந்தை இருக்கிறதா, குடும்பம் இருக்கிறதா என்று எவருக்கும் தெரியாது. அவனுக்குள் ஏதோ ஒரு ரகசியம் புதைந்திருந்தது. அது வெளிப்பட்டு விடுமோ என்று எப்போதும் பயந்தவன் போல் இருந்தான். ஒரு பழுப்பேறிய செய்தித் தாள் துண்டு அவனிடம் எப்போதும் இருக்கும். யாருக்கும் தெரியாமல் அதை அடிக்கடி எடுத்துப் பார்த்துக்கொள்வான்.

அவனுடைய மேலதிகாரிகளுக்குக்கூட அவனைப் பிடிக்காது. ஆனால் அவன் ஒரு மேதை. கம்ப்யூட்டர் மூளை. பல இன்ஷ்யூரன்ஸ் மோசடிகளையும் திருட்டுக்களையும் தன்னந்தனியாக அவன் கண்டுபிடித்திருக்கிறான். அதனால் அவனிடம் எல்லோருக்குமே ஒரு மதிப்பு; பயம்.

ரொமானோ வீட்டு ஓவியத் திருட்டைப் பற்றி விசாரிக்கும் பொறுப்பை மூன்று வாரங்களுக்கு முன் அவனிடம் ஒப்படைத்திருந்தார்கள்.

நியூ ஆர்லியன்ஸுக்கு வந்தவன், ட்ரேஸியின் அம்மா தற்கொலை செய்துகொண்டது முதல், ரொமானோவின் வீட்டில் ட்ரேஸி அகப்பட்டுக் கொண்டதுவரை சகலத்தையும் விசாரித்து அறிந்தான். ட்ரேஸி குற்றமற்றவள் என்பது தொண்ணூறு சதவிகிதம் நிச்சயமாகி விட்டது.

இப்போது எதிரில் உட்கார்ந்திருக்கும் ட்ரேஸியைப் பார்த்தபோது நூறு சதவிகிதம் உறுதியாகிவிட்டது. ஓவியத் திருட்டுக்கும் இவளுக்கும் எந்தச் சம்பந்தமும் இருக்க முடியாது...

"ரொமானோ உன்னைச் சிக்க வைத்திருக்கிறான், ட்ரேஸி," என்றான். "ஓவியம் திருட்டுப் போய் விட்டதென்று சொல்லி அதற்கான இன்ஷ்யூரன்ஸ் தொகையை அவன் கைப்பற்ற எண்ணியிருந்தான். அந்தச் சமயம். நீ போய் மாட்டிக் கொண்டாய். அவனுக்கு ரொம்ப வசதியாகி விட்டது."

ட்ரேஸியின் இதயம் படபடத்தது. நாம் நிரபராதி என்று இவருக்குத் தெரிந்திருக்கிறது. அப்படியானால்... அப்படியானால்...

ரொமானோவுக்கு எதிராக நிறையச் சாட்சியங்கள் இவர் திரட்டி வைத்திருப்பார். அவற்றைக் கொண்டு நம்மை விடுவிப்பார். வார்டனிடமோ அல்லது அவருக்கும் மேலேயுள்ள அதிகாரியிடமோ நமக்காக பரிந்து பேசுவார்... இந்தப் பயங்கரச் சிறையிலிருந்து விடுதலை வாங்கித தருவாரா...

பதைப்பில் மூச்சு நின்று விடும் போல இருந்தது. "அப்படியானால் நீங்கள் எனக்கு உதவுவீர்கள் இல்லையா?"

கூப்பர் திகைத்தான். "உதவுவதா?"

"ஆமாம். எனக்கு மன்னிப்பு வாங்கிக் கொடுத்து..."

"முடியாது."

முகத்தில் அறைந்த மாதிரி இருந்தது அவன் பதில்.

"முடியாதா? ஏன்? ஏன் முடியாது? நான் குற்றமற்றவள் என்று உங்களுக்குத் தெரியும் போது..."

'இவ்வளவு அசடாகக் கூடச் சில பேர் இருக்கிறார்களே!' என்று அவன் எண்ணிக் கொண்டு சொன்னான்:

"என் ஆபீசில் எனக்குக் கொடுத்திருந்த வேலை முடிந்துவிட்டது. மற்றபடி உனக்காக வழக்காட வேண்டியது என் ஜோலியல்ல."

ட்ரேஸி அதிர்ச்சியில் உறைந்து போனாள்.

## 16

ட்ரேஸி இருந்த சிறைப் பகுதிக்குப் பொறுப்பான பெண் அதிகாரியின் பெயர் குண்டு பெர்த்தா. அவள் ட்ரேஸியைச் சலவைப் பிரிவுக்கு வேலை செய்யும்படி மாற்றினாள்.

அது முதுகை ஒடிக்கும் வேலை. பிரம்மாண்டமான லாண்டிரி அறையில் வரிசை வரிசையாக வாஷிங் மெஷின்கள் இருந்தன. மலை மலையாய் அழுக்குத் துணிகள் ஓயாமல் குவிந்து கொண்டே இருந்தன. சலவை முடிந்ததும் பெரிய பெரிய வாளிகளில் துணிகளைப் போட்டு, பெட்டி போடும் இடத்துக்குத் தூக்க முடியாமல் தூக்கிச் செல்ல வேண்டும்.

காலை ஆறு மணிக்கு வேலை ஆரம்பித்தால் ஒன்பது மணி நேரத்துக்கு இடுப்பு முறிய ட்யூட்டி.

வேலை முடிகையில் கைதிகள் சோர்ந்து உட்கார்ந்து விடுவார்கள். ஆனால் ட்ரேஸி தன் களைப்பை வெளிக் காட்டிக் கொள்ளாமல் வேலை செய்தாள். யாருடனும் பேசுவதில்லை. தன் சிந்தனைகளிலேயே முழுகியவளாக யந்திரம் போல் வேலை பார்த்தாள்.

லாண்டிரிப் பிரிவுக்கு அவளை அனுப்பியிருப்பதை அறிந்ததும் நீக்ரோக்காரி. "உன்னை வேண்டுமென்றே குண்டு பெர்த்தா கொடுமைப்படுத்துகிறாள். உன்மீது அவளுக்கு ஒரு கண்," என்றாள்.

"அவளைப் பற்றி எனக்குக் கவலையில்லை," என்றாள் ட்ரேஸி.

அவள் பேச்சும் போக்கும் நீக்ரோக்காரி எர்னெஸ்டி னுக்குப் புதிராயிருந்தது. மூன்று வாரங்களுக்கு முன் பயந்து நடுங்கிக் கொண்டு இந்தச் சிறைக்கு வந்த அதே சின்னப் பெண்ணா இவள்! எவ்வளவு மாறி விட்டாள்! இம் மாற்றத்தை ஏற்படுத்தியது எது?

நீக்ரோக்காரிக்கு ஆச்சரியமாயிருந்தது.

சலவைப் பிரிவுக்குப் போன எட்டாம் நாள் ஒரு காவலாள் ட்ரேஸியிடம் வந்து, "உன்னைச் சமையலறைக்கு மாற்றியிருக்கிறார்கள்." என்று தெரிவித்தான்.

ட்ரேஸியின் ஆச்சரியத்துக்கு அளவில்லை. காரணம்-

ஒவ்வொரு கைதியும் வேலை செய்ய மிகவும் ஆசைப் படும் இடம் சமையலறைதான். அங்கே கைதிகளுக்காக மட்டமான உணவு வகைகளும், சிறை அதிகாரிகள், ஊழியர் களுக்காக உயர்ந்த ரக உணவுகளும் தயாரிக்கப்படும். அங்கு வேலை செய்யும் கைதிகள் தங்கள் இஷ்டத்துக்கு உணவு எடுத்துச் சாப்பிட முடியும்.

அப்படிப்பட்ட இடத்துக்குத் தன்னை மாற்றியிருக் கிறார்கள் என்றால், அது நீக்ரோக்காரியின் உதவியாகத்தான் இருக்கும் என்று ட்ரேஸிக்கு நிச்சயமாகத் தெரிந்தது.

அவள் எண்ணத்தை ஊர்ஜிதப் படுத்துகிற மாதிரி சமையலறையில் எர்னெஸ்டின் இருந்தாள்.

அவளை நெருங்கி, "ரொம்ப நன்றி," என்றாள் ட்ரேஸி, குரலில் சினேக பாவத்தை வரவழைத்துக் கொண்டு.

ஊம் ஊம் என்றதைத் தவிர நீக்ரோக்காரி எந்தப் பதிலும் சொல்லவில்லை.

"எப்படிக் குண்டு பெர்த்தாவிடமிருந்து என்னை விடுவித்தாய்?" என்று ட்ரேஸி மறுபடி கேட்டாள்.

"அவள் இப்போது நம் பகுதிக்கு அதிகாரி அல்ல. ஒழிந்து விட்டாள்."

ட்ரேஸி ஆவலுடன் கேட்டாள். "எப்படி?"

"அதற்கென்று சில வழிகள் இருக்கிறது," என்று நிக்ரோக்காரி இளித்தபடி கூறினாள். "ஒரு காவல் அதிகாரியை ஒழிக்க வேண்டுமென்றால், ஒவ்வொரு கைதி ஒவ்வொரு நாள் ஒவ்வொரு விதமாகப் புகார் செய்வாள். அவள் தன்னிடம் தப்பாக நடந்து கொண்டாள் என்று ஒருத்தி சொல்வாள். இன்னொரு நாள் இன்னொருத்தி அவள் தன்னை அடித்ததாகப் புகார் செய்வாள். இன்னொருத்தி தன் அறையில் இருந்த ரேடியோவை அவள் திருடிவிட்டதாகக் குற்றம் சாட்டுவாள். அதிகாரியின் அறையில் சோதனை போட்டால் அங்கே அது இருக்கும்! இப்படியே புகார் மேல் புகார் வந்தால் அந்த அதிகாரியை வேறு இடத்துக்கு மாற்றி விடுவார்கள். அதுதான் சொல்கிறேனே, இந்தச் சிறைச் சாலையை நிர்வாகம் செய்வது நாங்கள் தான். அதிகாரிகள் அல்ல."

"நீ ஏன் சிறைக்கு வந்தாய்?" என்று ட்ரேஸி கேட்டாள். நீக்ரோக்காரியின் கதையைக் கேட்க அவளுக்கு ஒன்றும் ஆர்வம் கிடையாது. இவளுடன் ஒரு நட்புறவு ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதற்காகவே கேட்டாள்.

"நான் சில பெண்களை வைத்து ஒரு தொழில் நடத்தினேன்..."

"அதாவது-"

"விபசாரத் தொழில் என்று நினைக்கிறாயா? இல்லை." நீக்ரோக்காரி சிரித்தாள். "பல பெண்களை வைத்து வேலைக்கு ஆள் அனுப்பும் ஏஜென்ஸி ஒன்று நடத்தினேன். பேப்பர்களில் கவர்ச்சியாக விளம்பரம் செய்வேன் வீட்டு வேலைகளுக்குப் பெண்கள் அனுப்புவதாக. பணக்காரர்கள் அவர்களை அமர்த்திக் கொள்வார்கள். வீட்டுக்காரர் வெளியே போயிருக்கும் சமயம் இந்தப் பெண்கள் அகப் பட்டதைச் சுருட்டிக் கொண்டு கம்பி நீட்டி விடுவாரகள். திருட்டுப் பொருள் என்னிடம் வரும். விற்று விடுவேன்." நீக்ரோக்காரி பெருமூச்சு விட்டாள். "ஹூம்! எக்கச்சக்கமாய் எப்படிப் பணம் குவிந்தது தெரியுமா?"

"எப்படிப் பிடிபட்டாய்?"

"எல்லாம் விதியம்மா, விதி! ஒரு மேயரின் வீட்டில் என் ஆள் வேலை செய்து கொண்டிருந்தாள். அங்கே நடந்த விருந்துக்கு, அவள் ஏற்கெனவே வேலை செய்த ஒரு வீட்டு அம்மாள் வந்திருந்தாள். இவளை அடையாளம் கண்டு கொண்டு போலீசுக்குச் சொல்லிவிட்டாள். போலீஸ் அவளை அடித்த அடியில் என்னைப் பற்றிய எல்லா விவரங்களையும் கக்கி விட்டாள். அநியாயமாய் நான் மாட்டிக் கொண்டு இங்கே வரும்படி ஆகிவிட்டது."

நீக்ரோக்காரி சரளமாகப் பேசுவதைக் கண்டதும், தன் விஷயத்தைச் சொல்ல இதுதான் தருணம் என்று ட்ரேஸிக்குத் தோன்றியது. "இந்தச் சிறையில் இருக்க எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. வெளியே நான் சில காரியங்களைச் செய்தாக வேண்டியிருக்கிறது. நான் தப்பிச் செல்ல வேண்டும். நீ உதவி செய்வாயா?"

"அங்கே பார், ஏராளமாய் வெங்காயம். போய் உரிக்க ஆரம்பி. ராத்திரி சமையலுக்கு வேண்டும்."

சிறிதும் பிடி கொடுக்காமல் நீக்ரோக்காரி போய் விட்டாள்.

**நா**ட்கள் ஓடிக் கொண்டிருந்தன.

சிறையில் என்னென்ன அக்கரமங்கள், ஒழுக்கக் கேடுகள் நடைபெறுகின்றன என்பது ட்ரேஸிக்குப் புரியத் தொடங்கின.

புதுப் பெண் கைதிகள் சிறைக்கு வந்தால் அன்றிரவு-

"விடு, என்னை! விடு!" என்று பயங்கரக் கூச்சல்கள் கேட்கும்.

ட்ரேஸிக்கு வயிற்றைப் பிசையும். காதைப் பொத்திக் கொள்வாள்.

சிறிது சிறிதாகக் கூச்சல் அடங்கி, தீனமான விம்மல்கள் பொங்கிப் பொங்கி வரும். பிறகு அதுவும் அடங்கி விடும்.

*உள்ளத்துக்குள் கொதிக்கும் சீற்றத்தை அடக்க முடியாமல், கண்களை இறுக்கிப் பொத்திக் கொண்டு கிடப்பாள் ட்ரேஸி. எப்படித்தான் பெண்ணுக்குப் பெண்ணே அக்கிரமம் செய்ய முடிகிறதோ?*

*சிறை வாழ்க்கை தன் மனத்தைக் கல்லாக்கி விட்டதாக எண்ணியிருந்தாள் ட்ரேஸி. ஆனால் காலையில் கண் விழிக்கும்போது முந்தின இரவு அழுது வடித்த கண்ணீர் கன்னங்களில் காய்ந்திருப்பதை உணர்ந்து ஆச்சரியப் படுவாள்.*

*சிறைச்சாலைக்கு என்று சில சட்டதிட்டங்களும் கட்டுப்பாடுகளும் இருந்தன. ஆனால் எதுவும் ஒழுங்காகக் கடைப்பிடிக்கப்படுவதில்லை என்பது ட்ரேஸிக்குக் கொஞ்ச நாளில் புரிந்தது.*

*ஆனால் அவளைப் பொறுத்தமட்டில் ஒரு லட்சியக் கைதியாகவே விளங்கினாள் சிறைச்சாலையின் கட்டுப் பாடுகளுக்கு அவள் உடல் வளைந்து கொடுத்தது. மணி யடிக்கும் ஒவ்வொரு முறையும் முதலில் அவள் தான் நின்றாள்.*

*அவள் உடல் மட்டுமே அங்கு சிறைப்பட்டிருந்தது. உள்ளமோ, அங்கிருந்து தப்புவது எப்படி என்பதைப் பற்றியே திட்டமிட்டுக் கொண்டிருந்தது.*

*நீக்ரோக்காரி அவளை எச்சரித்தாள். "வெளியுலகத்தை நீ மறந்து விடுவது நல்லது ட்ரேஸி. வெளியே யாருமில்லை உனக்கு."*

*'நீ சொல்வது தப்பு' என்று ட்ரேஸி எண்ணிக் கொண்டாள்.*

*ரொமானோ*

*போப்*

*நீதிபதி லாரன்ஸ்*

*ஆர்ஸட்டி, சார்லஸ்..*

ஒரு நாள் உடற்பயிற்சிகள் செய்யும் மைதானத்தில் குண்டு பெர்த்தாவை ட்ரேஸி சந்திக்க நேரிட்டது.

நீண்ட சதுரமான மைதானம் அது. ஒரு பக்கம் உயரமான மதில் சுவர்கள் மறுபக்கம் சிறைச்சாலையின் நெடிய சுவர்கள்.

ஒவ்வொரு நாளும் காலையில் அரை மணி நேரம் கைதிகள் அங்கே உடற்பயிற்சிகள் செய்வார்கள். கைதிகள் பேசிக்கொள்ள இங்கே அனுமதி உண்டு. ஒருவருக்கொருவர் தங்கள் அனுபவங்களைப் பரிமாறிக் கொள்வார்கள். அரட்டை அடிப்பார்கள்.

"உன்னைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன்," என்று பின்னாலிருந்து குரல் கேட்டதும் திரும்பினாள்.

குண்டு பெர்த்தா இளித்தபடி, "இப்பவெல்லாம் நீ நீக்ரோக்காரியின் பெண்டாட்டியாக இருக்கிறாயாமே?" என்றாள்.

பதிலேதும் சொல்லாமல் அவளைத் தாண்டிக் கொண்டு செல்ல முயன்றாள். ஆனால் அவளை இறுகப் பிடித்துத் தடுத்தாள் குண்டு பெர்த்தா. என்ன இரும்புப் பிடி!

"விடு! விடு என்னை!" என்று கூவினாள் ட்ரேஸி.

"உன்னை அடித்து உதைத்தால் தான் வழிக்கு வருவாய்!" என்று மேலும் அழுத்தினாள் குண்டு பெர்த்தா.

திடீரென்று ஒரு குரல் அவளுக்குப் பின்னாலிருந்த கேட்டது. "ஏய்! எடு கையை! அவள் மேல் கையை வைத்தாயோ தெரியும் சேதி!"

நீக்ரோக்காரி எர்னஸ்டின் தான் அங்கே நின்றிருந்தாள். அவளது இரண்டு முஷ்டியும் இறுகியிருந்தன, குத்துச் சண்டைக்குத் தயாரான மாதிரி. வெய்யில் பட்டு அவளுடைய மொட்டை மண்டை பளபளத்தது.

"எர்னி, இவளுக்குத் தகுந்தவள் நான்தான் நீ இல்லை," என்றாள் குண்டு பெர்த்தா.

"உனக்குச் சரியானவள் நான்தான்!" என்று சீறினாள் நீக்ரோக்காரி. "இன்னொரு தரம் இவளிடம் வாலாட்டினால் உன்னைக் கண்ட துண்டமாக வெட்டி எண்ணெயில் வறுத்து விடுவேன். ஜாக்கிரதை!"

பச்சைப் புல்லைப் போட்டால் பற்றிக்கொள்ளும் போல சூழ்நிலை!

பின்வாங்கியவள் குண்டு பெர்த்தாதான். நீக்ரோக் காரியை வெறுப்புடன் பார்த்துவிட்டு , ட்ரேஸியை நோக்கிச் சிரித்தாள். "எனக்கு ஒன்றும் அவசரமில்லை. நீயும் ரொம்பக் காலத்துக்கு இங்கே இருக்கப் போகிறாய். நானும் ரொம்ப காலத்துக்கு இருக்கப் போகிறேன். பார்த்துக் கொள்ளலாம்."

சொல்லிவிட்டுத் திரும்பிச் சென்றாள்.

அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்த நீக்ரோக்காரி சொன்னாள்: "இவள் ஒரு சரியான ராட்சசி. சிகாகோ ஆஸ்பத்திரியில் நர்ஸாக இருந்தவள். அங்கே பல நோயாளிகளுக்கு விஷம் கொடுத்து, அவர்கள் மெல்ல மெல்லச் சாவதைப் பார்த்து ரசித்தவள்! உன்னை அவள் லேசில் விட மாட்டாள்!"

"நான் இங்கிருந்து தப்புவதற்கு உதவி செய்வாயா?" என்று மறுபடியும் கேட்டாள் ட்ரேஸி.

நீக்ரோக்காரியிடமிருந்து இந்த முறையும் பதில் கிடைக்கவில்லை.

அடுத்த நாளே நீக்ரோக்காரிக்கும் குண்டு பெர்த்தா வுக்கும் பெரிய மோதல் ஏற்பட்டது.

எல்லாக் கைதிகளும் பந்து விளையாடிக் கொண்டிருந்த சமயம் -

குண்டு பெர்த்தா அடித்த பந்து ட்ரேஸியின் மீது போய் விழ, அதுதான் சாக்கு என்று குண்டு பெர்த்தா ட்ரேஸியைப் பிடித்துக் கீழே தள்ளினாள். அவளைத் தரையில் அழுத்தி, "என்னை ஏமாற்றலாமென்று பார்க்காதே! உன்னை நான் விடப் போவதில்லை!" என்று கிசுகிசுத்தாள்.

ட்ரேஸி பயங்கரமாகப் போராடினாள் அவளிடமிருந்து விடுபட. திடீரென்று குண்டு பெர்த்தாவை யாரோ தூக்குவது தெரிந்தது.

நீக்ரோக்காரிதான்!

குண்டு பெர்த்தாவின் கவுனைப் பிடித்துப் பின்னால் இழுத்து நிறுத்தி, "ஏய் தேவடியா! ட்ரேஸியிடம் வம்புக்குப் போகாதே என்று எச்சரித்தேனா இல்லையா?" என்றவாறே தன் கூரிய நகங்களால் அவள் முகத்தைக் கிழித்தாள்.

"கண் போச்சு! என் கண் போச்சு!" என்று அலறினாள் குண்டு பெர்த்தா.

## 17

குண்டு பெர்த்தாவின் அலறலை லட்சியம் செய்யாமல் அவள் இடுப்பைக் கெட்டியாய்ப் பற்றி வெளியே இழுத்துப் போட்டாள் நீக்ரோக்காரி எர்னஸ்டின். ஒருவரையொருவர் குத்திக் கொண்டு பேராடினார்கள். நகத்தால் பிராண்டிக் கொண்டார்கள்.

கூச்சலைக் கேட்டு நாலு காவலர்கள் ஓடிவந்தார்கள். ஐந்து நிமிடம் பாடுபட்டு, குண்டு பெர்த்தாவையும் நீக்ரோக்காரியையும் பிரித்துத் தள்ளினார்கள். இருவரையும் மேல் அதிகாரியிடம் இழுத்துக் கொண்டு சென்றார்கள்.

அன்றிரவு வெகு நேரம் கழித்துத்தான் நீக்ரோக்காரி அறைக்குத் திரும்பினாள். லோலாவும் பாலிடாவும் அவள் படுக்கைக்குச் சென்று ஆறுதல் சொன்னார்கள்.

ட்ரேஸியும் அவளை மெதுவே நெருங்கி, "நீ... உனக்கு ஒன்றுமில்லையே," என்று விசாரித்தாள்.

"ஒன்றுமில்லை," என்று நீக்ரோக்காரி பதிலளித்தாள். ஆனால் அவள் தொண்டை கம்மியிருந்தது. பாவம், எவ்வளவு காயம் ஏற்பட்டதோ என்று ட்ரேஸி எண்ணிக் கொண்டாள்.

நெஞ்சில் ஏற்பட்ட நெகிழ்ச்சியுடன், "எர்னி, தொடர்ந்து என்னைக் காப்பாற்றிக் கொண்டு வருகிறாய். ஏன்?" என்றாள்.

"அதைப் பற்றி என்ன இப்போ?" என்றவாறு தோள்களைக் குலுக்கிக் கொண்டாள் நீக்ரோக்காரி.

"வந்து... நிஜமாகவே தெரிந்து கொள்ளத்தான் கேட்கிறேன்."

எர்னெஸ்டின் ஒரு நிமிடம் யோசனை செய்துவிட்டுச் சொன்னாள். "என்னிடம் எதெல்லாம் இல்லையோ அதெல்லாம் உன்னிடம் இருக்கிறது," என்றவள் ட்ரேஸியின் முகத்தைக் கவனித்துவிட்டு, "உன்னிடம் ஒரு பெரிய மனுஷத்தனம், ஒரு தரம் இருக்கிறது. உயர்ந்த ரகப் பத்திரிகைகளில் அட்டைப் படம் போடுவார்களே, அலங்காரமான மேட்டுக்குடி பெண்கள், அவர்களைப் போல நீ இருக்கிறாய். அவர்களுடைய உலகத்தில் இருக்க வேண்டியவள் நீ. அயோக்கியக் கழிசடை நாய்களுடன் நீ எப்படிச் சேர்ந்தாய் என்று எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. உன்னைச் சூழ்ச்சி செய்து மாட்ட வைத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். என் வாழ்க்கையில் உயர்வான, மேலான, நாகரிகமான பெண்களை நான் சந்தித்ததே கிடையாது. அதனால் உன்னிடம் எனக்குப் பிரியம் ஏற்படுகிறது." என்றாள். அடுத்த சொற்கள் மிகத் தாழ்ந்த குரலில் வெளிப் பட்டன. "ட்ரேஸி, உன் குழந்தை இறந்து போனதைப் பற்றி எனக்கு ரொம்ப வருத்தம் தான். நிஜமாகவே ரொம்ப வருத்தப்படுகிறேன்."

ட்ரேஸி பதிலேதும் பேசாமல் மௌனமாக இருந்தாள்.

நீக்ரோக்காரி மெதுவே சொன்னாள்: "என்னை இங்கிருந்து விரைவில் மாற்றிவிடுவார்கள். பிறகு உனக்குப் பிரசினைதான். குண்டு பெர்த்தா உன்னை லேசில் விட மாட்டாள். ஒரு நாள் உன்னைக் கொலையே செய்து விடக் கூடும்."

இருட்டில் இருவரும் வெகு நேரத்துக்கு மௌனமாகப் படுத்துக் கொண்டிருந்தார்கள். இறுதியில் நீக்ரோக்காரி

மெதுவே சொன்னாள். "ட்ரேஸி, இங்கிருந்து தப்பிச் செல்ல வேண்டும் என்று நீ அடிக்கடி சொல்வாயே, அதைப் பற்றித் திட்டமிட வேண்டிய சமயம் வந்துவிட்டது என்று நினைக்கிறேன்."

ட்ரேஸியின் உள்ளம் பட படத்தது.

ஒவ்வொரு நாளும் கைதிகள் பகல் உணவுக்குப் பிறகு, பொழுது போக்கு அறைக்குச் செல்ல அனுமதிக்கப் படு வார்கள். அங்குள்ள பத்திரிகைகளைப் படிக்கலாம். டி.வி. பார்க்கலாம்.

ஒருநாள் அந்த அறையில் பத்திரிகைகளைப் புரட்டிக் கொண்டிருந்தாள் ட்ரேஸி.

ஒரு புகைப்படம் அவள் கவனத்தை இழுத்தது.

திருமணப் புகைப்படம்.

சார்லஸும் அவனுடைய புது மனைவியும் கைகோத்துக் கொண்டு சர்ச்சிலிருந்து வெளிவருவதைக் காட்டியது.

மடேலென்று அடித்துத் தள்ளிய மாதிரி இருந்தது ட்ரேஸிக்கு.

சார்லஸின் படத்தை, அவன் முகத்தில் பரவியுள்ள மகிழ்ச்சியைக் காணக் காண அவள் உள்ளத்தில் சுரீலென வலி ஏற்பட்டது. பிறகு அது மெல்ல மெல்லக் கடும் சீற்றமாக மாறியது.

இந்த ஆளிடம் போய் நம் வாழ்க்கையை ஒப்படைக்க ஒரு காலத்தில் நினைத்தேனே! இவன் என்னைக் கை விட்டான். என் வாழ்க்கையை அழித்தான்... என் குழந்தை யைச் சாக அடித்தான்.

எல்லாம் நடந்து முடிந்து விட்டது. அது வேறு ஏதோ ஒரு உலகம். வேறு ஏதோ ஒரு காலம். அதெல்லாம் வெறும் கற்பனைகள்.

இப்போது இருப்பதுதான் பிரத்தியட்சமான உலகம். இதுதான் யதார்த்தமானது.

**வா**ர்டன் ஜார்ஜ் தன் மனைவியிடம் சொல்லிக் கொண்டிருந்தார். "நம் குழந்தையின் ஆயா நாளையிலிருந்து வேலைக்கு வர மாட்டாள்."

வார்டன் மனைவி ஸ்யூவுக்கு ஆச்சரியம். "ஏன்? ஆமியிடம் அவள் ரொம்பப் பிரியமாயிருக்கிறாளே?"

"தெரியும். ஆனால் அந்த ஆயாவின் தண்டனைக் காலம் முடிந்து விட்டது. அவள் விடுதலையாகிப் போகிறாள்."

வார்டனின் வசதியான சிறிய வீட்டில், சாப்பாட்டு அறையில் அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். அரசாங்கம் அவருக்குப் பல சலுகைகள் அளித்திருந்தன. சமையல்காரி, வேலைக்காரி, கார் டிரைவர், குழந்தையைப் பார்த்துக் கொள்ள ஆயா இப்படிப் பலர் உண்டு. வார்டனின் மனைவி ஸ்யூ இங்கே வந்த புதிதில் மிகவும் பயந்து கொண்டிருந்தாள். ஏனெனில் வேலையாட்கள் என்று பெயரே தவிர அவ்வளவு பேரும் கைதிகள் தான். குழந்தையைத் துன்புறுத்துவார்களோ, கொலை செய்வார்களோ என்றெல்லாம் நடுங்கினாள்.

ஆனால் அதற்கு ஆதாரமே இருக்கவில்லை. வேலைக்கு வந்த கைதிகள் நல்லபடி வேலை செய்து, நல்ல பெயர் வாங்கிக் கொண்டு, தங்கள் தண்டனைக் காலத்தைக் குறைத்துக் கொள்ளத்தான் முயற்சி செய்தார்களே தவிர, தப்புத் தண்டாவுக்குப் போகவில்லை.

குழந்தை ஆமிக்கு இப்போது ஐந்து வயதாகிறது. இதுவரை அவளை நன்றாகவே கவனித்துக்கொண்டு வந்தாள் பழைய ஆயா. அவள் போய் விட்டால் அடுத்தாற்போல் யார் வருவாளோ? அவள் குழந்தையிடம் எப்படி நடந்து கொள்வாளோ?

"புதிதாக யாரை வேலைக்கு வைக்கப் போகிறீர்கள்? யாரையாவது பார்த்து வைத்திருக்கிறீர்களா?" என்று கவலையுடன் கேட்டாள் கணவனை.

ஜார்ஜும் அதைப் பற்றித் தான் சிந்தித்தார். ஆயா வேலைக்குத் தகுதியானவர்கள் சுமார் ஒரு டஜன் பேர்கள்

இருந்தார்கள். ஆனால் ட்ரேஸியைப் பற்றியே அவர் மனம் அதிகம் நினைத்தது.

அவளைக் குறித்து நினைக்கிற போதெல்லாம் உள்ளத்தில் ஒரு வேதனை ஏற்படுவது வழக்கம்.

குற்றவியலில் பதினைந்து வருட அனுபவம் பெற்றவர் அவர். இந்தச் சிறைக்கு வரும் கைதிகளைச் சரியானபடி மதிப்பிடக் கூடியவர். சில கைதிகள் இறுகிப்போன குற்ற வாளிகள். சிலர் திடீரென்று ஏற்பட்ட ஆத்திரத்தில் குற்றம் செய்தவர்கள். ஆனால் ட்ரேஸி இந்த இரண்டு வகையிலும் சேராதவள் என்று வார்டன் உணர்ந்திருந்தார். தான் நிரபராதி என்று அவள் சொன்னதைக் கொண்டு மட்டும் இந்த முடிவுக்கு அவர் வரவில்லை. இங்கே வருகிற எல்லாக் கைதிகளும் பாடுகிற பல்லவி தான் அது.

ட்ரேஸி ஜெயிலுக்கு வரக் காரணமானவர்கள் ரொமானோ, அவனுடைய எஜமானனான ஆர்ஸெட்டி, ட்ரேஸிக்காக வாதாடிய வக்கீல் பெர்ரி, அவளுக்குத் தண்டனை வழங்கிய ஜட்ஜ் லாரன்ஸ் இவர்கள் அத்தனை பேருமே ஒரு பயங்கரக் கும்பல் என்று அவருக்குத் தெரியும். ஆகவேதான் ட்ரேஸி மீது அவருக்கு நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டிருந்தது.

இன்று அவர் ஒரு முடிவுக்கு வந்தார். "ஆமாம் ஸ்யூ. ஆயா வேலைக்கு ஒரு பெண்ணை மனசில் வைத்திருக் கிறேன்," என்றார் மனைவியிடம்.

**கை**திகளின் சாப்பாட்டுக் கூடத்தின் ஒரு மூலையில் இரண்டு மூன்று நாற்காலிகள் போடப்பட்டிருப்பது உண்டு. களிப்பதுடன் மற்றவர்களுக்குக் கேட்காமல் அங்கே ஓரளவு பேச முடியும்.

அன்று அந்த இடத்தில் நீக்ரோக்காரியும் ட்ரேஸியும் உட்கார்ந்திருந்தார்கள். பத்து நிமிடம் அவர்களுக்கு அவகாசம் இருந்தது.

*"நல்லது, இப்போது சொல்லு. இங்கிருந்து தப்பிச் செல்ல வேண்டுமென்று ஏன் இவ்வளவு துடிக்கிறாய்?" என்று நீக்ரோக்காரி கேட்டாள்.*

*ட்ரேஸி சிறிது தயங்கினாள். இவளை நம்பலாமா என்று யோசித்தாள். ஆனால் நம்புவதைத் தவிர வேறு வழி கிடையாது. "வெளியே சில பேர் இருக்கிறார்கள் என் குடும்பத்தையும் என்னையும் அழித்தவர்கள். அவர்களை நான் பழி தீர்த்தாக வேண்டும்."*

*"ஓ! என்ன செய்தார்கள், அப்படி?"*

*ஒவ்வொரு வார்த்தையாகச் சொன்னாள் ட்ரேஸி. ஒவ்வொரு வார்த்தையும் தாள முடியாத வலியுடன் வெளிப்பட்டது. "அவர்கள்... என் அம்மாவைக் கொலை செய்தார்கள்."*

*"அவர்கள் என்றால் யார்?"*

*"அவர்கள் பெயரைக் கேட்டு உனக்கு என்ன புரிந்து விடப் போகிறது? ரொமானோ, பெர்ரி போப், ஜட்ஜ் லாரென்ஸ், ஆர்ஸெட்டி..."*

*"என்ன, என்ன!" நீக்ரோக்காரியின் வாய் ஆச்சரியத்தால் பிளந்தது. "ஐயோ கடவுளே! இவர்களா -"*

*ட்ரேஸிக்கும் ஆச்சரியம் ஏற்பட்டது. "இந்தப் பெயர்களை நீ கேள்விப்பட்டிருக்கிறாயா?"*

*"நான் மட்டுமா? இவர்களைப் பற்றி யார் தான் கேள்விப் படவில்லை? நியூ ஆர்லியன்ஸில் இவர்கள் வைத்ததுதானே சட்டம்? ட்ரேஸி, இவர்களை எதிர்த்தா நீ போராடப் போகிறாய்? பைத்தியக்காரத்தனம். மூட்டைப் பூச்சியை நசுக்குகிற மாதிரி ஒரே விநாடியில் உன்னை நசுக்கி விடுவார்கள்."*

*உணர்ச்சியற்ற குரலில் ட்ரேஸி பதிலளித்தாள். "அவர்கள் ஏற்கெனவே என்னை நசுக்கியாகிவிட்டது. இருந்தாலும் நான் விடப் போவதில்லை."*

நீக்ரோக்காரி சுற்று முற்றும் ஒருமுறை பார்த்துக் கொண்டாள். தங்கள் பேச்சை யாரும் கவனிக்கவில்லை என்று கண்டதும், "ட்ரேஸி, ஒன்று உனக்குப் பைத்தியமாக இருக்க வேண்டும். நான் சொல்வதைக் கேள். அவர்களை மறந்துவிடு, சீக்கிரமாகவே மறந்து விடு," என்றாள்.

"முடியாது எர்னி. என்னால் முடியாது. நான் தப்பிச் செல்லத் தான் வேண்டும். அது முடியுமா, முடியாதா சொல்லு."

நீண்ட நேரத்துக்கு நீக்ரோக்காரி மௌனமாகவே இருந்தாள். பிறகு, "சரி, மைதானத்தில் இருக்கும்போது நாம் பேசலாம்," என்றாள்.

அன்று மைதானத்தில் தேகப் பயிற்சி செய்யும்போது -

"எனக்குத் தெரிந்து இங்கிருந்து பன்னிரண்டு பேர் தப்பியோட முயற்சி செய்திருக்கிறார்கள்," என்றாள் நீக்ரோக்காரி. "இரண்டு பேரைத் துரத்திப் பிடித்துச் சுட்டுக் கொன்றுவிட்டார்கள். மற்றப் பத்துப் பேரை திரும்பிப் பிடித்து விட்டார்கள்."

ட்ரேஸி ஏதும் பேசவில்லை.

"இங்கே காவல் புரிகிறவர்கள் எல்லோரும் மகா முரட்டுப் பேர்வழிகள். எந்தக் கைதி தப்பியோடினாலும் அவர்களுக்கு வேலை போய்விடும். ஆகவே தப்பியோடுகிற கைதிகளை விசாரித்து கிசாரிப்பது கிடையாது. முதல் வேலையாகக் கொலை பண்ணி விடுவார்கள். சிறையைச் சுற்றி முள்வேலி இருக்கிறது. அதையும் தாண்டி, யந்திரத் துப்பாக்கிகள். அங்கே தப்பினால் கூட, மோப்ப நாய்கள் இருக்கிறது. ஒரு கொசுவைக் கூட மோப்பம் பிடித்துக் கண்டு பிடித்து விடும். இங்கிருந்து சில மைல்கள் தள்ளி ஒரு காவல் முகாமும் இருக்கிறது. கைதி தப்பியோடிய செய்தி கிடைத்ததும் அவர்கள் துப்பாக்கியும் ஸெர்ச் லைட்டு களுமாக ஹெலிகாப்டரில் பறந்து தேடுவார்கள். கைதியை உயிரோடு கொண்டு வந்தாலும் சரி, பிணமாகக் கொண்டு வந்தாலும் சரி யாரும் ஏனென்று கேட்க மாட்டார்கள்"

"இவ்வளவு இருந்தாலும் சில கைதிகள் தப்பிச் செல்ல முயற்சி செய்து கொண்டுதானே இருக்கிறார்கள்!" என்றாள் ட்ரேஸி பிடிவாதமாக.

"அப்படி முயலுகிறவர்களுக்கு வெளியே உதவிக்கு ஆள் இருப்பார்கள். துப்பாக்கியும் பணமும் துணிகளும் அனுப்புவார்கள். தப்பியோடுகிறவனை அழைத்துச் செல்லக் காருடன் காத்திருப்பார்கள்," என்ற நீக்ரோக்காரி, சிறிது தாமதித்தபின், "அப்படியும் கூடச் சில சமயம் அவர்கள் பிடிபடுகிறார்கள்," என்றாள்.

"என்னைப் பிடிக்க முடியாது," என்றாள் ட்ரேஸி உறுதியாக.

ஒரு காவல்காரி அவர்களை நோக்கி வந்தாள். "ட்ரேஸி, வார்டன் உன்னை அழைத்து வரச் சொன்னார். உடனே கிளம்பு," என்றாள்.

## 18

வார்டன் ஜார்ஜ் கனிவுடன் பார்த்தார் ட்ரேஸியை. "எங்கள் குழந்தை ஆமியைப் பார்த்துக் கொள்ள ஓர் ஆயா தேவைப்படுகிறது. உனக்கு இஷ்டமானால் வரலாம். கட்டாயம் இல்லை. வேண்டாமென்றால் தாராளமாய்ச் சொல்லு." என்றார்.

'எங்கள் குழந்தையைப் பார்த்துக் கொள்ள... அந்தச் சொற்களைக் கேட்டதும் ட்ரேஸியின் உள்ளம் உற்சாகத்தால் துள்ளியது. இந்தச் சிறையிலிருந்து தப்பிச் செல்லச் சுலபமான வழி கிடைக்கும். வார்டனின் வீட்டில் வேலை செய்யும்போது இந்தச் சிறையின் நடவடிக்கைகளைக் கணக்குப் போடலாம்...

"வேலையை ஏற்றுக் கொள்கிறேன், சார்," என்றாள்.

வார்டன் ஜார்ஜுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஏனோ தெரியவில்லை. இந்தப் பெண்ணுக்கு ஏதோ ஒரு வகையில் உதவி செய்ய வேண்டியது தன் கடமை என்று அவர்

எண்ணினார். "நல்லது. உனக்கு மணிக்கு அறுபது சென்ட் சம்பளம் கிடைக்கும். மாதக் கடைசியில் அதை உன் கணக்கில் சேர்த்து விடுவோம்," என்றார். கைதிகள் கையில் ரொக்கம் வைத்துக் கொள்ளக் கூடாது. அவர்கள் கணக்கில் சேர்த்து வைத்து, விடுதலையாகும்போதுதான் தருவார்கள்.

மாதக் கடைசியிலா! ட்ரேஸி மனத்துக்குள் சிரித்துக் கொண்டாள். இந்த மாதக் கடைசியில் நான் இங்கே இருக்க மாட்டேன் என்று நினைத்துக் கொண்டவள், "சரி சார்," என்றாள்.

"நாளைக் காலையிலிருந்து வேலைக்கு வந்து விடு. உன் வேலைகள் என்னென்ன என்று தலைமைக் காவல்காரி சொல்வாள்."

"தாங்க்யூ வார்டன்."

ட்ரேஸியை ஏறிட்டு நோக்கினார் ஜார்ஜ். ஏதோ சொல்ல வேண்டுமென்று தோன்றியது. ஆனால் என்ன சொல்வதென்று தெரியாமல், "ரைட், நீ போகலாம்," என்றார்.

நீக்ரோக்காரியிடம் ட்ரேஸி விஷயத்தைச் சொன்ன போது, அவள் சிறிது யோசனை செய்து விட்டுக் கூறினாள்: "இனி உனக்கு அங்கே இங்கே நடமாட அதிக சுதந்திரம் கிடைக்கும். நீ தப்பிச் செல்வது கொஞ்சம் சுலபம்."

"வழி கிடைக்கும் என்கிறாய்?"

"மூன்று வழி இருக்கிறது. ஆனால் மூன்றுமே ஆபத்து. முதல் வழி, திருட்டுத்தனமாய் நழுவுவது. அதற்கு என்ன செய்ய வேண்டுமென்றால், உன் சிறைக் கதவிலும் தாழ்வாரக் கதவிலும் பூட்டில் சூயிங்கம் அடைத்து வைப்பது. அப்படிச் செய்தால் சரியாகப் பூட்டிக் கொள்ளாது. ராத்திரி வெளியே நழுவி, முள்வேலி மீது துப்பட்டியை மடித்துப் போட்டுத் தாண்டிக் குதித்து ஓட்டம் பிடிக்கலாம்."

'மோப்ப நாய்களும் ஹெலி காப்டர்களும் துரத்தும். காவலாட்களின் துப்பாக்கிக் குண்டுகள் உடம்பைத்

துளைக்கும்,' என்று நினைக்கும்போதே ட்ரேஸியின் உடல் நடுங்கியது. "மற்ற இரண்டு வழிகள்?" என்று கேட்டாள்.

"இரண்டாவது வழி, காவலர்களைத் தாக்கிவிட்டு ஓடுவது. அதாவது, ஒரு துப்பாக்கி வைத்துக் கொண்டு, கேடயமாக ஓர் ஆளைப் பிடித்துக் கொண்டு ஓடுவது. ஆனால் பிடிபட்டுவிட்டால் உன் சிறைத் தண்டனையை மேலும் ஐந்து வருடம் அதிகரித்து விடுவார்கள்."

"மூன்றாவது வழி?"

"ஜாம் ஜாமென்று கம்பி நீட்டுவது! சிறை ஊழியர் என்று ஆகிவிட்டால் வெளியே தாராளமாய்ப் போகலாம். வரலாம். சிறைக்கு வெளியே போனதும் அப்படியே போய்விட வேண்டியது தான்!"

ட்ரேஸி யோசனை செய்து பார்த்தாள். பணம், கார், ஒளிந்து கொள்ள ஓர் இடம்- இதெல்லாம் இல்லாமல் தப்புவதற்கு வாய்ப்பு இல்லை. "ஆஜர் எடுக்கும்போது நான் காணாமல் போயிருப்பதைக் கண்டுபிடித்து விடுவார்களே! உடனே என்னைத் துரத்திப் பிடிக்க முனைவார்களே?"

நீக்ரோக்காரி ஒரு பெருமூச்சு விட்டாள். "ஆமாம் ஓட்டை இல்லாத கச்சிதமான பிளான் என்று எதுவுமே கிடையாது, பெண்ணே! அதனால்தான் தப்பியோட யாருமே முயற்சி செய்வதில்லை."

"நான் முயற்சி செய்யப்போகிறேன்.' ட்ரேஸி சபதம் செய்து கொண்டாள்.

**ஒ**ருநாள் காலை வேளையில் வார்டன் ஜார்ஜின் வீட்டில் வேலைக்குச் சென்றாள் ட்ரேஸி. அது அவள் சிறைக்கு வந்த ஐந்தாவது மாதம்.

விஸ்தாரமான, வசதியான சமையலறையை அடைந் தாள். அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள். வியர்வை முத்து முத்தாக அரும்பி அக்குள்களில் வழிந்து ஓடியது.

ரோஜா நிற ஹவுஸ்கோட் அணிந்த பெண்ணொருத்தி உள்ளே வந்து, “குட் மார்னிங்” என்றாள்.

“குட் மார்னிங்,” என்று பதில் வணக்கம் தெரிவித்தாள் ட்ரேஸி. அவள்தான் வார்டனின் மனைவியான ஸ்யூ என்று ஊகிக்க முடிந்தது.

ஸ்யூவுக்கு முப்பத்தைந்து வயது இருக்கும். ஒல்லியாக, இனிய தோற்றத்துடன் இருந்தாள். வேலைக்கு வரும் கைதிகளிடம் எப்போதுமே அவளுக்கு ஒரு குழப்பம் உண்டு, அவர்களை எப்படி நடத்துவதென்று. இன்ன வேலையைச் செய்யும்படி மரியாதையாய்க் கேட்டுக் கொள்வதா? அல்லது கைதியாக நடத்துவதா?

கஞ்சாக்காரர்களும், திருடர்களும், கொலைகாரர்களும் நிறைந்த கைதிகளின் உலகத்தில் எப்படிப் பழகுவது என்பது ஸ்யூவுக்கு இன்னும் கை வராமலே இருந்தது.

“நான் மிஸஸ் ஜார்ஜ்,” என்று ஆரம்பித்தவள் கட கடவென்று பேசிக் கொண்டே போனாள். “என் குழந்தை ஆமிக்கு ஐந்து வயசாகப் போகிறது. இந்த வயசில் குழந்தைகள் அநியாயத்துக்குத் துறுதுறுப்பாய் இருக்குமே? இருபத்து நாலு மணி நேரமும் ஒரு கண் வைத்துக் கொண்டே இருக்க வேண்டும்...” பேசியபடியே ட்ரேஸியின் இடது கையைக் கவனித்தாள் ஸ்யூ. கல்யாணமானதற்கு அடையாளமாக மோதிரம் எதையும் காணவில்லை. ஆனால் இந்தக் காலத்தில் அந்தச் சம்பிரதாயமெல்லாம் கிடையாது. அதுவும் கீழ்த்தட்டு மக்களுக்கு நிச்சயமாய்க் கிடையாது. சற்றுத் தயங்கி விட்டு, நாசூக்காகக் கேட்டாள்:

“உனக்குக் குழந்தை இருக்கிறதா?”

கருவிலேயே செத்துப்போன குழந்தையின் ஞாபகம் வந்தது ட்ரேஸிக்கு. “இல்லை.”

“ஒகோ,” என்றாள் ஸ்யூ. இந்த இளம் பெண்ணைப் பார்க்கப் பார்க்கக் குழப்பம் ஏற்பட்டது. கொஞ்சமும் அவள் நினைத்திருந்த மாதிரி இந்தப் பெண் இருக்கவில்லை. இவளிடம் ஒரு பண்பாடு, மென்மை இருக்கிறது...

"நான் போய் ஆமியை அழைத்து வருகிறேன்," என்று கூறி அவசரமாய் வெளியேறினாள்.

ட்ரேஸி எழுந்து வீட்டைக் கண்ணோட்டம் விட்டாள். பெரிய வீடுதான். சுத்தமாக, கவர்ச்சிகரமான சோபா நாற்காலிகளுடன் இருந்தது.

வீடு என்ற ஒன்றைப் பார்த்து எத்தனை யுகங்களாகிறது! அவள் இதயம் கனத்தது. வீடு என்பது வேறோர் உலகத்தில் இந்தச் சிறைச்சாலைக்கு வெளியே உள்ள உலகத்தில்...

ஒரு சிறுமியின் கையைப் பிடித்தபடி ஸ்யூ திரும்பி வந்தாள். "ஆமி... இவள் மிஸ்-" என்று ஆரம்பித்தாள். ஒரு கைதியை எப்படி அழைப்பது என்று சிறிது தடுமாறினாள். மிஸ் ட்ரேஸி என்பதா? மிஸ் விட்னி என்பதா? கடைசியில், "ட்ரேஸி விட்னி," என்று அறிமுகம் செய்தாள்.

"ஹை," என்றாள் ஆமி. அம்மாவைப் போலவே அவளுக்கும் ஒல்லியான உடம்பு. புத்திசாலித்தனமான பளபளப்பான கண்கள் இருந்தன. யாரும் பிரியம் கொள்ளக் கூடிய தோற்றம்.

'வேண்டாம், நான் பிரியம் வைக்க மாட்டேன்,' என்று எண்ணிக் கொண்டாள் ட்ரேஸி. தப்பிச் செல்வதுதான் என் நோக்கமாக இருக்க வேண்டும், பிரியம், பாசம் என்பதெல்லாம் உதவாது...

"நீதான் என்னோட புது ஆயாவா?"

"வந்து... உன்னைப் பார்த்துக் கொள்வதில் உன் அம்மாவுக்கு உதவியாக இருக்கப் போகிறேன்."

"உனக்குத் தெரியுமோ! ஜூடி ஆயா பரோலில் போயிட்டாள். நீயும் பரோலில் போயிடுவியா?"

இல்லை என்று ட்ரேஸி நினைத்துக்கொண்டாள். "நான் ரொம்ப நாளைக்கு இங்கே இருக்கப் போகிறேன், ஆமி."

"அப்ப நல்லதுதான்," என்றாள் ஸ்யூ பளிச்சென்று. ஆனால் தான் சொன்னது தப்பான அர்த்தம் தருமே என்று

எண்ணி அவள் முகம் சிவந்தது. உதட்டைக் கடித்துக் கொண்டாள். "அதாவது..." எழுந்து சமையலறையில் நடந்த படி ட்ரேஸியின் வேலைகள் என்னென்னவென்று விளக்கத் தொடங்கினாள். "ஆமியுடனேயே நீ சாப்பிடலாம். காலை யில் எழுந்ததும் சிற்றுண்டி தயாரித்து ஆமிக்குக் கொடுத்து நீயும் சாப்பிட்டுவிட்டு விளையாடிக் கொண்டிரு. பகல் சாப்பாடு சமையல்காரி தயாரித்துக்கொடுப்பாள். சாப்பிட்ட பிறகு ஆமி கொஞ்ச நேரம் தூங்குவாள். சாயந்தரம் தோட்டத் திலே விளையாட அவளுக்குப் பிடிக்கும். குழந்தைகளுக்கு எப்பவுமே செடி, பூ இதெல்லாம் பார்ப்பதற்குப் பிடிக்கும். இல்லையா?"

"ஆமாம்."

அவளைத் தோட்டத்துக்கு அழைத்துப் போனாள் ஸ்யூ.

தோட்டம் என்பது மத்தியச் சிறையின் மறுபக்கத்தில் இருந்தது. இருபது ஏக்கர் பரப்புள்ள பெரிய பண்ணை. ஏராளமான கறிகாய்ச் செடிகளும் கனிதரும் மரங்களும் நிறைந்திருந்தன. சிறைக் கைதிகள் அங்கே வேலை பார்த்தார் கள். பண்ணையின் பாசனத்துக்காக ஓர் ஏரி வெட்டப் பட்டிருந்தது. அதைச் சுற்றிலும் ஒரு மதில் சுவர் கட்டப் பட்டிருந்தது.

அடுத்த ஐந்து நாட்களுக்கு, ஒரு புதுப் பிறவியே எடுத்து விட்ட மாதிரி இருந்தது ட்ரேஸிக்கு. சிறைச் சாலையின் முரட்டுக் கரங்களிலிருந்து விடுபட்டு, பண்ணையிலே இஷ்டம் போல் உலாவி, கிராமப்புறத்தின் காற்றைச் சுவாசிப் பதைக் குறித்து அவள் மனம் ஆனந்தம் அடைந்திருக்கும் வேறு சந்தர்ப்பமாக இருந்திருந்தால்! ஆனால் இப்போதோ எதையும் ரசிக்க முடியாமல்! இங்கிருந்து தப்பிப்பது எப்படி என்பதைக் குறித்தே அவள் மனம் சதா சிந்தித்துக் கொண்டிருந்தது.

ஆமியைப் பார்த்துக்கொள்ள வேண்டிய ட்யூட்டி நேரம் போக மற்றச் சமயங்களில் அவள் சிறைக்குத் திரும்பியாக

வேண்டும். ஒவ்வோர் இரவும் அவளைச் சிறையில் பூட்டி விடுவார்கள். பகல் நேரங்களில் மட்டும் சுதந்திரம் என்று பெயர். சிறைச்சாலைச் சமையலறையில் காலை உணவு அருந்தியபின் வார்டனின் வீட்டுக்குப் போவாள். ஆமிக்குச் சிற்றுண்டி தயாரிப்பாள். சார்லஸுடன் வாழ்ந்த காலத்தில் பலவிதமாகச் சமைக்கக் கற்றுக் கொண்டிருந்தாள் அவள். இப்போது வார்டனின் சமையலறையில் நிரம்பியிருந்த அலமாரிகளைப் பார்த்த போது வகைவகையாகச் சமைக்க வேண்டும் போல ஆசை ஏற்பட்டது. ஆனால் ஆமிக்கு எளிமையான உணவுகளே பிடித்திருந்ததால் ட்ரேஸிக்குத் தன் ஆசையைத் தணித்துக் கொள்ள வாய்ப்புக் கிட்டவில்லை. காலை உணவுக்குப் பிறகு ஆமியுடன் சிறிது விளையாடுவாள். அல்லது கதைப் புத்தகங்கள் படித்துக் காட்டுவாள். அவள் சிறுமியாக இருந்த போது அம்மா சொல்லிக் கொடுத்த விளையாட்டுக்களைத் தன்னையும் அறியாமல், இன்று ஆமியுடன் விளையாடினாள்.

ஆமிக்குப் பொம்மைகள் என்றால் ரொம்பப் பிடித்திருந்தது. பழைய காகிதங்களையும் துணிகளையும் கொண்டு பொம்மைகள் பண்ணினாள் ட்ரேஸி. அது மட்டுமல்ல. அந்தப் பொம்மைகள் பேசுவது போலத் தானே பலவித உச்சரிப்புக்களில் பேசினாள். இத்தாலியர்களைப் போல, ஜெர்மானியர்களைப் போல, பிரெஞ்சுக்காரர்களைப் போல விதம் விதமாய் ஆங்கிலத்தில் பேசினாள்.

அப்படி அவள் பேசும்போதெல்லாம் ஆமியின் முகம் மகிழ்ச்சியில் ஜொலிக்கும். அதைப் பார்க்கையில் ட்ரேஸிக்கு உவகை ஏற்படும். ஆனால் அதை அடக்கிக் கொண்டாள்.

'கூடாது, கூடாது. இந்தக் குழந்தையிடம் எனக்குப் பிரியம் ஏற்பட்டு விடக் கூடாது. இந்தச் சிறையிலிருந்து நான் தப்பிச் செல்வதற்கு இவள் ஒரு கருவி. அவ்வளவே,' என்று தனக்குத் தானே திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டு மனத்தைக் கல்லாக்கிக் கொண்டாள்.

பகல் ஆகாரத்துக்குப் பிறகு ஆமியுடன் பண்ணைத் தோட்டத்தில் நீண்ட தூரத்துக்கு உலாவினாள். அப்போது சிறைச்சாலையில் அதுவரை பார்த்திராத இடங்களைக் கவனித்து வைத்துக் கொண்டாள். ஒவ்வோர் இண்டு இடுக்கையும் கவனத்துடன் பார்த்து வைத்துக் கொண்டாள். உள்ளே வரும் வழிகளையும் வெளியே செல்லும் வழிகளையும் கண்காணிப்பு மாடங்களில் காவலர்கள் வருவதையும் மாறுவதையும் கூர்ந்து கவனித்தாள். நீக்ரோக்காரி சொன்னது போல் தப்பிச் செல்ல எந்த வழியும் பலிக்காது என்பது திட்டவட்டமாகப் புரிந்தது.

ஒருநாள் நீக்ரோக்காரியிடம் கேட்டாள்: "பாலும் மளிகைச் சரக்குகளும் எடுத்துக் கொண்டு தினம்லாரிகள் வருகிறதே, அதில் ஒளிந்து கொண்டு தப்ப முடியாதா!"

"நடக்காது," என்றாள் எர்னஸ்டின். "உள்ளே போகிற வண்டியானாலும் சரி, வெளியே போகிற வண்டியானாலும் சரி, கேட்டில் தவறாமல் சோதனை போடுவார்கள்."

ட்ரேஸியின் உற்சாகம் புஸ்ஸென்று இறங்கியது.

## 19

ஒருநாள் காலையில், சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது குழந்தை ஆமி கேட்டாள். "ட்ரேஸி, நீ எனக்கு அம்மாவாய் இருப்பாயா?"

அந்தக் கேள்வி ட்ரேஸியின் இதயத்தில் வேதனையைச் செருகியது. "உனக்குத்தான் ஒரு அம்மா இருக்கிறாளே, ஆமி! ஒருத்தருக்கு ஒரு அம்மா போதும்." வெடுக்கெனச் சொன்னாள் ட்ரேஸி. "சாப்பிட்டு முடி முதலில்."

ஆமியின் முகம் தொங்கிவிட்டது. "எனக்குப் பசிக்கலை."

"சரி, கதை படிக்கிறேன் கேள்."

ட்ரேஸி படிக்க ஆரம்பித்தாள். படித்துக் கொண்டிருந்த போது ஆமியின் மிருதுவான கை அவளை மெல்லத் தொட்டது. "நான் உன் மடியிலே ஏறி உட்காரட்டுமா?"

"ஊகூம்," என்றாள் ட்ரேஸி கண்டிப்புடன்.

'உனக்குத் தேவையான பாசத்தை உன் குடும்பத்தி லிருந்து பெற்றுக்கொள், ஆமி! என்னிடம் வராதே!' என்று அவள் எண்ணிக் கொண்டாள்.

பகல் வேளைகளில் சுதந்திரமாக இருந்ததால் இரவு வேளைகள் நரக வேதனையாக இருந்தன. சிறைக்குத் திரும்பிச் செல்வதும், கூண்டில் விலங்கு போல் அடைபடுவதும் அவளுக்கு மகா வெறுப்பாக இருந்தது. இரக்கமற்ற இருட்டின் நடுவேயிருந்து திடீர் திடீரென வீறிடும் கூச்சல்கள் இன்னும் அவளைத் திகில் கொள்ளவே செய்தன. தாடைகள் வலிக்குமளவுக்குப் பல்லைக் கடித்துக் கொண்டாள்.

'இன்னும் ஓர் இரவு பொறுத்துக்கொள்கிறேன் இன்னும் ஒரே ஓர் இரவுதான் பிறகு விடுதலை...' என்று ஒவ்வொரு நாளும் எண்ணினாள்.

அவள் தூங்குவதேயில்லை. தப்பிச் செல்லுவதைப் பற்றி நினைத்து நினைத்து விழித்தபடியே இருந்தாள்.

குண்டு பெர்த்தா ட்ரேஸியை விடாமல் துரத்திக் கொண்டே இருந்தாள். ட்ரேஸி எங்கே போகிறாள், என்ன செய்கிறாள் என்பதை ஆள் வைத்துக் கண்காணித்து வரு கிறாள் என்று தோன்றியது.

ஒருநாள் ட்ரேஸியை வழி மறித்து, "ஏய், என்னை விட்டு எங்கேயும் நீ போக முடியாது," என்று கூறிச் சிரித்தாள் குண்டு பெர்த்தா.

"என் வழிக்கு வராதே!" என்று ட்ரேஸி எச்சரித்ததை அவள் பொருட்படுத்தக் காணோம். மேலும் இளித்தாள்.

"ஓ! அந்த நீக்ரோக்காரி கொடுக்கிற தைரியமா உனக்கு? கொஞ்ச நாள் தான். நான் இருக்கிற பிரிவுக்கு உன்னை மாற்றுவதற்கு ஏற்பாடு பண்ணியிருக்கிறேன்."

ட்ரேஸி அவளை வெறித்து நோக்கினாள்.

"ஆமாம் கண்ணு. என்னாலே எதுவும் முடியும். சந்தேகம் வேண்டாம்!"

குண்டு பெர்த்தா போய்விட்டாள். ட்ரேஸியைத் திகில் பிடித்துக் கொண்டது. இனி அதிக அவகாசம் இல்லை. நீக்ரோக்காரி வேறே விரைவில் விடுதலையாகப் போகிறாள் என்று செய்தி கிடைத்திருந்தது. அவள் இருக்கும் போதே நாம் ஏதாவது செய்து, எப்படியாவது இங்கிருந்து தப்ப விட வேண்டும்...

**கு**ழந்தை ஆமிக்கு ரொம்பப் பிடித்த விஷயம் பண்ணை மைதானத்தில் விளையாடுவதுதான். வண்ண வண்ணமான காட்டுப் பூக்கள் வான வில்லாய்ப் பூத்திருக்கும் இடங்களில் அவள் ஓடியாடுவாள். அருகிலேயே குளம் இருந்தது. அதற்குக் குட்டையான மதில் சுவர் உண்டே தவிர, உள்ளே இறங்கப் படிக்கட்டு எதுவும் கிடையாது. மதில் சுவரை ஒட்டி ஆழ மான குளம்தான்.

"இங்கே இறங்கி நீஞ்சலாம், ட்ரேஸி! ப்ளீஸ் ப்ளீஸ்," என்று ஆமி ஒரு நாள் கெஞ்சினாள். "அசடு, இது நீச்சல் குளமில்லை," என்றாள் ட்ரேஸி. "பண்ணைக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்காக இந்தக் குளத்தை வெட்டியிருக்கிறார்கள்."

சிலீரென்ற தண்ணீருடன் அச்சுறுத்தும் வகையில் தோன்றிய அந்தக் குளத்தைப் பார்க்கும் போதெல்லாம் ட்ரேஸிக்கு உடம்பு நடுங்கியது பயத்தில்.

**நீ**க்ரோக்காரி விடுதலையாகிப் போகப் போகிறாள் என்ற செய்தி வந்தது.

முன்பே எதிர்பார்த்ததுதான் என்றாலும் அந்தச் செய்தி ட்ரேஸிக்குப் பெரும் அதிர்ச்சியாக இருந்தது.

"வருகிற சனிக்கிழமைக்கு அடுத்த சனிக்கிழமை எனக்கு விடுதலை, கண்ணு," என்றாள் நீக்ரோக்காரி.

கத்தியால் இருதயத்தைக் கிழித்த மாதிரி இருந்தது ட்ரேஸிக்குக் குண்டு பெர்த்தா தன்னைப் பயமுறுத்தியது பற்றி அவள் நீக்ரோக்காரியிடம் எதுவும் சொல்லவில்லை. சொல்லி என்ன புண்ணியம்? உதவி செய்வதற்கு நீக்ரோக்காரி இங்கே இருக்கப் போவதில்லையே? குண்டு பெர்த்தாவுக்கு நிறையச் செல்வாக்கு உண்டு. ட்ரேஸியைத் தன் பகுதிக்கு மாற்றும்படி செய்துவிடுவது நிச்சயம்...

ஒரே வழி, வார்டனிடம் சொல்வதுதான். ஆனால் அது இன்னும் பெரிய அபாயம். வார்டனிடம் அவள் கோள் சொன்னாள் என்று தெரிந்தால் சிறையிலுள்ள அத்தனை கைதிகளும் ட்ரேஸிக்கு எதிராகத் திரும்பி விடுவார்கள்.

'எதிர்த்துப் போராடுவது ஒன்று தான் வழி; நான் போராடத்தான் போகிறேன்...'

**நீ**க்ரோக்காரி விடுதலையாவதற்கு ஏழு நாட்களே இருந்தன. அன்று சனிக்கிழமை. ஆமியை அவள் தாய் ஸ்யூ, நியூ ஆர்லியன்ஸுக்கு அழைத்துச் சென்றிருந்தாள். சிறைச் சாலையின் சமையல் கூடத்தில் ட்ரேஸிக்கு ட்யூட்டி போட்டிருந்தார்கள்.

"வார்டன் வீட்டில் வேலை எப்படி இருக்கிறது, ட்ரேஸி?" என்று நீக்ரோக்காரி விசாரித்தாள். "நான் விடுதலையாகிப் போகிறேன். எனக்கு எவ்வளவு சந்தோஷ மாக இருக்கிறது தெரியுமா? உனக்கு ஒன்று சொல்லட்டுமா, ட்ரேஸி! நான் இங்கே திரும்பி வர மாட்டேன். என் காதலன் ஆல் எனக்காகக் காத்திருக்கிறான். அவனை மணந்து கொண்டு வாழ்க்கை நடத்தப் போகிறேன், ட்ரேஸி, நானும் ஆலும் வெளியே உனக்காக ஏதாவது செய்ய வேண்டு மென்றால் சொல்லு-"

"வழி! வழி!" என்ற ஆண் குரல் கேட்டது.

ட்ரேஸி திரும்பிப் பார்த்தாள். அழுக்குத் துணிகள் நிரப்பிய ஒரு வண்டியைத் தள்ளிக் கொண்டு வெளியே சென்று கொண்டிருந்தான் ஓர் ஆள்.

ட்ரேஸி நீக்ரோக்காரியின் பக்கம் திரும்பி, "ஏன் எர்னி, சிறைச் சாலைக்குள்ளேயே ஒரு சலவைச் சாலை இருக்கிறதே? அப்படியும் ஏன் அழுக்குத் துணிகளை வெளியே எடுத்துச் செல்கிறார்கள்?" என்று கேட்டாள்.

"ஓ, அதுவா? இந்தத் துணிகள் காவலாட்களுடையவை. சிறையில் இருக்கும் லாண்டிரிக்கு அனுப்பினால், வேண்டு மென்றே கைதிகள் கிழித்து வைக்கிறார்கள். பொத்தான் களைப் பிய்க்கிறார்கள். சில சமயம் ஆபாசமாய்த் திட்டி எழுதிப் பையில் வைக்கிறார்கள். யூனிபார்ம் உடைகளை நாசம் பண்ணுகிறார்கள். அதனால் இப்போதெல்லாம் காவலர்களின் உடைகளை வெளியே அனுப்பி ஒரு லாண்டிரி யில் சலவை செய்கிறார்கள்..." எர்னஸ்டின் விளக்கிக் கொண்டிருந்தாள். ஆனால் ட்ரேஸியின் கவனமெல்லாம் அந்த லாண்டிரித் துணிகளையே நினைத்துக் கொண்டி ருந்தது.

'தப்பிச் செல்ல வழி கண்டு பிடித்துவிட்டேன்' என்று தனக்குத் தானே அவள் சொல்லிக் கொண்டாள்.

**வா**ர்டன் ஜார்ஜிடம் அவள் மனைவி ஸ்யூ கூறினாள்:

"ட்ரேஸியை வேலையிலிருந்து நிறுத்திவிடலாம் என்று எனக்குத் தோன்றுகிறது."

படித்துக் கொண்டிருந்த செய்தித் தாளைக் கீழே வைத்துவிட்டு அவளை வியப்புடன் பார்த்தார் வார்டன். "ஏன், என்ன பிரசினை ஸ்யூ?"

"குறிப்பாகச் சொல்ல எனக்குத் தெரியவில்லை. ஆனால் அவளுக்கு ஆமியைப் பிடிக்கவில்லை என்று தோன்றுகிறது. பொதுவாகவே குழந்தைகள் என்றால் அவளுக்குப் பிடிக் காதோ என்னவோ."

"ஆமியை அடித்துக் கிடித்துத் துன்புறுத்துகிறாளா என்ன?"

"சேச் சே! அப்படியெல்லாம் இல்லை."

“பின்னே?”

“அடிக்கடி கவனிக்கிறேன். நேற்றுக் கூட ஆமி ஓடி விளையாடும் போது, கீழே விழவிருந்தவள் சட்டென்று ட்ரேஸியின் இடுப்பைக் கட்டிக் கொண்டாள். ஆனால் ட்ரேஸி அவள் கையை உதறிவிட்டாள். பார்த்துக் கொண்டிருந்த எனக்கு மனசுக்குச் கஷ்டமாகிவிட்டது. இத்தணைக்கும் ஆமி அவள் மீது உயிரையே வைத்திருக்கிறாள். சில சமயம் எனக்குப் பொறாமையாய்க் கூட இருக்கிறது. ஒருவேளை அதனால்தான் ட்ரேஸியைப் பற்றித் தப்பாக நினைக்கிறேனோ என்னவோ?”

வார்டன் சிரித்தார். “அப்படியும் இருக்கலாம், ஸ்யூ. எனக்கென்னமோ, குழந்தையைப் பார்த்துக் கொள்ள ட்ரேஸியை விட நல்ல ஆயா கிடைக்க மாட்டாள் என்று தோன்றுகிறது. அவளால் வேறு எதாவது பிரசினை ஏற்பட்டால் சொல்லு, உடனே கவனிக்கிறேன்.”

“சரி,” என்றாள் ஸ்யூ. ஆனாலும் அவள் மனத்துக்குத் திருப்தி ஏற்படவில்லை. ஊசி நூலை எடுத்துக் கொண்டு வேகமாய்த் தன் எம்பிராய்டரி வேலையைத் தொடர்ந்தாள்.

ட்ரேஸி தன் திட்டத்தை நீக்ரோக்காரியிடம் சொன்ன போது அவள் அதை ஏற்கவில்லை.

“அது நடக்காதம்மா. கேட் வழியே வெளியே போகும் ஒவ்வொரு வண்டியையும் சோதனை போட்டுத் தான் அனுப்புகிறார்கள்.” என்றாள்.

“ஆனால் அழுக்குத் துணிகள் கூடை கூடையாய்ப் போகிறதே? அவ்வளவு துணிகளையும் வெளியே எடுத்துப் போட்டா சோதனை செய்வார்கள்?” என்றாள் ட்ரேஸி.

“அதற்கு அவசியமில்லை. ஏனென்றால் அழுக்குத் துணிகள் வைத்திருக்கும் இடத்துக்குக் காலிக் கூடையை எடுத்துப் போகிறார்கள். அங்கே துணிகளைக் கூடையில் போடும் போது ஒரு காவலாள் கண்காணித்துக் கொண்டிருப்பாள்.”

ட்ரேஸி சிறிது யோசனை செய்துவிட்டுச் சொன்னாள்; "எர்னி... ஒரு ஐந்து நிமிஷத்துக்கு அந்தக் காவலாளின் கவனத்தை யாரேனும் திசை திருப்பினால்..."

"திருப்பினால்?" என்று ஆரம்பித்த நீக்ரோக்காரி, ட்ரேஸியின் எண்ணத்தை உடனே புரிந்து கொண்டு மெல்லச் சிரித்தாள். "ஓ, ஐந்து நிமிஷம் அந்த ஆளின் கவனம் திரும்பினால் நீ கூடைக்குள் புகுந்து கொண்டு விடுவாய். லாண்டிரித் துணிகளை உன் மீது போட்டு மூடி விடலாம். அதுதானே நீ சொல்வது? ஓரளவுக்கு உன் திட்டம் நடக்கக் கூடியது தான்..."

ட்ரேஸி ஆவலுடன் கேட்டாள். "எர்னி, நீ எனக்கு உதவி செய்ய முடியுமா?"

சற்றுநேரம் யோசனையில் ஆழ்ந்திருந்த நீக்ரோக்காரி மெதுவே கூறினாள்: "செய்கிறேன், ட்ரேஸி. உதவி செய் கிறேன். அந்தக் குண்டு பெர்த்தாவின் மூஞ்சியில் உதைக்க எனக்கு இதுதான் கடைசிச் சந்தர்ப்பம்!"

நீக்ரோக்காரியின் உதவியுடன் ட்ரேஸியின் திட்டம் மளமளவென்று உருப் பெறலாயிற்று. ட்ரேஸியின் உடல் அளவுகளை நீக்ரோக்காரி கணக்கெடுக்க, சிறைச்சாலைத் துணிக் கடையிலிருந்து லோலா துணிகள் திருடி எடுத்து வர, சிறைத் தையல்காரரிடம் பாலிடா அவைகளைக் கொடுத்து ட்ரேஸிக்கான உடைகளைத் தயாரித்தாள். சிறைச்சாலையின் செருப்புக் கடையிலிருந்து ட்ரேஸியின் அளவுக்கும் உடைக்கும் ஏற்ற காலணிகளைத் திருடிவந்து தந்தார்கள். தொப்பி, கையுறைகள், பர்ஸ் எல்லாம் மாஜிக் மாதிரி எங்கிருந்தோ வந்து சேர்ந்தன.

இனி உனக்குத் தேவை கடைகளில் கடன் வாங்குவதற் கான அடையாள அட்டை, கார் ஓட்ட லைசென்ஸ் இரண்டுதான்.

"அது எப்படிக் கிடைக்கும்?"

நீக்ரோக்காரி புன்னகை செய்தாள். "அந்தக் கவலை உனக்கு வேண்டாம். என்னிடம் விட்டுவிடு."

சொன்னது போல் மறுநாளே மூன்று அடையாள அட்டைகளைக் கொண்டுவந்து தந்தாள் - ஜேன் ஸ்மித் என்ற பொய்ப் பெயரில்.

அன்று நள்ளிரவுக்குப் பிறகு தன் அறையின் கதவு மெல்லத் திறக்கப்படும் ஓசை கேட்டது ட்ரேஸிக்கு. யாரோ ஓசைப்படாமல் உள்ளே வருகிறார்கள்!

அந்தக் கணமே உஷாராகி, படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

ஒரு குரல் கிசுக்கிசுத்தது. "வா ட்ரேஸி, போகலாம்."

லிலியன் என்ற காவல்காரியின் குரல் என்று ட்ரேஸி கண்டு கொண்டாள். "எதுக்கு என்னைக் கூப்பிடுகிறாய்?" என்றாள்.

இருட்டில் நீக்ரோக்காரியின் குரல் கடுமையாகக் கேட்டது! "சே! உன் அம்மா உன்னை எத்தனை முட்டாளாக வளர்த்திருக்கிறாள். கேள்வி எதுவும் கேட்காமல் வாயை மூடிக் கொண்டு வா."

லிலியன் மெதுவே, "சீக்கிரமாய் நாம் வேலையை முடித்தாக வேண்டும். அகப்பட்டோமோ, நான் தொலைந்தேன்!" என்றாள்.

"இப்ப எங்கே போகிறோம்?" என்று ட்ரேஸி மறுபடியும் கேட்டாள்.

பதில் கிடைக்கவில்லை.

இருண்டு நீண்ட தாழ்வாரத்தின் வழியே ஒரு மாடிப் படியை அடைந்தார்கள் மூவரும்.

## 20

அடிமேலடி வைத்து மாடிப் படியேறி மேலே சென்றார்கள் ட்ரேஸியும் லிலியன் என்ற காவல்காரியும்.

அங்கே யாரும் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட பிறகு அடுத்த அறைக்குச் சென்றார்கள். சிறைக்கு வந்த தினத்தன்று தன் கைரேகையைப் பதிவு செய்து கொண்டு புகைப்படம் எடுத்தது இந்த அறையில்தான் என்பது ட்ரேஸிக்கு ஞாபகம் வந்தது.

லிலியன் ஓசைப்படாமல் கதவைத் திறந்து, "உள்ளே வா," என்றாள் ரகசியக் குரலில்.

அவளைப் பின்தொடர்ந்து அறைக்குள் நுழைந்தாள் ட்ரேஸி. உள்ளே இன்னோர் காவல்காரி இருந்தாள். "சுவரை ஒட்டினாற் போல் நில்லு," என்றாள் அவள்.

ட்ரேஸி அப்படியே நின்றாள். எதற்கு இதெல்லாம் என்பது தெரியாமல் படப்படப்பாய் இருந்தது.

"காமெராவை நேராகப் பார். சீக்கிரம். விறைத்துக் கொண்டு இராமல் சகஜமாக இரு," என்றாள் காவல்காரி.

பிறகுதான் ட்ரேஸிக்குப் புரிந்தது. தன்னைப் படம் எடுக்கப் போகிறார்கள் என்று. அப்போதும் கூட எதற்குப் புகைப்படம் என்று தெரியவில்லை.

காமெரா க்ளிக் என்றது.

"நாளைக் காலையில் போட்டோ உன் கைக்குக் கிடைக்கும்," என்றாள் ஒரு காவல்காரி "உன் கார் லைசன்ஸுக்காகத்தான் இந்தப் போட்டோ. ஆகட்டும், சீக்கிரம் வெளியேறுங்கள்."

மாடிப்படியில் இறங்கினார்கள். ஹாலில் லிலியன் கேட்டாள். "ட்ரேஸி, உன்னை வேறு சிறைக்கு மாற்று கிறார்களாமே, தெரியுமா? "

ட்ரேஸி உறைந்து போனாள். "என்னது!"

"உனக்குத் தெரியாதா? குண்டு பெர்த்தாவின் பிரிவுக்கு உன்னை மாற்றப் போகிறார்கள்." என்றாள் அவள். ட்ரேஸிக்கு மூச்சு நின்றுவிடும் போலிருந்தது.

நீக்ரோக்காரியும் பாலிடாவும் லோலாவும் ட்ரேஸிக்காகக் காத்திருந்தார்கள்.

"வேலை முடிந்ததா?" என்று கேட்டாள் நீக்ரோக்காரி.

"பிரமாதமாய்" என்றாள் ட்ரேஸி, யந்திரம் போல.

'உன்னைக் குண்டு பெர்த்தாவின் பிரிவுக்கு மாற்றப் போகிறார்கள்,' என்ற வாக்கியமே அவள் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது.

"உன் புது டிரெஸ் சனிக்கிழமை தயாராகிவிடும்," என்றாள் பாலிடா.

நீக்ரோக்காரி கிசுகிசுத்த குரலில் சொன்னாள்: "திட்டப்படி ஜம்மென்று நடந்து கொண்டிருந்கிறது, ட்ரேஸி. சனிக்கிழமை பகல் இரண்டு மணிக்கு லாண்டிரி வண்டி வரப் போகிறது. ஒன்றரை மணிக்கெல்லாம் அழுக்குத் துணி குவித்திருக்கிற அறையில் நீ இருக்க வேண்டும். காவலாளைப் பற்றி நீ கவலைப்படத் தேவையில்லை. லோலா அவளை அடுத்த அறைக்கு அழைத்துச் சென்று பிடித்து வைத்துக் கொள்வாள். அழுக்குத் துணிகள் போட்டுள்ள அறையில் பாலிடா உனக்காகக் காத்திருப்பாள். உன் டிரெஸ்களும் உன் பர்ஸும் உன் அடையாளக் கார்டும் அவளிடம் இருக்கும். சரியாய் இரண்டே கால் மணிக்கு நீ ஜெயிலுக்கு வெளியில் போய்க் கொண்டிருப்பாய்..."

ட்ரேஸிக்கு மூச்சு விடுவது கூடக் கஷ்டமாயிருந்தது. தப்பிச் செல்வதைப் பற்றி நினைக்கையிலேயே அவள் உடம்பு நடுங்கியது.

ட்ரேஸி விஷயமாகக் குண்டு பெர்த்தாவுக்கும் நீக்ரோக்காரிக்கும் இருந்த பகைமை கைதிகளிடையே பகிரங்க ரகசியமாக இருந்தது. குண்டு பெர்த்தா இருக்கும் பிரிவுக்கு ட்ரேஸியை மாற்றப் போகிறார்கள் என்ற செய்தி எல்லாருக்கும் பரவி விட்டது. ஆனால் ட்ரேஸி தப்பிச் செல்ல முயன்று கொண்டிருக்கிறாள் என்ற தகவலை யாரும் குண்டு பெர்த்தாவுக்குத் தெரிவிக்கவில்லை. தெரிவிக்கப் பயந்தார்கள்.

ஆனால் ட்ரேஸி தப்பியோடத் திட்டமிட்டிருந்த தினத்தன்று காலை குண்டு பெர்த்தாவுக்குச் செய்தி எட்டிவிட்டது. அவளுக்குத் தகவல் சொன்னவள் ட்ரேஸியைப் புகைப்படமெடுத்த காவல்காரி தான்.

செய்தி கேட்டவுடன் குண்டு பெர்த்தா சில நிமிடம் பயங்கர மௌனத்துடன் இருந்தாள். கேட்கக் கேட்க அவள் உடம்பு மேலும் குண்டாகிக் கொண்டு போகிற மாதிரி இருந்தது. "எத்தனை மணிக்குத் தப்பப் போகிறாளாம்?" என்று மட்டுமே கேட்டாள்.

"இன்று பகல் இரண்டு மணிக்கு. அழுக்குத் துணி வைத்திருக்கும் அறையில், லாண்டிரிக் கூடைக்குள் அவளை ஒளித்து வைக்கப் போகிறார்களாம்."

வெகு நேரத்துக்குக் குண்டு பெர்த்தா யோசனையில் ஆழ்ந்திருந்தாள். பிறகு ஒரு காவல்காரியை அணுகி, "நான் உடனே வார்டனைப் பார்க்க வேண்டும்," என்றாள்.

முந்தின இரவு ட்ரேஸிக்குத் தூக்கமில்லை. படபடப்பு அவள் வயிற்றைப் புரட்டியெடுத்தது. சிறையில் அவள் வசித்தது சில மாதங்களே என்றாலும் யுகயுகாந்தரமாய் இருந்து வருவது போல் தோன்றியது. இருட்டை வெறித்து நோக்கியபடி கட்டிலில் படுத்திருந்தபோது கடந்த காலத்தின் நினைவுகள் வடிவம் பெற்றுக் கண்முன்னே ஓடின.

*அம்மா, மாயாஜாலக் கதையில் வருவாளே இளவரசி, அந்த மாதிரி எனக்கு இருக்கிறது, அம்மா. என்னளவு சந்தோஷமாய் யாருமே இருக்க முடியாது அம்மா...*

*ஓ, நீயும் சார்லஸும் கல்யாணம் பண்ணிக் கொள்ள விரும்புகிறீர்கள். அதுதானே?*

*தேனிலவுக்கு எத்தனை நாள் போகப் போகிறீர்கள்?*

*அடி தேவடியாச் சிறுக்கி. சுட்டுட்டியே என்னை!*

*உன்னை உள்ளபடி நான் அறிந்து கொள்ளவில்லை ட்ரேஸி...*

பேப்பரில் வெளிவந்த சார்லஸின் திருமணப் புகைப் படம்.. மணமகளை நோக்கிப் புன்னகை செய்தவாறு...

இதெல்லாம் நடந்தது எத்தனை யுகங்களுக்கு முன்! எவ்வளவு உலகங்களுக்கு அப்பால்!

விடிகாலை மணி அடித்த போது தூக்கிவாரிப் போட எழுந்தாள்.

நன்றாக விழிப்பு வந்த பிறகும் கட்டிலை விட்டு எழுந்திருக்கவில்லை.

அவளையே கவனித்துக் கொண்டிருந்த நீக்ரோக்காரி, "எப்படிம்மா இருக்கு?" என்று கேட்டாள்.

"பிரமாதமாய் இருக்கு," என்று ட்ரேஸி பொய் சொன்னாள். அவள் வாய் உலர்ந்திருந்தது. இருதயம் தப்பும் தவறுமாய் அடித்தது.

"இன்னிக்கு நாம்ப இரண்டு பேருமே இந்த ஜெயிலை விட்டு வெளியே போகிறோம், ட்ரேஸி."

அதை நினைத்துப் பார்க்கவே ட்ரேஸிக்குப் பதைப்பா யிருந்தது. "அ... ஆமாம்," என்றாள்.

"வார்டனின் வீட்டிலிருந்து நீ ஒன்றரை மணிக் கெல்லாம் வந்து விட முடியும் இல்லையா? அதிலொன்றும் கஷ்டம் இல்லையே?"

"ஒரு கஷ்டமும் இல்லை. எப்பவும் பகல் சாப்பிட்டு முடிந்ததும் ஆமி தூங்கிவிடுவாள்."

பாலிடா சொன்னாள்: "தாமதம் பண்ணிவிடாதே. திட்டம் குட்டிச் சுவராகிவிடும்."

"நான் வந்துவிடுவேன்."

நீக்ரோக்காரி தன் படுக்கையின் கீழே கையை விட்டு ஒரு கற்றை கரென்ஸிகளை எடுத்துத் தந்தாள். "கொஞ்ச நாளைக்கு உனக்குப் பணம் தேவைப்படும். இந்தா, இருநூறு டாலர் தான் என்னிடம் இருக்கிறது. இதை வைத்துக் கொண்டு நீ சிறிது காலம் சமாளிக்கலாம்."

ட்ரேஸி கண் கலங்கினாள்: "எர்னி, உனக்கு எப்படி நன்றி..."

"ஷ்! வாயை மூடிக்கிட்டுப் பணத்தை வாங்கிக்கொள்." என்றாள் நீக்ரோக்காரி.

காலை உணவை எப்படியோ விழுங்கி வைத்தாள் ட்ரேஸி. தலைக்குள் மடார் மாடாரென்று இடிக்கிற மாதிரி இருந்தது. உடம்பின் ஒவ்வோர் அணுவும் வலித்தது.

இன்றைய தினத்தை எப்படிச் சமாளிக்கப் போகிறேனோ... ஆனால் சமாளித்துத்தான் ஆக வேண்டும்...

சிறைச்சாலையின் சமையலறையில் ஒரு செயற்கையான நிசப்தம் நிலவியது. தான்தான் அதற்குக் காரணம் என்பது ட்ரேஸிக்குச் சட்டென்று உறைத்தது. எங்களுக்கு விஷயம் தெரியும் என்பது போன்ற பார்வைகள்... கிசுகிசுப்பான பேச்சுக்கள்...

கைதியொருத்தி தப்பிச் செல்லப்போகிறாள் என்பதில் எல்லாருக்குமே ஒரு படபடப்பு. இன்று ட்ரேஸி கதாநாயகி. இன்னும் சில மணிநேரம் தான். அவள் சுதந்திரமாகி விடுவாள்.

அல்லது பிணமாகிவிடுவாள்.

காலைச் சிற்றுண்டியைப் பாதி சாப்பிட்டு விட்டு எழுந்து கொண்டவள் வார்டன் ஜார்ஜின் வீட்டை நோக்கி நடந்தாள். சிறைக் கதவைக் காவலாள் திறந்தான். வெளியே வந்த போது குண்டு பெர்த்தா எதிர்ப்பட்டாள்.

அவள் முகத்தில் ஒரு கோரமான இளிப்புப் பரவி யிருந்தது.

எதற்காக இளிக்கிறாள்? ஏன்?

ட்ரேஸிக்குத் தெரியவில்லை.

காலை நேரம் நத்தை மாதிரி ஊர்ந்தது. ட்ரேஸிக்குப் பைத்தியமே பிடித்து விடும் போலாகிவிட்டது. ஒவ்வொரு நிமிடமும் ஒரு யுகமாக இழுத்துக் கொண்டே போயிற்று.

*"ட்ரேஸி, நாம்ப கண்ணாமூச்சி விளையாடலாமா?" என்று ஆமி கேட்டாள்.*

*எந்த விளையாட்டிலும் ட்ரேஸிக்கு மனம் செல்ல வில்லை. ஆனால் வார்டனின் மனைவி பார்த்துக் கொண்டி ருக்கிறாள். அவளுக்குச் சந்தேகம் ஏற்பட்டு விடக் கூடாது.*

*வலுக் கட்டாயமாக ஒரு புன்னகையை வரவழைத்துக் கொண்டு, "ஓ, விளையாடலாமே? முதலில் நீ ஒளிந்து கொள்," என்றாள்.*

*வார்டனின் வீட்டு முன்பகுதிகளில் அவர்கள் இருந்தார் கள். சிறைச்சாலையின் லாண்டிரி அறை தூரத்தில் தெரிந்தது.*

*சரியாய் ஒன்றரை மணிக்கெல்லாம் அவள் அங்கே இருந்தாக வேண்டும். சிறை யூனிபார்மைக் களைந்து, அவளுக் காகத் தயாரித்துள்ள சாதா உடை அணிய வேண்டும்.*

*ஒன்றே முக்காலுக்கெல்லாம், அழுக்குத் துணிக் கூடைக் குள் அவள் புகுந்து கொள்ள வேண்டும். துணிகள் அவளை மூடிக்கொள்ளும்.*

*இரண்டு மணிக்கெல்லாம் லாண்டிரி ஆள் வருவான். அழுக்குக் கூடை ஒரு கை வண்டியில் இருக்கும். அதைத் தனது லாரிக்குத் தள்ளிச் செல்வான்.*

*இரண்டே காலுக்கு லாரி சிறையை விட்டு வெளியேறி, சலவைத்துறை உள்ள பக்கத்து ஊரை நோக்கிச் செல்லும்.*

*'லாரி டிரைவர் முன் பக்கம் இருப்பான். பின்னால் உள்ள உன்னைக் கவனிக்க மாட்டான். லாரி டவுனை அடைந்து, சிக்னலுக்காக எங்கேயாவது நிற்கும். கதவைத் திறந்து கொண்டு வெளியே இறங்கு. அமைதியாக முகத்தை வைத்துக் கொள். ஏதாவது ஒரு பஸ்ஸைப் பிடித்துக் கொண்டு எங்கே போக வேண்டுமோ அங்கே போ...' நீக்ரோக்காரி சொல்லித் தந்தது திரும்பத் திரும்ப நினைவு வந்தது...*

*ஆமி குரல் கொடுத்தாள் எங்கிருந்தோ. "ட்ரேஸி! என்னைக் கண்டுபிடி பார்க்கலாம்!"*

ஒரு மக்னோலியா மரத்தின் பின்னே ஒளிந்திருந்தாள் ஆமி. பாதி உடம்பு தெரிந்தது. வாயைப் பொத்திக் கொண்டு கிளுகிளுவென்று சிரித்தாள்.

இந்தக் குழந்தையை எப்படிப் பிரிந்திருக்கப் போகிறோம்? நினைக்கையில் வேதனையாக இருந்தது ட்ரேஸிக்கு. இந்தச் சிறைச் சாலையை விட்டு வெளியே போய் எத்தனை காலமானாலும் இரண்டு பேரை மறக்க மாட்டேன். ஒருத்தி, வழுக்கைத் தலையுள்ள நீக்ரோக்காரி. இரண்டாவது இந்தக் குழந்தை ஆமி...

"இதோ வருகிறேன்!" என்று ஆமியை நோக்கி ட்ரேஸி ஓடியபோது

வார்டனின் மனைவி அவளையே கவனித்தபடி இருந்தாள்.

ட்ரேஸி என்னவோ வித்தியாசமாக இருப்பது போல அவளுக்குத் தோன்றியது. 'நானும் காலையிலிருந்து பார்த்துக் கொண்டு இருக்கிறேன். இந்தப் பெண்ணின் மனம் வேறெங்கோ இருக்கிறது. அடிக்கடி கடியாரத்தைப் பார்த்துக் கொள்கிறாள் யாரையோ அல்லது எதையோ எதிர்பார்த்துக் காத்திருக்கிறவள் போல... என்னவாக இருக்கும்?'

பகல் சாப்பாட்டுக்கு வார்டன் வருவார். அப்போது அவரிடம் சொல்லவேண்டும்...

## 21

இன்று சிறையிலிருந்து தப்பி விட வேண்டும்! தப்பிவிட வேண்டும்!

அழுக்குத் துணிக் கூடைக்குள் ஒளிந்து கொண்டு, லாரி மூலம்...

வினாடிக்கு வினாடி ட்ரேஸியின் பதைப்பு அதிகரித்தது.

தோட்டத்தில் ஆமியும் அவளும் சிறிது நேரம் கண்ணா மூச்சி விளையாடினார்கள். கொஞ்ச நேரம் ஒளிந்து

*பிடித்தார்கள். ட்ரேஸி சிறுமி ஆமிக்குக் கதை படித்துக் காட்டினாள்.*

*ஆனால் கவனமெல்லாம் கடியாரத்திலேயே இருந்தது.*

*அப்பாடா! பன்னிரண்டரை!*

*ஆமியின் சாப்பாட்டு நேரம். அவளை அம்மாவிடம் ஒப்படைத்து விட்டு பறக்க வேண்டும்! வீட்டுக்குள் அழைத்துச் சென்றாள்.*

*"மிஸஸ் ஜார்ஜ், நான் கிளம்புகிறேன்," என்றாள் வார்டனின் மனைவியிடம்.*

*"என்னது! கிளம்புகிறாயா? அடடா, உன்னிடம் யாரும் சொல்லவில்லையா ட்ரேஸி?"*

*ட்ரேஸி திகைத்து நின்றாள்.*

*ஸ்யூ தொடர்ந்தாள்: "இன்றைக்குச் சில முக்கியமான அதிகாரிகள் சிறையைப் பார்வையிட வருகிறார்கள், ட்ரேஸி. பகல் சாப்பாட்டுக்கு அவர்கள் இங்கே வருகிறார்கள். அதனால் ஆமி இங்கே தூங்க முடியாது. அவளைத் தோட்டத்துக்கு அழைத்துப் போய் விளையாட்டுக் காட்டி வைத்துக் கொள்."*

*அஃதிர்ச்சியில் வீரிடலாம் போல் இருந்தது ட்ரேஸிக்கு. அடக்கிக் கொண்டு, "நான்... நான்... இருக்க முடியாது, மிஸஸ் ஜார்ஜ்," என்றாள்.*

*ஸ்யூவின் முகத்தில் கடுமை பரவியது. "முடியாதாவது! என்ன சொல்கிறாய்?"*

*அவளுக்குக் கோபம் ஏறுவதைக் கண்டுகொண்டாள் ட்ரேஸி. இவளுக்கு வெறுப்பேற்றி விடக் கூடாது. அப்புறம் வார்டனைக் கூப்பிட்டுச் சொல்லி விடுவாள். பிறகு நாம் ஜெயிலிலேயே அடைபட்டுக் கிடக்க வேண்டியதுதான்...*

*புன்னகையை வரவழைத்துக் கொண்டு, "எதற்குச் சொல்கிறேனென்றால்... ஆமி இன்னும் சாப்பிடவில்லை. அவளுக்குப் பசியாயிருக்கும்... சமையல் செய்யணும்..." என்றாள்.*

"கவலைப்படாதே. உங்கள் இரண்டு பேருக்கும் சாப்பாடு தயாரித்துக் கட்டிக் கொடுத்து விடும்படி சமையல் காரியிடம் சொல்லியிருக்கிறேன். நீ குழந்தையை அழைத்துக் கொண்டு பண்ணைக்குப் போ. அவளை அங்கேயே வைத்துக் கொள். ஆமிக்குப் பிக்னிக் என்றால் பிடிக்கும். இல்லே ஆமி?"

"ஓ! பிக்னிக்னா ரொம்பப் பிடிக்கும்!" என்றாள் குழந்தை குதூகலத்துடன். ட்ரேஸியைக் கெஞ்சலாய்ப் பார்த்து, "ட்ரேஸி, வா, வா, நாம்ப பிக்னிக் போகலாம்!" என்றாள்.

'முடியாது, முடியாது!' என்று ட்ரேஸியின் நெஞ்சு அலறியது.

வார்டனின் மனைவியைப் பார்த்தாள். "நான்... நான் எத்தனை மணிக்கு ஆமியை இங்கே திருப்பி அழைத்துக் கொண்டு வரணும்!"

"மூன்று மணிக்கு வந்தால் போதும். அதற்குள் விருந்தாளிகள் திரும்பிப் போயிருப்பார்கள்."

மூன்று மணிக்கா!

ட்ரேஸிக்கு இதயம் சோர்ந்தது.

சிறைச்சாலை சீர்திருத்தக் குழுவினர் திடீர் விஸிட் டாகத் தான் வந்திருந்தார்கள். குழுவின் தலைவராக வந்திருந்தவர் கவர்னர் வில்லியம் என்பவர். வருடத்துக்கு ஒரு முறை இவர்களை உபசரித்தாக வேண்டியது வார்டன் ஜார்ஜின் வேலை. திடீர் விஸிட் என்று பெயரேயொழிய, கவர்னர் வில்லியம் முன்கூட்டியே தெரிவித்திருந்தார்.

"ஜார்ஜ், இடத்தைச் சுத்தமாக வைத்திருங்கள். பெண் கைதிகளையெல்லாம் முக மலர்ச்சியுடன் எங்களைப் பார்த்துப் புன்னகை செய்யும்படி சொல்லிவையுங்கள். அது போதும். அடுத்த பட்ஜெட்டில் உங்கள் சிறைச் சாலைக்கு அதிக நிதி ஒதுக்குகிற மாதிரி நான் ஏற்பாடு பண்ணுகிறேன்."

சிறைச் காவலர்களுக்கு உத்தரவு பறந்தது. "எல்லா அறைகளையும் தலைகீழாய்ச் சோதனை போட்டு கத்தி, துப்பாக்கி, கஞ்சா எல்லாவற்றையும் அப்புறப்படுத்துங்கள்."

ட்ரேஸி தப்பிச் செல்லப் போகிறாள் என்ற செய்தி கிடைத்தது முதல் குண்டு பெர்த்தா இருப்புக் கொள்ளாமல் தவித்தாள்.

வார்டனைப் பார்க்க வேண்டும் என்று அவள் சொல்லி யனுப்பியதற்குச் சாதகமான பதில் கிடைக்கவில்லை. "இன்றைக்கு வார்டனுக்கு ஏகப்பட்ட வேலை இருக்கிறது. கொஞ்சம் கூட நேரம் கிடையாது. நாளைக்கு வேண்டு மானால்..." என்றாள் வார்டனின் செக்ரட்டரி.

"நாளைக்கா? சரியாப் போச்சு!" என்று வெடித்தாள் குண்டு பெர்த்தா. "இன்னிக்கே நான் வார்டனைப் பார்த்தாக வேண்டும். ரொம்ப முக்கியம்..."

வேறு வழியில்லாமல் வார்டனின் அலுவலக அறைக்கு வெளியே அவளை உட்கார்ந்திருக்கச் சொன்னாள் வார்டனின் செகரட்டரி.

குண்டு பெர்த்தாவின் 'சக்தி' எல்லாருக்கும் தெரியும். வேண்டுமென்றால் சிறைக்குள் கலகத்தை ஆரம்பிப்பாள்.

"இன்னும் எத்தனை நேரம் ஆகும் வார்டன் வர?" குண்டு பெர்த்தா அதட்டினாள்.

"அதிக நேரமாகாது. சில விசிட்டர்கள் வந்திருக் கிறார்கள். காலையிலிருந்து வார்டன் பிஸி."

"கொஞ்ச நேரத்தில் பயங்கர பிஸியாகப் போகிறார்," என்று சொல்லிவிட்டு குண்டு பெர்த்தா கைக் கடியாரத்தைப் பார்த்துக் கொண்டாள். பன்னிரண்டே முக்கால். பரவா யில்லை. நிறைய நேரம் இருக்கிறது...

மேகம் இல்லாமல் வானம் நிர்மலமாயிருந்தது. பூமி கதகதப்பாக இருந்தது.

பசேலென்ற பண்ணைத் தாவரங்களிலிருந்த பல வகையான வாசனைகள் தென்றலோடு கலந்து வந்தன.

குளத்துக்கருகேயிருந்த புல் தரையில் ட்ரேஸி ஒரு ஜமுக் காளத்தை விரித்துப் போட்டிருந்தாள். ஆமி ஒரு ஸாண்ட் விச்சைக் கடித்தபடி சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாள்.

கைக் கடியாரத்தைப் பார்த்தாள் ட்ரேஸி. ஐயோ, மணி ஒன்று! அவளால் நம்ப முடியவில்லை. காலைப் பொழுது அப்படி இப்படியென்று இழுத்துக் கொண்டு போய் விட்டது. பிற்பகல் நேரம் இறக்கை கட்டிக் கொண்டு பறக்கிறது.

ட்ரேஸிக்குக் கையும் காலும் துடித்தன. ஏதாவது செய்தாக வேண்டுமே! இல்லாவிட்டால், விடுதலைக்கான கடைசி வாய்ப்புக் கை நழுவிப் போய்விடுமே! என்ன செய்ய! என்ன செய்ய!

**ம**ணி ஒன்றடித்துப் பத்து நிமிடம். வார்டனின் செகரட்டரி டெலிபோனில் பேசியபின், குண்டு பெர்த்தா விடம், "ஸாரி. இன்றைக்கு உன்னைப் பார்ப்பது முடியாத காரியம் என்று வார்டன் சொல்கிறார். இன்னொரு நாள்..."

நாற்காலியைப் பின்னுக்கு உதைத்துக் கொண்டு எழுந்தாள் குண்டு பெர்த்தா, "முடியாது! இன்றைக்கே நான் வார்டனைப் பார்த்தாக வேண்டும்!"

"நாளைக்கு நிச்சயமாய் உனக்கு நேரம் ஒதுக்கித் தருகிறேன்."

"நாளைக்கா? எல்லாம் குட்டிச்சுவர்!' என்று சொல்ல வாயைத் திறந்தாள் குண்டு பெர்த்தா. ஆனால் சட்டென்று நிறுத்திக் கொண்டாள். ட்ரேஸி தப்பிச் செல்ல முயலுவதைப் பற்றி அவள் வார்டனிடம் மட்டுமே சொல்ல வேண்டும். மற்றவர்களுக்குப் பரவினால் உளவுக்காரி என்ற பட்டம் கிடைத்துவிடும். எல்லாருமாகச் சேர்ந்து அவளைக் கொலை கூடச் செய்து விடுவார்கள்.

ஆனால் அதற்காக விஷயத்தை விட்டுவிட அவள் தயாராயில்லை. ட்ரேஸி தப்பிச் செல்லாமல் தடுத்தாக வேண்டும். ஆனால் அதை எப்படிச் செய்வது?

சிறைச்சாலை நூலகத்துக்குச் சென்றாள். கடைக் கோடி யிலிருந்த மேஜைக்குப் போய் உட்கார்ந்து கொண்டாள். ஒரு துண்டுக் காகிதத்தை எடுத்து இரண்டு வரி எழுதினாள்.

*நூலகக் காப்பாளரான பெண்மணி, ஒரு கைதிக்குப் புத்தகம் எடுத்துத் தருவதற்காக எழுந்து போயிருந்தாள்.*

*காகிதத்தை மடித்து, அவள் மேஜை மீது வைத்துவிட்டு அவசரமாக வெளியேறினாள் குண்டு பெர்த்தா.*

*நூலகக் காப்பாளர் திரும்பி வந்து அந்தக் கடிதத்தைப் பிரித்தாள். இரண்டு தடவை படித்தாள்.*

***"இன்று லாண்டிரி லாரியைச் சோதனை போட்டு அனுப்புவது நலம்."***

*கீழே கையெழுத்து எதையும் காணோம். அசலா? புரளியா?*

*அவளுக்கு எதுவும் புரியவில்லை. டெலிபோனை எடுத்து, "சூபரின்டெண்டுடன் பேச வேண்டும்." என்றாள்.*

**ம**ணி *ஒன்றே முக்கால். முள்ளின் மீது நிற்கிற மாதிரி இருந்தது ட்ரேஸிக்கு.*

*"நீ எதுவுமே சாப்பிடலியே?" என்று ட்ரேஸியை வினவினாள் ஆமி. "கொஞ்சம் ஸாண்ட்விச் எடுத்துக் கோயேன்."*

*"வேண்டாம். சும்மா சும்மா என்னை நச்சரிக்காதே!" என்று ட்ரேஸி வெடுக்கெனச் சொன்னாள். குழந்தையிடம் அவ்வளவு கடுமையாகப் பேச அவள் எண்ணவில்லை. வாயில் வந்துவிட்டது.*

*ஆமி சாப்பிடுவதை நிறுத்திக் கொண்டாள். "ட்ரேஸி, என் மேலே கோபமா? ப்ளீஸ், என்னைக் கோபிச்சுக்காதே ட்ரேஸி. எனக்கு உன்னிடம் எத்தனை பிரியம் தெரியுமா? உன் மேலே எனக்குக் கோபமே வராது." அவளுடைய மென்மை யான கண்கள் பரிதாபமாக மினுமினுத்தன.*

*"எனக்குக் கோபம் இல்லை," என்றாள் ட்ரேஸி. ஆனால் உள்ளுக்குள் ஓர் எரிமலை பொங்கிக் கொண்டிருந்தது.*

*"உனக்குப் பசியில்லேன்னா எனக்கும் பசியில்லை. பந்து போட்டு விளையாடலாம். வா," பையிலிருந்து ஒரு ரப்பர் பந்தை ஆமி வெளியெடுத்தாள்.*

ஒன்று அடித்துப் பதினாறு நிமிடமாகியிருந்தது. இன்னேரம் அவள் லாண்டிரி அறையை நோக்கிப் பாதி வழி போயிருக்க வேண்டும். இங்கிருந்து அந்த இடத்தை அடையக் குறைந்த பட்சம் பதினைந்து நிமிடம் பிடிக்கும். இப்போதே கிளம்பி வேகமாய் நடந்தால் போய்ச் சேர்ந்து விடலாம். ஆனால் ஆமியை எப்படி விட்டுவிட்டுப் போவது?

தூரத்தில் சில கைதிகள் பண்ணையில் வேலை செய்து கொண்டிருப்பதைக் கண்டதும், சட்டென ஒரு யோசனை தோன்றியது.

"பந்து விளையாட உனக்குப் பிடிக்கலியா, ட்ரேஸி?" என்றாள் ஆமி.

ட்ரேஸி சட்டென எழுந்து கொண்டாள். "ஓ, பிடிக்குமே! இன்று நாம் ஒரு புது விளையாட்டு ஆடலாம். முதலில் பந்தைத் தூக்கி எறிகிறேன். அது எவ்வளவு தூரம் போகிறதென்று பார்ப்போம். பிறகு நீ எறி. யாரோட பந்து அதிக தூரம் போகிறதென்று பார்க்கலாமா?"

"ஓ!"

பந்தை வாங்கி, பண்ணை ஆட்கள் வேலை செய்யும் இடத்தை நோக்கி எவ்வளவு முடியுமோ அவ்வளவு வேகமாக வீசி எறிந்தாள்.

"ஹை! எவ்வளவு தூரம் போய்விட்டது!" என்று கை கொட்டிப் பாராட்டினாள் ஆமி.

"நான் போய்ப் பந்தை எடுத்து வருகிறேன். அதுவரை நீ இங்கேயே இரு. என்ன!"

சொல்லிவிட்டு ட்ரேஸி ஓடினாள். சுதந்திரத்தை நோக்கி ஓடினாள். அவள் கால்கள் தரையில் படாமல் பறந்தன.

மணி : ஒன்றடித்துப் பதினெட்டு நிமிடம்

திரும்பிப் பார்த்தபோது - ஐயோ!

# 22

பண்ணையின் குறுக்கே ட்ரேஸி மூச்சைப் பிடித்துக் கொண்டு ஓடினாள்.

மணி ஒன்றடித்துப் பதினெட்டு நிமிடம்.

வேக வேகமாய் ஓடினால் லாண்டிரி அறையை அடைந்துவிடலாம். அவளுக்காக ஒரு சில நிமிடம் அவர்கள் காத்திருக்கக்கூடும். அல்லது காத்திருக்க மாட்டார்களோ?

மேலும் மேலும் வேகமாக ஓடினாள். பின்னால் ஒரு குரல் கேட்டது. ஆமியின் குரல். அதைப் பொருட் படுத்தா மலே ஓடினாள்.

பண்ணை ஆட்கள் வேறு திசையில் போய்க் கொண்டிருந்தார்கள். "இருங்கள்! நில்லுங்கள்!" என்று அவர்களை நோக்கிக் கூவினாள் ட்ரேஸி.

அவர்கள் நின்றார்கள். ட்ரேஸிக்கு மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்கியது.

"என்னம்மா? என்ன விஷயம்?" ஆட்களில் ஒருவன் கேட்டான்.

"வந்து... ஓ.... ஒண்ணுமில்லை." ட்ரேஸிக்கு மூச்சை அடைத்தது. "அங்கே... அந்தச் சின்னக் குழந்தை இருக்கிறாள் பாருங்கள்... வார்டனின் பெண்... அவளைக் கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்கள். எனக்கு ரொம்ப முக்கியமாய் ஒரு வேலை இருக்கிறது... நான்..."

"ட்ரேஸி!"

தூரத்திலிருந்து அவளைக் கூப்பிடும் குரல் கேட்டது. அப்போது தான் ட்ரேஸி திரும்பிப் பார்த்தாள்.

ஐயோ!

குளத்தைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த மதில் சுவரின் மீது ஏறி நின்றிருந்தாள் ஆமி.

"ட்ரேஸி! என்னைப் பார்!" என்று வெகு உற்சாகமாகக் கையை ஆட்டினாள்.

ட்ரேஸி அடித் தொண்டையில் வீரிட்டாள். "ஆமி! இறங்கு! இறங்கு கீழே!"

ஆனால்

பயங்கர திகிலுடன் ட்ரேஸி பார்த்துக் கொண்டிருந்த போதே -

ஆமிக்குப் பாலன்ஸ் தவறியது. குளத்துக்குள் தலை குப்புற விழுந்தாள்.

"ஐயோ! கடவுளே!" ட்ரேஸியின் முகத்தில் ரத்தம் சுண்டி வற்றியது.

இரண்டிலொன்றுதான் இனிமேல்! ஒன்று, குழந்தையைக் காப்பாற்ற வேண்டும்.

அல்லது லாண்டிரி அறைக்கு ஓட வேண்டும்.

இரண்டில் எது?

முடியாது! முடியாது! என் விடுதலைதான் முக்கியம்.

வேறு யாராவது ஆமியைக் காப்பாற்றிக் கொள்வார்கள். இப்போது என்னை நானே காப்பாற்றிக் கொண்டாக வேண்டும்! இந்தச் சிறையை விட்டு நான் தப்பிச் சென்றாக வேண்டும்! இல்லாவிட்டால் நான் செத்து விடுவேன்!

**மணி 1:20**

ட்ரேஸி திரும்பினாள்.

எவ்வளவு வேகமாக முடியுமோ அவ்வளவு வேகமாக ஓடினாள். வாழ்க்கையில் அவ்வளவு வேகமாக என்றைக்கும் அவள் ஓடியது கிடையாது.

பின்னால் யார் யாரோ அவளைக் கூப்பிட்டார்கள் அது அவள் காதில் விழவேயில்லை. காற்றில் மிதக்கிற மாதிரி ஓடினாள். காலிலிருந்து செருப்புக் கழன்று விழுந்து விட்டது கூட அவளுக்குத் தெரியவில்லை. கல்லும் முள்ளுமான பூமி

தன் பாதங்களைக் குத்துவதும் தெரியவில்லை. அவள் இருதயம் தடதடவென்று அடித்துக் கொண்டது. சுவாசப் பை எந்த வினாடியும் வெடித்துவிடும் போலிருந்தது.

ஆனால் அவள் மேலும் வேகமாக, இன்னும் இன்னும் வேகமாக ஓடினாள்.

குளத்தின் மதில் சுவரை அடைந்த பிறகே நின்றாள்.

ஆம். கடைசி நிமிடத்தில் அவளுடைய மனச்சாட்சியே வெற்றி பெற்றது.

குழந்தையை அந்தக் கதியில் விட்டுவிட்டுப் போக அவளால் முடியவில்லை. குளத்துக்கே திரும்பி விட்டாள்.

தனது விடுதலைத் திட்டத்தைக் கூடத் துறந்து விட்டுத் திரும்பி விட்டாள்.

குபீரென்று ஒரு தாவுத் தாவி குளத்தின் மதில் சுவரில் ஏறினாள்.

வெகு கீழே, பயங்கரமான ஆழத்தில், ஆமி கையைக் காலை ஆட்டிக் கொண்டு மூச்சுக்காகத் திக்குமுக்காடித் தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

கண்ணிமைக்கும் நேரம் கூட ட்ரேஸி தாமதிக்கவில்லை.

குதித்தாள்.

சிலீரென்ற தண்ணீரில் தேகம் பட்டபோதுதான் அவளுக்கு ஞாபகம் வந்தது.

''ஐயோ தெய்வமே! எனக்கு நீந்தத் தெரியாதே!'

ஆகஸ்ட் 25'ஆம் தேதி, நியூ ஆர்லியன்ஸ்.

மர்ச்செனட்ஸ் பாங்க்கில் ஒரு கவுண்ட்டரில் இருந்த லெஸ்டர் மிடுக்குடன் தன் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு சுற்று முற்றும் கம்பீரமாகப் பார்த்தான்.

அவனுக்கு வயது நாற்பதை நெருங்கிக் கொண்டிருந்தது. ஆனால் தான் ஒரு கட்டழகுக் காளையென்று அவன் எண்ணம். உதவி கேட்டுத் தன்னிடம் வரும் எந்தப்

பெண்ணையும் தன்னால் வசப்படுத்த முடியும் என்பதில் அவனுக்கு மகா நம்பிக்கை.

இந்த வெள்ளிக்கிழமை காலை லெஸ்டருக்கு, ஜாக்பாட் அடித்து விட்ட மாதிரி மகிழ்ச்சி.

பாங்க்கிற்குள் அந்தப் பெண் நுழையும்போதே கவனித்து விட்டான். ஐயோ, ஐயோ! என்ன கொள்ளை அழகு! கருகரு வென்ற சுருண்ட கூந்தல் என்ன அற்புதமாய்க் கழுத்தில் புரளு கிறது! அந்த இறுக்கமான ஸ்வெட்டரும் ஸ்கர்ட்டும் என்ன வாளிப்பாய் அவளுடைய உடல் வனப்பை வெளிப் படுத்து கிறது!

லெஸ்டரின் கவுண்ட்டரைப் போலவே இன்னும் நாலு கவுண்ட்டர்கள் இருந்தன. அந்த அழகியின் கண்கள் நாலு புறமும் சுழன்று, லெஸ்டரைக் கண்டதும் நின்றன.

லெஸ்டரின் இருதயம் படபடத்தது. அவள் தன்னைப் பார்த்த வினாடியே தாராளமாய் புன்னகையை வீசினான்.

வெற்றி!

அவள் அவனை நோக்கி, அவனுடைய கவுண்ட்ட ருக்கே வந்தாள்.

"குட்மார்னிங்!" என்றான் உற்சாகத்துடன்.

"எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்," என்று மெல்லிய குரலில் அவள் கேட்டதும் -

லெஸ்டர் குஷியாகிவிட்டான்.

"ஓ, கட்டாயம். உங்களுக்கு உதவி செய்யாமலா?"

அவள் முன்புறம் குனிந்தபோது ஜன்னலின் சட்டத்தில் அவள் உடம்பு அழுத்தமாகப் பதிய, அந்தக் கவர்ச்சி அவனைத் தலைகுப்புற விழ வைத்தது.

அவள் மெல்லிய குரலில் "எனக்கு ஒரு சின்னப் பிரசினை," என்றாள்.

அவள் பேச்சில் தென்பட்ட தெற்கத்தி உச்சரிப்பு லெஸ்டரைப் பரவசத்தில் ஆழ்த்தியது. "சொல்லுங்கள். உங்களுக்கு உதவி செய்யத்தானே நான் இருக்கிறேன்"

"உண்மைதான்... ஆனால் நான் ஒரு பயங்கரமான முட்டாள்தனம் பண்ணிவிட்டேன்."

"உங்களை போன்ற அழகான பெண் எந்த முட்டாள் தனமும் பண்ண முடியாது."

"இல்லையில்லை... நிஜமாகவே முட்டாள்தனம்..." அவள் தன் மிருதுவான பழுப்பு நிறக் கண்களை விரித்து, கலவரம் படர மலங்க மலங்க விழித்தாள். "நான் ஜோசப் ரொமானோவின் செக்ரட்டரி. இங்கே பாங்க்கில் கேட்டு, செக் புத்தகம் புதிதாக வாங்கி வைக்கும்படி போன வாரமே என்னிடம் சொன்னார். நான் அடியோடு மறந்து விட்டேன். இப்போது அவருடைய செக் புத்தகம் பெரும்பாலும் தீர்ந்து விட்டது. செக் காகிதம் இல்லையென்றால் ரொமானோ என்னை என்ன செய்வாரோ, நினைக்கவே பயமாயிருக் கிறது..." கடகடவென்று ஆனால் வேதனையான குரலில் அவள் சொல்லி முடித்தாள்.

ரொமானோவைப் பற்றி லெஸ்டருக்கு நன்றாய்த் தெரியும். ரொமானோ அப்படியொன்றும் பெரும் தொகை போட்டு வைக்கவில்லையென்றாலும் பாங்க்கின் முக்கிய வாடிக்கைக்காரர்களில் ஒருவன்.

ஆசாமிக்கு அழகான செக்ரட்டரியைத் தேர்ந்தெடுக்கத் தெரிந்திருக்கிறது என்று ரொமானோவை மனத்துக்குள் பாராட்டினான் லெஸ்டர். மீண்டும் ஒரு புன்னகை செய்தான். "அதனால் என்ன? இது ஒன்றும் பெரிய விஷயமில்லை, மிஸஸ்..."

"மிஸ் லூரின்," என்றாள் அவள்.

மிஸ்ஸா! அப்படியானால் நமக்கு இன்று மகா அதிர்ஷ்டமான நாள்தான் என்று எண்ணிக் கொண்டான் லெஸ்டர்.

"செக் புத்தகத்துக்கு இப்போதே ஆர்டர் கொடுத்து விடுகிறேன். இரண்டு மூன்று வாரத்தில் உங்கள் கைக்கு வந்துவிடும்."

அவள் மெல்ல ஒரு பெருமூச்சு விட்டாள். அந்தப் பெருமூச்சில் லெஸ்டருக்கு உலகமே சுழன்றது.

“ஐயோ, அது ரொம்ப லேட்டாகிவிடும் சார். மிஸ்டர் ரொமானோ ஏற்கெனவே என்மேல் கோபமாக இருக்கிறார். எனக்கு எந்த வேலையும் ஓடவில்லை, சார். உங்களுக்குத் தெரியாததா?” அவள் மேலும் முன்னுக்குக் குனிந்து மேலும் கவர்ச்சி காட்டினாள். “சார், எப்படியாவது சீக்கிரமே செக்குகளைத் தந்தால் தேவலை சார். அதற்காக நான் ஏதாவது தரணும் என்றாலும் தருகிறேன்.”

லெஸ்டர் யோசனையுடன், “ஐம் ஸாரி, லூரின். அது ரொம்பக் கஷ்டம்,” என்றவன் அவள் கண் முனையில் நீர் தளும்பி நிற்பதைக் கண்டான்.

“சார்… இதனால் என் வேலையே போனாலும் போய் விடும். ப்ளீஸ், நான் எது வேண்டுமானாலும் செய்கிறேன்…”

அவள் அப்படிச் சொன்னது அவன் செவியில் தேவலோக கானமாக விழுந்தது.

“சரி, என்ன செய்யலாம் என்று பார்க்கிறேன்…” என்றான் அமர்த்தலாக. “செக் புத்தகம் உடனே தேவை என்று சம்பந்தப் பட்ட இலோகாவுக்குப் ஃபோன் செய்கிறேன். திங்கள்கிழமை உனக்குக் கிடைக்கும். சரிதானா?”

“பிரமாதம் சார், பிரமாதம்!” அவள் குரலில் நன்றி நிரம்பி வழிந்தது.

“உன் ஆபீஸ் அட்ரசுக்கே செக் புத்தகங்களை அனுப்பி விடுகிறேன்…”

“நான் இங்கேயே வந்து வாங்கிக் கொள்கிறேன் சார்… நான் பண்ணின மடத்தனம் மிஸ்டர் ரொமானோவுக்குத் தெரிய வேண்டாம்…”

லெஸ்டர் பெரிய மனித தோரணையுடன், “இதிலே என்ன மடத்தனம், லூரின்? ஞாபகமறதி என்பது எல்லா ருக்குமே சகஜம் தானே…” என்றான்.

அவள் அவனைக் கனிவுடன் நோக்கினாள். "உங்களை மறக்கவே மாட்டேன். திங்கள்கிழமை வந்து பார்க்கிறேன்."

"நான் இங்கேதான் இருப்பேன்."

ஜொலிக்கும் புன்னகையொன்றை அவன் மீது வீசி விட்டு, மெதுவே பாங்க்கை விட்டு வெளியேறினாள் அவள். அந்தப் பின்னழகின் ஒயிலில் சொக்கிப் போன லெஸ்டர், எழுந்து ஃபைல்கள் உள்ள ஷெல்பைத் திறந்தான். ரொமானோவின் அக்கவுண்ட் எண் என்ன என்று பார்த்து, செக் புத்தகங்கள் உடனே தரும்படி சம்பந்தப்பட்ட இலாகாவுக்குப் ஃபோன் செய்தான்.

**ப**ல சாதாரணமான ஓட்டல்கள் நியூ ஆர்லியன்ஸில் இருந்தன. வாடகை மலிவு. அறைகள் ஆடம்பரமில்லாமல் எளிமையானவை.

அதுபோன்ற ஓர் ஓட்டலில் தான் ட்ரேஸி தங்கி யிருந்தாள். சிறையுடன் ஒப்பிடும்போது இந்த இடம் அரண் மனைதான்.

பாங்க்கில் லெஸ்டரைப் பார்த்து விட்டு ஓட்டல் அறைக்குத் திரும்பியவள், தன் கறுப்பு 'விக்' கைக் கழற்றி விட்டு, கூந்தலைக் கோதி விட்டுக் கொண்டாள். கண்ணில் அணிந்திருந்த கான்டாக்ட் லென்ஸை அகற்றினாள். முகத்தில் அப்பியிருந்த மேக்கப்பைக் கழுவிக் கொண்டாள். அறையி லிருந்த ஒரே நாற்காலியில் உட்கார்ந்து ஆசுவாசப் படுத்திக் கொண்டாள்.

எல்லாம் நல்லபடி நடக்கிறது என்ற திருப்தி அவள் முகத்தில் நிலவியது. நல்ல காலம், அம்மாவுக்கு ரொமானோ கொடுத்திருந்த செல்லாத செக்குகளைக் கொண்டு அவனுக்கு எந்தப் பாங்க்கில் அக்கவுண்ட் இருக்கிறது என்பதை அறிந்து கொள்ள முடிந்தது.

'ரொமானோவா! அவனை நீ ஒன்றும் பண்ண முடியாது, ட்ரேஸி.' என்று முன்னொரு நாள் நீக்ரோக்காரி சொன்னது ஞாபகம் வந்தது.

'எர்னி! நீ சொன்னது தப்பு. ரொமானோவை மட்டு மல்ல, ஒவ்வொருவரையும் கணக்குத் தீர்க்கத்தான் போகிறேன்... ஒவ்வொருவரையும்... ஒவ்வொருவரையும்...'

ட்ரேஸி கண்களை மூடிக் கொண்டாள்.

சிறையிலிருந்து தனக்கு விடுதலை கிடைத்த நிகழ்ச்சிகள் மளமளவென்று அவள் மனக் கண் முன் ஓடின.

## 23

குழந்தை ஆமியைக் காப்பாற்றுவதற்காகத் தன்னையும் மறந்து ட்ரேஸி குளத்தில் குதித்தபோது-

சிலீரென்ற கறுத்த நீருக்குள் அமிழ்ந்து போனாள்.

முழுகிக் கொண்டிருக்கிறோம் என்ற உணர்வில் திகில் அவளைப் பிடித்தாட்டியது. இருந்தாலும் தண்ணீருக்குள் ஒரு துழாவுத் துழாவிய போது அவள் கைகளில் குழந்தை சிக்கினாள். சரேலென்று பிடித்துத் தண்ணீர்ப் பரப்புக்கு மேல் அவளைத் தூக்கினாள். பயங்கரமான அச்சத்தில் இருந்த ஆமி திமிறி விடுபடப் போராடினாள். அந்த முயற்சி யில் தானும் மூழ்கி, தன்னுடன் ட்ரேஸியையும் தண்ணீருக் குள் இழுத்தாள். அவளுடைய கைகளும் கால்களும் உதறிப் பறந்தன.

ட்ரேஸிக்கு சுவாசப் பை வெடித்து விடும் போலிருந்தது. குழந்தையை மரணப் பிடியாகப் பிடித்துக் கொண்டு, அந்தத் தண்ணீர்ச் சமாதியிலிருந்து விடுபட்டு மேலே வந்தாள். ஒவ்வோர் அணுவாகத் தான் வலு இழந்து கொண்டிருப்பதை அறிந்தாள் 'இரண்டு பேருமே உயிர் பிழைக்கப் போவதில்லை... இரண்டு பேருமே இறக்கப் போகிறோம்...' என்று எண்ணிக் கொண்டாள்.

எங்கெங்கிருந்தோ பல குரல்கள் கூவுவது கேட்டது. திடீரென்று யாரோ குளத்தில் குதித்தார்கள். அவள் கையி

லிருந்த குழந்தையைப் வாங்கிக் கொள்ள முயன்றார்கள். "இல்லை! குழந்தையைக் கொடுக்க மாட்டேன்!" என்று வாய்விட்டு அலறினாள். வலுவான கரங்கள் அவள் இடையைப் பலமாகப் பற்றிக் கொண்டன. "எல்லாம் சரியாகி விட்டது! நான் இருக்கிறேன்! பயப்படாதே," என்று குளத்தில் குதித்தவர் தைரியம் சொல்வது காதில் விழுந்தது.

பித்துப் பிடித்தவள் போல் சுற்று முற்றும் பார்த்தபோது, ஓர் ஆணின் கரங்கள் தன்னைப் பத்திரமாகப் பிடித்துக் கொண்டிருப்பதைக் கண்டாள். பண்ணையில் வேலை செய்து கொண்டிருந்தவர்களில் ஒருவன்...

சில நிமிடங்கள் தான். கொடூரமான ஆழமான அந்தக் குளத்திலிருந்து அவளையும் ஆமியையும் வெளியே கொண்டு வந்து விட்டார்கள்...

தினசரிப் பத்திரிகைகளில் ஒரு மூலையில் சின்னதாக வந்திருக்க வேண்டிய செய்திதான். ஆனால் சூழ்நிலை காரணமாகப் பெரிய செய்தியாகிவிட்டது.

சிறை வார்டனின் குழந்தை தண்ணீரில் விழுந்து விட்டது! அதைக் காப்பாற்றுவதற்காக ஒரு கைதி தண்ணீரில் குதித்திருக்கிறாள்! அவளுக்கோ நீச்சலே தெரியாது! இது எத்தனை பெரிய விஷயம்!

எனவே, பத்திரிகை நிருபர்களும் டெலிவிஷன் பேட்டி யாளர்களும் பிரமாதப்படுத்தி விட்டார்கள் இந்தச் செய்தியை. ஒரே நாளில் ட்ரேஸி ஹீரோயினாகி விட்டாள்.

**சி**றைச்சாலையைப் பார்வையிட வந்திருந்த கவர்னர், வார்டன் ஜார்ஜுடன் அவளைப் பார்க்க ஆஸ்பத்திரிக்கு வந்தார்.

"ரொம்பத் துணிச்சலான காரியம் அம்மா நீ செய்தது," என்றார் வார்டன். "நானும் என் மனைவியும் உனக்கு எப்படி நன்றி சொல்லப் போகிறோம்!" உணர்ச்சி மிகுதியினால் அவர் குரல் தழுதழுத்தது.

ட்ரேஸி பலவீனமாக இருந்தாள். அந்தப் பயங்கர அனுபவத்தை நினைக்கையில் இப்போது கூட அவளுக்கு உடம்பு நடுங்கியது. “ஆமி எப்படி இருக்கிறாள்?”

“ஜம்மென்று இருக்கிறாள்.”

ட்ரேஸி கண்களை மூடிக் கொண்டாள். ஆமிக்கு ஏதாவது நேர்ந்திருந்தால் எனக்குத் தாங்கவே தாங்காது... அந்தக் குழந்தை யாசித்ததெல்லாம் வெறும் அன்புதான். அதைக் கொடுக்க மறுத்து, இரும்புத்தனமாக இருக்கப் பார்த்தோமே! அவளைப் பற்றி அவளுக்கே அவமானமாக இருந்தது.

சிறையிலிருந்து தப்புவதற்காகப் போட்டிருந்த திட்டமெல்லாம் குட்டிச் சுவராகிவிட்டது. பரவாயில்லை. இன்னொரு முறையும் இது போல் நேருமானால் இன்னொரு முறையும் இதேபோல் தான் செய்திருப்போம் என்று தோன்றியது.

விபத்தைப் பற்றிச் சுருக்கமாக விசாரணை நடைபெற்றது.

“என்மேலே தான் தப்பு,” என்று சிறுமி ஆமி தன் தந்தையிடம் தெரிவித்தாள். “நாங்க இரண்டு பேரும் பந்து போட்டு விளையாடிக் கொண்டிருந்தோம். ட்ரேஸி என்னை அங்கேயே இருன்னு சொல்லிட்டுப் பந்தை எடுக்க ஓடினாங்க. நான் தான் பந்து எங்கே போயிருக்குன்னு பார்க்கிறதுக்காகக் குளத்துச் சுவர் மேலே ஏறினேன். தடால்னு தண்ணியிலே விழுந்திட்டேன். என்னைச் காப்பாத்தறதுக்காக ட்ரேஸியும் குளத்திலே குதிச்சிட்டாங்க, அப்பா.”

ஆஸ்பத்திரியில் ட்ரேஸியை ஒரே ஒரு தினம் வைத்துக் கொண்டிருந்தார்கள். பிறகு வார்டனின் அலுவலகத்துக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கே ஒரு நிருபர்கள் பட்டாளம் காத்திருந்தது. டெலிவிஷன் குழு காமெராக்களுடன் நின்றிருந்தது. இப்படியொரு மனிதாபிமானச் செய்கையைச்

*செய்த பெண்ணைப் பேட்டி காண எல்லோரும் துடித்தார்கள்.*

*அன்று இரவே ட்ரேஸியின் தீரச் செயல் பிரம்மாண்டமான செய்தியாக வளர்ந்துவிட்டது. நாடெங்கும் உள்ள பத்திரிகைகளும் டி.வி. நிலையங்களும் அவளைப் பற்றிய செய்திகளை வெளியிட்டன.*

*செய்திகள் பரவப் பரவ, நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் வார்டன் ஜார்ஜுக்குக் கடிதங்களும் தந்திகளும் வந்து குவிந்தன —*

*ட்ரேஸியை விடுவிக்க வேண்டுமென்று!*

*வார்டனுடன் கவர்னர் இது குறித்து விவாதித்தார்.*

*"சில சீரியஸ் குற்றங்களுக்காகத் தண்டனை பெற்றவள் ட்ரேஸி," என்றார் வார்டன்.*

*கவர்னர் சிறிது யோசித்து விட்டுச் சொன்னார்: "ஆனால் இது அவளுடைய முதல் குற்றம்தானே? இதற்கு முன் வேறு எதுவும் செய்யவில்லையே?"*

*"இல்லை சார்."*

*"அவளுக்காக ஏதாவது உதவி செய்ய வேண்டுமென்று ஏகப்பட்ட பேர் என்னிடம் சொல்கிறார்கள்."*

*"ஆமாம் சார். என்னிடமும் தான்."*

*கவர்னர் ஒரு சுருட்டை பற்ற வைத்துக் கொண்டார். "நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"*

*வார்டன் ஜார்ஜ் எச்சரிக்கையுடன் பேசினார்: "சார், ட்ரேஸி காப்பாற்றியது என் குழந்தையை. ஆகவே இதில் நான் தனிப்பட்ட முறையில் சம்பந்தப்பட்டிருக்கிறேன். இருந்தாலும் ஒன்று சொல்ல வேண்டும் சார். கிரிமினல் ரகத்தைச் சேர்ந்தவளில்லை ட்ரேஸி. அவளை வெளியே விடுவதால் சமூகத்துக்கு எந்த ஆபத்தும் ஏற்பட்டுவிடாது. அவளுக்கு மன்னிப்புக் கொடுத்து விடுதலை செய்யலாம் என்று நான் பலமாகச் சிபாரிசு செய்கிறேன் சார்."*

வார்டனின் பேச்சில் கவர்னருக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. காரணம், அந்த வருஷம் அவர் தேர்தலுக்கு நிற்கத் திட்ட மிட்டிருந்தார். எனவே இது தனக்கு ஒரு நல்ல விளம்பரமாக இருக்குமென்று எண்ணினார்.

வார்டனின் மனைவி, கணவனுடன் ட்ரேஸியைப் பற்றிப் பேசினாள். பிறகு ட்ரேஸியிடம் சொன்னாள். "நீ எங்களுடனேயே வந்து தங்கியிருக்கலாம், ட்ரேஸி. எக்ஸ்டி ராவாக இங்கே ஓர் அறை இருக்கிறது. நீ முழு நேரமும் எங்களுடனேயே இருக்கலாம்."

"ரொம்ப நன்றி அம்மா, வந்து விடுகிறேன்," என்றாள் ட்ரேஸி நன்றியுணர்வோடு.

அந்த ஏற்பாடு ட்ரேஸிக்குப் பிரமாத மகிழ்ச்சி தந்தது. இனி ஒவ்வோர் இரவும் சிறைக்குப் போய் அடைபடத் தேவையில்லை. அது மட்டுமல்ல. ஆமியிடமிருந்து ஒதுங்கி யிருந்தவள் முற்றிலும் மாறிவிட்டாள். ட்ரேஸியிடம் குழந்தைக்குக் கொள்ளைப் பிரியம் உண்டாயிற்று. ட்ரேஸியும் அந்த அன்பை எதிரொலித்தாள். ஆமியுடன் இருக்கும் ஒவ்வொரு நிமிடத்திலும் அந்தச் சந்தோஷத்தில் திளைத்தாள். இருவரும் சேர்ந்து விளையாடினார்கள். டி.வி.யில் நாடகங் களும் வேடிக்கைப் படங்களும் பார்த்தார்கள். கதைகள் படித்தார்கள். குடும்பத்தில் ஒருத்தியாக ஆகி விட்டாள் ட்ரேஸி.

ஆனால் ஏதாவது வேலையாகச் சிறைக்குப் போகும் போதெல்லாம் குண்டு பெர்த்தாவைச் சந்திக்க நேரிட்டது.

"அதிருஷ்டக்காரி தாண்டீ நீ, தேவடியாச் சிறுக்கி!" என்று குண்டு பெர்த்தா உறுமுவாள். "ஆனால் பார்த்துக் கொண்டேயிரு. இங்கே தான் ஒரு நாள் நீ திரும்ப வேண்டும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டுதான் இருக்கிறேன்!"

அதைக் கேட்கும்போதெல்லாம் ட்ரேஸி பயத்தில் நடுங்கினாள்.

ஆமியைக் குளத்திலிருந்து ட்ரேஸி காப்பாற்றிய மூன்றாவது வாரம்.

முற்றத்தில் ஆமியுடன் விளையாடிக் கொண்டிருந்தாள் ட்ரேஸி. வார்டனின் மனைவி ஸ்யூ அவளைக் கூப்பிட்டாள். "ட்ரேஸி, வார்டன் போன் செய்தார். உன்னை உடனே தன் ஆபீசுக்கு வரச் சொல்கிறார்," என்றாள்.

ட்ரேஸியைப் பயம் கவ்விக் கொண்டது. திரும்பவும் சிறைக்கே அனுப்பிவிடப் போகிறார்களோ நம்மை? பய முறுத்தியதுபோல் குண்டு பெர்த்தா தன் செல்வாக்கைக் காட்டி விட்டாளோ? அல்லது குழந்தை ஆமி நம்முடன் ரொம்ப நெருங்கிப் பழகுவது வார்டனின் மனைவிக்குப் பிடிக்கவில்லையோ?

"இதோ போகிறேன் அம்மா."

அறையின் வாசலில் நின்றிருந்தார் வார்டன் ஜார்ஜ். "உட்காரும்மா," என்றார்.

அவர் சொல்லப்போவது என்ன என்று அவர் குரலிலிருந்து அறிய முயன்றாள் ட்ரேஸி. முடியவில்லை.

"உனக்கு ஒரு செய்தி வைத்திருக்கிறேன்." சிறிது நிறுத்தினார். ஏதோ ஓர் உணர்ச்சியில் அவர் சிக்கியிருப்பது தெரிந்தது. என்ன என்று தான் புரியவில்லை. "இப்போது தான் கவர்னரிடமிருந்து உத்தரவு வந்தது," என்று அவர் தொடர்ந்தார். "உனக்குப் பரிபூரணமான மன்னிப்பு அளித்து விட்டார்கள். அதுவும் இந்த வினாடியிலிருந்தே."

என்ன, என்ன? கடவுளே! காதில் விழுவது நிஜமானது தானா! அல்லது நானாக ஏதோ நினைத்துக் கொள்கிறேனா?

என்ன சொல்வதென்று தெரியவில்லை. 'இவருக்கு மட்டும் உண்மை தெரிந்தால்!' என்று எண்ணிக் கொண்டாள். ஆமிக்கு அந்த விபத்து நேர்ந்திராவிட்டால், நாம் அந்தக் குழந்தையைக் காப்பாற்றப் போயிராவிட்டால், இந்நேரம் சிறையிலிருந்து தப்பி ஓடிக் கொண்டிருப்போம்.

சிறைக் காவலர்கள் துப்பாக்கியும் கையுமாக, வேட்டை நாய்கள் புடைசூழ, நம்மைத் துரத்திக் கொண்டிருப்பார்கள் நாலு புறமும்! வார்டனுக்கு அந்த உண்மை தெரியாது!

"நாளை மறுநாள் உனக்கு விடுதலை, ட்ரேஸி."

அவள் திட்டமிட்டிருந்த விடுதலை. அவள் திட்டமிடாமலே கிடைத்துவிட்டது!

ஆக, எல்லாம் உண்மைதான். நாம் விடுதலையாகப் போவது நிஜம் தான். அந்தப் பரவசத்தில் காலோடு தலை ஒரு பலவீனம் அவளைப் பற்றிக் கொண்டது. நாற்காலியின் கைகளைப் பிடித்துக் கொண்டாள். தெம்பு வந்தது. குரலில் உறுதி தொனிக்க, "நன்றி சார். நான் வெளியே போய்ப் பல காரியங்களைச் செய்ய விரும்புகிறேன்," என்றாள்.

ட்ரேஸிக்கு, அன்று சிறையில் கடைசி நாள். அவள் பிரிவில் இருந்த பெட்டி என்ற கைதி அவளிடம் வந்தாள். நாற்பது வயதிருக்கும். ஆனால் இளமையாயும் அழகாயும் இருந்தாள்.

"ட்ரேஸி, நீ இன்று விடுதலையாகிப் போகிறாய் என்று கேள்விப்பட்டேன. வெளியே உனக்கு உதவி தேவைப்பட்டால் இவரைப் போய்ப் பார். நியூயார்க்கில் இருக்கிறார்," என்றவள் ஒரு விலாசத்தைக் காகிதத்தில் குறித்துத் தந்தாள். "கைதிகள் மறுவாழ்வுக் குழுவில் இருக்கிறார். மார்கன் என்று பெயர். உன்னைப் போல மாஜி கைதிகளுக்கு உதவிகள் செய்வார்."

"ரொம்ப நன்றி, பெட்டி, ஆனால் இதற்குத் தேவையிருக்காது என்று..."

"எதற்கும் விலாசத்தை வைத்துக்கொள். எப்போது என்ன உதவி தேவைப்படுமோ யாருக்குத் தெரியும்!"

இரண்டு மணி நேரத்துக்கெல்லாம் ட்ரேஸி சிறைக் கதவுகளுக்கு வெளியே வந்தாள். டெலிவிஷன் காமெராக்கள் காத்திருந்தன. பத்திரிகை நிருபர்கள் நின்றிருந்தார்கள். அவள் யாருடனும் பேசவில்லை. ஆனால் சிறுமி ஆமி தன் அம்மா

வின் பிடியிலிருந்து திமிறி விடுபட்டு ஓடி வந்து அவளைக் கட்டிக் கொண்ட போது, காமெராக்கள் விர் விர்ரென்று சுழன்றன. இப்படிப்பட்ட மனிதாபிமானச் செய்திக்காகத் தான் அவர்கள் காத்திருந்தார்கள்!

அன்றைய மாலைப் பத்திரிகையில் அந்தப் புகைப்படம் பெரிதாக இடம் பெற்றது.

விடுதலை! சுதந்தரம்!

அது உயிரற்ற வெறும் சொல்லாக இருக்கவில்லை ட்ரேஸிக்கு. ஜீவனுள்ள, வடிவம் உள்ள, போற்றிப் பாதுகாக்க வேண்டிய புதிய வாழ்க்கை!

இனி அடிமைக் காற்றைச் சுவாசிக்க வேண்டாம். இனி அந்தரங்கம் இல்லையே என்று பயப்பட வேண்டாம். இனி சோற்றுக்காக க்யூவில் போய் நிற்க வேண்டாம். இனி எப்போது மணி அடிக்கப்போகிறது என்று காதைத் தீட்டிக் கொண்டு காத்திருக்க வேண்டாம்.

இனி, சுடுநீரில் குளிக்கலாம். இனி வாசனை சோப்புக் களைத் தேய்த்துக் கொள்ளலாம். இனி மிருதுவான அழகிய உடைகளை அணியலாம். இனி ஹைஹீல் ஷூக்கள் போடலாம். இனி அவளுக்கு நம்பர் கிடையாது. இனி அவளுக்கென்று ஒரு பெயர் உண்டு.

இனி அவள் இஷ்டப்படி வாழலாம். இனித் தன் திட்டங் களைச் சுதந்திரமாகச் செயல்படுத்தலாம்.

## 24

பிலடெல்பியா.

ட்ரேஸியைக் காதலித்து ஏமாற்றிய சார்லஸ் டெலிவிஷன் பார்த்துக் கெண்டிருந்தான்.

சிறையிலிருந்து விடுதலையாகி வரும் ட்ரேஸியை டி.வி.யில் காட்டிக் கொண்டிருந்தார்கள்.

'இன்னும் கூட அழகாய்த் தான் இருக்கிறாள்!' என்று எண்ணிக் கொண்டான் சார்லஸ். இப்போது பார்க்கையில், 'இவள் மீது அத்தனை குற்றங்கள் சுமத்தப்பட்டிருந்ததே?.. ஒருநாளும் அதையெல்லாம் இவள் செய்திருக்க முடியாது,' என்று அவனுக்குத் தோன்றியது.

அறையின் இன்னொரு கோடியில் ஸ்வெட்டர் பின்னிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் அவனுடைய மனைவி. 'மரக்கட்டை மாதிரி இருக்கிறாள்! சே, நாம் தப்பு செய்து விட்டோமோ!' என்று எண்ணிக் கொண்டான் சார்லஸ்.

துப்பறியும் நிபுணனான டேனியல் கூப்பரும் டி.வி.யில் ட்ரேஸியைப் பார்த்தான். அவளுக்கு விடுதலை கிடைத் ததைப் பற்றி அவன் சிறிதும் அலட்டிக் கொள்ளவில்லை. டெலிவிஷனை அணைத்து விட்டு, தான் பார்த்துக் கொண்டிருந்த ஃபைலில் மீண்டும் கவனத்தைச் செலுத்தலானான்.

ரொமானோவும் டி.வி.யில் ட்ரேஸியைப் பார்த்தான். பலமாகச் சிரித்தான். அதிர்ஷ்டக்காரச் சிறுக்கி! இத்தனை நாள் ஜெயிலில் இருந்ததால் குட்டி எல்லாவற்றிலும் தேர்ந்திருப்பாள். இழுத்த இழுப்புக்கு வரக்கூடியவளாக மாறியிருப்பாள். இருக்கட்டும், இருக்கட்டும். என்றாவது ஒருநாள் மறுபடி இவளைச் சந்திக்காமலா இருக்கப் போகிறேன்!

இப்போதெல்லாம் அவன் மகா சந்தோஷத்தில் இருந்து வந்தான். ட்ரேஸி திருடியதாகச் சொன்ன ரெனாயிர் ஓவியத்தை ஒரு திருட்டு வியாபாரியின் மூலமாக ஜூரிச்சில் ஒரு பணக்காரனுக்கு விற்றுவிட்டான். இன்ஷ்யூரன்ஸ் நிறுவனம் கொடுத்தது ஐந்து லட்சம் டாலர். திருட்டு விற்பனையில் கிடைத்தது இன்னோர் இரண்டு லட்சம். அதிலே ஒரு பங்கை, தன் பாஸ் ஆர்ஸெட்டிக்கும் தந்தான். பண விஷயத்தில் ஆர்ஸெட்டியிடம் எந்தத் தகராறும் அவன் வைத்துக் கொள்வது கிடையாது. தகராறு செய்தவர்களுக்கு என்ன கதி நேர்ந்ததென்று அவன் பார்த்திருக்கிறான்.

திங்கள்கிழமை விடிந்தது.

ட்ரேஸி தன் வேடத்தை மாற்றிக் கொண்டாள். இப்போது அவள் லூரின் என்ற கவர்ச்சிக் கன்னி.

நியூ ஆர்லியன்ஸ் பாங்க்கினுள் தருணம் பார்த்து நுழைந்தாள். கூட்டம் நிரம்பி வழியும் நேரம் அது.

லெஸ்டரின் ஜன்னல் முன்னே பல பேர் க்யூவில் நின்றிருந்தனர். ட்ரேஸியும் நின்று கொண்டாள். அவளைப் பார்த்ததும் லெஸ்டரின் முகம் மலர்ந்து பளபளத்தது. ஆகா! அன்றைக்குப் பார்த்ததைக் காட்டிலும் இன்னும் எத்தனை அழகாக இருக்கிறாள் இவள்!

ட்ரேஸியின் முறை வந்ததும், "செக் புத்தகங்கள் வாங்குவது ரொம்பக் கஷ்டமாயிட்டுது, லூரின், இருந்தாலும் உனக்காகச் செய்து முடித்து விட்டேன்." என்றான் பெருமையுடன்.

அவன் உதவியை நெஞ்சாரப் பாராட்டுவது போல அவள் முகத்தில் ஒரு மலர்ந்த புன்னகை பூத்தது. "பிரமாதம் சார், உங்கள் உதவியை மறக்கவே மாட்டேன்."

லெஸ்டர் மேஜையின் இழுப்பு அறையைத் திறந்து, பத்திரமாக வாங்கி வைத்திருந்த செக் புத்தகக் கட்டை எடுத்து அவளிடம் தந்தான். "இதோ நானூறு காலி செக்குகள் இருக்கிறது. போதும் இல்லையா?"

"ஓ, தாராளமாகப் போதும் சார்." லெஸ்டரின் கண்களைப் பார்த்து ஒரு பெருமூச்சு விட்டாள் ட்ரேஸி. "என் உயிரையே காப்பாற்றி விட்டீர்கள், சார்."

லெஸ்டருக்கு உடம்பெல்லாம் ஒரு சிலிர்ப்புப் பரவியது. "உதவி செய்யத்தானே மனிதராகப் பிறந்திருக்கிறோம்... இல்லையா லூரின்?"

"ஆமாம், மிஸ்டர் லெஸ்டர்."

"இதோ பார். நீயும் இந்தப் பாங்கில் ஒரு கணக்கு ஆரம்பித்துக் கொள், லூரின். உன் விஷயங்களை நான்

பார்த்துக் கொள்கிறேன். நிஜமாகவே பார்த்துக் கொள்கிறேன். என்ன?"

"நீங்கள் சொல்லணுமா சார்?"

"இன்றிரவு நீயும் நானும் ஒட்டலுக்குச் சாப்பிடப் போய் அதைப் பற்றிப் பேசலாமே?" என்றான் லெஸ்டர்.

"ஓ! ரொம்ப சந்தோஷம் சார்."

"உன்னை எங்கே வந்து பார்க்கட்டும்!"

"நானே வருகிறேன், லெஸ்டர்!" என்று கூறிவிட்டு ட்ரேஸி மெதுவே நகர்ந்தாள்.

"ஒரு நிமிஷம்," என்று அவளைக் கூப்பிட முயன்றான் லெஸ்டர். அதற்குள் அடுத்த ஆள் வந்து, தன் கணக்குப் புத்தகத்தை நீட்டி விட்டான்.

ட்ரேஸி பாங்க்கின் இன்னொரு மூலைக்குச் சென்று, செக் புத்தகங்களைத் திறந்தாள். செக்குகளை அவள் லட்சியம் செய்யவில்லை. பணம் கட்டுவதற்கான சலான்களும் அவற்றுடன் கூட இருந்தன. அவற்றைப் பலவிதமாகப் பூர்த்தி செய்தாள்.

பாங்க்கில் வேலை செய்திருந்ததால் அவளுக்கு அமெரிக்க பாங்க்குகளின் கம்ப்யூட்டர் நடைமுறை தெரிந்திருந்தது.

ஒருவருடைய கணக்கு எண் தெரிந்தால், பணம் கட்டும் காகிதங்களின் மூலம் அந்தக் கணக்கில் சும்மாவாயினும் கையிருப்பை ஏற்றி விட முடியும் என்று அவள் அறிந்திருந் தாள். அந்தக் கையிருப்புத் தொகை தப்பானது, போலியானது என்பதைப் பாங்க் கண்டுபிடித்துச் சரி செய்ய நாலைந்து நாளாகும்.

அதற்குள் அவள் போட்டிருந்த திட்டம் நிறைவேறி விடும்...

அந்த முறைப்படி ரொமானோவின் கணக்கில் ஏராள மான தொகைகளைக் கட்டினாள்.

அடுத்து அவள் சென்றது ஒரு டிராவல் ஏஜென்ஸி அலுவலகத்துக்கு.

அங்கிருந்த இளம் பெண்ணிடம் சென்றவள், "நான் மிஸ்டர் ரொமானோவின் செக்ரட்டரி, அவருக்கு பிரேஸில் நாட்டில் ரியோடிஜெனைரோவுக்குச் செல்ல விமானத்தில் ரிசர்வேஷன் செய்ய வேண்டும். இந்த வெள்ளிக்கிழமை அவர் புறப்படுகிறார்."

"ஒரு டிக்கெட்டா?"

"ஆமாம். முதல் வகுப்பு. பிகைபிடிக்கும் பகுதியில்."

"ரிடர்ன் டிக்கெட்?"

"வேண்டாம். போவதற்கு மட்டும் தான்."

அந்தப் பெண் தன் மேஜை மீதிருந்த கம்ப்யூட்டரில் சில நிமிடம் பார்த்தபின், "சரிம்மா. பான் அமெரிக்கன் ஃப்ளைட் நம்பர் எழுநூற்று இருபத்தெட்டு, வெள்ளிக் கிழமை மாலை ஆறு முப்பத்தைந்துக்குப் புறப்படுகிறது." என்றாள்.

"ரொம்ப நன்றி."

"டிக்கெட் பணம் ரொக்கமாகத் தருவீர்களா அல்லது கணக்கா?"

"மிஸ்டர் ரொமானோ டிக்கெட் கிடைத்தால் பணம் தருவார். தயவு செய்து வியாழக்கிழமையன்று டிக்கெட்டை அவருடைய ஆபீசுக்கு அனுப்பி விடுகிறீர்களா?"

"நாளைக்கே வேண்டுமானால் அனுப்பி விடுகிறோம்."

"வேண்டாம். மிஸ்டர் ரொமானே நாளைக்கு ஆபீசில் இருக்கமாட்டார். வியாழக்கிழமை காலை பதினொரு மணிக்கு அனுப்பி விடுகிறீர்களா?"

"நிச்சயமாய். விலாசம்?"

217, பாயிட்ராஸ் தெரு, நியூ ஆர்லியன்ஸ் என்ற முகவரியைத் தந்தாள். அது ரொமானோவின் பாஸ் ஆர்ஸெட்டியின் அலுவலக முகவரி.

அந்தப் பெண் குறித்துக் கொண்டாள்.

"வியாழக்கிழமை அனுப்பி விடுகிறோம்."

"சரியாகப் பதினொரு மணிக்கு. தாங்க்ஸ்."

அதே தெருவில், கொஞ்சம் தள்ளி பெரிய பெரிய சூட்கேஸ்கள் விற்பனை செய்யும் கடையொன்று இருந்தது. வெளியிலிருந்தபடி நோட்டம் விட்ட பின் உள்ளே நுழைந்தாள் ட்ரேஸி.

ஒரு பணியாள் அவளை நெருங்கி, "என்ன மிஸ் வேண்டும்?" என்று கேட்டார்.

"என் கணவருக்காகச் சில சூட்கேஸ்கள் வாங்க வேண்டும்."

"சரியான இடத்துக்கு, சரியான சமயத்தில் வந்திருக்கிறீர்கள். மலிவு விலையில்..."

"மலிவானது எதுவும் வேண்டாம்," என்றாள் ட்ரேஸி.

உயர்ந்த ரக சூட்கேஸ்கள் வைக்கப்பட்டிருக்கும் இடத்தை அடைந்தவள். "இது மாதிரிதான் வேண்டும். நாங்கள் வெளிநாட்டுக்குப் போகிறோம்." என்றாள்.

"நல்லது. இங்கே ஐந்து சைஸில் சூட்கேஸ்கள் இருக்கிறது. எது உங்களுக்குத் தேவை?"

"ஒவ்வொரு சைஸிலும் ஒவ்வொன்று."

"சந்தோஷம், ரொக்கம், தருகிறீர்களா அல்லது கணக்கா?"

"டெலிவரி செய்தவுடன் ரொக்கம் தருகிறோம். என் கணவர் பெயர் ரொமானோ, வியாழக்கிழமை காலை என் கணவரின் ஆபீசுக்கு அனுப்பி விட முடியுமா?"

"ஓ..."

"காலை பதினொரு மணிக்கு?"

"நானே பக்கத்தில் இருந்து அனுப்பி வைக்கிறேன். கவலை வேண்டாம்."

சட்டென்று ஞாபகம் வந்தது போல ட்ரேஸி சொன்னாள்: "இன்னொரு விஷயம். சூட்கேஸ்களின் மீது என் கணவரின் இனிஷியலை 'ஜே.ஆர்.' என்று தங்க எழுத்தில் பொறித்துத் தர முடியுமா?"

"ஓ. எஸ். சந்தோஷமாய்ச் செய்கிறோம், மிஸஸ் ரொமானோ."

ட்ரேஸி புன்னகை செய்து அங்கேயும் ஆர்ஸெட்டியின் அலுவலக விலாசத்தைக் கொடுத்தாள்.

அடுத்து அவள் நுழைந்தது தபால் ஆபீஸ்.

ரியோடி ஜெனைரோவில் உள்ள ரியோ டாலஸ் என்ற ஓட்டலுக்கு ஒரு தந்தி கொடுத்தாள்:

'வரும் வெள்ளிக்கிழமை முதல் இரண்டு மாத காலத்துக்கு உங்கள் ஓட்டலில் மிகச் சிறந்த அறையை ரிசர்வ் செய்யவும் - தயவு செய்து ரிசர்வேஷனை ஊர்ஜிதம் செய்து தகவல் கொடுங்கள் - ஜோசப் ரொமானோ. 217, பாயிட்ராஸ் தெரு, நியூ ஆர்லியன்ஸ்...'

மூன்று நாள் சென்றதும் ட்ரேஸி பாங்க்குக்கு டெலிபோன் செய்து லெஸ்டரைக் கூப்பிட்டாள். "லெஸ்டர், உங்களுக்கு என்னை நினைவிருக்கிறதோ என்னவோ. நான் ரொமானோவின் செக்ரட்டரி லூரின் பேசுகிறேன்..."

"நினைவிருக்கிறதோ என்னவோவா!" லெஸ்டர் பரபரத்தான். "உன்னை மறப்பேனா, லூரின்? நாம் இருவரும் ஓட்டலுக்குச் சாப்பிடப் போவோம் என்று சொன்னது நினைவிருக்கிறது இல்லையா?"

"மறப்பேனா? அதை எதிர் பார்த்துக் கொண்டேயிருக்கிறேன். அடுத்த செவ்வாய்க்கிழமை உங்களுக்குச் சௌகரியமாயிருக்குமா, சார்?"

"ஓ!"

“சரி, செவ்வாயே வைத்துக் கொள்ளலாம். பார்த்தீர்களா, நான் ஒரு முட்டாள்! எதற்கு உங்களைக் கூப்பிட்டேன் என்பதையே மறந்து விட்டு நான் பாட்டுக்குப் பேசிக் கொண்டிருக்கிறேன்! தன் கணக்கில் இப்போது கையிருப்பு எவ்வளவு இருக்கிறதென்று மிஸ்டர் ரொமானோ கேட்கச் சொன்னார். கொஞ்சம் பார்த்துச் சொல்ல முடியுமா?”

“ஒரு கஷ்டமும் இல்லை. கொஞ்சம் இரு.”

பொதுவாக, ஒருவருடைய கையிருப்பைச் சொல்ல வேண்டுமானால், கேட்பவர் யார் என்ன என்று விசாரிப்பது வழக்கம். லூரின் விஷயத்தில் அதெல்லாம் தேவையில்லை என்று முடிவு செய்து கொண்டான் லெஸ்டர்.

ரொமானோவின் கணக்கைப் பார்த்தபோது அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது. ஏகப்பட்ட பணம் சேர்ந்திருந்தது.

போனுக்குத் திரும்பியவன், “லூரின், உன் முதலாளி பெரிய ஆள்தான். மூன்று லட்சத்துக்குக் கொஞ்சம் மேலே சேர்ந்திருக்கிறது.”

“நல்லது. நான் குறித்து வைத்திருக்கிற தொகையும் அதே தான்,” என்றாள் ட்ரேஸி.

“இவ்வளவு பணம் சும்மா தானே கிடக்கிறது? வேறு எதிலாவது முதலீடு செய்யலாமே, ரொமானோவிடம் கேட்டுச் சொல்.”

“இப்ப வேண்டாம். அப்படியே இருக்கட்டும்.”

“ஓ.கே.”

“லெஸ்டர், நீங்கள் நிஜமாகவே ஒரு டார்லிங்!” என்று கொஞ்சினாள் ட்ரேஸி.

“அப்ப... நான் செவ்வாய்க்கிழமை உன் ஆபீசுக்கு வந்து உன்னை அழைத்துப் போகட்டுமா?”

“நானே வந்து விடுகிறேன் டியர்” என்று சொல்லி விட்டுப் போனை வைத்தாள் ட்ரேஸி.

அவள் முகத்தில் ஒரு மர்மப் புன்னகை தவழ்ந்தது.

## 25

லூயிஸியானாவில், ஆற்றங்கரையிலிருந்த பிரம் மாண்டமான கட்டிடத்தின் நாலாவது மாடி மொத்தத்தையும் ஆக்கிரமித்திருந்தது ஆர்ஸெட்டியின் அலுவலகம். ஏற்றுமதி இறக்குமதி நிறுவனம் என்ற பெயரில் பல வகையான தில்லுமுல்லுகள் நடைபெற்று வந்தன. மாடியின் ஒரு புறம் ஆர்ஸெட்டியின் அலுவலகம். இன்னொரு புறத்தில் ரொமானோவும் அவன் கீழே வேலை பார்ப்பவர்களும் இருந்தார்கள். ரிஸப்ஷனிஸ்ட் என்ற பெயரில் அழகிய இளம் பெண்கள் நாலு பேர் வேலை பார்த்தார்கள். ஆர்ஸெட்டியின் வாடிக்கையாளர்களைச் சந்தோஷப்படுத்த வேண்டியது அவர்கள் வேலை. இரண்டு தடியன்கள் எஜமானர்களுக்குக் காவலாக இருந்தார்கள். கார் டிரைவிங், உடம்பு பிடித்து விடுவது, எடுபிடி வேலைகள் - எல்லாமே இந்த ஆட்கள்தான்.

அன்று வியாழக்கிழமை.

கஞ்சா, சூதாட்டம், விபசாரம், கடத்தல் - இப்படிப் பல வழிகளில் முந்தின தினம் வசூலான பணத்தைக் கணக்குப் பார்த்துக்கொண்டிருந்தான் ஆர்ஸெட்டி.

அவனுக்கு வயது அறுபதைத் தாண்டிவிட்டது. அவன் முகம் முழுதும் குறுக்கு நெடுக்காக ஏகப்பட்ட தழும்புகள் தெரிந்தன. பதினைந்து வயதாயிருந்தபோது ஏதோ ஒரு நோய் வந்து அவன் தலை முழு வழுக்கையாகிவிட்டது. அதை மறைப்பதற்காகக் கறுப்பு நிறத்தில் ஒரு விக் அணிந்திருந்தான். அது அவன் தலைக்குக் கொஞ்சம்கூடப் பொருத்தமாக இல்லை. அதை அவனிடம்சொல்லும் தைரியம் யாருக்கும் கிடையாது. அவன் குரலில் எந்த உணர்ச்சியும் வெளிப் படாது. ரொம்பக் கோபமாக இருக்கும்போது அவன் குரல் வெகு கிசுகிசுவென்று மாறிவிடும். யாரிடமும் அவனுக்குப் பிரியம் கிடையாது தன் ஐந்து பெண்களைத்தவிர. அவர் களுடன் இருக்கும்போது மட்டுமே மனம் திறந்து பேசுவான்.

லஞ்சம், துப்பாக்கி, பிளாக்மெயில் ஆகியவற்றின் மூலம் ஒரு சாம்ராஜ்யத்தை ஆண்டு வந்தான் ஆர்ஸெட்டி. அவனைப் போலவே நாடெங்குமுள்ள தில்லுமுல்லுக்காரர்கள் அவனுக்குச் சிநேகம்.

இந்த நிமிஷம் ஆர்ஸெட்டி மிகவும் சந்தோஷமாக இருந்தான். சற்று முன்தான் தன் ஆசைநாயகியின் வீட்டுக்குப் போய்விட்டு வந்திருந்தான். அங்கே செலவிட்ட இன்பமான நேரத்தை எண்ண எண்ண அவனுக்கு ஆனந்தமாயிருந்தது.

நிறுவனத்தில் எந்தப் பிரசினையும் இல்லை. எந்த விஷயமும் பிரசினையாக வளர்வதற்கு அவன் இடம் கொடுத்தால் தானே? ஒரு முறை அவன் ரொமானோவிடம் சொன்னான்: "எந்தச் சின்னப் பிரசினையும் பெரிதாக வளரும்படி விடக் கூடாது. முளையிலேயே கிள்ளிவிட வேண்டும். எவனாவது நமக்குப் போட்டியாக முளைக்கிறான் என்று வைத்துக் கொள். அவனைச் சுதந்திரமாக விடுகிற மாதிரி விட்டு, மெதுவாய்த் தீர்த்து விட வேண்டும். புரிகிறதா?"

ரொமானோ புரிந்துகொண்டு தான் இருந்தான்.

ஆர்ஸெட்டிக்கு ரொமானோவிடம் பிரியம் உண்டு. சாக்கடை ஓரத்தில் அனாதையாகக் கிடந்த ரொமானோவை ஆர்ஸெட்டி தான் காப்பாற்றி வளர்த்துப் பயிற்சிகள் தந்தான். சென்ற பத்து வருடத்தில் ஆர்ஸெட்டியின் வலது கையாக ரொமானோ வளர்ந்திருந்தான்.

ஆர்ஸெட்டியின் அறைக் கதவை மெல்லத் தட்டிவிட்டு உள்ளே வந்தாள் அவனுடைய பிரைவேட் செக்ரட்டரி லூஸி. இருபத்து நாலு வயது அழகி அவள். பல அழகுப் போட்டி களில் பரிசு பெற்றவள். இவளைப் போன்ற அழகிகளை வேலைக்கு வைத்துக் கொண்டிருப்பதில் ஆர்ஸெட்டிக்குத் தனிப் பெருமை.

மேஜை மீதிருந்த கடியாரத்தைப் பார்த்தான் ஆர்ஸெட்டி. பத்தே முக்கால்தான் ஆகியிருந்தது. பன்னிரண்டு மணி வரை

யில் தன்னைத் தொந்தரவு செய்யக் கூடாது என்று லூஸியிடம் சொல்லியிருந்ததால், "என்ன?" என்று எரிந்து விழுந்தான்.

"தொந்தரவுக்கு மன்னிக்கணும், சார். மிஸ் கீகீ என்று ஒரு பெண் போனில் இருக்கிறாள். ஜன்னி கண்டவள் மாதிரி காச்சு மூச்சென்று கத்துகிறாள். என்ன விஷயம் என்று யாரிடமும் சொல்ல மாட்டாளாம். உங்களிடம் தான் பேச வேண்டுமாம். ஏதாவது முக்கியமான விஷயமாக இருக்குமோ என்று தோன்றுகிறது."

ஆர்ஸெட்டி யோசித்துப் பார்த்தான். கீகீயா? யார்? தன் ஞாபக சக்தியைப் பற்றி அவனுக்குப் பெருமை உண்டு. இருந்தாலும் இந்தப் பெயர் கேள்விப்பட்டதாகவே தெரியவில்லை.

"சரி. நீ போ," என்று லூஸியை அனுப்பிவிட்டு, போனை எடுத்தான். "ஏய், யார்?" என்றான்.

"மிஸ்டர் ஆர்ஸெட்டியா பேசுவது?" என்று கீச்சிட்டாள் அந்தப் பெண். பிரெஞ்சுக்காரியைப் போலிருந்தது உச்சரிப்பு.

"ஆமாம். யார் நீ?"

"நல்ல வேளை, நீங்களே இருக்கிறீர்கள். கடவுள் காப்பாற்றினார்."

லூஸி சொன்னது சரிதான். இந்தப் பெண் ஜன்னி பிடித்தவள் மாதிரி பதறுகிறாள். இவளிடம் நமக்கென்ன பேச்சு என்று எண்ணியவனாய் போனைத் திரும்ப வைக்கப் போனான் ஆர்ஸெட்டி அதற்குள் அவளுடைய அடுத்த பேச்சு

"சார்! சார்! எப்படியாவது அவரைத் தடுத்து நிறுத்துங்கள்! ப்ளீஸ்!"

"இந்தாம்மா, நீ யாரைப் பற்றிப் பேசுகிறாய் என்றே புரியவில்லை..."

"என்னோட ஜோ... ஜோ ரொமானோவைப் பற்றித்தான் சொல்கிறேன். என்னை அழைச்சிட்டுப் போகிறேன் என்று சொல்லியிருந்தார். இப்ப ஏமாத்தப் பார்க்கிறார்."

"ஏய், ரொமானோவுக்கும் உனக்கும் என்ன தகராறா யிருந்தாலும் அவன்கிட்டேயே தீர்த்துக் கொள். நான் அவனுடைய வேலைக்காரன் இல்லை."

"சார்! ரொமானோ என்னை விட்டுவிட்டு பிரேஸி லுக்குப் போகப் பார்க்கிறார். அவர் வைத்திருக்கும் மூன்று லட்சம் டாலரில் பாதி என்னோடது!"

சட்டென்று ஆர்ஸெட்டிக்கு அவள் பேச்சில் அக்கறை பிறந்தது. "மூன்று லட்சம் டாலரா? என்ன சொல்கிறாய் நீ?"

"பாங்க்கில் ரகசியமாய் வைத்திருக்கிறாரே, அந்த மூன்று லட்சத்தைத்தான் சொல்கிறேன். திருட்டுத் தனமாய் அவர் சேர்த்த பணம்... அதிலே பாதி என்னோடது..."

ஆர்ஸெட்டியின் அக்கறை அதிகரித்தது.

அந்தப் பெண் தொடர்ந்து கத்தினாள். "சார், ரொமா னோவிடம் சொல்லுங்கள் சார். என் பணத்தை வாங்கிக் கொடுங்க சார்! அல்லது எப்படியாவது என்னையும் பிரேஸிய லுக்கு அழைத்துக்கொண்டு போகும்படி சொல்லுங்கள் சார். ப்ளீஸ்! ப்ளீஸ்!"

"சரி, கவனிக்கிறேன். போனை வை," என்றான் ஆர்ஸெட்டி.

ரொமானோவின் அலுவலகம் நவீனமாக இருந்தது. சுவர்களைப் பிரெஞ்சு ஓவியங்கள் அலங்கரித்தன.

அவனுடைய செக்ரட்டரி உள்ளே வந்தாள். "சார், ரியோடி ஜெனைரோவுக்கு விமான டிக்கெட் எடுத்துக் கொண்டு டிராவல் ஏஜென்ஸி ஆள் வந்திருக்கிறான். பணம் கேட்கிறான். செக் எழுதட்டுமா சார்?"

"என்னது? ரியோடி ஜெனைரோவா?" ரொமானோ பலமாய்த் தலையை அசைத்தான். "ஏதோ தப்பாக வந்துவிட்டான் போலிருக்கிறது. அவனைத் திருப்பி அனுப்பு."

அதற்குள், யூனிபாரம் அணிந்த அந்த ஆள் கதவருகே வந்து நின்றான். "இந்த விலாசத்தில், ரொமானோ என்ப

வரிடம் டிக்கெட்டைக் கொடுத்துச் செக் வாங்கி வரும்படி எங்கள் டிராவல் ஏஜென்ஸியில் என்னை அனுப்பியிருக் கிறார்கள்," என்றான்.

"யாரோ உன்னிடம் தப்பாகச் சொல்லியிருக்கிறார்கள். அல்லது உங்கள் கம்பெனியின் விளம்பரத்துக்காக இப்படி ஒரு தந்திரம் ஆரம்பித்திருக்கிறீர்களா?"

"இல்லை சார். நான்-"

"இப்படிக் கொடு, பார்க்கிறேன்." என்ற ரொமானோ, அந்த ஆளிடமிருந்து டிக்கெட்டை வாங்கிப் பார்த்தான். "வெள்ளிக்கிழமை பிரயாணம் என்று போட்டிருக்கிறதே? ரியோடி ஜெனைரோவில் வெள்ளிக்கிழமையன்று எனக்கு என்ன வேலை?"

"நானும் அதையேதான் கேட்கிறேன்," என்று குரல் வந்தது.

டிராவல் ஏஜென்ஸி ஆளின் பின்னால் ஆர்ஸெட்டி நின்றிருந்தான். "ரியோடி ஜெனைரோவுக்கு எதற்காகப் போகிறாய் நீ?"

"என்னமோ மடத்தனமான குழப்பம்!" ரொமானோ டிக்கெட்டை அந்த ஆளிடம் திரும்பித் தந்தான். "எங்கே யிருந்து கொண்டு வந்தாயோ அங்கேயே திருப்பிக் கொண்டு போய்க் கொடு."

"இரு, இரு. ரொம்ப அவசரப்படாதே." ஆர்ஸெட்டி அந்த டிக்கெட்டை வாங்கிப் பார்த்தான் "ரியோடிஜெனை ரோவுக்கு வெள்ளிக்கிழமை முதல் வகுப்பு. புகைபிடிக்கும் பகுதி. போவதற்கு மட்டும். ரிடர்ன் டிக்கெட் இல்லை."

இப்போது இன்னொரு செக்ரட்டரி உள்ளே வந்தாள். "மிஸ்டர் ரொமானோ, சூட்கேஸ்கள் வந்திருக்கின்றன. பணம் தர வேண்டுமா செக் எழுதட்டுமா?" என்றாள்.

ரொமானோ அவளை வெறித்து நோக்கினான். "சூட்கேஸா? என்ன சூட்கேஸ்? நான் எந்த சூட்கேசுக்கும் ஆர்டர் தரவில்லையே?"

ஆர்ஸெட்டி உறுமினான் "சூட்கேஸ்களை உள்ளே கொண்டு வரச் சொல்."

ரொமானோ தலையை பிய்த்துக் கொண்டான். "கடவுளே, எல்லோருக்குமே பைத்தியம் பிடித்துவிட்டதா என்ன?"

மூன்று உயர்ந்த ரக சூட்கேஸ்களுடன் ஓர் ஆள் உள்ளே வந்தான்.

ரொமானோவுக்கு அதிர்ச்சி.

"என்ன இதெல்லாம்? நான் ஆர்டர் கொடுக்கவே யில்லையே இதற்கு?"

வந்தவன் ஒரு டெலிவரி காகிதத்தை நீட்டினான். "மிஸ்டர் ரொமானோ, பாய்ட்ராஸ் ரோடு என்று உங்கள் முழு முகவரியும் இதில் இருக்கிறது..."

ரொமானோ பொறுமை இழந்து கத்தினான். "நான் தான் ஆர்டர் கொடுக்கவில்லையென்று சொல்கிறேனே? அப்புறம் என்ன? போ வெளியே!"

ஆர்ஸெட்டியின் சந்தேகம் நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகரித்தது. சூட்கேஸ்களை ஆராய்ந்தான். "உன் இனிஷி யலைப் பொறித்திருக்கிறார்கள், ரொமானோ."

சங்கடத்துடன் ரொமானோ சிரித்தான். "யாரோ ஜோக் பண்ணுகிறார்கள்!"

ஆர்ஸெட்டியின் உதட்டில் கடுமை தவழ்ந்தது. வந்திருந்த ஆட்களையும் செக்ரட்டரிகளையும் வெளியே போகச் சொன்னான்.

அவர்கள் சென்றதும் கதவைச் சாத்திவிட்டு, "ரொமானோ, உன் பாங்க் கணக்கில் எவ்வளவு பணம் வைத்திருக்கிறாய்?" என்றான்.

ரொமானோவுக்கு எதுவும் புரியவில்லை. திகைப்புடன், "தெரியாது. என்ன, ஆயிரத்தைந்நூறு டாலர் இருக்கலாம், அல்லது இரண்டாயிரம் இருக்கும்," என்றான்.

"அப்படியா? எதற்கும் உன் பாங்குக்குப் போன் செய்து, எவ்வளவு கையிருப்பு இருக்கிறதென்று கேளேன்."

"எதற்கு? நான் -"

"கேளேன்."

கோபத்தை அடக்கிக் கொண்டு ஆர்ஸெட்டி கத்தினான்.

## 26

'ஆர்ஸெட்டி எதற்காக நம் பாங்க் கையிருப்பைப் பற்றிக் கேட்கச் சொல்கிறார்? ரொம்பச் சொற்பத் தொகை தானே இருக்கும்?' ரொமானோவுக்கு ஒன்றும் விளங்க வில்லை.

"எதற்கு பாஸ்? நான்..." என்று ஆரம்பித்தான். ஆனால் ஆர்ஸெட்டி குறுக்கிட்டுக் கடுமையாக உறுமினான்.

"கேள் என்றால் கேளேன்! சொன்னதைச் செய்!"

"சரி, சரி. உங்கள் திருப்திக்காக எதுவும் செய்கிறேன்..." என்றான் ரொமானோ. தன் செக்ரட்டரியைக் கூப்பிட்டு, பாங்க் அதிகாரிக்கு போன் போடும்படி சொன்னான்.

சில நிமிடங்களில் பாங்க் தொடர்பு கிடைத்தது.

"ஹலோ, நான்தான் ரொமானோ பேசுகிறேன். என் கணக்கில் இப்போது கையிருப்பு எவ்வளவு இருக்கிறதென்று பார்த்துச் சொல்ல முடியுமா?" என்று கேட்டு, தன் கணக்கு எண்ணையும் தெரிவித்தான்.

ஆர்ஸெட்டி, போனின் இன்னொரு எக்ஸ்டென்ஷனை எடுத்துத் தன் காதருகில் வைத்துக்கொண்டான் பாங்க் தகவலை தானே நேரடியாய்க் கேட்பதற்காக.

சற்றைக்கெல்லாம் பாங்க் அதிகாரி பேசினார். "மிஸ்டர் ரொமானோ, உங்கள் கணக்கில் இன்றையத் தேதிக்கு மூன்று

லட்சத்துப் பத்தொன்பதாயிரத்துத் தொண்ணூற்றைந்து டாலர் முப்பத்தைந்து ஸென்ட் இருக்கிறது, சார்."

ரொமானோவுக்கு ஒரே அதிர்ச்சி "எவ்வளவு? எவ்வளவு?"

"மூன்று லட்சத்துப் பத்தொன்பதாயிரத்துத் தொண் ணூற்றைந்து..."

"சீ முட்டாள்! மடையா!" என்று ரொமானோ கத்தினான். "என் கணக்கில் அவ்வளவு பணம் ஒருநாளும் இருக்காது. நீ ஏதோ தப்பாய்ச் சொல்லுகிறாய். மானேஜரைக் கூப்பிடு. பேசுகிறேன்."

ஆர்ஸெட்டி, தான் கேட்டுக் கொண்டிருந்த போனை நிதானமாய் வைத்துவிட்டு, ரொமானோவின் போனையும் நிதானமாய் வாங்கி வைத்தான். "அவ்வளவு பணம் உனக்கு எங்கிருந்து வந்தது ரொமானோ?"

ரொமானோவின் முகம் வெளிறிப் போயிற்று. "கடவுள் மேல் ஆணையாய்ச் சொல்கிறேன் பாஸ், அந்தத் தொகை யைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது."

"தெரியாது? நிஜமாகவே தெரியாது?"

"என்னை நம்புங்கள், பாஸ். எவனோ வேண்டுமென்றே என்னை மாட்ட வைக்கப் பார்க்கிறான்..."

"அவர்களுக்கு உன்மேல் கொள்ளைப் பிரியம் போலிருக்கு! இல்லாவிட்டால் நீ பிரேஸிலுக்குப் போவதற்கு வழிச் செலவுக்காக மூன்று லட்சம் டாலர் கொடுப்பார்களா?" ஆர்ஸெட்டி கோபமாக நகைத்து அருகிலிருந்த நாற்காலியில் ஆத்திரத்துடன் உட்கார்ந்தான். நீண்ட பெருமூச்சுடன் ஒரு நிமிடம் ரொமானோவைக் கூர்ந்து பார்த்து விட்டுச் சொன்னான்: "எல்லா ஏற்பாடும் முடிஞ்சு போச்சு இல்லையா? ரியோடி ஜெனைரோவுக்கு விமான டிக்கெட்! அதுவும் ரிடர்ன் அல்ல! போவதற்கு மட்டும்! பிரயாணத் துக்குத் தேவையான சூட்கேஸ்கள்... அங்கே போய் ஒரு புது வாழ்க்கையை ஆரம்பிக்கப் போகிறாய் போலிருக்கு. அப்படித்தானே?"

"இல்லை! இல்லை!" ரொமானோவின் குரலில் கலவரம் நிரம்பியிருந்தது. "பாஸ், இத்தனை நாள் பழகியிருக்கிறீர்களே, என்னைத் தெரியாதா உங்களுக்கு? எப்பவும் நான் உங்களிடம் நேர்மையாய்த் தானே நடந்து வந்திருக்கிறேன்! நீங்கள் எனக்கு அப்பா மாதிரி..." வியர்த்துக் கொட்டியது அவனுக்கு.

அதே சமயம், கதவைத் தட்டிவிட்டு, எட்டிப் பார்த்தாள் ரொமானோவின் செக்ரட்டரி. அவள் கையில் ஓர் உறை இருந்தது.

"மன்னிக்கணும், மிஸ்டர் ரொமானோ. உங்கள் பெயருக்கு ஒரு தந்தி வந்திருக்கிறது. நீங்கள் கையெழுத்துப் போட்டு வாங்கிக் கொள்ளணும் என்கிறார்கள்."

கூண்டில் அகப்பட்ட விலங்கு மாதிரி ரொமானோவுக்கு ஓர் உள்ளுணர்வு உறைத்தது மறுபடியும் ஏதோ விபரீதம் என்று.

"இப்போது எதுவும் பார்க்க முடியாது. நான் பிஸியாக இருக்கிறேன் என்று சொல்லு!"

"இரு, இரு. நான் பார்க்கிறேன்." ஆர்ஸெட்டி சட்டென எழுந்து செக்ரட்டரியின் கையிலிருந்த தந்தியைப் பறித்துப் பிரித்தான். மெதுவாக வாசித்துப் பார்த்து விட்டு, ரொமா னோவை எரித்து விடுகிற மாதிரி நோக்கினான்.

"தந்தியில் என்ன இருக்கிறதென்று சொல்லட்டுமா ரொமானோ?"

அவன் விழித்தான்.

"படிக்கிறேன் கேள். "தாங்கள் கேட்டுக் கொண்டபடி இந்த வெள்ளிக்கிழமையிலிருந்து இரண்டு மாதத்துக்கு எங்கள் ஓட்டலில் முதல் தரமான அறை தங்களுக்காக ரிசர்வ் செய்து விட்டோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்" தந்தியை யார் அனுப்பியிருக்கிறார்கள் தெரியுமா? ரியோடிஜெனைரோ பாலஸ் ஓட்டலின் மானேஜர். உனக்குத்தான் ரிசர்வேஷன் ரொமானோ. ஆனால் உனக்கு இனி அது தேவையிருக்காது. உன் கதைதான் இங்கேயே முடியப் போகிறதே!"

ஆம், சில நாட்களில் ரொமானோவின் வாழ்க்கை முடிந்துவிட்டது.

ட்ரேஸிக்கு முதல் வெற்றி.

அடுத்து, பெர்ரி போப். அரசாங்க வக்கீல்.

ட்ரேஸி குற்றம் செய்ததாக ஒப்புக் கொண்டால் குறைந்த தண்டனை கிடைக்கும் என்று கூறி அவளை மாற்றி, அவளுக்குப் பதினைந்து வருடம் சிறைத் தண்டனை கிடைக்கும்படி செய்த மோசக்காரன்.

ட்ரேஸியின் பழிவாங்கும் பட்டியலில், இரண்டாவது இடம் பெற்றிருப்பவன்.

பெர்ரி போப்பின் பங்களா.

சமையல்காரன் ஆண்ட்ரி மும்முரமாக வேலையில் ஈடுபட்டிருந்தபோது -

எங்கேயோ டபக்கென சத்தம் கேட்டது. சில வினாடிகளில் ஏர் கண்டிஷனின் ரீங்காரம் நின்றுவிட்டது.

ஆண்ட்ரி அவசர அவசரமாக ஸ்விட்ச்களைப் போட்டுப் பார்த்தான். ஊகூம். ஏர்கண்டிஷன் நின்றது நின்றதுதான்.

ஆண்ட்ரிக்குக் கவலை பிடித்துக் கொண்டது.

'ஐயோ! இன்றைக்கு வெள்ளிக்கிழமையாயிற்றே! இன்றைக்குப் பார்த்து இப்படியாகி விட்டதே!'

ஒவ்வொரு வெள்ளிக்கிழமை இரவும் அவனுடைய எஜமானர் பெர்ரி போப் தனது நண்பர்களை அழைத்துக் கொண்டு வந்து சீட்டாடுவதும் விருந்துண்ணுவதும் வழக்கம். எல்லாரும் பெரிய மனிதர்கள். குளு குளு வசதி இல்லா விட்டால் இங்கே ஒரு நிமிடம் கூட உட்கார்ந்திருக்க முடியாது.

கடியாரத்தைப் பார்த்தான் சமையல்காரன். மாலை நாலு மணி. இரவு எட்டு மணிக்கெல்லாம் நண்பர்களுடன் எஜமானர் வந்துவிடுவாரே!

பெர்ரி போப்பின் அலுவலகத்துக்குப் போன் செய்து தெரிவிக்கலாமா என்று யோசித்தான். ஆனால் இன்று பூரா கோர்ட்டில் ஏகப்பட்ட வேலை இருக்கிறது என்று காலையில் எஜமானர் சொன்னது ஞாபகம் வந்தது. பாவம், மனிதருக்கு ஏகப்பட்ட வேலை. இரவாவது நண்பர்களுடன் சந்தோஷ மாகப் பொழுதைக் கழிக்க வேண்டும் என்று வருவார். ஏர்கண்டிஷன் இல்லையென்றால்...

டெலிபோன் எண்கள் குறித்து வைத்துள்ள சிறிய நோட்டை எடுத்தான் ஆண்ட்ரி. ஏர்கண்டிஷன் கம் பெனிக்குப் போன் செய்தான்.

"நான் மிஸ்டர் பெர்ரி போப்பின் வீட்டிலிருந்து போன் செய்கிறேன் எங்கள் ஏர்கண்டிஷன் ரிப்பேராகி விட்டது. உடனே யாரையாவது அனுப்பிச் சரிபார்க்க முடியுமா?" என்று கூறி விலாசத்தையும் சொன்னான்.

"எங்கள் ஆட்கள் எல்லாரும் வெளியே போயிருக்கி றார்கள். கொஞ்ச நேரத்தில் அனுப்புகிறோம்," என்று டேப் செய்த பதில் வந்தது.

நிமிடத்துக்கு நிமிடம் வீட்டுக்குள் வெப்பமும் புழுக்கமும் அதிகரிப்பது போலிருந்தது. சமையல்காரன் தவித்தான். கடவுளே! எஜமானர் வருவதற்குள் அந்த ஆட்கள் வந்து சரி செய்ய வேண்டும்.

எஜமானின் கோபம் எப்படிப் பட்டது என்பதை ஆண்ட்ரி பல முறை பார்த்திருக்கிறான்.

அரை மணி கழித்து வாசலில் மணி அடித்தது. ஓடிப் போய்க் கதவைத் திறந்தான் ஆண்ட்ரி.

இரண்டு தொழிலாளிகள், கையில் ரிப்பேர் கருவிகள் கொண்ட பெட்டியுடன் நின்றிருந்தார்கள். ஒருவன் நீக்ரோ. நல்ல உயரம். மற்றவன் சிறிது குள்ளம். தெருவில் அவர் களுடைய வேன் நின்றிருந்தது.

"ஏர்கண்டிஷன் ரிப்பேர் என்று சொன்னது இந்த வீட்டில்தானே?" என்றான் நீக்ரோ ஆள்.

"நல்ல வேளை, வந்தீர்களே! கடவுள் காப்பாற்றினார்!" என்றான் சமையல்காரன். "தயவு செய்து உடனே கவனியுங்கள். விருந்தாளிகள் வருகிற நேரம்."

நீக்ரோ ஆள் சமையலறையை எட்டிப் பார்த்து, "ஆ! பிரமாதமாய் வாசனை வருகிறதே! என்ன சமையல்?" என்றான்.

"ஐயோ, அதெல்லாம் அப்புறம், இப்ப வேலையைக் கவனியுங்கள் முதலில்."

குள்ள ஆள், "சரி, ஏ.ஸி. யூனிட்டைப் பார்க்கலாம் வா, ஏ.ஸி. எங்கே ஐயா இருக்கிறது?" என்று சமையல்காரனைக் கேட்க, அவன் அவர்களை அழைத்துச் சென்றான்.

பார்த்து விட்டு, "இது ரொம்ப நல்ல மெஷின்," என்றான் நீக்ரோ.

மற்றவன் ஏ.ஸி. யந்திரத்தை ஆராய்ந்தான். "ஊகூம். கோளாறு இங்கே இல்லை. எல்லாம் சரியாய்த் தான் இருக்கிறது."

"வேறெங்கே கோளாறு?" என்றான் சமையல்காரன்.

"அதான் பார்க்கணும். எங்கேயோ ஷார்ட் சர்க்யூட் ஆகியிருக்கிறது. எவ்வளவு ரூம்களுக்கு ஏ.ஸி. போட்டிருக்கிறது?"

"அனேகமாய் ஒவ்வொரு ரூமும் ஏ.ஸி.தான். மொத்தம் ஒன்பது இருக்கும்."

முன்புறம் வந்தார்கள். வெகு ஆடம்பரமாயும் அலங்காரமாயும் இருந்தது வரவேற்பறை. சாப்பிடுவதற்கான டைனிங் டேபிள் இடது பக்கமும், உட்கார்ந்து சீட்டாடுவதற்கான பெரிய வட்ட மேஜை வலது பக்கத்தின் நடுவேயும் இருந்தன.

குள்ள ஆள். தலையை உயர்த்தி விட்டத்தைப் பார்த்தான். "மேலே என்ன இருக்கிறது?"

"அட்டாணை."

"அதற்குப் போகிற வழி?"

"பின்புறம் இருக்கிறது வாருங்கள்."

சமையல்காரனின் துணையோடு இருவரும் மேலே ஏறிப் பரணைப் பார்த்தார்கள். மரத்தாலான பரண். ஒரே தூசியும் ஒட்டடையுமாக இருந்தது. அங்கே மின்சாரச் ஸ்விட்சுகள் இருந்த பெட்டியைத் திறந்தான் நீக்ரோ. "அட!"

சமையல்காரன் கவலையுடன் கேட்டான். "என்ன, ஏதாவது தெரிந்ததா?"

"கண்டென்ஸர் போய்விட்டது. ஊர் பூரா இதே கமப்ளைண்ட் தான். வெய்யில் காலமாச்சே! ஷார்ட் சர்க்யூட் ஆகியிருக்கிறது. வேறு கன்டென்ஸர் போடணும்."

"ஐயையோ! ரொம்ப நேரமாகுமா?"

"அதெல்லாம் ஆகாது. புது கண்டென்ஸர் வண்டியில் வைத்திருக்கிறோம். எடுத்து வந்து மாட்டுகிறோம்."

"ப்ளீஸ்! சீக்கிரம் ஆகட்டும்."

"கவலையே படாதீங்க."

அவர்கள் வேனுக்குப் போய் இரண்டு பெரிய கான்வாஸ் பைகளுடன் திரும்பினார்கள்.

சமையல்காரன், "எனக்குச் சமையல் வேலை நிறையப் பாக்கி இருக்கிறது. போய்க் கவனிக்கிறேன். நீங்கள் பார்த்துக் கொள்கிறீர்களா?" என்றான்.

"தாராளமாய்! நீங்க போய் உங்க வேலையைக் கவனியுங்கள்!"

இரண்டு தொழிலாளிகளும் பரணை அடைந்தார்கள். பைகளைத் திறந்து, ஒரு சிறிய மடக்கு நாற்காலி, ஸாண்ட விச்கள் வைத்த தட்டு, இரண்டு புட்டி பீர், ஒரு துளை போடும் கருவி ஆகியவற்றை வெளியே எடுத்து வைத்தார்கள். அத்துடன் மங்கலான வெளிச்சத்தில் கூடத் தெளிவாகப் பார்க்கக் கூடிய பைனாகுலரையும் எடுத்தார்கள்.

அடுத்து, இரண்டு எலிகள். அவைகளுக்கு மயக்க ஊசி போடப்பட்டிருந்தது. இன்னும் இரண்டு மூன்று மணி நேரம் கழித்து மயக்கம் தெளிந்து ஓட ஆரம்பிக்கும்.

இரண்டு ஆட்களும் ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகை செய்துகொண்டு வேலையில் இறங்கினார்கள்.

அவர்கள் ட்ரேஸியின் ஆட்கள்.

## 27

அரசாங்க வக்கீல் பெர்ரி போப்பின் வீட்டில், ஏர் கண்டிஷனை ரிப்பேர் செய்வதற்காக வந்திருந்த இரண்டு தொழிலாளிகளும் ட்ரேஸியின் ஆட்கள்தான்.

இருவரில் ஒருவன், ட்ரேஸியின் ஜெயில் தோழியான நீக்ரோக்காரியின் காதலன்.

ட்ரேஸியின் திட்டத்தை நீக்ரோக்காரி சொன்னபோது முதலில் அவன் ஒப்புக் கொள்ளவில்லை.

"இந்த வட்டாரத்தில் எவ்வளவு பெரிய ஆள் அந்தப் பெர்ரி போப் என்று உனக்குத் தெரியாது. அவனிடம் வம்பு வைத்துக்கொண்டால் நான் உயிரோடு இருக்க முடியாது," என்றான்.

"பெர்ரி போப்பைப் பற்றிக் கவலைப்படாதே. திட்டம் வெற்றிகரமாய் முடிந்துவிட்டால் அவனே உயிருடன் இருக்க மாட்டான்," என்றாள் நீக்ரோக்காரி.

"சரி, யாருக்காக இவ்வளவும் செய்யச் சொல்கிறாய்?"

"ட்ரேஸி."

"ஓ. அந்தப் பெண்ணா!" என்றான் நீக்ரோக்காரன். ட்ரேஸியை அவனுக்குப் பிடிக்கும். சிறையிலிருந்து விடுதலையாகி வந்த தினத்தன்று மூன்று பேரும் சந்தித்து விருந்துண்ட போது, ட்ரேஸியின் இனிமையான சுபாவம் அவனைக் கவர்ந்திருந்தது.

"இருந்தாலும்... அந்தப் பெண்ணுக்காக இந்த ஆபத்தான வேலையில் இறங்கணுமா?" என்றான்.

"ஆமாம், நீ செய்யவில்லையென்றால் இதே வேலையை வேறு எவனிடமாவது அவள் ஒப்படைப்பாள். அவன் உன்னைப் போல நம்பகமானவனாக இருப்பானென்று என்ன நிச்சயம்? ட்ரேஸியை மாட்டிக் கொள்ள வைத்து விட்டால் அவள் திரும்பி ஜெயிலுக்கே திரும்ப நேரிடும். பிறகு அவள் வாழ்க்கை அவ்வளவுதான்," என்றாள் நீக்ரோக்காரி.

"சரி, உனக்கு அவ்வளவு முக்கியமென்றால், ஒரு தோழனை அழைத்துக் கொண்டு போகிறேன்," என்று உறுதி யளித்தான் அவள் காதலன்.

'ஆம், ரொம்ப முக்கியம் தான்' என்று நீக்ரோக்காரி தனக்குள் சொல்லிக் கொண்டாள். என்னவோ தெரிய வில்லை, எப்பாடு பட்டேனும் ட்ரேஸியைப் பாதுகாக்க வேண்டியது தன் பொறுப்பு என்ற எண்ணம் அவள் மனத்தில் ஆழப் பதிந்திருந்தது. ட்ரேஸி மறுபடியும் ஜெயிலுக்குப் போய்விடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தாள்.

**நீ**க்ரோவும் அவனுடைய தோழனும் பெர்ரி போப் வீட்டின் பரணிலிருந்து இறங்கி வந்தபோது மணி ஆறரை யாகியிருந்தது. வியர்வையும் புழுதியுமாகக் கசமுசாவென்று இருந்தார்கள்.

"சரி பண்ணி விட்டீர்களா?" என்று சமையல்காரன் கேட்டான் கவலையுடன்.

"என்ன கோளாறு என்றால், ஏ.ஸி. டி.ஸி. கண்டென்ஸர் -"

சமையற்காரன் பொறுமை இழந்தான். "அதெல்லாம் எனக்குப் புரியாது. சரி பண்ணியாச்சா இல்லையா?"

"ஓ! இன்னும் ஐந்து நிமிடத்தில் ஏ.ஸி. வேலை செய்ய ஆரம்பித்து விடும் பார்."

"நீங்க நல்லாயிருப்பீங்க, தம்பி. பில்லைக் கொடுத்தீங் கன்னா ஐயா வந்ததும் -"

"அதெல்லாம் கம்பெனியில் அனுப்பி விடுவார்கள்," என்று சொல்லிவிட்டு நீக்ரோ தன் தோழனுடன் புறப் பட்டான்.

சமையல்காரன் உள்ளே போய் விட்டானா என்பதைப் பார்த்துக்கொண்டபின் இருவரும் ஓசைப்படாமல் வீட்டின் பின்புறத்தை அடைந்தார்கள்.

அங்கிருந்த சிறிய அறையில், ஏர்கண்டிஷன் கருவி களுக்கு மின்சார சப்ளை செய்யும் கம்பிகள் இருந்தன. இரண்டு மணி நேரத்துக்கு முன்பு அதை ரகசியமாக அவர்கள் துண்டித்திருந்தார்கள். அதனால் தான் ஏர்கண்டிஷன் வேலை செய்யாமல் நின்றிருந்தது. இப்போது துண்டித்ததை இணைத்தார்கள்.

அங்கிருந்த டெலிபோன் மூலம் ஏர்கண்டிஷன் கம்பெனிக்கு டயல் செய்தான் நீக்ரோ. "பெர்ரி போப்பின் வீட்டிலிருந்து பேசுகிறோம். ஏர்கண்டிஷன் சரியாகிவிட்டது. நீங்கள் யாரையும் அனுப்பத் தேவையில்லை," என்று தெரி வித்து விட்டு நடையைக் கட்டினார்கள்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமை இரவும் பெர்ரி போப்பின் வீட்டுக்குச் சீட்டாட்டக் கோஷ்டி வருவது வழக்கம். ஆர் ஸெட்டி, ரொமானோ, ஜட்ஜ் லாரென்ஸ், ஒரு பாராளுமன்ற உறுப்பினர், ஒரு பெரிய மனிதர் ஆகியோர் வந்து விடுவார்கள். சீட்டாடுவார்கள். விருந்து உண்பார்கள்.

பெரும் பெரும் தொகை வைத்துச் சீட்டாடுவார்கள்.

இந்த வெள்ளிக்கிழமை பெர்ரி போப் உற்சாகமாக இருந்தான். சீட்டியடித்தபடி உடை மாற்றிக் கொண்டு நண்பர்களின் வருகைக்காகக் காத்திருந்தான். இன்று சீட்டாட்டத்தில் நிறைய ஜெயிக்கப் போகிறோம் என்று அவனுக்கு நம்பிக்கையாக இருந்தது. 'கொஞ்ச நாளாகவே நமக்கு எல்லாம் வெற்றிகரமாகத்தான் நடந்து வருகிறது' என்று சந்தோஷமாக எண்ணிக் கொண்டான்.

அந்த ஊரில் யாருக்கு என்ன விதமான சட்ட மோசடி தேவைப்பட்டாலும் பெர்ரி போப்பிடம் தான் வருவார்கள். அற்பக் குற்றமானாலும் சரி, கஞ்சா கடத்தலாக இருந்தாலும் சரி, கொலைக் குற்றமாக இருந்தாலும் சரி, அவனை அணுகினால் போதும். காப்பாற்றி விடுவான்.

ஆர்ஸெட்டிதான் அவனுடைய முக்கியமான துணை. அவனுடைய பலத்தில் தான் பெர்ரி போப் எல்லாக் காரியங்களையும் சாதித்து வந்தான்.

'வாழ்க்கை ஜம்மென்றுதான் இருக்கிறது!' தனக்குள் மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொண்டான்.

சற்றைக்கெல்லாம் ஆர்ஸெட்டி வந்து சேர்ந்தான். வழக்கமாக அவனுடன் வரும் ரொமானோ இன்று வரக் காணோம். வேறொரு சினேகிதன் வந்திருந்தான்.

"ரொமானோ இனிமேல் வரமாட்டான்," என்று அறிவித்தான் ஆர்ஸெட்டி. "இவர் நம்முடைய புதிய கூட்டாளி - இன்ஸ்பெக்டர் நியூஹவுஸ்," என்று அறிமுகம் செய்தான்.

எல்லாரும் கை குலுக்கிக் கொண்டார்கள்.

"முதலில் கொஞ்சம் ட்ரிங்கை குடித்து விட்டு விளையாட உட்காருவோம். பிறகு சாப்பிடலாம்." என்றான் பெர்ரி போப்.

ரொமானோ வழக்கமாக உட்காரும் நாற்காலியை இன்ஸ்பெக்டருக்குக் காட்டினான் ஆர்ஸெட்டி. "இனி நீங்கள் இங்கே உட்காருங்கள்."

பணத்துக்கான டோக்கன் வில்லைகளை வினியோகித்தான் பெர்ரி போப். "கறுப்பு வில்லை என்றால் ஐந்து டாலர், சிவப்பு வில்லை பத்து டாலர், நீல வில்லை ஐம்பது டாலர், வெள்ளை வில்லை நூறு டாலர். முதலில் ஆளுக்கு ஐந்நூறு டாலர் வைத்துக் கொண்டு ஆடலாம்."

ஆர்ஸெட்டி அன்று எரிச்சலில் இருந்தான். "ஊம், ஊம். ஆட்டத்தை ஆரம்பி."

அவன் குரல் கரகரவென்று இருந்தது. அது நல்லதுக்கு அடையாளமில்லை என்று பெர்ரி போப்புக்குத் தோன்றியது. ரொமானோ ஏன் வரவில்லை, அவனுக்கு என்ன ஆயிற்று என்று அறிந்து கொள்ள ஆவலாயிருந்தது. ஆனால் ஆர்ஸெட்டியிடம் அதைப்பற்றிக் கேட்கப் பயப்பட்டான். சொல்ல வேண்டுமென்று தோன்றும்போது அவனே சொல்லுவான்...

ஆர்ஸெட்டியும் ரொமானோவைப் பற்றித்தான் எண்ணியவாறிருந்தான். சொந்தப் பிள்ளை மாதிரி அவனை எவ்வளவு பிரியத்துடன் வைத்திருந்தேன்! எத்தனை நம்பினேன்! கடைசியில் முதுகில் குத்திவிட்டானே அயோக்கிய ராஸ்கல்! அந்தப் பெண் மட்டும் கீச்சுக் கீச்சென்று போனில் சொல்லியிருக்காவிட்டால், என்னிட மிருந்து பணம் சுருட்டிக் கெண்டு ஓடியிருப்பான்... இனி எங்கேயும் ஓட முடியாது, ராஸ்கல்! ஓட முடியாத இடம் தேடியாகி விட்டது அவனுக்கு! மீன்கள் அவன் உடலைக் கொத்திக் கொண்டிருக்கும்...!

"என்ன, விளையாடாமல் யோசித்துக் கொண்டிருக்கிறீர் கள்?" என்று பெர்ரி போப் உரக்கக் கேட்ட பிறகே ஆர்ஸெட்டி விழித்துக் கொண்டு விளையாட்டைக் கவனிக்கலானான்.

சீட்டாட்டத்தில் அவன் பெரும் தொகைகள் ஜெயித்த தும் உண்டு. பெரும் தொகைகள் தோற்றதும் உண்டு. ஆனால் தோற்கும்போது அவனுக்குக் கடும் கோபம் மூளும். பணம் போய்விட்டதே என்றல்ல. தோற்கும்படி ஆகிவிட்டதே என்று. எதிலுமே அவனுக்குத் தோற்கப் பிடிக்காது. ஜெயிப்ப தற்காகவே பிறந்தவன் என்று அவனுக்குத் தன்னைப் பற்றி எண்ணம்.

ஆனால் கடந்த ஒன்றரை மாத காலமாகப் பெர்ரி போப்தான் சேர்ந்தாற்போல் நிறைய ஜெயித்துக் கொண்டே யிருக்கிறான். எப்படியென்று புரியவில்லை. இன்று எப்படி யாவது அவனைத் தோற்கடித்து நாம் ஜெயித்தாக வேண்டும் என்று ஆர்ஸெட்டி தீர்மானமாக இருந்தான்.

பலவகையான சீட்டாட்டங்களை அவர்கள் விளையாடினார்கள். ஆனால் என்ன ஆடினாலும் சரி, ஆர்ஸெட்டி தோற்றுக்கொண்டே இருந்தான். தோற்கத் தோற்க அவனுக்கு நிதானம் தவறியது. இழந்ததைப் பெற்றுவிட வேண்டுமென்ற வெறியில் மேலும் மேலும் பணம் கட்டி, மேலும் மேலும் தோற்றுக் கொண்டிருந்தான்.

நள்ளிரவு வேளையில், அவர்கள் சாப்பாட்டுக்காக எழுந்தபோது, ஆர்ஸெட்டி ஐம்பதாயிரம் டாலர் தோற்றிருந்தான். அதில் பெரும் பகுதியைப் பெர்ரி போப்தான் ஜெயித்திருந்தான்.

சாப்பாடு பிரமாதமாயிருந்தது. வழக்கமாக ஆர்ஸெட்டி மிகவும் ரசித்து ருசித்துச் சாப்பிடுவான். ஆனால் இன்று சாப்பிட்டு முடிந்ததும் சீட்டாட்டத்தைத் தொடர வேண்டும் என்பதிலேயே குறியாயிருந்தான்.

வெள்ளி ஜாடியிலிருந்து காப்பியைக் கோப்பையில் ஊற்றிக் கொண்டு எழுந்தான். பழையபடி சீட்டாட்ட மேஜைக்குப் போய் உட்கார்ந்து கொண்டான். மற்றவர்களும் சீக்கிரம் சாப்பிட்டுத் தொலைக்கக் கூடாதா என்று எரிச்சல் பட்டபடி ஸ்பூனால் காப்பியைக் கலக்கிக் கொண்டிருந்த போது -

ஏதோ சிறிய தூசி மேலேயிருந்து காப்பியில் விழுந்தது. அருவருப்புடன் ஸ்பூனால் அதை எடுத்து என்னவென்று பார்த்தான். மரத்தூள் என்று தெரிந்தது. அண்ணாந்து கூரையைப் பார்த்தான். நெற்றியில் இன்னொரு துண்டு விழுந்தது. குடுகுடுவென்று ஏதோ ஓடும் சத்தமும் கேட்டது.

"பரணில் என்ன வைத்திருக்கிறே?" என்று பெர்ரி போப்பைக் கேட்டான்.

இன்ஸ்பெக்டரிடம் ஏதோ ஜோக் சொல்லிக் கொண்டிருந்த பெர்ரி போப், "ஸாரி, என்ன கேட்டீங்க?" என்றான்.

குடுகுடுவென்று ஓடுகிற சத்தம். இப்போது மேலும் தெளிவாகக் கேட்டது. கூரையிலிருந்து தூசும் துப்பட்டையுமாக என்னென்னவோ விழுந்தன.

"எலி மாதிரி இருக்கிறது." என்றார் பாராளுமன்ற உறுப்பினர்.

பெர்ரி போப்புக்கு ரோஷமாக இருந்தது. "எலியா? இந்த வீட்டிலா? ஒரு நாளும் இல்லை!"

"எலியில்லையென்றால் வேறு ஏதோ ஒன்று!" ஆர் ஸெட்டி உறுமினான்.

அவன் சொல்லிக் கொண்டிருந்தபோதே இன்னொரு பெரிய துண்டு மேஜை மீது விழுந்தது.

"சமையல்காரனைப் பார்க்க சொல்கிறேன்," என்றான் பெர்ரி போப். "சாப்பிட்டு முடித்தாயிற்று ஆட்டத்தைத் தொடரலாம்."

ஆனால் ஆர்ஸெட்டி கூரையைப் பார்த்துக் கொண்டிருந்ததால் அவன் தலைக்கு நேர்மேல் ஒரு சிறிய ஓட்டை தெரிந்தது. அதையே வெறித்து நோக்கியவன், "இரு, அப்புறம் ஆடலாம். மேலே என்ன இருக்கிறது என்பதை முதலில் கவனிக்கணும்."

"ஏன் சார்? நான்தான் சமையல்காரனைப் பார்க்கச் சொல்கிறேன் என்கிறேனே?"

ஆர்ஸெட்டி அதைக் காதில் வாங்காமல் எழுந்து கொண்டான். பரணுக்குச் செல்லும் படிகளில் ஏறினான். மற்ற இருவரும் அவனை பின்தொடர்ந்தார்கள்.

பரணுக்கான கதவைத் திறந்தான் ஆர்ஸெட்டி. பெர்ரி போப் ஸ்விட்சைப் போட்டான்.

இரண்டு எலிகள் பரபரவென்று ஓடிக் கொண்டிருப்பது தெரிந்தது.

"அடக் கடவுளே! என் வீட்டிலா எலிகள்!" என்று ஆச்சரியப்பட்டான் பெர்ரி போப்.

ஆர்ஸெட்டி அவனைக் கவனிக்கவில்லை.

பரண் அறையை வெறிக்க வெறிக்கப் பார்த்தபடி நின்றான்.

பரணின் நடுவே ஒரு மடக்கு நாற்காலி. ஸாண்ட்விச் பாக்கெட். கொஞ்சம் குடித்திருந்த பீர் புட்டி.

நாற்காலிக்குப் பக்கத்தில் ஒரு பைனாகுலர்.

அப்படியானால்...?

ஆர்ஸெட்டியின் முகம் சிவந்தது.

## 28

பெர்ரி போப் வீட்டுப் பரணில் -

உட்கார ஒரு மடக்கு நாற்காலி! சாப்பிடக் கொஞ்சம் சாண்ட்விச்! குடித்துவிட்டுப் பாக்கி வைத்துள்ள பானம்! தரையில் ஒரு பைனாகுலர்!

ஆர்ஸெட்டிக்குக் காலோடு தலை சந்தேகமும் சினமும் மூண்டன. ஒவ்வொன்றாய் அருகில் சென்று பார்வை யிட்டான்.

பைனாகுலரை எடுத்தான். பக்கத்திலேயே தரையில் ஒரு சிறிய ஓட்டை தெரிந்தது.

புழுதியையும், தூசியையும் லட்சியம் பண்ணாமல் மண்டியிட்டுக் குனிந்து அந்த ஓட்டையில் கண்ணை வைத்துப் பார்த்தான்.

நேர் கீழே சீட்டாடும் மேஜை தெரிந்தது. பைனா குலரைக் கண்ணில் பொருந்திக் கொண்டு பார்த்தான். மேஜை மீது கிடந்த சீட்டுக்கள் இன்னும் தெள்ளத் தெளிவாகத் தெரிந்தன.

அதிர்ச்சியில் சிலையாகி நின்று விட்டான் பெர்ரி போப். "என்ன இதெல்லாம்? யார் கொண்டு வந்து போட்டது இவைகளை? சமையல்காரனைக் கூப்பிட்டு உண்டு இல்லை என்று பண்ணுகிறேன் இப்போதே," என்று கத்தினான்.

ஆர்ஸெட்டி மெதுவே எழுந்து கொண்டு உடையில் படிந்திருந்த புழுதியைத் தட்டிவிட்டுக் கொண்டான். எதுவும் பேசவில்லை.

பெர்ரி போப் அந்த ஓட்டையை அப்போதுதான் கவனித்தான். "என்ன ஓட்டை அது? எப்படி வந்தது?" என்று கேட்டவன், பைனாகுலரையும் பார்த்து ஆர்ஸெட்டியையும் பார்த்தான். குனிந்து ஓட்டை வழியே பார்த்தான். அவன் முகம் பயத்தில் வெளிறிப் போயிற்று. எழுந்து சுற்றுமுற்றும் நோக்கினான். மூன்று பேரும் தன்னையே வெறித்து நோக்கிக் கொண்டிருப்பதைக் கண்டதும் என்ன பேசுவதென்றே தெரியவில்லை.

அவனுக்குப் புரிந்தது.

சீட்டாட்டத்தின் போது திருட்டுத்தனமாய்ப் பின் புறமாகச் சென்று, பரணில் ஏறி, ஓட்டை வழியாய், பைனாகுலர் வைத்து மற்றவர்களின் சீட்டுக்களைப் பார்த்துக் கொள்கிறான். அதனால் தான் இப்படி ஜெயிக்க முடிகிறது! இப்படித்தான் தன்னைப் பற்றி நினைக்கிறார்கள் என்பது புரிந்தது.

"இதோ பாருங்கள்! என்னைப் பற்றித் தப்பாக நினைக்காதீர்கள்..." என்று தடுமாறினான். ஆர்ஸெட்டியின் முகத்தைப் பார்க்கவே அவனுக்கு அச்சமாக இருந்தது. "நான்... நான் உங்கள் சினேகிதன்... என்னை நம்புங்கள். உங்களுக்கு நான் துரோகம் நினைப்பேனா? சீட்டாட்டத்தில் உங்களை ஏமாற்றி ஜெயிக்க முயற்சிப்பேனா... கடவுளே, இது ஒன்றுமே எனக்குத் தெரியாது... நான் உங்கள் சினேகிதன் சார், சினேகிதன் சார்.." பேசப் பேசப் பெர்ரி போப்பின் உடம்பு நடுங்கியது. வாயைப் பொத்திக் கொண்டு நகத்தைக் கடிக்கத் தொடங்கினான்.

ஆர்ஸெட்டி மிக அமைதியாக அவன் தோளைத் தட்டிக் குரூரமாகப் புன்னகை செய்தான். "கவலைப்படாதே, பெர்ரி. கவலைப்படாதே!"

*சீற்றத்தை அடக்கிக்கொண்டு அவன் பேசுவதை உணர்ந்தான் பெர்ரி போப். இன்றுடன் தன் வாழ்வு முடிந்து விட்டது என்பது நிச்சயமாகப் புரிந்தது. ஆர்ஸெட்டி இனிமேல் தன்னை உயிருடன் விட்டு வைக்கப்போவதில்லை!*

*பயத்தில், நகத்தைக் கடிக்கப் போய், விரலையே கடித்துக் கொண்டிருந்தான் பெர்ரி போப்.*

*"ஆக, உன் விரோதிகளில் இரண்டு பேர் ஒழிந்தார்கள் ட்ரேஸி!" என்றாள் நீக்ரோக்காரி.*

*அவளும் அவளுடைய நீக்ரோ காதலனும் பெர்ரி போப்பின் வீட்டுக்குத் தொழிலாளி போல் சென்றவனும் ட்ரேஸியும் சிற்றுண்டி அருந்திக் கொண்டிருந்தார்கள்.*

*நீக்ரோக்காரியின் காதலன் புன்னகை செய்தான். "அந்தப் பெர்ரி போப் இப்போதெல்லாம் வக்கீல் தொழிலுக்குப் போவதில்லையாம். ஏதோ பெரிய விபத்து நேர்ந்து ஆஸ்பத்திரியில் படுத்த படுக்கையாகக் கிடக்கிறானாம். என் சினேகிதர்கள் சொன்னார்கள்."*

*நீக்ரோக்காரி கடகடவென்று சிரித்தாள். "உனக்குப் பிரமாதமான மூளை, ட்ரேஸி. எங்களுடன் வந்துவிடேன். நாம் எல்லாருமாக ஏதாவது பிஸினஸ் பண்ணலாம்."*

*"ரொம்ப நன்றி, எர்னி," என்றாள் ட்ரேஸி. "எனக்கு இன்னும் கொஞ்சம் வேலை பாக்கி இருக்கிறது."*

*நீக்ரோக்காரி ஆவலுடன் கேட்டாள். "அடுத்த ஆள் யார்?"*

*"லாரென்ஸ் - ஜட்ஜ் லாரென்ஸ்," என்று பதிலளித்தாள் ட்ரேஸி.*

*ஊர் பெயர் தெரியாத குட்டி வக்கீலாக இருந்தவர் லாரென்ஸ் சட்டத் துறையில் அவருக்குச் சிறிதும் ஞானம் கிடையாது. ஆனால் கட்சிக்காரர்களுக்காக எவ்வளவு குறுக்கு வழிகளில் இறங்க முடியுமோ அவ்வளவிலும் இறங்குவார். தர்ம நியாயம் பார்க்க மாட்டார். ஜூரர்களை*

வளைத்துப் போடுவது, சாட்சிகளை வளைப்பது, போலீ சாருக்கும் நீதிபதிகளுக்கும் லஞ்சம் கொடுத்துச் சரிக்கட்டுவது இந்த மாதிரி காரியங்களில் அசகாய சூரராகத் திகழ்ந்தார்.

வெகு விரைவில் அவர் ஆர்ஸெட்டியின் நட்பைப் பெற்ற தில் ஆச்சரியமில்லை. ஆர்ஸெட்டியின் வல்லடி வழக்குகளை அவர்தான் கவனித்துக் கொண்டார்.

உரிய தருணம் வந்தது. ஆர்ஸெட்டி தன் செல்வாக்கைப் பயன்படுத்தி லாரென்ஸுக்கு நீதிபதி பதவியும் பெற்றுக் கொடுத்தான்.

"ஜட்ஜ் லாரென்ஸை நீ எப்படி மடக்கப் போகிறாய் ட்ரேஸி?" என்று கேட்டாள் நீக்ரோக்காரி. "அவன் பெரும் பணக்காரன், செல்வாக்கும் சக்தியும் உள்ளவன்... அவனை யாரும் எதுவும் பண்ண முடியாது..."

ட்ரேஸியின் முகத்தில் புன் சிரிப்புப் படர்ந்தது.

"பணக்காரன், செல்வாக்கு உள்ளவன். ஒப்புக் கொள்கிறேன். ஆனால், அவனை எதுவும் பண்ண முடியாது என்று சொல்லாதே."

மனத்துக்குள் அவள் ஒரு திட்டம் வைத்திருந்தாள்.

லாரென்ஸின் அலுவலகத்துக்குப் போன் போட்டாள்.

"ஜட்ஜ் லாரென்ஸ் இருக்கிறாரா? அவருடன் பேச வேண்டும்."

"ஸாரி, ஜட்ஜ் இன்று வரவில்லை," என்றாள் லாரென்ஸின் செக்ரட்டரி.

அவர் ஊரில் இருப்பார் என்ற நம்பிக்கையில் ஒரு விதமாகத் திட்டமிட்டிருந்தாள் ட்ரேஸி. பரவாயில்லை. சிறிது மாற்றிக் கொள்ளலாம்.

"எப்ப வருவார் என்று சொல்ல முடியுமா?"

"ஸாரி, எதுவும் தெரியாது."

"ரொம்ப முக்கியமான விஷயம்... நாளைக்கு வந்து விடுவாரா?"

"வரமாட்டார். ஜட்ஜ் வெளியூர் போயிருக்கிறார்."

"அவரோட விலாசமாவது டெலிபோன் நம்பராவது சொல்ல முடியுமா? நான் பேசிக் கொள்கிறேன்."

"அதுவும் முடியாதம்மா. ஜட்ஜ் வெளிநாடு போயிருக்கிறார்."

ட்ரேஸிக்கு ஏமாற்றமாயிருந்தது. ஆனால் அதைக் குரலில் காட்டிக் கொள்ளாமல் பேசினாள். "அப்படியா... வெளிநாடு என்றால் எங்கே?"

"ஐரோப்பாவுக்குப் போயிருக்கிறார். சர்வதேச நீதிபதிகள் கருத்தரங்கு ஒன்று நடக்கிறது. அதில் கலந்து கொள்வதற்காகப் போயிருக்கிறார்."

"அடடா!" வருத்தம் தொனிக்கும் குரலில் ட்ரேஸி சொன்னாள்.

"நீங்கள் யார் என்று தெரிந்து கொள்ளலாமா?"

ட்ரேஸி தன் கற்பனையைச் சிறகடித்துப் பறக்க விட்டாள். "என் பெயர் எலிஸபெத். அமெரிக்க வழக்கறிஞர்கள் சங்கத்தின் தென் மண்டலப் பிரிவுக்குத் தலைவி. இந்த மாதம் இருபதாம் தேதியன்று எங்கள் வருடாந்தர விழா நடைபெறுகிறது. அப்போது பல முக்கியமான புள்ளிகளுக்கு விருதுகள் வழங்குவோம். இந்த வருஷம் சிறந்த நீதிபதியாக ஜட்ஜ் லாரென்ஸைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம்."

"அடே! அப்படியா?" என்றாள் லாரென்ஸின் செக்ரட்டரி உற்சாகமாக. "ஆனால் நீங்கள் சொல்கிற இருபதாம் தேதிக்குள் அவர் வரமாட்டாரே?"

"ஹூம்! அப்படியானால் என்ன பண்ணுவது!" பெருமூச்சு விட்டாள் ட்ரேஸி. "ஜட்ஜ் லாரென்ஸின் சொற்பொழிவைக் கேட்க நாங்கள் எல்லாரும் ஆவலாயிருந்தோம். எங்கள் சங்கத்தில் அவர் பெயரை ஒருமனதாய்த் தேர்ந்தெடுத்திருந்தார்கள்."

"இப்படிப்பட்ட விழாவுக்கு வர முடியாமல் போய் விட்டதே என்று ஜட்ஜுக்கும் ரொம்ப ஏமாற்றமாக இருக்கும்," என்றாள் லாரென்ஸின் செக்ரட்டரி வருத்தமாக.

"ஆமாம். ஆமாம். இது எப்பேர்ப்பட்ட கௌரவம் என்பது உங்களுக்கே தெரிந்திருக்கும். நாட்டின் தலைசிறந்த நீதிபதிகளுக்குத்தான் இந்த விருதை வழங்குகிறோம். இது வரை பெரிய பெரிய நீதிபதிகள் வாங்கியிருக்கிறார்கள்... இருங்கள், இருங்கள். எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது," என்றாள் ட்ரேஸி. "விருதை ஏற்றுக் கொண்டதாகச் சில வார்த்தைகள் - அதற்கு நன்றி தெரிவித்துச் சில வார்த்தைகள் ஜட்ஜ் டேப் பண்ணி அனுப்பலாமே?"

"செய்யலாம்... ஆனால்... வந்து... ஜட்ஜ் ரொம்ப பிஸி... நேரமே இருக்காது..."

"பத்திரிகைகளிலும் டி.வி.யிலும் இந்த விழாவைப் பற்றிப் பிரமாதமாகச் செய்திகள் வரும்..."

சிறிது நேரம் மௌனம் நிலவியது.

பத்திரிகை, டெலிவிஷன் விளம்பரம் என்றால் ஜட்ஜுக்கு உயிர் என்பது செக்ரட்டரிக்குத் தெரியும். இப்போது சுற்றுப் பயணம் சென்றிருப்பது கூட விளம்பரத்துக்கு ஆசைப் பட்டுத்தான்.

"சரி, உங்களுக்காக இரண்டு வார்த்தை டேப் பண்ணி அனுப்பினாலும் அனுப்புவார். கேட்டுப் பார்க்கிறேன்."

"பிரமாதம், பிரமாதம்!" என்று தன் குதூகலத்தை வெளிப்படுத்திக் கொண்டாள் ட்ரேஸி. "விழா நிகழ்ச்சிகளில் அவர் பேச்சு ரொம்ப அருமையான அம்சமாக இருக்கும்!"

"ஜட்ஜ் ஏதாவது குறிப்பாகச் சொல்ல வேண்டி யிருக்குமா?"

"நிச்சயமாய்! அவர் என்ன சொல்லணும் என்றால் ட்ரேஸி யோசிக்கிற மாதிரி பாவனை செய்தாள். "அது கொஞ்சம் யோசித்துச் சொல்ல வேண்டிய விஷயம்.

சிக்கலான சமாசாரம். ஜட்ஜிடம் நானே நேரில் பேசிக் கொள்கிறேன்!"

மறுபடியும் ஒரு நிமிடம் மௌனம். ஜட்ஜ் லாரென்ஸின் செக்ரட்டரி குழம்பிப் போனாள். தன் சுற்றுப் பயண விவரங்களை யாருக்கும் சொல்ல வேண்டாம் என்று ஜட்ஜ் கட்டளையிட்டிருந்தார். ஆனால் இவ்வளவு முக்கியமான விருது பெறும் விழாவை அவர் நழுவ விடும்படி நேரிட்டால், செக்ரட்டரிதான் அதற்குக் காரணம் என்று குற்றம் சாட்டுவார்.

கடைசியில் சொன்னாள்: "ஜட்ஜ் இப்ப மாஸ்கோவில் ரோஸியா ஹோட்டலில் தங்கியிருக்கிறார். இன்னும் ஐந்து நாளைக்கு அங்கே தான் இருப்பார். அதற்குப் பிறகு..."

"அது போதும்," ட்ரேஸி இடை வெட்டினாள். "நான் இப்பவே அவருடன் தொடர்பு கொள்கிறேன். ரொம்பத் தாங்க்ஸ்."

"நான் தான் உங்களுக்குத் தாங்ஸ் சொல்லணும், மிஸ் எலிஸபெத்! " என்றாள் ஜட்ஜின் செக்ரட்டரி.

மாஸ்கோவில் ரோஸியா ஓட்டலில் தங்கியிருந்த ஜட்ஜ் லாரென்ஸுக்கு அடுத்தடுத்துத் தந்திகள் வந்தன.

அடுத்த ஜட்ஜ்களின் கூட்டம் குறித்து ஏற்பாடு செய்யலாம் என்றும், ஜட்ஜுக்குச் சௌகரியமான தேதி தெரிந்தால் ஓட்டலில் ரூம் வசதி செய்ய முடியும் என்றும் முதல் தந்தி கூறியது.

போரிஸ் என்று ஒருவர் அந்தத் தந்தியைக் கொடுத்தி ருந்தார். அதற்கடுத்த தினம் வந்த தந்தியில்

சகோதரி பிரயாணம் செய்த விமானம் தாமதமாக வந்தாலும் பத்திரமாக வந்து சேர்ந்தது என்றும், அவளுடைய பாஸ்போர்ட்டும் பணமும் தொலைந்து விட்டன என்றும், ஆனால் ஸ்விட்சர்லாந்தில் முதல் தர ஓட்டலில் தங்க வைத்திருப்பதாயும், பிற்பாடு கணக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்றும் கூறியது. இந்தத் தந்தியும் போரிஸ் என்பவர் கொடுத்திருந்தார்.

மூன்றாம் நாள் வந்த தந்தியில் -

அவருடைய சகோதரி தற்காலிக பாஸ்போர்ட் வாங்குவதற்காக அமெரிக்க தூதரகத்தை அணுகியிருப்ப தாயும், சகோதரியைக் கப்பலேற்றி அனுப்பி வைப்பதாகவும் கூறியது.

இந்தத் தந்தியை அனுப்பிய வரும் போரிஸ் என்பவர் தான்.

ரஷ்ய ரகசியப் போலீசார் இந்தத் தந்திகளைக் கவனித்துக் கொண்டிருந்தனர். நான்காம் நாள் ஜட்ஜ் லாரென்ஸைக் கைது செய்தார்கள்.

## 29

ரஷ்ய ரகசியப் போலீஸ், ஜட்ஜ் லாரென்சைக் கைது செய்து, பத்து நாட்களுக்கு இரவு பகலாக அவரை விசாரணை செய்தார்கள்.

"ரகசியத் தகவலை யாருக்கு அனுப்பினீர்கள்" என்று கேட்டார்கள்.

ஜட்ஜ் லாரென்ஸ் சிரித்தார். "ரகசியத் தகவலா? நீங்கள் என்ன கேட்கிறீர்களென்றே எனக்குப் புரியவில்லை," என்றார்.

"புரியவில்லையா? பிளான்களைச் சொல்கிறோம். உங்களுக்கு பிளான்களைக் கொடுத்தது யார்?"

"பிளான்களா? என்ன?"

"ரஷ்ய அணுவிசை நீர்மூழ்கிக் கப்பல்களைப் பற்றிய பிளான்கள்," என்றார்கள் விடாமல்.

"உங்களுக்கு என்னவோ பைத்தியம்தான் பிடித்தி ருக்கிறது. ரஷ்ய சப்மரினாவது ஒன்றாவது! எனக்கு என்ன தெரியும்?"

"உங்களுக்கு என்ன தெரியும் என்பதைத் தான் நாங்களும் தெரிந்து கொள்ள விரும்புகிறோம். நீங்கள் ரகசியமாகச் சந்தித்துப் பேசினீர்களே, யார் அவர்கள்?"

"ரகசியச் சந்திப்பா? என்னிடம் எந்த ரகசியமும் கிடையாது," என்றார் லாரென்ஸ்.

"ரொம்பச் சரி. போரிஸ் என்பது யார் என்பதையாவது சொல்லுங்கள்."

"போரிஸா? யாரவன்?"

"ஸ்விஸ் பாங்க்கில் உங்கள் கணக்கில் பணம் டெபாசிட் பண்ணியவன்."

"ஸ்விஸ் பாங்க்கிலா? எனக்குக் கணக்கா?"

ரகசியப் போலீசாருக்குக் கடும் கோபம் மூண்டது.

"சரியான முட்டாள் நீ! வெட்டி வீம்பு பிடிக்கிற முட்டாள்!" என்று சீறினார்கள். "ஆனால் நாங்கள் விடப் போவதில்லை. உனக்கும் சரி, உன்னைப் போல எங்கள் நாட்டைக் கவிழ்க்கப் பார்க்கிற எல்லா அமெரிக்க ஒற்றர்களுக்கும் சரி, பாடம் கற்பிக்காமல் விடமாட்டோம்!"

மாஸ்கோவில் இருந்த அமெரிக்கத் தூதர், ஜட்ஜ் லாரென்ஸைப் பார்க்க அனுமதி கேட்டார். லேசில் கிடைக்கவில்லை. கடைசியில் ஒரு வழியாய் அனுமதி கிடைத்து, ஜட்ஜைப் பார்க்க வந்தார். அதற்குள் லாரென்ஸின் எடை பதினைந்து பவுண்டு குறைந்துவிட்டது. ரகசியப் போலீசார் அவரைத் தூங்கவிட்டு ரொம்ப நாளாகியிருந்தது. கடைசியாய் எப்போது தூங்கினோம் என்பதே லாரென்ஸுக்கு ஞாபகமில்லை. நடைப்பிணமாக மாறியிருந்தார் மனிதர்.

"என்னை ஏன் இப்படிப் பண்ணுகிறார்கள் இவர்கள்?" என்று அழாத குறையாகச் சொன்னார் அமெரிக்கத் தூதரிடம். "நான் ஓர் அமெரிக்கப் பிரஜை. நான் ஒரு ஜட்ஜ். உங்களுக்குப் புண்ணியமாகப் போகட்டும். என்னை எப்படியாவது விடுதலை பண்ணும்படி செய்யுங்கள்."

"என்னால் முடிந்ததனைத்தும் செய்து கொண்டுதான் இருக்கிறேன்," என்றார் அமெரிக்க தூதர். ஜட்ஜின் தோற்றத்தைப் பார்த்து அவருக்கு ஒரே அதிர்ச்சி. இரண்டு

வாரத்துக்கு முன்பு. அமெரிக்காவிலிருந்து நீதிபதிகள் குழு மாஸ்கோவுக்கு வந்தபோது அமெரிக்க தூதர் என்ற முறையில் அவர்களை வரவேற்றிருந்தார். அப்போது பார்த்த லாரென்ஸ் எங்கே, இப்போது பயந்து நடுங்கிக் கெஞ்சி அழுகிற இந்த ஜட்ஜ் லாரென்ஸ் எங்கே! சம்பந்தமேயில்லையே!

ரகசியப் போலீசாரின் நடவடிக்கை எதுவும் அமெரிக்க தூதருக்கு விளங்கவில்லை. என்னதான் நினைத்திருக்கிறார் கள் இந்தப் பேர்வழிகள்! இந்த ஜட்ஜாவது ஒற்றராவது? என்னைக்கூட அமெரிக்க ஒற்றன் என்று சொல்லிவிடுவார்கள் போலிருக்கிறதே!

அமெரிக்க தூதருக்கு ஒரே எரிச்சலாயிருந்தது.

கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரைப் பார்க்க வேண்டும் என்று கோரினார். அதற்கு அனுமதி கிடைக்கவில்லை. ஒரு குட்டி மந்திரியைத்தான் பார்க்க முடிந்தது.

"ஜட்ஜ் லாரென்ஸ் மீது நடவடிக்கை எடுத்திருப்பதைக் கடுமையாக ஆட்சேபிக்கிறேன்," என்றார் கோபமாக. "ஜட்ஜ் லாரென்ஸை உங்கள் அரசாங்கம் நடத்தும் விதம் மன்னிக்க முடியாதது. எவ்வளவு பெரிய மனிதர் அவர்! அவரைப் போய் உளவாளி என்கிறீர்களே? சுத்த அபத்தம்!"

"சொல்லி முடித்துவிட்டீரா?" என்றார் ரஷ்ய அமைச்சர் வெகு அமைதியாக. "அப்படியானால் இவைகளைப் பாருங்கள்."

ஜட்ஜ் லாரென்ஸுக்கு வந்த தந்திகளைக் காட்டினார் மந்திரி.

- NEXT JUDICIARY COUNCIL <u>MEETING</u> CAN NOW BE <u>ARRANGED</u> CONFIRM CONVENIENT DATE <u>AS</u> SPACE MUST BE <u>REQUESTED.</u>

  ***BORIS***

- ADVISE PROBLEM TRAVEL <u>PLANS</u> YOUR SISTER'S PLANE <u>ARRIVED</u> LATE BUT LANDED <u>SAFELY</u>. LOST

PASSPORT AND **MONEY**. SHE WILL BE **PLACED** IN FIRST CLASS **SWISS** HOTEL WILL SETTLE **ACCOUNT** LATER.

***BORIS***

- YOUR SISTER WILL **TRY** AMERICAN EMBASSY TO **OBTAIN** TEMPORARY PASSPORT NO **INFORMATION** AVAILABLE YET ON **NEW** VISA SWISS MAKE **RUSSIANS** SEEM SAINTS WILL **SHIP** SISTER TO YOU **SOONEST**.

***BORIS***

*அமெரிக்க தூதர் இவைகளைப் படித்தார். எதுவும் விளங்காமல் நிமிர்ந்து நோக்கினார் மந்திரியை. "என்ன இந்தத் தந்திகளில்? ஒரு தப்பும் தெரியவில்லையே? சாதாரணமான செய்திகள் தானே?"*

*"அப்படியா சொல்கிறீர்கள்?" என்றார் ரஷ்ய அமைச்சர். "எதற்கும் இன்னொரு முறை பாருங்கள். தந்திகளில் ரகசியக் குறிப்பு அடங்கியிருக்கிறது. எங்கள் போலீசார் அதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்." சொல்லிவிட்டு, அதே தந்தி களின் வேறொரு நகலைக் காட்டினார்.*

*தந்தியில் உள்ள வாக்கியங்களில் ஒவ்வொரு நாலாவது சொல்லும் அடிக்கோடிட்டுக் காட்டப்பட்டிருந்தது. அவை களைக் கூட்டிப் பார்த்தபோது -*

**மீட்டிங் - ஏற்பாடாகியிருக்கிறது நீங்கள் கோரியபடி *போரிஸ்.***

**பிளான்கள் - வந்து சேர்ந்தன - பத்திரமாக - பணம் - ஸ்விஸ் கணக்கில் - சேர்ப்பிக்கப்பட்டாயிற்று - *போரிஸ்.***

**முடிந்த அளவு விரைவாக - புதிய - ரஷ்ய கப்பல் - தகவல் - பெற முயலவும் - *போரிஸ்.***

*படித்து முடித்த அமெரிக்க தூதரால் எதுவுமே பேச முடியவில்லை.*

ரஷ்ய நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வந்தது. பத்திரிகையாளரோ, பொது மக்களோ வழக்கைப் பார்க்க அனுமதிக்கப்படவில்லை.

உளவு வேலை பார்ப்பதற்காகத்தான் ரஷ்யாவுக்கு வந்ததாகக் கடைசி வரையில் ஒப்புக் கொள்ளவில்லை ஜட்ஜ் லாரென்ஸ். அவரை அமர்த்தியவர்கள் யார், அவருடைய ரஷ்யக் கூட்டாளி யார் என்பதைச் சொன்னால் மன்னித்து விடுதலை செய்வதாகப் போலீசார் சொல்லிப் பார்த்தார்கள்.

"அது தெரிந்தால் நான் ஏன் இப்படி இருக்கிறேன்!' என்று புலம்பினார் லாரென்ஸ்.

ரஷ்யப் பத்திரிகையான பிராவ்டாவில் வழக்கைப் பற்றிய செய்தி சுருக்கமாக வெளிவந்தது.

'பிரபல அமெரிக்க ஒற்றரான ஜட்ஜ் லாரென்ஸ், உளவு வேலை பார்த்ததற்காகப் பிடிபட்டு. விசாரிக்கப்பட்டார். சைபீரியாவில் பதினாறு வருடம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது' என்று அந்தச் செய்தி கூறியது.

அங்கே அமெரிக்காவில், அரசாங்க ரகசியப் போலீசார், உளவுப் பிரிவினர், அயல்நாட்டிலாகா, நிதித் துறை முதலிய பலரும் மண்டைகளை உடைத்துக் கொண்டார்கள் ஜட்ஜ் லாரென்ஸின் வழக்கைப் பற்றி.

"அவர் எங்கள் ஆள் இல்லை, ரகசியப் போலீஸ் துறையைச் சேர்ந்தவர் போலிருக்கிறது," என்றார்கள் உளவுத் துறையினர்.

ரகசியப் போலீசாரோ இவ்வழக்கில் தங்களுக்கு எந்தச் சம்பந்தமும் கிடையாது என்று அடித்துச் சொன்னார்கள். இப்படியே ஒவ்வொரு இலாகாவும் இன்னொரு இலாகாதான் லாரென்ஸை உளவு வேலைக்கு அமர்த்தியிருக்க வேண்டும் என்று நம்பினார்கள்.

ஆனால், ரஷ்யப் போலீஸுக்குச் சந்தேகம் ஏற்படுத்தும் வகையில் ட்ரேஸிதான் தந்தி வாசகங்களை அமைத்து அனுப்பினாள் என்று யாருமே சந்தேகப்படக் காணோம்.

*தன் முக்கியமான வலது கைகள் இப்படி ஒவ்வொன்றாய்க் கை விட்டுப் போகவே ஆர்ஸெட்டி மனமுடைந்தான். ஏன் இப்படி நேர்கிறது என்று அவனுக்குப் புரியவில்லை. வாழ்க்கையில் முதல் தடவையாக இப்போது தான் அதிர்ஷ்டம் அவனைக் கைவிடுகிறது. முதலில் ரொமானோ பணத்தைச் சுருட்டிக்கொண்டு ஓடினான்; அடுத்து பெர்ரி போப்பின் சீட்டாட்ட மோசடி. இப்போது ஜட்ஜ் லாரென்ஸ் ஏதோ ஒரு முட்டாள்தனமான உளவு வேலையில் மூக்கை நுழைத்து மாட்டிக்கொண்டு மறைந்துவிட்டார்.*

*மூவரும் அவனுடைய ரௌடி சாம்ராஜ்யத்தின் தூண்கள். அவர்களைத்தான் ஆர்ஸெட்டி பெரிதும் நம்பியிருந்தான். குறிப்பாக, ரொமானோ. ஆர்ஸெட்டியின் தில்லு முல்லு காரியங்களைத் திறமையுடன் நிர்வகித்து வந்தவன் அவன் தான். அவனுடைய இடத்துக்குச் சரியான பர்த்தி ஆள் கிடைக்கவில்லை. பிஸினஸ் கசாமுசாவென்று நடைபெற்றது. இது சரியில்லை, அது சரியில்லை என்று பகிரங்கமாகப் பலர் புகார் செய்தார்கள். ஆர்ஸெட்டியின் முகத்துக்கு எதிரே நின்று ஒரு வார்த்தை பேசவே பயப் பட்டவர்கள் இன்று எதிர்த்து வாயாடுகிறார்கள். அவனைப் பற்றிப் பல வகையாக பேசுகிறார்கள்.*

*ஆர்ஸெட்டிக்கு வயதாகி விட்டது. ஆட்களை ஒழுங்காக வைத்துக் கொள்ளத் தெரியவில்லை. அவனுடைய பிஸினஸ்கள் உடைந்து நொறுங்கிக் கொண்டிருக்கின்றன. இப்படிப் பல வதந்தி.*

*முதுகை முறிக்கும் கடைசித் துருப்பாக நியூ ஜெர்ஸியிலிருந்து டெலிபோன் வந்தது. ரௌடிகள் கூட்டத்தின் 'தலைமையகம்' இருப்பது அங்கேதான்.*

*"என்னப்பா, கொஞ்ச நாளாய் நீ என்னென்னவோ பிரசினைகளில் மாட்டிக் கொண்டிருக்கிறாயாமே? உனக்கு உதவியாக யாரையேனும் அனுப்பட்டுமா?" என்றார்கள்.*

*"நான் எதிலும் மாட்டிக் கொள்ளவில்லை." என்று ஆர்ஸெட்டி ரோஷமாய்ப் பதில் கூறினான். "ஒன்றிரண்டு*

சின்னப் பிரசினைகள். அவ்வளவுதான். அதையும் நான் சமாளித்து விட்டேன்."

"நீ சொல்கிறாயே தவிர, எங்களுக்குக் கிடைத்திருக்கும் தகவல் வேறு விதமாக இருக்கிறதே? உங்கள் ஊரில் நம்ம வேலைகள் தாறுமாறாய்ப் போய்க் கொண்டிருக்கிறதாம். அதைக் கட்டுப்படுத்த யாரும் இல்லையாம்."

"நான் கட்டுப்படுத்திக்கொண்டுதான் இருக்கிறேன்."

"ஒரு வேளை உன்னையும்மீறி அப்படிப் போய் விட்டதோ என்னவோ. ஒருகால் நீ அளவுக்கு மீறி உழைக்கிறாயோ என்னவோ. எங்க ஆளை அனுப்பி உனக்கு ஒரு உதவி செய்யறதுன்னு தீர்மானம் பண்ணியிருக்கிறோம். அவ்வளவு தான். அதிலென்ன தப்பு? நாமெல்லாம் பழைய சினேகிதர்கள் இல்லையா!"

ஆர்ஸெட்டியின் நாடி நரம்புகளில் சில்லென்று ஏதோ இறங்குகிற மாதிரி இருந்தது.

ட்ரேசியும் நீக்ரோக்காரியும் சமையலறையில் வேலையாக இருந்தார்கள்.

நீக்ரோக்காரியின் காதலன் அப்போதுதான் வெளியில் போய்விட்டு வந்தான். அவன் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. "நான் ஒரு பெரிய சேதி கொண்டு வந்திருக்கிறேனாக்கும்!" என்றான் ட்ரேஸியைப் பார்த்து, "ஆர்ஸெட்டியின் கதை இனிமேல் அவ்வளவுதான். நியூஜெர்ஸியிலிருந்து வேறு கும்பல் வரப்போகிறதாம். ஆர்ஸெட்டியின் கம்பெனிகள், வேலைகள் எல்லாவற்றையும் அவர்கள் மேற்கொள்ளப் போகிறார்கள்! ஆர்ஸெட்டியை நீ ஒழித்து விட்டாய் ட்ரேஸி!" என்று கூறியவன் ட்ரேஸியின் கண்களைப் பார்த்தான். "என்னம்மா. ஏன் என்னவோ போலிருக்கிறாய்? உனக்குச் சந்தோஷம் தானே ட்ரேஸி?"

'சந்தோஷம்! என்ன அன்னியமான சொல்!' என்று எண்ணிக் கொண்டாள் ட்ரேஸி. சந்தோஷம் என்ற சொல்லின் அர்த்தமே மறந்துவிட்டது அவளுக்கு. இனிமேல்

என்றைக்காவது நாம் சந்தோஷமாக இருப்போமா? அதுவே சந்தேகமாயிருந்தது. சந்தோஷம் என்பதில்லை; சாதாரண மனிதர்களுக்கு ஏற்படக்கூடிய சாதாரண உணர்வுகூட எதுவும் நமக்கு இனி ஏற்படாது என்று தோன்றியது.

தனக்கும் தன் அம்மாவுக்கும் தீங்கு செய்தவர்களைப் பழி வாங்க வேண்டும் என்ற ஒரே நோக்கம் தான் விழித்துக் கொண்டிருந்த ஒவ்வொரு நிமிடமும் அவள் சிந்தனையில் நிரம்பியிருந்தது. அந்தத் நோக்கம் இப்போது அனேகமாக நிறைவேறி விட்டது.

இனி?

ஒரு வகை சூனியம் குடிகொண்டது அவள் உள்ளத்தில்.

மறுநாள் காலையில் ஒரு பூக்கடைக்குச் சென்றாள் ட்ரேஸி. ஆர்ஸெட்டியின் விலாசத்தைக் கொடுத்தாள். சவத்துக்கு வைக்கப்படும் வெள்ளைப் பூமாலையொன்றை அங்கு அனுப்பி வைக்கும்படி ஆர்டர் கொடுத்தாள். மாலையுடன் இருக்கும் ரிப்பனில் 'ஆன்மா சாந்தியடைவதாக' என்று எழுதச் சொன்னாள்.

அனுப்பியவரின் விலாசம் எழுத வேண்டிய அட்டையில் - 'டோரிஸ் விட்னியின் மகள்' என்று எழுதிவிட்டு நடந்தாள்.

## 30

அடுத்துக் கவனிக்க வேண்டியது தன் முன்னாள் காதலன் சார்லஸைத்தான் என்று ட்ரேஸி தீர்மானித்தாள்.

ரொமானோவாகட்டும், பெர்ரி போப்பாகட்டும், ஜட்ஜ் லாரென்ஸாகட்டும். ஆர்ஸெட்டியாகட்டும் அவளைப் பொறுத்த வரையில் அன்னியர்கள். அவளுடன் நேரடியான பழக்கம் இல்லாதவர்கள்.

சார்லஸ் அப்படியல்ல.

அவளுடைய காதலனாக இருந்தவன். பிறக்காமலே போய்விட்ட அவளுடைய குழந்தையின் தகப்பன். அவளையும் அவள் குழந்தையையும் உதறித் தள்ளியவன்.

பிலடெல்பியாவுக்குப் புறப்பட்டாள் ட்ரேஸி. நீக்ரோக் காரியும் அவள் காதலனும் நியூ ஆர்லியன்ஸ் விமான தளத்துக்கு வந்து அவளை வழியனுப்பினார்கள்.

"நீ இல்லாமல் எனக்கு வெறிச்சென்று ஆகிவிடும், ட்ரேஸி," என்றாள் நீக்ரோக்காரி. "இந்த ஊரையே நீ சுத்தப் படுத்தி விட்டாய். மேயர் தேர்தலுக்கு நீ நின்று போட்டி யிடலாம். நிச்சயம் ஜெயிப்பாய்!"

"பிலடெல்பியாவுக்குப் போய் என்ன செய்யப் போகிறாய்?" என்று நீக்ரோக்காரியின் காதலன் கேட்டான்.

"அதுதானே என் ஊர்! பழைய பாங்க் வேலையை மறுபடி பார்க்கப் போகிறேன்," என்றாள் ட்ரேஸி.

நீக்ரோக்காரியும், அவள் காதலனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். "அவர்களுக்கு... வந்து... நீ வேலைக்கு வரப் போகிறாய் என்று தெரியுமா ட்ரேஸி?"

"தெரியாது. ஆனால் பாங்க் வைஸ் பிரசிடெண்ட்டுக்கு என்னிடம் பிரியம் உண்டு. என்னைப் போல நல்ல கம்ப் யூட்டர் ஆபரேட்டர்களுக்கு எப்பவுமே கிராக்கி."

"நல்லது. எங்கள் வாழ்த்துக்கள், ட்ரேஸி. அடிக்கடி கடிதம் போடு. வம்பு தும்பிலே மாட்டிக் கொள்ளாதே."

விடை பெற்றாள் ட்ரேஸி. முப்பது நிமிடம் கழித்து அவள் விமானம் புறப்பட்டது - பிலடெல்பியாவை நோக்கி.

அடுத்த நாள் காலை.

தங்கியிருந்த ஓட்டலிலிருந்து கிளம்பினாள் ட்ரேஸி தன்னிடமிருந்த ஒரே நல்ல டிரெஸ்ஸை அணிந்து கொண்டு, பாங்க்கை அடைந்தபோது காலை பதினொரு மணி.

வைஸ் பிரிஸிடெண்ட் டெஸ்மாண்டின் செக்ரட்டரியை அணுகினாள். ட்ரேஸிக்கு நன்கு பழக்கமானவள் அந்தப் பெண். மே என்று பெயர்.

"ஹலோ மே!"

நிமிர்ந்து பார்த்த செக்ரட்டரியினால் தன் கண்களை நம்ப முடியவில்லை. பேயைக் கண்ட மாதிரி முகம் வெளிறினாள். "ட்ரேஸி... நீயா... எப்படி இருக்கிறே?"

"நன்றாயிருக்கிறேன்... மிஸ்டர் டெஸ்மாண்ட் இருக்கிறாரா?"

"வந்து... தெரியலே. போய்ப் பார்க்கிறேன் கொஞ்சம் இரு." குழப்பத்துடன் எழுந்தவள் வைஸ் பிரஸிடெண்டின் அறைக்குள் போய்ச் சில நிமிடங்களில் திரும்பினாள்.

"வரச் சொல்கிறார்," என்று கூறி வழி விட்டு ஒதுங்கி நின்றாள்.

'ஏன் இவள் இப்படித் தடுமாறுகிறாள்?' என்று ட்ரேஸிக்கு ஆச்சரியமாய் இருந்தது.

டெஸ்மாண்ட் மேஜையருகே நின்றிருந்தார்.

"ஹலோ மிஸ்டர் டெஸ்மாண்ட்," என்றாள் ட்ரேஸி உற்சாகமாய். "நான் திரும்பி வந்து விட்டேன்!"

"என்ன விஷயம்?" என்றார் வைஸ் பிரஸிடெண்ட். அவர் குரலில் சினேக பாவம் தென்படவில்லை. எரிச்சல்தான் தென்பட்டது.

ட்ரேஸிக்கு அது ஆச்சரியம் ஏற்படுத்தியது. இருந்தாலும் விடாமல் சொன்னாள்: "நீங்கள் சொன்னீர்களே, நான் ரொம்பச் சிறந்த கம்ப்யூட்டர் ஆபரேட்டர் என்று? அதனால்..."

"அதனால் உனக்கு மறுபடி வேலை கொடுப்பேனென்று நினைத்தாயா?"

"வந்து... ஆமாம் சார், என்னுடைய திறமைகள் போய் விடவில்லை. இப்பவும் நான்-"

"மிஸ் விட்னி," என்றார் கடுமையாக வைஸ் பிரசிடெண்ட் டெஸ்மாண்ட். முன்னெல்லாம் அவளைப் பிரியமாக ட்ரேஸி என்று தான் அழைப்பார்.

"ஸாரி. நீ கேட்பது கொஞ்சமும் நடவாத காரியம். ஒழுங்குக்கும் நேர்மைக்கும் நாணயத்துக்கும் மிகவும் பெயர் பெற்றது இந்தப் பாங்க். துப்பாக்கியால் சுட்டு, கொள்ளை யடித்து, கொலை செய்ய முயற்சித்து, தண்டனை பெற்றுச் சிறைக்குப் போன ஒரு பெண்ணை இங்கே வேலைக்கு வைத்துக் கொண்டால் எங்கள் வாடிக்கையாளர்களுக்குக் கொஞ்சமும் பிடிக்காது. உனக்குப் புரியுமென்று நினைக் கிறேன். நாங்கள் மட்டுமல்ல, எந்தப் பாங்க்குமே உன்னை வேலைக்கு அமர்த்திக் கொள்வது சந்தேகம் தான். உனக்கு ஏற்ற இடமாகப் பார்த்து வேலை தேடிக்கொள். அவ்வளவு தான் நான் சொல்லக் கூடியது. மற்றப்படி உன்னிடம் எனக்குத் தனிப்பட்ட முறையில் எந்த வருத்தமும் இல்லை..."

அவர் பேச்சு முதலில் ட்ரேஸிக்கு அதிர்ச்சியாக இருந்தது. பிறகு சிறிது சிறிதாகக் கோபம் வளர்ந்தது.

நான் ஏதோ சமூகத்தால் ஒதுக்கப்பட்ட ஈனப் பிறவி போல, தீராத நோய் பிடித்தவள் போல அல்லவா பேசுகிறார் இந்த மனிதர்!

'ட்ரேஸி, நீ வேலையை விட்டுப் போகக் கூடாது. உன்னை இழக்க எங்கள் பாங்க் விரும்பவில்லை. எங்களுடைய மிக மதிப்பு வாய்ந்த ஊழியர்களில் நீ ஒருத்தி...' என்றெல்லாம் முன்னொரு நாள் சொன்ன அதே வைஸ் பிரஸிடெண்டா இவர்!

"வேறு ஒன்றும் இல்லையே விட்னி?" என்றார் அவர். இடத்தைக் காலி செய் என்று அர்த்தம்.

'வேறு எதுவும் இல்லையே என்றா கேட்கிறீர்கள்? ஆயிரம் இருக்கிறது!' என்று சொல்ல வேண்டும் போலி ருந்தது ட்ரேஸிக்கு. ஆனால் அதையெல்லாம் இப்போது சொல்லிப் பிரயோசனமில்லை என்பதை உணர்ந்து கொண்டாள்.

"வேறொன்றுமில்லை. நீங்கள் தான் சொல்ல வேண்டி யதைச் சொல்லி விட்டீர்களே!" என்று கூறிவிட்டு அந்த அறையை விட்டு வெளியேறினாள்.

அவள் உடம்பு மொத்தமும் எரிந்து கொண்டிருந்தது.

தான் வந்திருப்பதை வைஸ் பிரசிடென்டின் செக்ரட்டரி எல்லோருக்கும் தெரிவித்து விட்டாள் போலிருக்கிறது. பாங்க் ஊழியர்கள் அத்தனை பேரும் தன்னையே வெறித்து நோக்குகிற மாதிரி இருந்தது.

"சிறைக்குப் போன கைதி!" என்று அவர்கள் வாய் முணுமுணுப்பது போலிருந்தது.

உள்ளுக்குள் செத்துக் கொண்டிருந்தாலும் ட்ரேஸி தலை நிமிர்த்தி நடந்து பாங்க்கை விட்டு வெளியேறினாள்.

'என்ன குரூரமாய் நடத்திவிட்டார்கள் என்னை! பரவாயில்லை. என்னிடம் இப்போது மிஞ்சியிருப்ப தெல்லாம் என் தன்மானம் ஒன்று தான். அதை யாரும் என்னிடமிருந்து பறித்துவிட முடியாது.'

பாங்க்கில் தனக்கு வேலை தருவார்கள் என்று எதிர் பார்த்தது எத்தனை அசட்டுத்தனம்! அவள் சிறைக்குப் போனவள் என்பது ஊர் முழுவதும் தெரிந்த சமாசார மாயிற்றே! 'உன்னைப் பற்றி இன்று பத்திரிகையில் கொட்டை எழுத்தில் வெளிவந்திருக்கிறது ட்ரேஸி!' என்று சார்லஸ் போனில் சொன்னானே...

இருக்கட்டும். இந்த ஊரில் இன்னும் சில வேலைகள் பாக்கி இருக்கின்றன. அது முடிந்ததும் நியூயார்க்கிற்குப் போய்விடலாம். அங்கே நம்மை யாருக்கும் தெரியாது...

இப்படி முடிவு செய்து கொண்டதும் மனத்தில் உற்சாகம் பிறந்தது.

**கா**லையில் பாங்க்கில் ஏற்பட்ட ஏமாற்றத்தைத் தாங்கிக் கொண்டதற்காக நன்றாகச் சாப்பிட வேண்டும் போலிருந்தது.

அன்று மாலை, அவள் நகரத்தின் சிறந்த ஓட்டலுக்குச் சென்றாள்.

மென்மையான விளக்குகள்; நளினமான இருக்கைகள்; மெல்ல மிதந்து வரும் இசை. பானங்கள் வரவழைத்தாள்.

அருந்திக் கொண்டிருந்தபோது -

திடீரென அவள் இதயம் நின்றது.

மறு கோடியில் சார்லஸ் தன் மனைவியுடன் உட்கார்ந்திருந்தான். ஆனால் அவன் இவளைப் பார்க்கவில்லை.

ட்ரேஸிக்கு முதலில் தோன்றிய எண்ணம் எழுந்து போய்விடலாம் என்பதுதான். ஏனெனில் -

அவள் ஒரு திட்டம் வைத்திருந்தாள். அது நிறைவேறும் வரையில் சார்லஸைப் பார்க்கக் கூடாது என்று எண்ணியிருந்தாள்.

"சாப்பிட என்ன கொண்டு வரட்டும்?" என்று வெயிட்டர் கேட்டான்.

"தாங்க் யூ. சற்றுப் பொறுத்துச் சொல்லுகிறேன்," என்றாள்.

மறுபடி சார்லஸைக் கவனித்தாள்.

தன் உயிருக்குயிரான காதலனைப் பார்க்கிற மாதிரியே இல்லை அவளுக்கு. எவனோ ஓர் அன்னியனைப் பார்ப்பது போல இருந்தது.

முகத்தை முழ நீளம் தொங்கப் போட்டுக் கொண்டிருக்கும் ஒரு நடுத்தர வயதுக்காரன்! தலையில் வழுக்கை விழ ஆரம்பித்திருக்கிறது. தொங்கிப் போன தோள்கள். வாழ்க்கை போரடித்துப் போனதைக் காட்டும் சோர்ந்த முகம் அந்த முகத்தில் இனி உற்சாகமே முளைக்காது!

ஒரு காலத்தில் இவனிடமா காதல் கொண்டிருந்தோம்! இவனுடனா படுத்துக் கொண்டோம்! வாழ்நாள் முழுவதையும் கழிக்கத் திட்டமிட்டோம்!

சார்லஸிடம் தெரிந்த அதே அலுப்பும் சலிப்பும் அவன் மனைவியின் முகத்திலும் தென்பட்டது.

ட்ரேஸி கசப்புடன் சிரித்துக் கொண்டாள்.

காலம் காலத்துக்கும் பொறியில் சிக்கிக் கெண்ட இரண்டு பேர்! இறுகிப் போன வாழ்க்கையில் உறைந்து போன இரண்டு பேர்!

ஒருவரோடொருவர் ஒரு வார்த்தையும் பேசிக் கொள்ளாமல் அவர்கள் மௌனமாக உட்கார்ந்திருந்தார்கள். இனி மிச்ச வாழ்நாள் பூராவிற்கும் இருவரும் இப்படித்தான் முடிவில்லாமல் சோர்ந்து களைத்து, காலத்தை ஒட்டப் போகிறார்கள். இவர்கள் வாழ்க்கையில் காதல் இருக்காது. சந்தோஷம் இருக்காது.

சரியான தண்டனைதான், சார்லஸுக்கு!

அப்படி நினைத்தவுடனே சரேலென்று ஒரு விடுதலையுணர்வு பிறந்தது ட்ரேஸிக்கு. இத்தனை நாளும் அவளை ஆட்டிப் படைத்த இருண்ட உணர்ச்சிச் சங்கிலிகள் படீரெனத் தெறித்து அறுந்தது போல் ஒரு சுதந்திர உணர்வு ஏற்பட்டது.

முடிந்து விட்டது. எல்லாம் முடிந்துவிட்டது. கடந்த காலத்தை ஆழக் குழி தோண்டிப் புதைத்தாகி விட்டது.

வெயிட்டரைக் கூப்பிட்டாள். வகை வகையான உணவுகளுக்கு ஆர்டர் கொடுத்தாள்.

ஓட்டலுக்குத் திரும்பிய போது ஞாபகம் வந்தது- பாங்க்கில் அவள் வேலை பார்த்த காலத்துக்கு, தொழிலாளர் நிதியிலிருந்து அவளுக்குப் பணம் வர வேண்டுமே என்பது. உட்கார்ந்து தனக்குச் சேர வேண்டிய தொகை என்னவென்று கணக்குப் போட்டாள். 1,375 டாலரும் 65 சென்ட்டும் வர வேண்டும் என்று தெரிந்தது.

அந்தப் பணத்தை அனுப்பி வைக்கும்படி பாங்க் வைஸ் பிரசிடெண்ட்டுக்குக் கடிதம் எழுதிப் போட்டாள்.

இரண்டாம் நாளில் பதில் வந்தது. வைஸ் பிரசிடெண்ட்டின் செயலாளர் எழுதியிருந்தாள்.

**"அன்புள்ள மிஸ் விட்னி,**

**தங்கள் கோரிக்கைக் கடிதம் கிடைத்தது. தொழிலாளர்களுக்கான ஒழுக்க முறை பற்றிய விதிகளின்படி**

தங்களுடைய கணக்கில் இருந்த தொகையைப் பாங்க்கின் பொது நிதியில் சேர்த்து விட்டோம்.

*செக்ரட்டரி."*

*கடிதத்தைத் திரும்பத் திரும்பப் படித்தாள் ட்ரேஸி. அவளால் நம்பமுடியவில்லை.*

*அவளுடைய பணம்! அவளுக்கு உரிமையுடன் சேர வேண்டிய பணம்! அதைக் கபளீகரம் செய்கிறார்கள் பாங்கில்! அதுவும் பாங்க்கின் ஒழுக்க நெறிகளின் பெயரில்.*

*நினைக்க நினைக்க அவளுள் சீற்றம் பொங்கியது. 'என்னையா ஏமாற்றப் பார்க்கிறீர்கள்? ஒரு நாளும் நடவாது. அதற்கு நான் இடம் தரப்போவதில்லை' என்று தன்னுள் சூளுரைத்துக் கொண்டாள்.*

*'இந்தப் பாங்க் மட்டுமல்ல, எவருமே என்றைக்குமே என்னை ஏமாற்ற முடியாது! பார்த்து விடுகிறேன்!'*

## 31

*தனக்கு நியாயமாகச் சேர வேண்டிய பணத்தை ஏமாற்றுகிறார்களே! பாங்க்கின் மீது ட்ரேஸிக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. எப்படியும் அதை வசூல் பண்ணாமல் விடுவதில்லை என்று தீர்மானம் செய்து கொண்டாள்.*

*அடுத்த நாள் காலை அவள் ஒரு மெக்ஸிகோக்காரி மாதிரி வேடம் அணிந்து கொண்டாள். முகத்தில் சாயம், தலையில் கறுப்பு விக். மோவாயில் ஒரு நீண்ட தழும்பு. சிறையில் இருந்தபோது மெக்ஸிகோக்காரியுடன் பேசிப் பேசி அவர்களுடைய வினோதமான உச்சரிப்பை நன்கு அறிந்திருந்தாள்.*

*இவ்வளவு இருந்த போதிலும் பாங்க்கிற்குள் நுழையும் போது ட்ரேஸிக்குத் தயக்கமாகவே இருந்தது. இந்தப் பாங்க்கில் ஐந்து வருடம் அவள் வேலை செய்திருக்கிறாள்.*

இங்குள்ள ஒவ்வொரு சிப்பந்தியையும் அவளுக்கு நன்றாய்ப் பழக்கமுண்டு. எனவே மாட்டிக் கொண்டு விடாமல் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

ஒரு புட்டியின் மூடியைக் கையோடு கொண்டு வந்திருந்தாள். அதை எடுத்து ஷூவின் அடியில் அழுத்திப் பொருத்திக் கொண்டாள். அதன் விளைவாக விந்தி விந்தி நடந்தாள்.

பாங்க்கினுள் வாடிக்கையாளர்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. வேண்டுமென்றேதான் இந்த நேரத்தை அவள் தேர்ந்தெடுத்திருந்தாள்.

நொண்டி நொண்டி நடந்து ஒரு கவுன்ட்டரை அடைந்தாள். அங்கே இருந்தவன் க்ரைட்டன் என்ற குமாஸ்தா. மகா அலட்டல் பேர்வழி. யூதர்கள், நீக்ரோக்கள், மெக்ஸிகோக்காரர்கள் முதலியவர்களைக் கண்டால் அவனுக்கு வெறுப்பு. பல தடவை அவனிடம் ட்ரேஸிக்கு எரிச்சல் ஏற்பட்டதுண்டு.

ஆனால் இப்போது அவன் ட்ரேஸியைக் கொஞ்சமும் அடையாளம் கண்டு கொள்ளவில்லை.

"குட் மார்னிங் சார்," என்றாள் மெக்ஸிகோக்காரியின் உச்சரிப்பில். "நான் ஒரு அக்கவுண்ட் ஆரம்பிக்கணும்."

"எவ்வளவு கட்டப் போகிறீர்கள்?" என்றான் அவன் வெறுப்புடன்.

"பத்து டாலர்." பர்ஸிலிருந்து ஒரு பழைய, கசங்கிப் போன நோட்டை எடுத்துத் தந்தாள்.

"ஓ!" அவன் ஏளனமாகச் சிரித்து விட்டு, ஒரு பாரம் எடுத்து நீட்டினான். "இதைப் பூர்த்தி செய்யுங்கள்."

தன் கையெழுத்தில் எதுவும் எழுதுவதில்லை என்று ட்ரேஸி ஜாக்கிரதையாக இருந்தாள். "மன்னிக்கணும் சார். என் கையில் ஒரு காயம், நீங்களே தயவு பண்ணி எழுதுங்களேன்."

"சரி, சரி. பெயர் என்ன?"

"சோன்ஸாலஸ்," என்று பெயரைக் கூறி, தான் தங்கி யிருந்த ஓட்டல் விலாசத்தைச் சொன்னாள் ட்ரேஸி.

"இங்கே கையெழுத்துப் போடுங்கள்."

"இடது கையால்தான் போட வேண்டும்." முனகிய படியே கிறுக்கலாகக் கையெழுத்துப் போட்டாள்.

அவன் கொடுத்த செக் புத்தகத்தை பெற்றுக் கொண்டு வெளியேறினாள் ட்ரேஸி.

அடுத்து அவள் நுழைந்தது ஒரு கம்ப்யூட்டர் கடைக்குள்.

"என்னம்மா வேணும்?" என்றார் கடைக்காரர்.

"சும்மா பார்க்கிறேன்," என்று ட்ரேஸி சொல்லவே, அவர் வேறு புறம் போய்விட்டார்.

ட்ரேஸி ஒரு கம்ப்யூட்டரைத் தேர்ந்தெடுத்து மெதுவே டைப் செய்யத் தொடங்கினாள்.

பாங்க்கின் ரகசிய எண் அவளுக்கு தெரியும். வைஸ் பிரஸிடெண்ட் டெஸ்மாண்ட் அந்த ரகசியக் குறியீடுகளை ஏற்படுத்தியபோது அவளும் கூடவே இருந்தாள். ஆனால் அதை அவர் அடிக்கடி மாற்றிக் கொண்டேயிருப்பார்.

"ஊழியர்களுக்கான பொது நிதியிலிருந்து சோன் ஸாலஸ் என்பவரின் கணக்குக்குப் பணம் மாற்ற வேண்டும்," என்று ட்ரேஸி டைப் செய்தாள்.

முதல் இரண்டு முறை சரியானபடி பதில் வரவில்லை. மூன்றாம் முறை சரியாக வந்தது.

"எவ்வளவு பணம் மாற்றவேண்டும்?" என்று கம்ப் யூட்டர் கேட்டது.

ஒரு வினாடி ட்ரேஸிக்கு ஆசை ஏற்பட்டது. அவள் நினைத்தால் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ள முடியும். ஆனால் மறு வினாடியே அந்த எண்ணத்தை விட்டொழித்தாள். தனக்குப் பாங்க்கிலிருந்து நியாயமாக எவ்வளவு சேர வேண்டுமா அதை மட்டும்

*பெறுவதென்று முடிவு செய்து "1,375 டாலர் 65 சென்ட்," என்று டைப் செய்தாள்.*

*அதற்குள் கடைக்காரர் மறுபடி அவளை நோக்கி வந்தார். சட்டென்று ட்ரேஸி ஒரு 'கீ'யை அழுத்த கம்ப்யூட்டர் திரை வெறுமையாகி விட்டது.*

*"இந்த மெஷினை நீங்கள் வாங்கிக் கொள்கிறீர்களா அம்மா?" என்று கேட்டார் கடைக்காரர்.*

*"இல்லை. கம்ப்யூட்டர் சமாசாரம் எனக்குக் கொஞ்சம் கூடப் புரியாது. சும்மா பார்த்தேன்." என்று கூறி விட்டு வெளியேறினாள் ட்ரேஸி.*

*தெருக் கோடியிலிருந்த ஒரு பொது டெலிபோன் கூண்டிலிருந்து பாங்க்கிற்குப் போன் செய்து, பிரதம காஷியரிடம் பேசினாள்.*

*"நான் சோன்ஸாலஸ் பேசுகிறேன், என் அக்கவுண்ட்டை நியூயார்க் ஹானோவர் பாங்க்கிற்கு மாற்ற வேண்டும்," என்றாள்.*

*"உங்கள் அக்கவுண்ட் நம்பர்?"*

*ட்ரேஸி சொன்னாள்.*

*ஒரு மணி நேரத்துக்கெல்லாம் தான் தங்கியிருந்த ஓட்டல் அறையைக் காலி செய்து விட்டு நியூயார்க்கிற்குப் புறப் பட்டாள் ட்ரேஸி.*

*அடுத்த நாள் நியூயார்க் ஹானோவர் பாங்க் பத்து மணிக்குத் திறந்தது. முதல் ஆளாக ட்ரேஸி நின்றிருந்தாள்.*

*சோன்ஸாலஸின் அக்கவுண்டில் 1385 டாலர் 65 சென்ட் இருந்தது. அவள் கணக்கு ஆரம்பிப்பதற்காகப் போட்ட பத்து டாலர் உள்பட*

*மொத்தத் தொகையையும் எடுத்துக் கொண்டாள் ட்ரேஸி.*

**சி**றையிலிருந்து விடுதலையான போது, எல்லாக் கைதிகளுக்கும் கொடுக்கும் வழக்கப்படி ட்ரேஸிக்கும் இருநூறு டாலர் கொடுத்திருந்தார்கள். அத்துடன், வார்டனின் குழந்தைக்கு ஆயாவாக இருந்ததற்காக ஒரு சிறு தொகை கிடைத்தது. இப்போது பாங்க் பணம் வேறு சேர்ந்திருந்தது.

இருந்தாலும் கூட, ஒரு பாதுகாப்பான நிலையில் இருப்பதாக ட்ரேஸிக்குத் தோன்றவில்லை. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் ஒரு வேலை தேடிக் கொள்வது அவசியம் என்று தோன்றியது.

மலிவான ஓட்டலில் தங்கிக் கொண்டு, பாங்குகளில் கம்ப்யூட்டர் பிரிவுக்கு விண்ணப்பம் போட்டாள்.

ஆனால் கம்ப்யூட்டர் தான் தனக்கு எமன் என்பது பிற்பாடுதான் அவளுக்குப் புலப்பட்டது. எல்லாப் பாங்குகளிலும் கம்ப்யூட்டர் பிரிவுகளில் அவளைப் பற்றிய விவரங்கள் பதிவாகியிருந்தது. கிரிமினல் குற்றத்துக்காகச் சிறைக்குச் சென்றவள் என்பது தெரிந்தவுடனே ட்ரேஸியின் விண்ணப்பத்தை நிராகரித்து விட்டார்கள்.

கம்ப்யூட்டர் வேலையை விட்டு மற்றச் சாதாரண வேலைகளுக்கு விண்ணப்பம் போட்டுப் பார்த்தாள்.

ஓர் ஏற்றுமதி நிறுவனத்திலிருந்து பேட்டிக்கு வரும்படி அழைப்பு வந்தது.

பேட்டி கண்ட நிர்வாகி அவளைப் பார்த்ததுமே, "ஓ! உங்களை டெலிவிஷனில் பார்த்திருக்கிறனே. நீங்கள்தானே ஜெயிலில் ஒரு குழந்தையைக் காப்பாற்றினீர்கள்?" என்றார்.

ட்ரேஸி மறு பேச்சின்றி அங்கிருந்து வெளியேறி விட்டாள்.

அடுத்து, குழந்தைகளுக்கான பொருள்கள் விற்கும் கடையில் ஒரு வேலை கிடைத்தது. சம்பளம் அவள் எதிர் பார்த்ததை விடக் கம்மி என்றாலும் பரவாயில்லை என்று ஒப்புக் கொண்டாள்.

வேலையில் சேர்ந்த மறுநாள்

அவளைப் பார்த்த ஒரு பெண் கத்தினாள். "இவள் ஜெயிலில் இருந்தவள்! ஒரு குழந்தையைத் தண்ணீரில் அமிழ்த்திக் கொல்லப் பார்த்தவள்! இந்த மாதிரி பெண்களை வேலைக்கு வைத்திருக்கிறீர்களே! என் குழந்தையை எப்படி இங்கே அழைத்து வருவது!"

ட்ரேஸிக்கு அந்த நிமிடமே சீட்டுக் கிழிக்கப்பட்டு விட்டது. அவள் சொன்ன எந்தச் சமாதானத்தையும் கடைக் காரர் ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லை.

வாழ்க்கையே வெறுத்துப் போயிற்று ட்ரேஸிக்கு.

யாரையெல்லாம் அவள் பழி வாங்கி விட்டதாக நினைத் தாளோ, அவர்கள் தான் கடைசியில் இவளைப் பழி தீர்த்திருக் கிறார்கள்!

அவளை ஒரு கிரிமினல் குற்றவாளியாக்கி விட்டார்கள்! சமூகத்தில் ஒதுக்கப்பட்டவளாய்ப் பண்ணி விட்டார்கள்!

இனி எப்படி வாழ்க்கையை ஓட்டப் போகிறோம்!

முதல் தடவையாக அவளுக்குத் தன் எதிர்காலத்தைப் பற்றிய அச்சம் ஏற்பட்டது.

அன்றிரவு அவள் தன் கைப் பையில் இருப்பதை யெல்லாம் கொட்டிக் கணக்குப் பார்த்தாள் - கைவசம் என்ன தொகை இருக்கிறதென்று.

பையின் ஒரு மூலையில் ஒண்டிக் கிடந்த ஒரு சீட்டு கண்ணில் பட்டது.

மார்கன் என்ற நகை வியாபாரியின் விலாசம் அந்தச் சீட்டில் இருந்தது.

சிறையில் இருந்தபோது ஒருத்தி கொடுத்தது அந்தச் சீட்டு.

"விடுதலையாகி வரும் கைதிகளுக்கு மறுவாழ்வு ஏற்படுத்தித் தரும் சமூக சேவகர் இவர்" என்று அந்தத் தோழி சொன்னது ஞாபகம் வந்தது.

அடுத்த நாள் மார்கனைக் காணப் புறப்பட்டாள்.

# 32

சிறைத் தோழி பெட்டி கொடுத்திருந்த விலாசத்துக்குப் புறப்பட்டாள் ட்ரேஸி.

கான்ராட் மார்கன் என்பவர் நியூயார்க்கில் ஒரு பெரிய நகைக்கடை வைத்திருந்தார்.

வரவேற்பறையில் இருந்த பெண்ணிடம், "மிஸ்டர் மார்கனை நான் பார்க்க வேண்டும்," என்றாள்.

"உங்கள் பெயர்?"

"ட்ரேஸி."

"ஒரு நிமிஷம்"

அந்தப் பெண் டெலிபோனை எடுத்து முணு முணுவென்று ஏதோ பேசினாள். என்ன பேசினாள் என்பது ட்ரேஸிக்குக் கேட்கவில்லை. டெலிபோனைத் திரும்ப வைத்து விட்டு, "மிஸ்டர் மார்கன் இப்போது பிஸியாக இருக்கிறார். சாயந்தரம் ஆறு மணிக்கு நீங்கள் வரமுடியுமா என்று கேட்கிறார்."

"வருகிறேன். தாங்க்யூ," என்று சொல்லிவிட்டு வெளியே வந்தாள் ட்ரேஸி.

குறிக்கோள் இல்லாமல் நியூயார்க் வீதிகளில் நடந்தாள் வெகுநேரம். வானுயர்ந்த கட்டிடங்கள், பரபரக்கும் கடைகள், முட்டி மோதிக்கொண்டு செல்லும் மக்கள் கூட்டம் - எதையும் அவள் கவனிக்கவில்லை. எதுவும் அவள் கண்ணில் பட வில்லை. அவள் மனம் பூரா நிறைந்திருந்தது கசப்பு உணர்வு மட்டுமே.

மணி ஆறு ஆனபோது அவளையும் அறியாமல் அவள் மார்கனின் நகைக் கடை வாசலுக்கே வந்திருந்தாள்.

காவலாள் வீட்டுக்குப் போய் விட்டான். வாசல் கதவும் சாத்தியிருந்தது. கோபத்துடன் கதவை இரண்டு குத்துக் குத்திவிட்டு நகர்ந்தாள் ட்ரேஸி. ஆனால் கதவு திறந்து கொள்வதைப் பார்க்க அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

ஒரு குண்டு மனிதர் அங்கே நின்றிருந்தார். வழுக்கைத் தலை. குத்துக் குத்தான நரைமுடிகள் காதுக்குள்ளிருந்து நீட்டிக் கொண்டிருந்தன. "ட்ரேஸி என்று நினைக்கிறேன்," என்றார்.

"ஆமாம்..."

"நான் கான்ராட் மார்கன், உள்ளே வரலாமே!"

ட்ரேஸி உள்ளே நுழைந்தாள். கடையில் யாருமே இல்லை.

"நான் உனக்காகத்தான் காத்துக் கொண்டிருந்தேன்," என்றார் மார்கன். "என் ஆபீஸ் அறைக்குப் போய்ப் பேசலாமே?"

கடையின் உள் வழியாகச் சென்று தனது அலுவலக அறைக்கு ட்ரேஸியை அழைத்துச் சென்றார். அந்த அறை அலுவலகம் மாதிரியே தோன்றவில்லை. ஒரு செல்வந்தரின் ஜாகை போல சோபாக்கள் நிறைந்து அழகாக அலங்கரிக்கப் பட்டிருந்தது. புகழ்பெற்ற ஓவியர்களின் சித்திரங்கள் சுவர் களில் மாட்டப்பட்டிருந்தன.

"உங்களைப் பார்க்கும்படி பெட்டி சொன்னாள். நீங்கள்... வந்து... கஷ்டத்தில் இருப்பவர்களுக்கு உதவி செய்வீர் கள் என்று சொன்னாள்..." 'சிறையில் இருந்தவர்களுக்கு' என்று சொல்ல அவளுக்குப் பிடிக்கவில்லை.

"பாவம் பெட்டி... அருமையான பெண். ஆனால் அதிர்ஷ்டமில்லை, பாவம்," என்றார் மார்கன்.

"அதிர்ஷ்டமில்லை என்றா சொன்னீர்கள்?"

"ஆமாம். பாரேன், பின்னே. பிடிபட்டு விட்டாளே!"

"நான்... எனக்குப் புரியவில்லை..."

"ஒன்றும் பெரிய விஷயமில்லை. பெட்டி எனக்காக வேலை செய்து வந்தாள். அவளுக்கு நல்ல வசதிகள் செய்து கொடுத்தோம். ஆனால் பைத்தியக்காரி, நியூ ஆர்லியன்ஸைச் சேர்ந்த ஒரு கார் டிரைவரிடம் காதல் கொண்டு அவனுடன் போனாள். அப்புறம் என்ன... ஒரு நாள் பிடித்து விட்டார்கள்."

ட்ரேஸிக்கு ஒரே குழப்பமாக இருந்தது. "அவள் உங்களிடம் ஸேல்ஸ் கேர்ளாகத்தானே இருந்தாள்?"

மார்கன் உடனே விலாவைப் பிடித்துக் கொண்டு விழுந்து விழுந்து சிரித்தார். கண்ணில் நீர் தளும்பி விட்டது. "இல்லேம்மா..." என்றார் கண்ணைத் துடைத்தபடி. "பெட்டி உன்னிடம் விளக்கமாகச் சொல்லவில்லை என்று தெரிகிறது." நாற்காலியில் நன்றாகச் சாய்ந்து கொண்டு, கைகளைக் கோபுரம் போல் கோத்து வைத்துக்கொண்டார். "இந்த நகை வியாபாரம் தவிர, ஒரு நல்ல ஸைடு பிஸினஸூம் எனக்கு இருக்கிறது, ட்ரேஸி. லாபமான பிஸினஸ். என் கூட்டாளி களுக்கு லாபத்தில் பங்கு தருகிறேன். அந்த பிஸினஸூக்கு உன்னைப் போன்றவர்கள் அதாவது, நீ தப்பாக நினைக்கக் கூடாது - உன்னைப் போலச் சிறைவாசம் அனுபவித்தவர்கள் தான் தேவை."

ட்ரேஸி மேலும் குழப்பமாக அவர் முகத்தையே கூர்ந்து பார்த்தவாறிருந்தாள்.

"சமூகத்தில் எனக்குத் தனி அந்தஸ்து இருக்கிறது. என் வாடிக்கையாளர்கள் எல்லாரும் படாபடா பணக்காரர்கள். எனக்கு ரொம்பச் சினேகிதர்கள். என்னிடம் மிகுந்த நம்பிக்கை." விரல்களால் மெல்லத் தாளம்போட்டபடி தொடர்ந்தார். - "என் வாடிக்கையாளர்கள் அடிக்கடி வெளி நாடு செல்கிறவர்கள். போகும்போது விலையுர்ந்த ஆபரணங் களை எடுத்துப் போகமாட்டார்கள். காலம் கெட்டுப் போயிட்டுதே? அதனால் வீட்டிலேயே பூட்டி வைத்து விட்டுப் போவார்கள். எப்படிப் பந்தோபஸ்து ஏற்பாடுகள் பண்ண வேண்டும் என்று என்னைக் கேட்பார்கள். நான் சொல்லிக் கொடுப்பேன். அவர்களிடம் என்னென்ன நகைகள் இருக்கிறதென்று எனக்குத் தெரியும். ஏனென்றால் என்னிடம் வாங்கியவை தானே அதெல்லாம்..."

ட்ரேஸி சட்டென்று எழுந்து கொண்டாள். "எனக்காக நேரம் ஒதுக்கியதற்கு மிக்க நன்றி மிஸ்டர் மார்கன்."

"அதற்குள் புறப்பட்டு விட்டீர்களா ஏன்? நான் சொல்லு..."

"புரிந்துவிட்டது. அதனால் தான் எழுந்து கொண்டேன்." அவளுக்கு உடம்பெல்லாம் எரிந்தது. "நான் கிரிமினல் அல்ல. இங்கே ஏதாவது வேலை கிடைக்குமென்று தான் வந்தேன்."

"நானும் வேலை கொடுக்கிறேன் என்றுதானேம்மா சொல்லுகிறேன்? ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் தான் உனக்கு வேலை. அதற்கு இருபத்தையாயிரம் டாலர் தருகிறேன்." அவர் இளித்தார். "ஆமாம்! இருபத்தையாயிரம்! சுளையாய்!"

ட்ரேஸி பெரும் பிரயத்தனத்துடன் கோபத்தை அடக்கிக் கொண்டாள். "எனக்கு இஷ்டமில்லை. தயவு செய்து என்னை வெளியே அனுப்புகிறீர்களா?"

வெளி வாசலை அடையும் சமயம் மறுபடியும் மார்கன் சொன்னார். "நீ மனசை மாற்றிக் கொண்டால் எனக்குத் தெரிவி. என்ன? சாய்ந்தரம் ஆறு மணிக்கு மேல் எப்போது வேண்டுமானாலும் கூப்பிடலாம். நான் உன் போன் காலுக்காகக் காத்திருப்பேன்."

"காத்திருக்காதீர்கள்." வெடுக்கெனச் சொல்லிவிட்டு ட்ரேஸி தெருவில் இறங்கி நடந்தாள். வெளியே இருட்டிக் கொண்டிருந்தது. ஓட்டல் அறையை அடைந்த பின்னும் அவள் உடல் கோபத்தால் நடுங்கிக் கொண்டிருந்தது.

சே! தெற்கு லூயிஸியானா பெண்கள் சிறையில் இருந்த எல்லா மோசமான, கோரமான, அடிபட்டுத் தேர்ந்த கிரிமினல் கைதிகளைப் போலல்லவா நம்மையும் நினைத்து விட்டான் இந்த ஆள்!

இல்லை. நான் அவர்களில் ஒருத்தி அல்ல. நான் ட்ரேஸி விட்னி. நான் ஒரு கம்ப்யூட்டர் எக்ஸ்பர்ட். நான் ஒரு கண்ணியமான, சட்டத்துக்குப் பயப்படும் பிரஜை

அன்று இரண்டு தீர்மானம் செய்து கொண்டாள் ட்ரேஸி. ஒன்று, இன்னும் சற்று மலிவான ஜாகைக்குச் செல்வது. இரண்டாவது, எப்படியாவது ஒரு வேலை தேடிக் கொள்வது - அது என்ன வேலையானாலும் சரி.

நகரின் ரொம்ப மட்டமான பகுதியில் தான் மலிவான ஜாகை கிடைத்தது. காகிதம் மாதிரி மெல்லிதாக இருந்தன சுவர்கள். எனவே அடுத்த அறைகளில் நடக்கும் சண்டைகளும் கூச்சல்களும் வாக்குவாதங்களும் செவியைப் பிளந்தன. அக்கம் பக்கத்தில் இருந்தவர்களெல்லாம் விபசாரிகள், குடிகாரர்கள், போதை வியாபாரிகள்.

வேலை தேடித் தரும் ஸ்தாபனம் ஒன்று அவள் வீட்டுக்கு அருகிலேயே இருந்தது. மிஸஸ் மர்பி என்ற அம்மாள் அதை நடத்தி வந்தாள்.

ட்ரேஸியின் கல்விச் சான்றிதழ்களைப் பார்த்த பிறகு திகைப்புடன் ட்ரேஸியை நோக்கினாள் அந்த அம்மாள். "உனக்கு எதற்கு என் உதவி? இத்தனை தகுதிகள் இருக்கும் போது உன்னை வருந்தியழைத்து வேலை கொடுப்பார்களே?"

"அதிலே ஒரு சிக்கல்," என்ற ட்ரேஸி தன் கதையைச் சுருக்கமாகத் தெரிவித்தாள்.

அந்த அம்மாள் யோசனையில் ஆழ்ந்தாள். "சிறைக்குப் போய் வந்தவள் என்றால் எந்தக் கம்பெனியிலும் உனக்குக் கம்ப்யூட்டர் எக்ஸ்பர்ட் வேலை கிடைக்காது. வேண்டுமானால் ஜாக்ஸன் ஹோல் என்ற ஓட்டலில் வெயிட்ரஸ் வேலை இருக்கிறது."

"வெயிட்ரஸா?"

ட்ரேஸி யோசனை செய்தாள். கல்லூரி மாணவியாக இருந்த காலத்தில் அவள் வெயிட்ரஸாக வேலை பார்த்தது உண்டு. அப்போது அது ஒரு தமாஷ். இப்போதோ பிழைப்பு ஜீவனம்.

"சரி, போகிறேன்," என்றாள்.

**ஜா**க்ஸன் ஹோல் என்ற ஒட்டல் சந்தைக் கடை மாதிரி இருந்தது.

முதல் நாள் வேலை முடிந்த போது ட்ரேஸிக்குக் களைப்பு வாட்டியெடுத்தது. இருந்தாலும் காசு சம்பாதிக்கிறோம் என்று சந்தோஷப்பட்டாள்.

இரண்டாம் நாள், ஒரு ஆளுக்கு அவள் உணவு கொண்டு வந்து வைத்தபோது, அவன் அவள் தொடையைத் தடவினான்.

அவ்வளவுதான். கையிலிருந்த மிளகாய்ப் பொடித் தட்டை அவன் தலையில் கவிழ்த்து விட்டாள் ட்ரேஸி.

அத்தோடு அந்த வேலை போயிற்று.

மிஸஸ் மர்பியிடம் திரும்பி வந்து சொன்னபோது, "உனக்கு வேறொரு நல்ல வேலை பார்த்து வைத்திருக்கிறேன். வெலிங்டன் ஆம்ஸ் என்ற ஓட்டலில் வேலைக்காரிகளை மேற்பார்வை செய்ய வேண்டிய வேலை. அங்கே போ," என்று சிபாரிசு செய்து அனுப்பினாள்.

பணக்காரர்கள் வந்து தங்கும் ஆடம்பரமான ஒட்டல் அது. நியாயமான சம்பளம். நிர்வாகிகள் நல்லவர்களாக இருந்தார்கள். வேலையும் அதிகம் இருக்கவில்லை.

அங்கே வேலைக்குச் சேர்ந்து ஒரு வாரம் இருக்கும்.

மானேஜர் அவளைக் கூப்பிட்டனுப்பினார்.

"எண்ணூத்தி இருபத்தெட்டாம் எண் அறையை நீ செக் பண்ணினாயா?" என்று கேட்டார்.

"பண்ணினேன்," என்றாள் ட்ரேஸி.

வேலைக்காரிகள் அறைகளைக் கூட்டிச் சுத்தம் செய்து, படுக்கை விரிப்புக்களைச் சரிவர மாற்றினார்களா என்று பார்ப்பது அவள் வேலை.

குறிப்பிட்ட எண்ணுள்ள அறையில் ஓர் ஹாலிவுட் நடிகை வந்து தங்கியிருந்தாள்.

"மேஜை மீது தன் மோதிரத்தைக் கழற்றி வைத்திருந் தாளாம். அதைக் காணவில்லை என்கிறாள்," என்றார் மானேஜர்.

## 33

'ஹாலிவுட் நடிகையின் மோதிரத்தைக் காணோமா?'

அதைப் பற்றித் தன்னை விசாரிப்பதே ட்ரேஸிக்கு அவமானமாக இருந்தது.

"எத்தனை மணிக்கு அந்த அம்மாளின் ஸ்யூட்டுக்குப் போனாய்?" என்றார் மானேஜர்.

"இரண்டு மணிக்கு, சார். ஏன் என்னை இவ்வளவு கேட்கிறீர்கள்?"

மானேஜர் கடுமையான குரலில் சொன்னார். "அந்த அம்மாள் வெளியே போய்விட்டு மூன்று மணிக்குத் திரும்பினாள். தன் விலையுயர்ந்த வைர மோதிரத்தைக் காணோமென்று உடனே தெரிவித்து விட்டாராம்."

ட்ரேஸிக்குக் கோபத்தால் தேகம் மொத்தமும் விறைத்துக் கொண்டது.

"நீ அந்த அம்மாளின் படுக்கையறைக்குப் போனாயா ட்ரேஸி?"

"ஆமாம். போனேன். ஒவ்வோர் அறையையும் சுத்தம் செய்திருக்கிறார்களா என்று பார்ப்பது என் ட்யூட்டியா யிற்றே?"

"படுக்கையறைக்குப் போன போது ஏதாவது விலையுயர்ந்த நகைகள் இருப்பதைப் பார்த்தாயா?"

"ஏன்.. வந்து... பார்த்ததாய் நினைவில்லை."

அந்த வார்த்தையை மானேஜர் கடுமையாய்ப் பிடித்துக் கொண்டார். "ஓகோ! பார்த்ததாய் நினைவில்லையாக்கும்? பார்க்கவில்லை என்று சொல்ல வேண்டியது தானே?"

"ஆபரணங்கள் எதுவும் இருக்கிறதா என்று பார்ப்பதற் காக அங்கே நான் போகவில்லையே? படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள், டவல்கள் இதெல்லாம் மாற்றி

யிருக்கிறார்களா என்று பார்ப்பது என் வேலை இல்லையா?" என்றாள் ட்ரேஸி.

"அந்த அம்மாள் வெளியே போகும்போது தன் வைர மோதிரத்தை டிரெஸ்ஸிங் டேபிள் மீது தான் வைத்து விட்டுப் போனாளாம். ரொம்ப நிச்சயமாய்ச் சொல்கிறாளாம்."

"நான் அதை எடுத்துப் போகவில்லை. அவ்வளவுதான் சொல்வேன்."

"உன்னைத் தவிர அந்த அறைக்குப் போக யாருக்கும் அனுமதி கிடையாது. வேலைக்காரிகள் பல வருஷங்களாக எங்களிடம் இருந்து வருகிறார்கள்."

"மறுபடியும் சொல்கிறேன். அதை எடுக்கவில்லை."

மானேஜர் பெருமூச்சு விட்டார். "நல்லது. போலீஸைக் கூப்பிட்டு விசாரிக்கச் சொல்ல வேண்டியதுதான்."

"வேறு யாரோதான் அதை எடுத்திருக்க வேண்டும்!" சத்தமாகவே சொன்னாள் ட்ரேஸி. "அல்லது ஒருவேளை அந்த அம்மாளே கைதவறுதலாக எங்காவது வைத்து விட்டார்களோ என்னவோ..."

"உன்னுடைய கடந்த காலத்தைப் பார்த்தால்..." என்று ஆரம்பித்தார் மானேஜர்.

ட்ரேஸி பல்லைக் கடித்துக் கொண்டாள். 'உன் கடந்த காலம்! உன் கடந்த காலம்!' அதுவேதான் எல்லாருக்கும் ஒரே பல்லவி!

மானேஜர் தொடர்ந்து, "சரி, போலீஸ் வருகிறவரையில் எங்கள் ஆபீஸ் அறையில் உட்கார்ந்திரு. எங்கேயும் போக வேண்டாம்," என்றார்.

அவமானம் அவளுக்குள் குமுறிக் கொண்டு வந்தது. அடக்கிக் கொண்டு, "சரி சார்," என்றாள்.

ஆபீஸ் காவலர்களில் ஒருவன் வந்து அவளை அழைத்துச் சென்றான். மறுபடியும் சிறைச்சாலைக்கே திரும்பி விட்டாற் போன்ற உணர்வு ஏற்பட்டது அவளுக்கு. ஒருமுறை

சிறைக்குப் போய்விட்டு வந்த கைதிகளை, அவர்களுடைய சிறைவாசத்தை வைத்தே திரும்பத் திரும்ப வாட்டியெடுப்ப துண்டு. அதுபோன்ற செய்திகளும் கதைகளும் ட்ரேஸி எவ்வளவோ படித்திருக்கிறாள். ஆனால் தனக்கே அப்படி நேரும் என்று ஒருமுறைகூட அவள் எண்ணியது கிடையாது.

கைதி - குற்றவாளி என்று பெரிதாய் எழுதி நம் முதுகில் ஒட்டி விட்டார்கள். அதன்படிதான் நாம் எப்போதும் வாழ்க்கை நடத்துவோம் என்று உலகம் எதிர்பார்க்கிறது. வேறு விதமாய் வாழக்கூடும் என்று நம்ப மறுக்கிறது.

முப்பது நிமிடம் சென்றிருக்கும்.

மானேஜர் உள்ளே வந்தார் - முகத்தில் புன்னகையுடன்.

"வேடிக்கை பார்... அந்த அம்மாளுடைய மோதிரம் கிடைத்து விட்டது. எங்கோ கைதவறுதலாக வைத்து விட்டாளாம். ஒரு சின்னத் தவறு... அவ்வளவுதான்," என்றார்.

"அப்படியா? ரொம்பச் சந்தோஷம்," என்றாள் ட்ரேஸி.

அந்த நிமிடமே அவள் அந்த ஒட்டலை விட்டு, அந்த வேலையை விட்டு வெளியேறினாள்.

நேரே மார்கனின் நகைக் கடையை நோக்கி நடந்தாள்.

யோக்கியமாக இருக்க முயன்றால்கூட இந்த உலகம் விடவில்லை. அதைக்காட்டிலும் மார்கனிடம் வேலை செய்வதே மேல்...

இனிக்க இனிக்கப் பேசினான் மார்கன்.

"நீ செய்ய வேண்டிய வேலை ரொம்ப ஸிம்பிள் ட்ரேஸி. என் வாடிக்கைக்காரி ஒருத்தி லூயிஸ் என்ற பணக்காரி ஐரோப்பாவுக்குப் போயிருக்கிறாள். லாங் ஐலண்டில் ஸீ க்ளிமேட் என்ற இடத்தில் அவருடைய மாளிகை இருக்கிறது. சனி ஞாயிறுகளில் வேலைக்காரர்களுக்கு விடுமுறை. ஆகவே வீட்டில் யாரும் இருக்க மாட்டார்கள். ஒரு வாட்ச்மேன் நாலு மணி நேரத்துக்கு ஒருமுறை அங்கே பாரா வருவான். ஆனால் நீ பத்துப் பதினைந்து நிமிடத்துக்குள் அந்த வீட்டுக்குள் நுழைந்துவிட்டு வெளியே வந்துவிட முடியும்."

ட்ரேஸி மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

“எனக்கு அந்த வீட்டின் அலாரம் ஸிஸ்டம் தெரியும். பெட்டகத்தைத் திறக்க ரகசிய எண் என்ன என்பது தெரியும். நீ செய்ய வேண்டியது ஒன்றுமே இல்லைம்மா. நேரே உள்ளே போக வேண்டியது. நகைகளை எடுத்துக்கொண்டு ஜம்மென்று வெளியே வர வேண்டியது. என்னிடம் கொடுக்க வேண்டியது. அவைகளை நான் பிரித்துக் கட்டிவிடுவேன். பெரிய வைரங்களைச் சின்ன வைரங்களாக வெட்டி விடுவேன். எல்லாவற்றையும் விற்று விடுவேன்.”

“இவ்வளவு சுலபம் என்றால் அதை நீங்களே செய்யலாமே?” என்றாள் ட்ரேஸி வெடுக்கென்று.

அவர் தன் நீலக் கண்களைச் சிமிட்டினார். “உனக்குப் புரியவில்லையா? இந்த வேலை நடக்கிறபோது நான் பிஸினஸ் விஷயமாக வெளியூர் போய்விடுவேன். இந்த மாதிரி ‘சின்ன’ நிகழ்ச்சிகள் நடக்கிற சமயங்களிலெல்லாம் நான் பிஸினஸ் விஷயமாக வெளியூரில் இருப்பேன்.”

“புரிகிறது,” என்றாள்.

அதாவது, நான் மாட்டிக் கொள்ள மாட்டேன் என்கிறார் என்பது ட்ரேஸிக்குப் புரிந்தது.

“மிஸஸ் லூயிஸின் சொத்தைப் போய்த் திருடுகிறோமே என்று உனக்கு உறுத்தலாயிருந்தால், அதைப் பற்றிக் கவலைப் படாதே. லூயிஸ் பிரம்மாண்டமான பணக்காரி. உலக மெங்கும் அவளுக்கு மாளிகைகள் இருக்கின்றன. ஒவ்வொரு மாளிகையிலும் விலையுயர்ந்த நகைகள் கொட்டிக் கிடக்கிறது. அது மட்டுமல்ல. தன் நகைகளை, அதன் மதிப்பைப் போல் இரண்டு மடங்குக்கு இன்ஷ்யூர் செய்திருக்கிறாள். இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்கு மதிப்புப் போட்டுக் கொடுக்கிறவன் யாரென்று நினைக்கிறாய்? நானேதான்.”

ட்ரேஸி அவரையே பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தாள். அவள் உள்ளத்துக்குள் எண்ணம் ஓடிக் கொண்டிருந்தது.

எனக்குப் பைத்தியம் தான் பிடித்திருக்கிறது. இல்லா விட்டால் நகைக் கொள்ளையடிப்பது பற்றி இந்த ஆளுடன் இத்தனை அமைதியாகப் பேசிக் கொண்டு உட் கார்ந்தி ருப்பேனா?

"நான் மறுபடியும் ஜெயிலுக்குப் போகத் தயாராயில்லை, மிஸ்டர் மார்கன்," என்றாள்.

"அட பைத்தியமே! இதிலே ஆபத்து என்பது கொஞ்சமும் கிடையாது. இதுவரை எனக்காக வேலை செய்த யாரும் பிடிபட்டது கிடையாது. குறைந்தபட்சம் என்னிடம் வேலை செய்தவரையில் அகப்பட்டதில்லை. என்ன சொல்கிறாய்?"

முடியாது என்றுசொல்லத்தான் நினைத்தாள் ட்ரேஸி. இது ஆபத்து. பைத்தியக்காரத்தனமான, அபாயமான வேலை...

"எனக்கு எவ்வளவு தருவதாகச் சொன்னீர்கள்? இருபத்தையாயிரம் டாலரா?" என்றாள்.

"ஆமாம். பொருள் கொண்டு வந்து தந்தவுடன் கை மேல் காசு."

'அப்பா! எவ்வளவு பெரிய தொகை!' என்று ட்ரேஸி எண்ணிக் கொண்டாள். அதைக் கொண்டு ரொம்பக் காலத்துக்கு வசதியாக வாழலாம். வாழ்க்கையை நல்லபடி திட்டமிட்டுக் கொள்ளலாம்.

தரித்திரம் பிடித்த அசிங்கமான தனது வசிப்பிடம் தான் அவள் கண்முன்னே வந்து நின்றது. காச்சு மூச்சென்று கூச்சலிட்டுச் சண்டையிடும் குடித்தனக்காரர்கள்... 'கொலை செய்துவிட்டு ஜெயிலுக்குப் போனவளையா இங்கே வேலைக்கு வைத்திருக்கிறீர்கள்?' என்று கடையில் கத்திய வாடிக்கையாளர்... 'போலீசைக் கூப்பிடப் போகிறேன்' என்று சொன்ன ஓட்டல் மானேஜர்...

இவ்வளவையும் நினைத்துப் பார்த்த பிறகும்கூட, சரியென்று சொல்ல ட்ரேஸியினால் முடியவில்லை.

அவள் தயக்கத்தை லட்சியம் செய்யாமல் மார்கன் சொல்லிக் கொண்டே போனார்.

"வருகிற சனிக்கிழமை இரவு நீ வேலையில் இறங்கலாம், ட்ரேஸி. சனிக்கிழமை பகல் எல்லா வேலைக்காரர்களும் புறப்பட்டுப் போய்விடுகிறார்கள். ஒரு டிரைவிங் லைசன்ஸும் கிரெடிட் கார்டும் உனக்கு வாங்கித் தருகிறேன் - பொய்ப் பெயரில். இங்கே ஒரு காரை நீ வாடகைக்கு எடுத்துக்கொண்டு லாங் ஐலண்டுக்குப் போய்விடலாம். அங்கே நீ போய்ச் சேருகிறபோது இரவு பதினொரு மணி ஆகியிருக்கும். வீட்டுக்குள் நுழைந்து நகைகளை எடுத்துக் கொண்டு அதே காரில் நியூயார்க்கிற்கு வந்து காரை வாடகைக்கு எடுத்த இடத்தில் திருப்பிக் கொடுத்து விட வேண்டியதுதான். உனக்குக் கார் ஓட்டத் தெரியும். இல்லையா?"

"தெரியும்."

"பிரமாதம்!" என்றார் மார்கன்.

"மறுநாள் விடிகாலை ஸெயிண்ட் லூயிஸுக்கு ஒரு ரயில் கிளம்புகிறது. அதில் உனக்கு டிக்கெட் ரிசர்வ் செய்து வைக்கிறேன். நீ அந்த ரயிலில் ஏறிக் கொள். ஸெயின்ட் லூயிஸ் ரயில்வே ஸ்டேஷனில் நான் உனக்காகக் காத்திருப்பேன். என்னிடம் நகைகளைக் கொடு. உனக்கு இருபத்தையாயிரம் டாலர்களைக் கொடுத்து விடுகிறேன்."

எல்லாமே ரொம்பச் சாதாரண சமாசாரம் போல அவர் பேசிக் கொண்டே போகிறார். இதுதான் தருணம். இதுதான் கடைசி நிமிடம், எழுந்து கொண்டு பெரிதாய் ஒரு கும்பிடு போட்டுவிட்டு வெளியேறிவிட வேண்டும்.

வெளியேறி? எங்கே போவது? என்ன செய்வது?

"எனக்கு ஒரு நீல நிற விக் வேண்டும், வாங்கி வையுங்கள்," என்றாள் மெதுவாக.

ட்ரேஸி புறப்பட்டுச் சென்ற பிறகும் வெகு நேரத்துக்குத் தன் அலுவலக அறையின் இருட்டிலேயே உட்கார்ந்திருந்

தான் மார்கன். ட்ரேஸியைக் குறித்தே அவன் எண்ணங்கள் ஓடின.

எவ்வளவு அழகான பெண்! பாவம், வேறு பிழைப்புக் கிடைக்கக் கூடாதா?

சட்டென்று இன்னொரு விஷயமும் நினைவு வந்தது. அந்த வீட்டில் உள்ள திருடர் அலாரம் பற்றி அவ்வளவு நிச்சய மாக அவருக்குத் தெரியாது. எதற்கும் எச்சரிக்கையாக இரு என்று ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாம் என்று எண்ணிக் கொண்டார்.

மார்கன் அவளுக்கு ஆயிரம் டாலர் முன்பணம் தந்திருந்தார். அதில் தலைக்குப் பொருத்திக்கொள்ளக் கூடிய ஒரு நீல நிற விக்கும், ஒரு கறுப்பு விக்கும் வாங்கிக் கொண்டாள். நூற்றுக்கணக்கான மெல்லிய பின்னல்கள் அதில் தொங்கின. கறுப்பு உடைகளும் ஒரு கைப்பையும் வாங்கிக் கொண்டாள்.

லூயிஸின் மாளிகையில் என்னென்ன அலார ஏற் பாடுகள் உள்ளன. இரும்புப் பெட்டகத்தைத் திறப்பதற்கான ரகசிய முறை எவை என்ற வரைபடம் கொடுத்திருந்தார் மார்கன். எல்லிஸ் என்ற பெயரில் டிரைவிங் லைசன்ஸும் ஸெயின்ட் லூயி என்ற ஊருக்குச் செல்வதற்கான தனிக் கம்பார்ட்மெண்ட் டிக்கெட்டும் கொடுத்திருந்தார்.

ட்ரேஸி வாடகைக் கார் எடுத்துக் கொண்டாள். சீ! இனி இந்தத் தரித்திரம் பிடித்த வீட்டுக்குத் திரும்பவே மாட்டேன்!

ஒரு கொள்ளை நடத்துவதற்காகப் போய்க் கொண்டிருக் கிறோம் என்ற நினைப்பு அவளை நடுநடுவே அச்சுறுத்தியது.

தன் அச்சத்தை மறைப்பதற்காக மனசைத் தீவிரப் படுத்திக் கொண்டாள். காரைப் படுவேகமாகச் செலுத்தி னாள். சில சமயம் வழிதவறிப் போய்த் திரும்பி வர நேர்ந்தது. கன்னாபின்னாவென்று கார் ஓட்டுவதாகச் சொல்லிப் போலீசார் இப்போது நம்மைப் பிடித்தால் எவ்வளவு நன்றா

*யிருக்கும்! காரியமே கெட்டுவிட்டது என்று மார்கனிடம் சொல்லி விடலாமே!*

*ஊகூம். எந்தப் போலீஸ் வண்டியும் அவளைப் பிடிக்க வில்லை. சே! எப்போது தேவையோ அப்போது போலீஸார் வரமாட்டார்கள்!*

*திருட்டைக் கண்டுபிடிக்க முடியாமல் போனால் தேவலை என்று தோன்றியது. ஆனால் அந்த மாளிகை எப்படி இருக்கும் என்று கரெக்டாக விவரமாகச் சொல்லி யிருந்தார் மார்கன்.*

*அதோ! இருட்டில் ஓங்கி நின்றது அவள் கொள்ளை யடிக்கப் போகும் வீடு! நள்ளிரவில் காணும் பயங்கரக் கனவைப் போல!*

## 34

பிரதான சாலையிலிருந்து தள்ளினாற் போலிருந்தது கொள்ளையடிக்க வேண்டிய வீடு. அத்துடன் நள்ளிரவு நேரமாகையால் போக்குவரத்து நடமாட்டமும் இல்லை.

மார்கன் சொல்லிக் கொடுத்தது ட்ரேஸிக்கு நினைவு வந்தது. 'வீட்டைச் சுற்றி ஏகப்பட்ட மரங்கள் இருக்கிறது ட்ரேஸி. அண்டை அயலில் மைல் கணக்குக்கு எந்த வீடும் கிடையாது. ஆகவே யாரும் வந்துவிடப் போகிறார்களோ என்று நீ கொஞ்சமும் பயப்படத் தேவையில்லை. ரோந்து ஆள் முதலில் ராத்திரி பத்து மணிக்கு வருவான். பிறகு இரண்டு மணிக்குத்தான் வருவான். அந்த நாலு மணி நேரத்துக்குள் நீ காரியத்தை முடித்துக் கொண்டு வெகுதூரம் போய்விடலாம்.'

*ட்ரேஸி கைக்கடியாரத்தைப் பார்த்துக்கொண்டாள். சரியாய்ப் பதினொரு மணி காட்டியது. முதல் ஆள் போயாயிற்று. அடுத்து ரோந்து வர இன்னும் மூன்று மணி நேரம் இருக்கிறது. அல்லது இன்னும் மூன்று வினாடி*

இருக்கிறது. எதுவும் வேண்டாமென்று காரில் நியூயார்க்கிற்குத் திரும்பி விடலாம். இந்தப் பைத்தியக்காரத்தனம் எதிலும் சிக்கவே தேவையில்லை.

ஆனால், நியூயார்க்கிற்குத் திரும்பிப் போய் என்ன செய்வது? பல குரல்கள் அவள் காதில் எதிரொலித்தன. 'மன்னிக்கணும், மிஸ் ட்ரேஸி. உங்களை வேலைக்கு வைத்துக் கொண்டால் எங்கள் வாடிக்கையாளர்களுக்குப் பிடிக்காது...' 'ஸாரி அம்மா. ஜெயிலுக்குப் போய் வந்தவங்களுக்கு நாங்கள் வேலை கொடுக்க முடியாது.' 'கம்ப்யூட்டர் வேலையா? உனக்கு அது எங்கேயுமே இனி கிடைக்காது.'

அதே சமயம் மார்கனின் குரல் கேட்டது. 'ஒரு மணி நேரமோ இரண்டு மணி நேரமோ தான் உனக்கு வேலை. அதற்கு இருபத்தையாயிரம் டாலர் கூலி! நினைத்துப் பார். அந்த அம்மாளின் நகையைத் திருடப் போகிறோமே என்று மனச்சாட்சி உறுத்தத் தேவையில்லை. அவள் படா கோடீசுவரி.'

ட்ரேஸி குழம்பி நின்றாள். நான் கொள்ளைக்காரியல்ல. கொள்ளைக்காரப் பரம்பரையில் வந்தவளல்ல. நான் ஒரு கற்றுக்குட்டி. எந்த நிமிடத்திலும் எனக்கு புத்தி சிதறப் போகிறது.

மூளை என்று ஒன்று இருந்தால், இந்த நிமிடமே இந்த இடத்தை விட்டு நான் ஓட்டம் பிடிக்க வேண்டும். தாமதமாகும் ஒவ்வொரு நிமிடமும் ஆபத்து. ரோந்துக்காரர்கள் பார்த்தால் நிச்சயம் சுட்டுவிடுவார்கள். சல்லடைச் சல்லிகளாக ஓட்டை போடப்படும் என் உடம்பைப் பிரேதக் கிடங்குக்குத் தூக்கிப் போவார்கள். பத்திரிகைகளில் கொட்டை எழுத்தில் செய்தி வரும். 'பயங்கரக் குற்றவாளி கொள்ளையடிக்கும் முயற்சியில் பிடிபட்டுக் கொல்லப் பட்டாள்.'

'என் சவ அடக்கத்துக்கு யார் வருவார்கள்? நீக்ரோக் காரியும் சிறுமி ஆமியும் வருவார்கள்.'

ட்ரேஸி மறுபடியும் கைக் கடியாரத்தைப் பார்த்துக் கொண்டாள் ஐயோ கடவுளே! கன்னா பின்னாவென்று எண்ணமிட்டபடி நேரத்தை வீணடித்து விட்டோமே! பொன்னான இருபது நிமிடம் ஓடிவிட்டதே!

மார்கன் சொல்லியுள்ள வேலையைச் செய்வதா யிருந்தால் இப்போதே செய்ய வேண்டும், உடனே வேலையில் இறங்குவதுதான் உத்தமம்.

ஆனால் அடியெடுத்து வைக்கக் கூட முடியவில்லை. பயத்தினால் உடம்பு உறைந்து போயிருந்தது. அதற்காக இப்படியே உட்கார்ந்திருப்பதா? சும்மா வீட்டை ஒரு முறை பார்க்கலாமே! சட்டுப் புட்டென்று பார்த்துவிட்டு வந்து விடலாம்.

மூச்சை இழுத்துப் பிடித்துக்கொண்டு காரை விட்டிறங்கினாள் ட்ரேஸி. கால்கள் நடுங்குவது தெரிந்தது. மெல்ல மெல்ல வீட்டை அணுகினாள். வீடு மொத்தமும் இருட்டில் ஆழ்ந்திருப்பதைக் காண முடிந்தது.

'கையுறைகளை மாட்டிக் கொள்ள மறந்து விடாதே' என்று மார்கன் எச்சரித்திருந்தது ஞாபகம் வந்தது.

பாக்கெட்டில் கைவிட்டு ஒரு ஜோடி கையுறைகளை வெளியெடுத்து அணிந்து கொண்டாள்.

'தெய்வமே! நிஜமாகவே நான் திருடப் போகிறேனா!' ஆம் ஆம் என்று உள்ளம் பதிலளித்தது. அவள் இருதயம் வெகு பலமாக அடித்துக் கொண்டது. அந்த ஓசையில் மற்ற எல்லாச் சத்தங்களும் அமுங்கிவிட்டன.

மார்கன் சொல்லித் தந்த குறிப்புக்களை ஒவ்வொன்றாய் ஞாபகப்படுத்திக் கொண்டாள்.

'வாசல் கதவின் இடது புறத்தில் இருக்கிறது அபாய அறிவிப்பு மணி. அதற்கு ஐந்து பொத்தான் இருக்கிறது. சிவப்பு விளக்கு எரிந்து கொண்டிருக்கும். அதாவது, அலாரம் வேலை செய்து கொண்டிருக்கிறது என்று அர்த்தம். அதை இயங்கச் செய்யாமல் நிறுத்த வேண்டுமென்றால், ஐந்து,

இரண்டு, நாலு, ஒன்று, ஒன்று என்ற வரிசைப்படி பொத்தான்களை அழுத்த வேண்டும். சிவப்பு விளக்கு அணைந்து விடும். அலாரம் செயலற்றதாகி விட்டது என்று பொருள். வாசல் கதவுக்கு இதோ சாவி. உள்ளே நுழைந்ததும் கதவைச் சாத்திக்கொள்ள மறக்காதே. இந்தச் சிறிய டார்ச் விளக்கைப் பயன்படுத்திக் கொள். வீட்டில் உள்ள விளக்கைப் போடாதே. போட்டால் தெருவில் யாரேனும் காரில் போனால் கவனிக்க நேரிடும். பெட்டகம் உள்ள அறை, மாடியில் இடது பக்கம், கடற்கரையைப் பார்த்தாற்போல் இருக்கிறது. அறையில் வீட்டுக்காரி லூயிஸின் ஓவியம் மாட்டியிருக்கும். அதன் பின்னே பெட்டகம் இருக்கிறது. ரொம்ப ஸிம்பிள். ஒரு குறிப்பிட்ட காம்பினேஷன்படி இயக்கினால் போதும்...'

மார்கன் சொல்லித் தந்தது அடுக்கடுக்காய் நினைவு வந்தது. உடம்பு நடுங்க ட்ரேஸி நின்றிருந்தாள். ஒரு சின்னஞ்சிறு ஓசை கேட்டால்கூடப் போதும் தலைதெறிக்க ஓடிவிடுவாள் போலிருந்தாள். ஓசையின்றி அடிமேலடி வைத்து மெல்ல நடந்தாள். அலாரத்துக்கான பொத்தானை ஐந்து, இரண்டு, நாலு, ஒன்று, ஒன்று என வரிசையாக அழுத்தினாள். உள்ளூரக் கடவுளே இந்த வரிசை தப்பாயிருக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்தாள். பிரார்த்தனை பலிக்கவில்லை. சிவப்பு விளக்கு அணைந்துவிட்டது.

இதுதான் கடைசி வினாடி என்று நினைத்துக் கொண்டாள். விமானப் பைலட்டுகள் சொல்வார்களே, ஒரு குறிப்பிட்ட தூரத்தைத் தாண்டியபிறகு இனி மேலே போய்த் தான் ஆகவேண்டும், திரும்ப முடியாது என்று? அந்த மாதிரி இது திரும்ப முடியாத தருணம் என்று தோன்றியது ட்ரேஸிக்கு.

கதவின் துவாரத்தில சாவியைப் பொருத்தித் திருப்பினாள். சரேலென்று கதவு திறந்து கொண்டது. முழுசாய் ஒரு நிமிஷம் நின்ற பிறகு உள்ளே நுழைந்தாள்.

தேகத்தின் ஒவ்வொரு நரம்பும் தடால் தடாலென்று பயங்கரமாய் அடித்துக்கொண்டது. முன்னறையில் நின்றாள்.

வேறு ஏதாவது ஓசை கேட்கிறதா என்று கவனித்தாள். நகருவ தற்கே பயமாக இருந்தது. வீடு முழுவதும் பாலை வனத்தின் அமைதி சூழ்ந்திருந்தது.

பென்சில் டார்ச்சை எடுத்து அடித்தாள். மாடிப்படி தெரிந்தது. அதன் வழியே மேலே ஏறத் தொடங்கினாள். எத்தனை சீக்கிரம் முடியுமோ அத்தனை சீக்கிரம் வேலையை முடித்துக்கொண்டு இந்த இடத்தை விட்டு ஓடிவிட்டால் தேவலை என்று தோன்றியது.

சிறிய டார்ச்சின் ஒளிக்கீற்றில் மாடி வெராந்தா பேய்ப் பொந்து போல் இருந்தது. ஒளிக்கீற்று நகரும்போது சுவர்க ளெல்லாம் அசைந்தாடுவது போல் தோன்றியது. ஒவ்வோர் அறையாக எட்டிப் பார்த்துக்கொண்டே சென்றாள். எல்லாம் காலியாக இருந்தன.

மாடி வெராந்தாவின் கடைசியை அடைந்தாள். மார்கன் விவரித்திருந்த மாதிரியே கடல் புறத்தைப் பார்த்தாற்போல் இருந்த படுக்கை அறை கொள்ளை வனப்புடன் திகழ்ந்தது. மங்கலான சிவப்பு வர்ணம் அடிக்கப்பட்டிருந்தது. விதானம் போட்ட பெரிய படுக்கை மிக அழகாக இருந்தது. எங் கெங்கும் பூக்கொத்துக்கள் தென்பட்டன. கணப்புக்கருகே இரண்டு நாற்காலிகளும், சாப்பாட்டு மேஜையும் போடப் பட்டிருந்தன.

ஹூம்! நானும் சார்லஸும் என் குழந்தையும் இது போன்ற வீட்டில் அல்லவா வசித்திருக்க வேண்டும்! ட்ரேஸி பெருமூச்சு விட்டாள்.

படுக்கையின் கீழே ஒருமுறை பார்த்துவிட்டு, லூயிஸின் ஓவியம் மாட்டப்பட்டிருந்த இடத்தில், ஜன்னல் வழியே வெளியே பார்த்தாள். நீர்ப் பரப்பில் படகுகள் மெல்ல அசைந்து கொண்டிருப்பது தெரிந்தது.

எனக்கு இப்படியொரு விதியா என்று நொந்து கொண்டாள் ட்ரேஸி. லூயிஸ் என்ற பெரிய கோடீசுவரி இந்த மாளிகையில் வசிக்க வேண்டுமா? அவள் நகைகளைக்

கொள்ளையடிக்க நான் வரவேண்டுமா? என்ன தலை யெழுத்து!

சரி சரி, வேதாந்தம் பேசியதெல்லாம் போதும் என்று தன்னைத் தானே அதட்டிக் கொண்டாள். வாழ்க்கையில் ஒரே ஒரு முறைதான் இப்படி நடக்கிறது. சும்மா மரம்போல நின்று கொண்டிராமல் ஐந்தே நிமிஷத்தில் வேலையை முடித்துக் கொண்டு வெளியேற வேண்டியது தான்.

லூயிஸின் ஓவியத்திடம் திரும்பி வந்தாள்.

கடினமான, ஆணவமான முகம். மார்கன் சொன்னது சரிதான். மாபெரும் கோடீசுவரி. இவளைக் கொள்ளை யடிப்பதில் பாவமில்லை.

ஓவியத்தை வலது பக்கமாக நகர்த்தியதும், அதன் பின்னே சிறிய பெட்டகம் தெரிந்தது.

பூட்டு வாயை எப்படித் திருகவேண்டுமென்று மார்கன் சொல்லித் தந்தது மனப்பாடமாகியிருந்தது.

வலது பக்கமாக மூன்று திருப்பு; பிறகு நாற்பத்தி ரெண்டாவது எண்ணில் நிறுத்து. இடது புறமாக இரண்டு திருப்பு. பத்தாவது எண்ணில் நிறுத்து. வலது பக்கமாக ஒரு திருப்பு. முப்பதாவது எண்ணில் நிறுத்து.

அவள் கைகள் நடுங்கிக் கொண்டிருந்ததால், ஒரு முறைக்கு இரண்டு முறையாகச் செய்ய வேண்டியிருந்தது.

க்ளிக் என்ற ஓசை.

பெட்டகம் திறந்து கொண்டது.

உள்ளே பலவகைக் காதிதங்களும் கனமான உறைகளும் இருந்தன. ட்ரேஸி அவற்றை ஒதுக்கினாள். பின்புறம் ஒரு சிறிய அலமாரி இருந்தது.

நகைகள் கொண்ட சின்னப் பெட்டி.

அலமாரியிலிருந்து அதை எடுத்தாள்.

திடீரென்று. பெட்டகத்துக்குள் இருந்த அலாரம் ஒலித்தது.

வாழ்க்கையில் அப்படியொரு சத்தத்தைக் கேட்டதே இல்லை என்று தோன்றியது அவளுக்கு.

வீட்டின் ஒவ்வொரு மூலையிலும் அதன் ஒலி எதிரொலித்து எச்சரிக்கை கொடுத்தது.

அதிர்ச்சியில் திகைத்துச் சிலையானாள் ட்ரேஸி.

எங்கே என்ன தப்புச் செய்தோம்? அவளுக்குப் புரியவில்லை. பெட்டகத்துக்குள் ஒரு தனியான அபாய மணி இருக்கும் என்பதோ, நகைகளைத் தொட்டவுடனே அது அடிக்க ஆரம்பிக்கும் என்பதோ, மார்கனுக்குத் தெரியாதா? அவன் ஏன் சொல்லவில்லை?

'உடனே இந்த வீட்டை விட்டு வெளியேறிவிட வேண்டும்' நகைப் பெட்டியைப் பையில் போட்டுக் கொண்டாள். மாடிப்படியை நோக்கி ஓடினாள்.

அதே கணம், பெட்டகத்தின் அபாய மணிச் சத்தத்தைத் தவிர இன்னொரு சத்தமும் கேட்டது.

போலீஸ் வண்டியின் ஊளை.

மாடிப்படியில் அப்படியே நின்றாள் ட்ரேஸி. பயம் பிடித்தது. வாய் உலர்ந்தது. இருதயம் தடதடத்தது.

பக்கத்தில் தெரிந்த ஜன்னலை அடைந்து திரைச் சீலையை மெல்ல விலக்கி எட்டிப் பார்த்தாள்.

ஆம். வெள்ளையும் கறுப்புமான ஒரு போலீஸ் வண்டி வீட்டின் முன் வந்து நின்றது.

அவள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே ஒரு போலீஸ்காரர் வண்டியிலிருந்து இறங்கி வீட்டின் பின் பக்கத்துக்குப் போனார். இன்னொருவர் வாசல் கதவை நோக்கி வந்தார்.

ட்ரேஸியினால் எந்தப் பக்கமும் ஓட முடியாது. பெட்டகத்தின் அலாரமோ ஓயாமல் அலறிக் கொண்டிருந்தது. தெற்கு லூஸியானா பெண்கள் சிறையில் அடைபட்டிருந்தபோது, அந்த வெராந்தாவில் அடிக்கும் பயங்கரமான மணியோசை ட்ரேஸிக்கு ஞாபகம் வந்தது.

கொள்ளையடிக்க நான் வரவேண்டுமா? என்ன தலை யெழுத்து!

சரி சரி, வேதாந்தம் பேசியதெல்லாம் போதும் என்று தன்னைத் தானே அதட்டிக் கொண்டாள். வாழ்க்கையில் ஒரே ஒரு முறைதான் இப்படி நடக்கிறது. சும்மா மரம்போல நின்று கொண்டிராமல் ஐந்தே நிமிஷத்தில் வேலையை முடித்துக் கொண்டு வெளியேற வேண்டியது தான்.

லூயிஸின் ஓவியத்திடம் திரும்பி வந்தாள்.

கடினமான, ஆணவமான முகம். மார்கன் சொன்னது சரிதான். மாபெரும் கோடீசுவரி. இவளைக் கொள்ளை யடிப்பதில் பாவமில்லை.

ஓவியத்தை வலது பக்கமாக நகர்த்தியதும், அதன் பின்னே சிறிய பெட்டகம் தெரிந்தது.

பூட்டு வாயை எப்படித் திருகவேண்டுமென்று மார்கன் சொல்லித் தந்தது மனப்பாடமாகியிருந்தது.

வலது பக்கமாக மூன்று திருப்பு; பிறகு நாற்பத்தி ரெண்டாவது எண்ணில் நிறுத்து. இடது புறமாக இரண்டு திருப்பு. பத்தாவது எண்ணில் நிறுத்து. வலது பக்கமாக ஒரு திருப்பு. முப்பதாவது எண்ணில் நிறுத்து.

அவள் கைகள் நடுங்கிக் கொண்டிருந்ததால், ஒரு முறைக்கு இரண்டு முறையாகச் செய்ய வேண்டியிருந்தது.

க்ளிக் என்ற ஓசை.

பெட்டகம் திறந்து கொண்டது.

உள்ளே பலவகைக் காகிதங்களும் கனமான உறைகளும் இருந்தன. ட்ரேஸி அவற்றை ஒதுக்கினாள். பின்புறம் ஒரு சிறிய அலமாரி இருந்தது.

நகைகள் கொண்ட சின்னப் பெட்டி.

அலமாரியிலிருந்து அதை எடுத்தாள்.

திடீரென்று. பெட்டகத்துக்குள் இருந்த அலாரம் ஒலித்தது.

வாழ்க்கையில் அப்படியொரு சத்தத்தைக் கேட்டதே யில்லை என்று தோன்றியது அவளுக்கு.

வீட்டின் ஒவ்வொரு மூலையிலும் அதன் ஒலி எதிரொலித்து எச்சரிக்கை கொடுத்தது.

அதிர்ச்சியில் திகைத்துச் சிலையானாள் ட்ரேஸி.

எங்கே என்ன தப்புச் செய்தோம்? அவளுக்குப் புரியவில்லை. பெட்டகத்துக்குள் ஒரு தனியான அபாய மணி இருக்கும் என்பதோ, நகைகளைத் தொட்டவுடனே அது அடிக்க ஆரம்பிக்கும் என்பதோ, மார்கனுக்குத் தெரியாதா? அவர் ஏன் சொல்லவில்லை?

'உடனே இந்த வீட்டை விட்டு வெளியேறிவிட வேண்டும்' நகைப் பெட்டியைப் பையில் போட்டுக் கொண்டாள். மாடிப்படியை நோக்கி ஓடினாள்.

அதே கணம், பெட்டகத்தின் அபாய மணிச் சத்தத்தைத் தவிர இன்னொரு சத்தமும் கேட்டது.

போலீஸ் வண்டியின் ஊளை.

மாடிப்படியில் அப்படியே நின்றாள் ட்ரேஸி. பயம் நடுக்கியது. வாய் உலர்ந்தது. இருதயம் தடதடத்தது.

பக்கத்தில் தெரிந்த ஜன்னலை அடைந்து திரைச் சீலையை மெல்ல விலக்கி எட்டிப் பார்த்தாள்.

ஆம். வெள்ளையும் கறுப்புமான ஒரு போலீஸ் வண்டி அந்த வீட்டின் முன் வந்து நின்றது.

அவள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே ஒரு போலீஸ்காரர் வண்டியிலிருந்து இறங்கி வீட்டின் பின் பக்கத்துக்குப் போனார். இன்னொருவர் வாசல் கதவை நோக்கி வந்தார்.

ட்ரேஸியினால் எந்தப் பக்கமும் ஓட முடியாது. பெட்டகத்தின் அலாரமோ ஓயாமல் அலறிக் கொண்டிருந்தது. தெற்கு லூஸியானா பெண்கள் சிறையில் அடைபட்டிருந்தபோது, அந்த வெராந்தாவில் அடிக்கும் பயங்கரமான மணியோசை ட்ரேஸிக்கு ஞாபகம் வந்தது.

'மாட்டேன்! என்ன ஆனாலும் சரி! மறுபடி அந்தச் சிறைக்கு நான் போகப் போவதில்லை!' என்று தீர்மானித்துக் கொண்டாள்.

வாசலில் அழைப்பு மணி கிறீச்சிட்டது.

## 35

பதற்றத்துடன் ட்ரேஸி ஜன்னல் வழியே கவனித்தாள். ஒரு போலீஸ் அதிகாரி முன்பக்கத்துக்கு வந்து வாசல் அழைப்பு மணியை அழுத்திக் கொண்டிருப்பது தெரிந்தது.

போலீஸ் வேனில் வந்திறங்கிய இரண்டு போலீஸ் காரர்களில் ஒருவர் அந்த அதிகாரி. அவர் பெயர் டென்கின். அந்தப் பகுதியில் பத்து வருஷமாகப் போலீஸ் அதிகாரியாக இருக்கிறார். சிறிய வழிப்பறி, கார்த் திருட்டு, குடிகாரர்கள் சண்டை இப்படிச் சில்லறை வம்பு தும்புகளைத் தவிர, பெரும்பாலும் போலீசாருக்கு அதிக வேலை கிடையாது.

இருந்தாலும் கோடீசுவரி லூயிஸின் மாளிகையின் மீது அவருக்கு எப்போதும் ஒரு கண் உண்டு. விலையுயர்ந்த நகைகளும், ஓவியங்களும் அங்கே இருப்பது அவருக்கும் தெரியும். அவள் வெளியூர் சென்றிருப்பது அவருக்குத் தெரியுமாகையால் அடிக்கடி அந்தப் பகுதியைக் கண் காணிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

இரண்டு மூன்று தெருக்களுக்கு அப்பால் அவருடைய ரோந்துக் கார் சென்று கொண்டிருந்தபோது, வேனில் இருந்த போலீஸ் ரேடியோவில் செய்தி கிடைத்தது. லூயிஸின் பங்களாவில் அபாய அறிவிப்பு மணி ஒலிப்பதாகத் தகவல் வந்தவுடன் டென்கின் உஷாரானார்.

நிச்சயம் இந்தத் தடவை ஒரு பக்காத் திருடன் அகப்படப் போகிறான்!

லூயிஸின் வீட்டு வாசலில் இறங்கியவர் மீண்டும் அழைப்பு மணியை அழுத்தினார். மூன்று முறை அழுத்தியும்

யாரும் வரவில்லையென்றால் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே நுழையலாம் என்று எண்ணினார். அவருடைய தோழர் வீட்டின் பின் பக்கம் சென்றிருக்கிறார். ஆகவே திருடன் எந்த வழியாலும் தப்ப முடியாது, எங்கேயாவது ஒளிந்து கொள்ளலாம் என்று அவன் நினைப்பான். நடவாத காரியம். நம் கண்ணிலிருந்து எந்தப் பயலும் தப்ப முடியாது.

மூன்றாவது தடவை அழுத்துவதற்காக மணியைத் தொட்ட சமயம், கதவு சட்டென்று திறந்தது.

டென்கின் அதிர்ந்து போனார்.

வாசலில் நின்றிருந்தவள் ஒரு கவர்ச்சியான இளம்பெண். உடம்பெல்லாம் தெரியும்படியான மெல்லிய நைட்கவுன் அணிந்திருந்தாள். இரவு படுக்கப் போகுமுன் முகம் கழுவிக் கொண்டாள் போலும். முகம் பூரா க்ரீம் அப்பிக் கொண்டிருந்தாள். முடியைச் சுருட்டையாக்கும் க்ளிப்புகள் தலை மொத்தத்தையும் மூடியிருந்தது.

அதட்டலான குரலில், "என்ன விஷயம்? எதற்காக இப்படி அடிக்கிறீர்கள்?" என்றாள் அவள்.

டென்கின் மிடறு விழுங்கினார். "வந்து... நீங்கள் யார்?"

"நான் எல்லன். லூயிஸின் விருந்தாளி. அவள் ஐரோப்பாவுக்குப் போயிருக்கிறாள்."

"அது தெரியும்... என்றார் டென்கின் குழப்பமாக. "வந்து... இங்கே விருந்தாளி தங்கப் போகிறாள் என்று அந்த அம்மாள் சொல்லவில்லையே?"

புன்னகையுடன் தலையை அசைத்தாள். "சொல்ல வில்லை? லூயிஸ் எப்பவும் இப்படித்தான். கொஞ்சம் இருங்கள், இந்த அலாரம் அப்போ பிடித்து ஓயாமல் அலறுகிறது. என்ன ஆச்சோ தெரியவில்லை. கொஞ்சம் மன்னியுங்கள், அதை நிறுத்தப் பார்க்கிறேன்."

டென்கின் பார்த்துக் கொண்டேயிருக்க, அவள் அலாரம் பொத்தான்களை என்னென்னவோ மாற்றி மாற்றி அழுத்தினாள். ஒரு வழியாக அந்த ஓசை நின்றது.

"அப்பாடா!" என்று பெரு மூச்சு விட்டாள் அந்தப் பெண். "சார், நீங்கள் வந்ததில் எனக்கு எவ்வளவு ஆறுதல் தெரியுமா?" சொல்லிவிட்டுச் சங்கடமாகச் சிரித்தாள். "ஏன் சொல்கிறேன் என்றால், நான் படுத்துக்கொள்ளத் தயாரா யிருந்தேன் திடீரென்று அந்த அலாரம் மணி அடிக்க ஆரம்பித்து விட்டது. நிச்சயம் யாரோ திருடன் தான் வீட்டுக்குள் புகுந்திருக்கிறான் என்று நடுங்கிப் போனேன். நானோ ஒண்டியாக இருக்கிறேன்! வேலைக்காரர்கள் எல்லாரும் மத்தியானமே புறப்பட்டுப் போய்விட்டார்கள்."

"நாங்கள் வேண்டுமானால் உள்ளே வந்து பார்க் கிறோமே?"

"ஓ! கட்டாயம் வந்து பாருங்கள்!" டென்கினும் அவருடைய தோழரும் வீடெங்கும் பார்த்தார்கள். எந்தத் திருடனும் ஒளிந்திருக்கவில்லை என்பது சந்தேகமில்லாமல் தெரிந்தது.

"யாரும் இல்லை," என்று அறிவித்தார் டென்கின். "அலாரத்தில் ஏதோ கோளாறு. அதுதான் தப்பாய் அடித்திருக்கிறது. இந்த எலெக்ட்ரானிக் சமாசாரங்களே இப்படித்தான். நான் நாளைக்கு எங்கள் ஆட்களை அனுப்பி அலாரத்தைச் சரிபார்க்கச் சொல்கிறேன்."

"கட்டாயம் செய்யுங்கள் சார்."

"நல்லது. நாங்கள் போகலாமில்லையா?"

"ரொம்ப நன்றி சார். எனக்கு இப்போ பயமில்லாமல் இருக்கிறது."

'பொண்ணு படா ஷோக்காய்த் தான் இருக்கிறாள்' என்று டென்கின் மனத்துக்குள் நினைத்துக்கொண்டார். முகத்தில் அந்தக் கிரீமும், தலையில் அந்தக் கிளிப்புகளும் இல்லையென்றால் இன்னும் கூடப் பிரமாதமாக இருப்பாள்...

"இங்கே ரொம்ப நாள் தங்கியிருப்பீர்களா மிஸ்?" என்றார்.

"இன்னும் இரண்டொரு வாரம், எப்படியும் லூயிஸ் திரும்பி வருகிற வரையில் இருப்பேன்."

"ஏதாவது வேண்டுமென்றால் என்னைக் கூப்பிடுங்கள்."

"நிச்சயமாய்... ரொம்பத் தாங்ஸ்."

போலீஸ் வேன் இருட்டில் வெகு தூரம் சென்று மறையும் வரையில் வாசலில் நின்று பார்த்துக் கொண்டேயிருந்தாள் ட்ரேஸி.

ஏற்பட்ட நிம்மதியில் மயக்கமே வரும் போலிருந்தது.

பார்வையிலிருந்து கார் மறைந்ததும் மாடிக்கு விரைந்தாள். குளியலறைக்குச் சென்று, க்ரீமைத் தண்ணீர் விட்டுக் கழுவிக் கொண்டாள். நல்லவேளை, டிரெஸ்ஸிங் டேபிளில் க்ரீம் இருந்ததால் சட்டுப் புட்டென்று முகத்தில் அப்பிக் கொண்டு, போலீஸ்காரருக்கு அடையாளம் தெரியாத மாதிரி பண்ணிக் கொள்ள முடிந்தது! லூயிஸின் முடிக் கிளிப்புகளைக் கழற்றினாள். அவளுடைய வெங்காயச் சருகு நைட்கவுனைக் கலைந்தாள்.

தான் கொண்டு வந்திருந்த நீண்ட கறுப்பு ஓவர் கோட்டை மாட்டிக் கொண்டாள். எச்சரிக்கையுடன் முன் வாசல் வழியே வெளியேறினாள். போகுமுன் வாசல்புற அலாரத்தைப் பழையபடி செட் பண்ணி வைத்துவிட்டுச் சென்றாள்.

நியூயார்க்கிற்குப் பாதி வழி திரும்பிய போதுதான் 'எப்பேர்ப்பட்ட சாதனை செய்துவிட்டோம்!' என்ற எண்ணம் ஏற்பட்டது ட்ரேஸிக்கு. என்னவொரு துணிச்சல் நமக்கு!

நினைக்க நினைக்கச் சிரிப்பு வந்தது. அந்தச் சிரிப்பு பெரிதாகி, கடகடவென்று சிரித்தாள். குலுங்கக் குலுங்கச் சிரித்தாள். அடக்கவே முடியாமல் போகவே, சாலை ஓரமாகக் காரை நிறுத்திவிட்டுச் சிரித்தாள். கண்ணீர் பெருகிக் கன்னங்களில் வழிந்தோடும் மட்டும் சிரித்தாள்.

சென்ற ஒரு வருடத்தில் இப்போதுதான் நாம் முதன் முறையாகச் சிரிக்கிறோம் என்பது ஞாபகம் வந்தது. உள்ளத்தில் எல்லையற்ற உற்சாகம் ஏற்பட்டது.

மார்கன் சொல்லித் தந்திருந்தபடி ஸெயின்ட் லூயிக்குச் செல்லும் ரயிலில் ஏறி அமர்ந்து கொண்டாள் ட்ரேஸி.

உள்ளூர அவளுக்குத் திக்திக்கென்றிருந்தது. எந்த நிமிடத்திலும் ஒரு முரட்டுக் கரம் தன் தோளை அழுத்தப் போகிறது. எந்த நிமிஷத்திலும் ஒரு முரட்டுக் குரல் 'உன்னைக் கைது செய்கிறோம்' என்று சொல்லப் போகிறது...

ஸெயின்ட் லூயி ஸ்டேஷனில் மார்கன் காத்திருப்பார் - 25000 டாலருடன். ஒன்றல்ல, இரண்டல்ல, இருபத்தையாயிரம் டாலர்! அந்தத் தொகையை நம் இஷ்டப்படி எப்படி வேண்டுமானாலும் செலவழிக்கலாம்! பாங்க்கில் முழுசாய் ஒரு வருஷம் வேலை செய்தால்கூட அத்தனை தொகை கிடைக்காது!

ஐரோப்பாவுக்குப் போகலாம் என்று நினைத்துக் கொண்டாள் ட்ரேஸி. பாரிசுக்குச் செல்லலாம். சீ! பாரிஸ் வேண்டாம். சார்லஸை மணந்து கொண்டு தேனிலவுக்கு அங்கே தான் போவதாகத் திட்டமிட்டிருந்தாள். அந்தச் சனியன் பிடித்த ஊர் வேண்டாம். லண்டனுக்குப் போகலாம்.. என்னை ஒரு சிறைப்பறவை என்று யாரும் அங்கே சொல்ல மாட்டார்கள்.

என்னவோ தெரியவில்லை. சற்றுமுன் ஏற்பட்ட அனுபவம் ட்ரேஸியை முற்றிலும் மாற்றியிருந்தது. புதுப் பிறவி எடுத்த மாதிரி இருந்தது.

அவள் இருந்தது ஒரு தனியான கம்பார்ட்மெண்ட். அதன் கதவுகளை உட்புறம் தாளிட்டுக்கொண்டாள். பாக் கெட்டிலிருந்த நகைப்பெட்டியை வெளியே எடுத்தாள். திறந்து கையில் வைத்துப் பார்த்தாள்.

அப்பா! என்ன கண்ணைப் பறிக்கும் ஜொலிப்பு!

*மூன்று பெரிய வைர மோதிரங்கள். ஒரு நீலக்கல் பதித்த கொண்டை யூசி. ஒரு மரகத வளையல்; மூன்று ஜோடி வைரக் கம்மல்கள். இரண்டு நெக்லஸ்கள். கெம்புக் கற்கள் பதித்தது. ஒன்று முத்துக்கள் பதித்தது.*

*மொத்தத்தின் மதிப்பும் பத்து லட்சம் டாலருக்கு மேலிருக்கும்! ட்ரேஸி பிரமித்தபடி இருக்கையில் சாய்ந்து கொண்டாள்.*

*ரயில் போய்க் கொண்டிருந்தது. வெளியே பசுமையான பூமி.*

*சாயந்தரம் நிகழ்ந்ததனைத்தும் அவள் மனக் கண்ணில் ஓடின.*

*'முகத்தில் க்ரீமும், தலையில் கிளிப்புமாக இருக்கும் அந்தப்பெண்தான் கொள்ளைக்காரி என்று அந்தப் போலீஸ் அதிகாரிகளுக்குக் கொஞ்சங்கூடத் தெரியவில்லையே?'*

*ஸெயின்ட் லூயி நகரை நோக்கிச் செல்லும் ரயில் பென்ஸில்வேனியா ஸ்டேஷனைத் தாண்டியது. ட்ரேஸியின் முகத்தில் அப்போது தான் திருப்தியின் புன்னகை மலர்ந்தது. போலீஸ்காரர்கள் கண்ணில் மண்ணைத் தூவினோம் என்று நினைக்கையில் அவள் மனத்துக்குள் ஒரு திமிர் கூட ஏற்பட்டது. ஆபத்தின் கொட்டுமுனைக்குப் போய் நிற்பதில் ஒரு அற்புதமான குஷி இருக்கத்தான் இருக்கிறது என்று எண்ணிக் கொண்டாள். அவளுக்குள் ஒரு துணிச்சல் பிறந்தது. தான் கெட்டிக்காரி என்ற எண்ணம் உதித்தது. தன்னை எவரும் தோற்கடிக்க முடியாது என்ற நம்பிக்கை ஏற்பட்டது. 'ஆ! நம்மைப் போல யாருண்டு!' என்று எண்ணி மனமகிழ்ந்தாள்.*

*கம்பார்ட்மென்ட் கதவை யாரோ தட்டினார்கள்.*

*ட்ரேஸி அவசர அவசரமாக நகைப்பெட்டியை மூடி அதைத் தன் சூட்கேசுக்குள் வைத்துக் கொண்டாள். ரயில் டிக்கெட்டைத் தயாராய்க் கையில் எடுத்து வைத்துக் கொண்டாள் கதவைத் தட்டுபவர் டிக்கெட் பரிசோதகர் தான் என்ற எண்ணத்துடன்.*

சாம்பல் நிற உடையணிந்த இருவர் வெளியே நின்றிருந்தார்கள். ஒருவனுக்கு முப்பது வயதுக்குள் இருக்கும். மற்றவனுக்கு இன்னும் பத்து வயது கூடுதலாக இருக்கும். இளையவன் விளையாட்டு வீரனைப் போல கட்டுமஸ்தான உடம்புடன் இருந்தான். அழுத்தமான மோவாயும், கச்சித மான மீசையும், தடித்த கண்ணாடியுமாக இருந்தான். நீலக் கண்களில் புத்திக் கூர்மை பிரகாசித்தது. மற்றவன் பருமனாக வும், கறுத்த முடியுடனும் இருந்தான்.

"என்ன வேண்டும்?" என்று ட்ரேஸி கேட்டாள்.

"ஒரு சின்ன விஷயம் மேடம்," என்று கூறிய மூத்த நபர், தன் அடையாளக் கார்டை எடுத்துக் காட்டினான். அதில்

'அமெரிக்க அரசு நீதித்துறை மத்தியப் புலனாய்வுப் பிரிவு.'

"நான் ஸ்பெஷல் அதிகாரி டென்னிஸ். இவர் ஸ்பெஷல் அதிகாரி தாமஸ்," என்றார் மூத்தவர்.

ட்ரேஸிக்கு நாக்கு உலர்ந்தது. கஷ்டப்பட்டு ஒரு புன்னகையை வரவழைத்துக் கொண்டாள். "நான் வந்து... எனக்குப் புரியவில்லையே? ஏதாவது தப்பாக..."

"ஆமாம், மேடம்," என்றான் இளையவன் மென்மை யான குரலில், "இந்த வண்டி சற்று முன்தான் நியூஜெர்ஸி மாநிலத்துக்குள் நுழைந்திருக்கிறது. வேறு மாநிலத்திலிருந்து திருட்டுப் பொருள்களை இந்த மாநிலத்துக்குள் கொண்டு வருவது சட்டப்படி குற்றம்..."

ட்ரேஸிக்குத் தலை சுற்றியது. கண்முன் ஒரு சிவப்புப் படலம் தோன்றி எல்லாம் மங்குகிற மாதிரி இருந்தது.

மூத்த நபர், "தயவு பண்ணி உங்கள் பெட்டியைத் திறந்து காட்டுகிறீர்களா?" என்றான்.

அது கோரிக்கையாக இருக்கவில்லை. கட்டளையாக இருந்தது.

# 36

பெட்டியைத் திறந்து காட்டு என்று அந்த இருவரும் அதட்டியவுடன் -

ட்ரேஸிக்கு ஒரே ஒரு வழிதான் தோன்றியது.

கொஞ்சமும் பயப்படாதவள் மாதிரி நாமும் இவர்களை மிரட்டிப் பார்த்தால் என்ன என்று எண்ணினாள்.

"பெட்டியைத் திறந்து காட்ட வேண்டுமா? முடியாது. எதற்காகக் காட்ட வேண்டும்? நீங்கள் பாட்டுக்கு என் கம்பார்ட்மெண்டில் புகுந்து அடாவடி பண்ணுகிறீர்களே, என்ன துணிச்சல் உங்களுக்கு?" குரலில் ரோஷத்தையும் கோபத்தையும் வரவழைத்துக் கொண்டாள். "இதுதான் உங்கள் ரயில்வேயின் லட்சணமா? அப்பாவிப் பிரயாணி களை அனாவசியமாய் உருட்டி மிரட்டுவதா? இருங்கள், நான் டிக்கெட் பரிசோதகரைக் கூப்பிடுகிறேன்."

"டிக்கெட் பரிசோதகருடன் நாங்கள் ஏற்கெனவே பேசிவிட்டுத்தான் வந்திருக்கிறோம், மிஸ்" என்றார் வயதில் மூத்தவராக இருந்தவர்.

ட்ரேஸிக்கு ஏமாற்றமாக இருந்தது. இவர்களை டபாய்க்கலாம் என்று பார்த்தால் நடக்கவில்லையே!

கடைசி அஸ்திரத்தைப் பிரயோகித்துப் பார்த்தாள். "சரி, சோதனை போடுவதற்கு ஸர்ச் வாரண்ட் வைத்திருக் கிறீர்களா?"

தாமஸ் என்ற அந்த இளைஞன் அமைதியாகவும் மென்மையாகவும் சொன்னான்: "நீங்கள் ஒரு குற்றம் செய்திருக்கிறீர்கள். அதைப் பற்றி விசாரிக்கிறோம். அவ்வளவு தான். இதற்கு ஸர்ச் வாரண்ட் எதுவும் தேவையில்லை. மிஸ் ட்ரேஸி!"

ட்ரேஸிக்குத் தூக்கி வாரிப் போட்டது. "இவர்கள் நம் பெயரைக் கூடத்தெரிந்து வைத்திருக்கிறார்களே! சே! நன்றாய்

மாட்டிக் கொண்டு விட்டோம். இனித் தப்ப வழியில்லை. வழியே இல்லை.'

மூத்த நபர் அவளுடைய பெட்டியைத் தானே எடுத்துத் திறந்தார். இனி இவர்களைத் தடுப்பதில் எந்தப் புண்ணியமு மில்லை.

அவர் பெட்டிக்குள்ளிலிருந்து அந்த நகைப் பெட்டியை எடுப்பதைப் பார்த்துக் கொண்டு சிலை போல் உட்கார்ந்தி ருந்தாள். அவர் நகைப் பெட்டியைத் திறந்து உள்ளிருப்ப வைகளைப் பார்த்தார். பிறகு தன் தோழனைப் பார்த்தார். புரிந்து கொண்ட மாதிரி இருவரும் தலையாட்டிக் கொண்டார்கள்.

இருக்கையில் பொத்தென்று உட்கார்ந்தாள் ட்ரேஸி. நிற்கக்கூட முடியாமல் திடீரென்று ஒரு பலவீனம் அவளை ஆட்கொண்டது.

மூத்தவர் தன் பையிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்தார். அதிலிருந்த பட்டியலையும், நகைப் பெட்டியில் இருந்தவை களையும் ஒப்பிட்டுப் பார்த்தார். பெட்டியைத் தன் பாக் கெட்டுக்குள் போட்டுக் கொண்டார். "எல்லாம் சரியாக இருக்கிறது. தாமஸ்," என்றார்.

ட்ரேஸி அவர்களைப் பரிதாபமாகப் பார்த்தாள். "எப்படி... எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?" என்றாள்.

"உங்களுக்கு எந்தவிதத் தகவலும் கொடுக்க எங்களுக்கு அனுமதி கிடையாது," என்றார் மூத்தவர் "உங்களை இப்போது கைது செய்கிறோம். நீங்கள் உங்கள் சார்பாக எதுவும் சொல்ல வேண்டுமென்ற கட்டாயமில்லை. வக்கீலின் முன்னிலையில் மட்டுமே பேசுவேன் என்று சொல்ல உங்களுக்கு உரிமை உண்டு. இப்போது நீங்கள் எது சொன்னாலும் பிற்பாடு அது உங்களுக்கு எதிரான சாட்சியமாய்ப் பயன்படுத்தப்படும். புரிகிறதா?"

"சரி," என்றாள் ட்ரேஸி. அவள் குரல் அவளுக்கே கேட்கவில்லை.

இளைஞனாயிருந்தவன் சொன்னான்: "உன்னைப் பார்த்தால் பரிதாபமாகத்தான் இருக்கிறது. பாவம். உன்னுடைய சரித்திரம் எங்களுக்குத் தெரியும்."

மூத்தவர் குறுக்கிட்டு, "போதும் நிறுத்திக்கொள். அனாவசிய அனுதாபமெல்லாம் வேண்டாம்."

"இருந்தாலும்... வந்து..."

மூத்தவர், விலங்கை எடுத்தார். "கையை நீட்டம்மா."

ட்ரேஸியின் உள்மனம் வேதனையில் துடித்தது. முன்னொரு நாள் நியூ ஆர்லியன்ஸ் விமான தளத்தில் தன்னைக் கைவிலங்கிட்டுப் போலீசார் அழைத்துச் சென்றது ஞாபகம் வந்தது. போவோர் வருவோர் எல்லாரும் தன்னை வெறித்து நோக்கியது நினைவு வந்தது. "ப்ளீஸ்... வந்து... விலங்கு மாட்டித்தான் ஆகணுமா?"

"ஆமாம்மா."

இளையவன் குறுக்கிட்டு, மூத்தவரிடம், "டெனிஸ், ஒரு நிமிஷம் வெளியே வா. தனியாய்க் கொஞ்சம் பேசணும்," என்றான்.

மூத்தவர் தோளைக் குலுக்கிக்கொண்டு, "ஊம்," என்றார்.

இரண்டு பேரும் கம்பார்ட்மெண்ட்டுக்கு வெளியே இருந்த வெராந்தாவுக்குப் போனார்கள். ட்ரேஸி தன் இருக்கையை விட்டு நகரவில்லை. அவள் நெஞ்சில் நிராசை யும் கசப்பும் நிரம்பி வழிந்தன.

வெளியே அவர்கள் பேசிக் கொண்டது கொஞ்சம் கொஞ்சம் காதில் விழுந்தது.

இளைஞன் சொன்னான்:

"டெனிஸ், உனக்குப் புண்ணியமாய்ப் போகட்டும். அந்தப் பெண் ஓடிவிட மாட்டாள். விலங்கு மாட்ட வேண்டிய அவசியமில்லை."

"இப்படி எதற்கெடுத்தாலும் இரக்கப்படுகிற சுபாவம் என்றைக்குத்தான் உன்னை விட்டுப்போகப் போகிறதோ!

போலீஸ் துறையில் எனக்குள்ள அனுபவம் உனக்கு வரும் போது புரியும்..."

"அந்தப் பெண்ணைப் பார்த்தால் பாவமாய் இருக்கிறது. அதனால் தான் விலங்கு மாட்ட வேண்டாம்னு சொல்றேன். ஏற்கெனவே அவள் ரொம்ப மனசு நொந்து போயிருக் கிறாள்..."

"அவள் எப்படிப்பட்டவள் என்று..."

இதற்குமேல் ட்ரேஸிக்குக் காதில் விழவில்லை. மீதி சம்பாஷணையைக் கேட்க வேண்டுமென்ற ஆவலும் ஏற்படவில்லை.

இருவரும் கம்பார்ட்மெண்ட்டுக்குள் திரும்பி வந்தார்கள். மூத்தவர் கோபமாயிருப்பது போல் தோன்றியது. "சரி, சரி. உனக்கு விலங்கு மாட்டாமல் விடுகிறோம். அடுத்த ஸ்டேஷனில் எங்களுடன் நீ இறங்க வேண்டும். தயாராய் இரு. ஸ்டேஷனுக்குப் போலீஸ் வண்டி கொண்டுவரச் சொல்லித் தகவல் கொடுத்துவிட்டு வருகிறோம். அதுவரை இந்தக் கம்பார்ட்மெண்ட்டை விட்டு நீ எங்கேயும் நகரக் கூடாது. புரிகிறதா?"

ட்ரேஸி தலையாட்டினாள். வாய்விட்டுப் பேச முடியாத படி துயரம் அவள் உள்ளத்தை அடைத்திருந்தது.

இணைஞனாயிருந்தவன் அவளை அனுதாபத்துடன் பார்த்துத் தோளைக் குலுக்கினான். உனக்காக ஏதாவது செய்யலாம் என்று பார்க்கிறேன், முடியவில்லையே... என்று சொல்கிற மாதிரி இருந்தது அவன் பார்வை.

எனக்காக யாரும் எதுவும் செய்ய முடியாது என்று எண்ணிக் கொண்டாள் ட்ரேஸி. எல்லாம் காலம் கடந்து விட்டது. கையும் களவுமாக அவளைப் பிடித்து விட்டார்கள். எப்படியோ போலீசார் நம்மைக் கண்டுபிடித்து, மத்திய ரகசியப் போலீஸிடம் தெரிவித்து விட்டார்களே!

இரண்டு பேரும் வெளியே சென்று, டிக்கெட் பரி சோதகரிடம் பேசிக் கொண்டிருந்தார்கள். இளைஞன்,

ட்ரேஸியைச் சுட்டிக் காட்டி ஏதோ சொல்லிக் கொண்டிருந் தான். என்ன சொன்னான் என்று ட்ரேஸிக்குக் காதில் விழ வில்லை. டிக்கெட் பரிசோதகர் தலையை ஆட்டினார். இருவரும் கம்பார்ட்மெண்ட் கதவை மூடினார்கள்.

சிறைக் கதவு மடேலென்று சாத்திக்கொள்ளும் ஓசை மாதிரி கேட்டது அந்தச் சத்தம்.

ஜன்னல் வழியே சிறுசிறு இயற்கைக் காட்சிகள் அவள் கண்ணில் பட்டுப் பட்டு மறைந்தன. ஆனால் அது எதுவும் ட்ரேஸியின் மனதில் எட்டவில்லை. அச்சத்தினால் உறைந்து போனவளாக அசையாமல் உட்கார்ந்திருந்தாள்.

ரயிலின் இரைச்சலையும் மீறிய அலையோசையொன்று அவள் செவிகளைத் தாக்கிக் கொண்டிருந்தது.

சிறையிலிருந்து கௌரவமாக விடுதலையாகி வருவதற்கு இன்னொரு சந்தர்ப்பம் இனிமேல் அவளுக்குக் கிடைக்கப் போவதில்லை. சிறைப் பறவை என்ற முத்திரை இனி அவள் மீது அழுத்தமாகக் குத்தப்பட்டு விடும். எவ்வளவு அதிகபட்ச தண்டனை தர முடியுமோ அவ்வளவு அதிகபட்சம் தருவார் கள். இந்தத் தடவை எந்த வார்டனின் குழந்தையும் கை கொடுக்க மாட்டாள்.

சிறை! சிறை! கொடிய, நீண்ட, முடிவில்லாத வருடங் களுக்குச் சிறை! அதைத்தான் இனி அவள் எதிர்நோக்க வேண்டும். குண்டு பெர்த்தாக்களிடம் சித்திரவதை பட வேண்டும்.

ஒரே ஒரு கேள்வி அவள் மனத்தைக் குடைந்தது. எப்படி இவர்கள் நம்மைப் பிடித்தார்கள்?

கோடீசுவரி லூயிஸின் மாளிகையில் அவள் நகைகளைத் திருடப் போகும் விஷயம் மார்கன் ஒருவருக்குத்தான் தெரியும். அவர் சொல்லியிருக்க முடியாது. நம்மையும் ரகசியப் போலீசாருக்குக் காட்டிக் கொடுத்து நகைகளையும் போலீ சாரிடம் இழப்பதற்கு அவருக்குப் பைத்தியமா பிடித்திருக் கிறது? ஒருவேளை அவருடைய ஆபீசில் வேலை பார்க்கும்

குமாஸ்தா எவருக்காவது இந்தத் திட்டம் தெரிந்து போலீசுக்குத் தகவல் கொடுத்திருப்பானோ?

ஹூம்! போலீசார் எப்படி நம்மைப் பிடித்தார்கள் என்பதா இப்போது முக்கியம்? பிடிபட்டாயிற்று. அடுத்த ஸ்டேஷனில் இறங்கி, போலீசாருடன் நடக்க வேண்டியதுதான். கோர்ட், குற்றச் சாட்டு, விசாரணை, தீர்ப்பு... பிறகு... பிறகு...

மேலே எண்ணுவதற்கே பிடிக்கவில்லை. கண்களை வெகு இறுக்கமாக மூடிக்கொண்டாள். அப்படியும் கூட வெப்பமான கண்ணீர் தன் கன்னங்களில் வழிந்தோடுவதை உணர முடிந்தது.

ரயில் மெல்ல மெல்ல வேகம் குறைந்தது.

ட்ரேஸிக்குப் படபடப்பு ஏற்பட்டது. மூச்சு விடுவது கூடக் கஷ்டமாயிருந்தது.

ரகசியப் போலீஸார் இருவரும் எந்த நிமிடமும் வருவார்கள் அவளை அழைத்துப் போக.

ஒரு ஸ்டேஷனில் வண்டி நுழைவது தெரிந்தது. சில விநாடிகளில் ரயில் நின்றது. இறங்க வேண்டியதுதான். ட்ரேஸி சூட்கேஸை மூடிக்கொண்டாள். கோட்டை மாட்டிக் கொண்டு உட்கார்ந்து கொண்டு, கம்பார்ட்மெண்ட்டின் மூடிய கதவையே பார்த்தவாறிருந்தாள்.

நிமிடங்கள் ஓடின.

அந்த இருவரும் வரக் காணோம். என்னதான் செய்கிறார்கள்?

'அடுத்த ஸ்டேஷனில் உங்களை இறக்கி அழைத்துச் செல்லப் போகிறோம். ஸ்டேஷனுக்குப் போலீஸ் வண்டியை அனுப்பும்படி தகவல் தெரிவிக்கப் போகிறோம். இந்தக் கம்பார்ட்மெண்ட்டை விட்டு நகராதே...' என்று அவர்கள் சொன்ன வார்த்தைகள் நினைவு வந்தன.

"எல்லாரும் இறங்கியாச்சா?" என்று டிக்கெட் பரிசோதகர் குரல் கொடுப்பது கேட்டது.

*ட்ரேஸிக்குக் கலவரம் ஏற்பட்டது.*

*'பிளாட்பாரத்தில் இறங்கிக் காத்திருக்கிறோம்' என்று சொன்னார்களோ? அதைத்தான் நாம் சரியாய்க் காதில் வாங்கிக்கொள்ளவில்லையோ? அப்படித்தான் இருக்கும். இனிமேலும் வண்டிக்குள் உட்கார்ந்திருந்தால், தப்பியோட நினைத்ததாகச் சொல்வார்கள். விஷயம் இன்னும் விபரீத மாகி விடும்.*

ட்ரேஸி தன் சூட்கேஸை எடுத்துக் கொண்டாள். ஒரே தாவலில் கம்பார்ட்மெண்ட் கதவைத் திறந்தாள். வெளிப் பாதைக்கு வேகமாக வந்தாள்.

டிக்கெட் பரிசோதகர் எதிரில் வந்தார். "நீங்கள் இங்கே இறங்க வேண்டுமா மிஸ்," என்றார். "சீக்கிரமாய் இறங்குங் கள். கொஞ்சம் இருங்கள், நான் உதவி செய்கிறேன். நீங்கள் இருக்கும் நிலையில் அதிகப் பளு தூக்கக் கூடாது."

அவள் திகைத்தாள். "நான் இருக்கும் நிலையா?"

"இதற்குப் போய் ஏன் கூச்சப் படுகிறீர்கள்? உங்கள் சகோதரர்கள் சொன்னார்கள் நீங்கள் கர்ப்பமாக இருக்கிறீர்கள் என்று. உங்களுக்கு ஏதாவது உதவி தேவைப் பட்டால் செய்யும்படி சொன்னார்கள்."

"என் சகோதரர்கள்?"

"தங்கமான பிள்ளைகள், உங்களைப் பற்றி ஏகப்பட்ட கவலை அவர்களுக்கு, பாவம்."

பம்பரம் போல் சுழன்றது உலகம் ட்ரேஸிக்கு. பார்க்கும் ஒவ்வொன்றும் தலைகீழாய்த் தெரிந்தது.

டிக்கெட் பரிசோதகர் அவளுடைய சூட்கேஸை வாங்கிக் கொண்டு கதவு வரை வந்து அவளை இறக்கி விட்டார். வண்டி நகரத் தொடங்கியது.

"என் சகோதரர்கள் எங்கே போனார்கள் என்று தெரியுமா சார்?" என்று டிக்கெட் பரிசோதகரைக் கேட்டாள் ட்ரேஸி.

"தெரியாது மேடம். வண்டி நின்றதுமே இறங்கி ஒரு டாக்ஸியில் ஏறிக்கொண்டு போய்விட்டார்கள்."

சும்மா போகவில்லை! பத்து லட்சம் டாலர் பெறுமானமுள்ள நகைகளுடன்!

விடுவதில்லை அவர்களை என்று தீர்மானித்துக் கொண்டாள் ட்ரேஸி.

## 37

ரகசியப் போலீஸ்ஸார் போல் வேடமிட்டுத் தன்னை ஏமாற்றியவர்களை விடுவதில்லை என்ற உறுதியோடு விமான நிலையத்துக்கு ஒரு டாக்ஸியில் புறப்பட்டாள் ட்ரேஸி.

அவர்கள் டாக்ஸியில் சென்றார்கள் என்று டிக்கெட் பரிசோதகர் சொன்னதை வைத்துப் பார்த்தால், சொந்தத்தில் கார் எதுவும் இல்லை என்று அர்த்தம். அதாவது, இந்த ஊர்க்காரர்கள் அல்ல. ஆகவே எவ்வளவு வேகமாய் முடியுமோ அவ்வளவு வேகமாய் இந்த ஊரை விட்டு வெளியேறப் பார்ப்பார்கள்.

டாக்ஸி பறந்தது. பின்சீட்டில் சாய்ந்து கொண்டாள். அவர்கள் தன்னை ஏமாற்றியதை நினைக்க நினைக்க ரத்தம் கொதித்தது. எவ்வளவு சுலபமாய் ஏமாற்றினார்கள் என்பதை நினைக்கையில் அவமானமாயும் இருந்தது.

இரண்டு பேரும் கெட்டிகாரர்கள். ஒன்றாம் நம்பர் கெட்டிக்காரர்கள். எத்தனை தத்ரூபமாய் நடித்தார்கள்! இரண்டு போலீஸ்காரர்கள் வருவது- ஒருவன் கண்டிப்புக் காரன் மாதிரியும் மற்றவன் இரக்கமுள்ளவன் மாதிரியும் நடிப்பது, இதெல்லாம் எவ்வளவு பழைய ட்ரிக்! இதற்குப் போய் ஏமாந்தோமே!

ரகசியப் போலீசாவது மண்ணாவது! எதுவும் இல்லை! இரண்டு பேருமே பக்கா கிரிமினல்கள்!

இருக்கட்டும். அந்த நகைகளைத் திரும்பப் பெறாமல் விடப் போவதில்லை.

அவ்வளவு படாத பாடுபட்டுத் திருடி வந்த நகைகளை எவனோ இரண்டு சாதா ஆட்களிடம் பறிகொடுத்து ஏமாளியாக நிற்பதா? ஒரு நாளுமில்லை.

கால தாமதமில்லாமல் விமான நிலையத்தை அடைய வேண்டும்...

முன்பக்கம் குனிந்து டாக்ஸியோட்டியிடம், "ப்ளீஸ், இன்னும் கொஞ்சம் வேகமாகப் போக முடியுமா?" என்றாள்.

விமான நிலையத்தை அவள் அடைந்தபோது, பயணிகளின் க்யூவில் அந்த இருவரும் நின்றிருப்பது தெரிந்தது. முதலில் சட்டென்று அவர்களை ட்ரேஸிக்கு அடையாளம் தெரியவில்லை. ஏனெனில் தன் கண்ணாடியைக் கழற்றியிருந்தான் ஒருவன். வயதில் மூத்த நபர் தன் விக்கை நீக்கியிருந்ததால் தலை முழு வழுக்கையாகத் தெரிந்தது. ஆனால் இருவருக்குமே தங்கள் உடைகளை மாற்றிக் கொள்ள நேரமில்லை போலும். ஆகவே உடைகளைக் கொண்டு அவர்களை அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது.

கிட்டத்தட்ட வாசலைக் கடந்து உள்ளே போகவிருந்த சமயம் அவர்களைப் பிடித்துவிட்டாள்.

"ஒரு விஷயம் மறந்து விட்டீர்களே?" என்றாள்.

குரலைக் கேட்டதும் அவர்கள் திடுக்கிட்டுத் திரும்பினார்கள். வயதில் இளையவன் கிடுகிடுவென்று பேசினான்: "இங்கே எதற்கு வந்தாய் நீ? ரகசியப் போலீஸ் இலாகாவின் கார் ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்திருக்குமே? அதில் நீ போயிருக்க வேண்டுமே?" என்றான்.

சற்றுமுன் போலீஸ் ஆள் போல நடித்தபோது தெற்கத்தியான் பேசுகிற மாதிரி இருந்தது அவன் உச்சரிப்பு. இப்போது அது போய் விட்டது.

ட்ரேஸி அமைதியாகத் தன் முடியைச் சரிசெய்து கொண்டாள். "ஓகோ, அப்படியா? நீங்களும் வாருங்களேன். அந்தக் கார் எங்கே தான் போகிறதென்று பார்ப்போம்."

"எங்களால் வர முடியாது. எங்களுக்கு இன்னொரு கேஸ் இருக்கிறது," என்றான் வயதில் மூத்தவனாக இருந்த மற்றவன். "எங்கள் விமானம் புறப்பட்டுக் கொண்டிருக்கிறது. நாங்கள் போயாக வேண்டும்."

"முதலில் என் நகைகளை என்னிடம் திருப்பிக் கொடுங்கள்," என்றாள் ட்ரேஸி அழுத்தமாக.

"அது முடியாது மிஸ்," என்றான் இளையவன். "அது தானே திருட்டுக்கு முக்கியமான சாட்சியம். வேண்டுமானால் அதற்கு ஒரு ரசீது தருகிறோம்."

"எனக்கு ரசீது தேவையில்லை. நகைகள்தான் வேண்டும்."

"ஸாரி, அதைக் கொடுப்பதற்கில்லை," என்றான் மூத்தவன்.

அவர்கள் உள்ளே செல்லும் கேட்டை அடைந்து விட்டார்கள். மூத்தவன் அங்கிருந்த விமான நிலைய ஊழி யரிடம் தன் டிக்கெட்டைக் கொடுத்து விட்டான்.

ட்ரேஸி தவித்தாள். என்ன செய்வதென்று சுற்றுமுற்றும் பார்த்தாள்.

அருகில் ஒரு போலீஸ்காரர் நிற்பது தெரிந்தது. "சார்! சார்!" என்று கூப்பிட்டாள் அவரை.

இருவரும் திடுக்கிட்டுப் போய் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

மூத்தவன் அடிக் குரலில் அதட்டலாக, "ஏய்! உன் மனசில் என்ன உத்தேசம்? போலீஸ் வந்தால் நாம் மூன்று பேருமே ஜெயிலுக்குப் போக வேண்டியதுதான்!" என்றான்.

அதற்குள் போலீஸ்காரர் அவர்களிடம் வந்துவிட்டார். "என்ன மிஸ், ஏதாவது தகராறா?"

"தகராறா? சே, சே! தகராறு எதுவுமில்லை," என்று ட்ரேஸி புன்னகையுடன் சொன்னாள்: "இந்த இரண்டு பேரும் அற்புதமான ஜென்டில்மேன்கள், கொஞ்சம் முன்பு நான் என் நகைப் பெட்டியை எங்கோ தொலைத்து விட்டுத் தவித்தேன். போலீஸுக்குப் போய்ப் புகார் பண்ண வேண்டும் என்று எண்ணியிருந்த சமயம், இவர்கள் எப்படியோ அதைத் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு வந்து தந்திருக்கிறார்கள்."

ட்ரேஸி என்ன சொல்ல வருகிறாள்? இருவருக்கும் புரியவில்லை. கலவரத்துடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

ட்ரேஸி தொடர்ந்தாள்:

"நான் அந்த நகைகளை இனி மேலாவது பத்திரமாய் எடுத்துக் கொண்டு போக வேண்டுமே என்று இவர்களுக்குக் கவலை. நீங்கள் எனக்கு டாக்ஸி வரை துணைக்கு வருவீர்கள் என்றார்கள். உங்களுக்கு ஒன்றும் சிரமம் இல்லையே?"

"சே சே! இதிலென்ன சிரமம்? சந்தோஷமாய்த் துணை வருகிறேன்," என்றார் போலீஸ்காரர்.

அந்த இருவரையும் நோக்கித் திரும்பினாள் ட்ரேஸி. "அப்புறம் என்ன? இனிமேல் பயப்படாமல் நகைப்பெட்டியை என்னிடம் கொடுக்கலாம். இந்தப் போலீஸ்காரர் தங்கமான மனிதர். என்னை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்வார்."

மூத்த ஆள், "எதற்கும் வந்து... நாங்களே..." என்று ஏதோ சொல்ல முயன்றான்.

"வேண்டாம். வேண்டாம்," என்றாள் ட்ரேஸி. "நீங்கள் விமானத்தைப் பிடிக்க வேண்டியதுதான் முக்கியம். சீக்கிரம் போங்கள்!"

அந்த இருவரும் போலீஸ்காரரைப் பார்த்தார்கள். ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். வேறு வழியில்லை என்று தெளிவாகப் புரியலாயிற்று. மூத்தவன் வேண்டா வெறுப்பாய்த் தன் பையிலிருந்த அந்த நகைப் பெட்டியை வெளியே எடுத்தான்.

"ஆ! இதுதான்," என்று சொல்லி அவனிடமிருந்து அதை அவசரமாய் வாங்கிக் கொண்டாள். திறந்து, உள்ளே பார்த்தாள். "அப்பாடா! எல்லா நகைகளும் சரியா யிருக்கிறது."

மூத்த பேர்வழி கடைசியாய் ஒரு முயற்சி பண்ணிப் பார்த்தான். "நாங்கள் வேண்டுமானால் உங்களுக்காக அதைப் பத்திரமாக வைத்திருக்கிறோமே!"

"தாங்க்ஸ், அதற்கு அவசியமில்லை," என்றாள் ட்ரேஸி உற்சாகமான குரலில். தன் கைப்பையைத் திறந்து நகைப் பெட்டியை அதற்குள் பத்திரப்படுத்திக் கொண்டாள். இரண்டு ஐந்து டாலர் நோட்டுக்களை எடுத்து ஒவ்வொரு வரிடமும் ஒவ்வொன்று கொடுத்தாள். நீங்கள் செய்த உதவிக்கு என்னுடைய சிறு அன்பளிப்பு."

எல்லாப் பயணிகளும் கேட்டைத் தாண்டி உள்ளே போய்விட்டார்கள். ஒரு விமான நிலைய ஊழியர் அந்த இருவரையும் அணுகி, "கடைசி முறையாகக் கூப்பிட்டு விட்டார்கள், சார். போய் ஏறிக் கொள்ளுங்கள்," என்றார்.

போலீஸ்காரர் துணைக்கு வர ட்ரேஸி புறப்பட்டாள். "மறுபடியும் உங்களுக்கு நன்றி சார். இந்தக் காலத்தில் உங்களைப் போன்ற நாணயமான பேர்கள் எங்கே இருக்கிறார்கள்!"

ட்ரேஸியை ஏமாற்ற முயன்று தோல்வியடைந்த இருவரும் விமானத்தில் சென்று கொண்டிருந்தார்கள்.

இளையவனின் அசல் பெயர் ஜெஃப். மூத்தவனின் அசல் பெயர் ஹிக்கின்ஸ்.

ஜெஃப் கைக்குட்டையை எடுத்துத் தன் கண்களைத் துடைத்துக் கொண்டிருந்தான். அவன் தோள்கள். மேலும் கீழுமாகக் குலுங்கிக் கொண்டிருந்தன.

பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஹிக்கின்ஸ் அவனை ஆச்சரி யத்துடன் பார்த்தான். "ஏய், பணம் போனால் போகட்டும். அதற்கு ஏன் இப்படி அழுகிறாய்?"

கன்னங்களில் கண்ணீர் வழிய ஜெஃப் அவனைத் திரும்பிப் பார்த்தான். அப்போதுதான் ஹிக்கின்ஸுக்குத் தெரிந்தது ஜெஃப் அழவில்லை, விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருக்கிறான் என்று.

கோபத்துடன் "ஏய்! நாம் ஏமாந்தது ஒன்றும் சிரிக்கக் கூடிய விஷயமில்லை!" என்றான்.

ஆனால் நினைத்து நினைத்துச் சிரிக்கக் கூடிய விஷயமாகத் தான் இருந்தது ஜெஃபுக்கு. விமான நிலையத்தில் என்ன சாமர்த்தியமாக மடக்கி விட்டாள் நம்மை! மோசடிக்காரனுக்கு ஏற்ற மோசடிக்காரி! இவளையா கற்றுக்குட்டி என்றான் மார்கன்!

ட்ரேஸியை மிரட்டி நகைகளைப் பறிக்கும்படி அவனையும் ஹிக்கின்ஸையும் ஏற்பாடு செய்தவன் நகை வியாபாரி மார்கன் தான். அவளைச் சுலபமாக மடக்கி விடமுடியும் என்று சொல்லியிருந்தான்.

கற்றுக் குட்டியே இப்படி இருந்தால், மோசடியையே தொழிலாய்க் கொண்டிருந்தால் எப்படி இருப்பாளோ!

'ட்ரேஸி கெட்டிக்காரி மட்டுமல்ல, நல்ல அழகியும்கூட,' என்று எண்ணிக் கொண்டான் ஜெஃப்.

ஏமாற்று வேலைகளில் தன்னை மிஞ்ச ஆள் கிடையாது என்று இதுவரை அவன் நினைத்திருந்தான். இப்போது வல்லவனுக்கு ஒரு வல்லவள் வந்துவிட்டாளே!

ஜெஃப்பின் வாழ்க்கை ரொம்பச் சுவாரஸ்யமானது.

அவனுக்குப் பதினாலு வயது நடக்கையில் அவன் அம்மா இறந்தாள். அவன் அப்பா ஒரு பதினெட்டு வயது நடனக்காரியைக் கல்யாணம் செய்து கொண்டார். ஒரு நாள் அப்பா வெளியே போயிருந்தபோது அந்த நடனக்காரி அவனிடம் தப்பாக நடந்து கொள்ள முயலவே வீட்டை விட்டு ஓட்டம் பிடித்தான்.

ஜெஃப்பின் சிற்றப்பா, ஊர் ஊராகப் போகும் ஒரு தெருக்கூத்துக் கோஷ்டி வைத்திருந்தார். ஜெஃப் கொஞ்ச

நாள் அவருடன் இருந்த பிறகு, ஒரு பணக்காரிக்குச் சொந்த மான உல்லாசக் கப்பலில் வேலைக்குச் சேர்ந்தான்.

அந்தப் பணக்காரியின் பெயர் ஹாலண்டர். ஏற்கெனவே பலமுறை மணந்து விவாகரத்து செய்து கொண்டவள். ஜெஃபின் இளமையிலும் அழகிலும் மயங்கி அவனை மணந்து கொண்டாள்.

ஹாலண்டரின் தம்பி பட்ஜ் என்பவன் பல மோசடிக் கம்பெனிகளை நடத்தி வந்தான். அதில் ஜெஃப்பை ஒரு கூட்டாளியாகச் சேர்த்து வைத்தாள் ஹாலண்டர்.

ஜனங்களை ஏமாற்றும் பல பொருள்களை அவர்கள் தயாரித்து விற்பனை செய்து கொள்ளை லாப மடிப்பது ஜெஃபுக் குத் தெரிந்தது. ஆனால் ஹாலண்டரின் காதலைப் பெற்றிருக்கி றோம் என்ற ஆறுதலில் பொறுமையுடன் இருந்து வந்தான்.

அந்த ஆறுதலிலும் மண் விழுந்தது.

ஒரு நாள், ஜெஃப் இல்லையென்று நினைத்து பட்ஜின் கூட்டாளிகள் ஹாலண்டரைப் பற்றி மட்டமாகப் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.. அவளுக்குப் பல ரகசியக் காதலர்கள் இருப்பதையும் ஜெஃபின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு அவள் துரோகம் செய்து கொண்டிருப்பதும் அவர்கள் பேச்சிலிருந்து தெரிந்தது.

ஜெஃப்பின் ரத்தம் கொதித்தது.

கண்ணியமான வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பதாக அவன் நினைத்திருக்க, ஊரே அவன் முதுகுக்குப் பின்னே சிரித்துக் கொண்டிருக்கிறது.!

அந்தக் கணமே பெட்டி படுக்கையுடன் வெளியேறி விடவேண்டும் என்று ஜெஃபுக்கு ஆத்திரம் ஏற்பட்டது. பிறகு அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டான்.

நம்மை ஏமாற்றிய இந்த அயோக்கியர்களை நாமும் ஏமாற்ற வேண்டும்!

மனத்துக்குள் ஒரு திட்டம் போட்டுக் கொண்டான்.

அடுத்த வாரத்திலிருந்து வேலையில் இறங்கினான்.

# 38

தனக்குத் துரோகம் செய்த மனைவி ஹாலண்டரையும் அவள் சகோதரன் பட்ஜையும் பழி வாங்குவது என்று தீர் மானித்து அதற்கான திட்டத்தில் இறங்கியிருந்தான் அவன்.

அன்று பட்ஜுடனும் அவன் கூட்டாளிகளுடனும் ஓட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது

"கம்ப்யூட்டர்களை வைத்துப் பலவிதமான மோசடிகள் நடக்கிறதாமே, உங்களுக்கு அதைப்பற்றி ஏதாவது தெரியுமா?" என்று ஜெஃப் கேட்டான்.

பட்ஜின் கூட்டாளிகளில் ஒருவன் சிரித்தான். "ஏன், நீயும் ஒரு மோசடி பண்ணிப் பார்க்கப் போகிறாயா?"

எல்லாருமே சிரித்தார்கள்.

"நான் சீரியஸாகவே கேட்கிறேன்," என்றான் ஜெஃப். "கம்ப்யூட்டரில் இருக்கும் தகவல்களைத் திருடி, பாங்கிலும் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளிலும் மோசடி செய்கிறார்களாம். கோடிக்கணக்கான டாலர் கொள்ளையடிக்கிறார்களாம்."

"எங்களுக்கென்ன தெரியும் அதைப் பற்றி?" என்று பட்ஜ் முணு முணுத்தான்.

"என்னிடம் ஒரு ஆள் வந்தான். எந்த மோசடியும் செய்ய முடியாத ஒரு கம்ப்யூட்டரை அவன் கண்டு பிடித்திருக் கிறானாம்."

"அந்த ஆளைத் தீர்த்துக் கட்டப் போகிறாயாக்கும்?" பட்ஜின் கூட்டாளியொருவன் கிண்டல் பண்ணினான்.

"அதுதான் இல்லை. அந்த மாதிரி கம்ப்யூட்டர்களை உற்பத்தி செய்ய அவனிடம் பணம் இல்லை. நான் உதவி செய்யலாம் என்று பார்க்கிறேன். அதற்காகத்தான் கேட்டேன். உங்களுக்கு யாருக்காவது கம்ப்யூட்டர் சமாசாரம் தெரியுமா என்று."

"அது தெரியாது. ஆனால் இந்த மாதிரி பண உதவி செய்கிறேன் என்று கிளம்புகிற பேர்வழிகள் சுத்த முட்டாள் கள் என்று தெரியும்," என்று பட்ஜ் சொல்ல, மறுபடியும் அங்கே சிரிப்பு வெடித்தது.

ஜெஃப் எதுவும் பேசவில்லை. இரண்டு நாள் கழித்து ஓட்டலில் சாப்பிடப் போனபோது, பட்ஜிடம் சொன்னான்: "ஸாரி, இன்று நான் உங்களுடன் சேர்ந்து சாப்பிடுவதற் கில்லை. ஒரு நண்பரைச் சந்திக்கப் போக வேண்டும்."

ஓட்டலில் வேறொரு மேஜைக்குப் போய் உட்கார்ந்து கொண்டான் ஜெஃப். அவர்கள் அவனைக் கிண்டல் பண்ணிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

தலை நரைத்து, சற்றுக் கூனலாக இருந்த ஒருவர் ஓட்டலுக்குள் நுழைந்தார். ஓட்டல் சிப்பந்தி அவரை ஜெஃபின் மேஜைக்கு அழைத்துச் சென்றான். இருவரும்பேசிக் கொண்டிருப்பது பட்ஜுக்குத் தெரிந்தது. அதைக் கண்டதும் "அட! அந்த ஆள் புரொபசர் ஆக்கர்மேன்!" பட்ஜின் தோழன் ஒருவன் வியப்புத் தெரிவித்தான்.

"புரொபசர் ஆக்கர்மேனா? யார் அவர்?"

"நீ வியாபாரப் பேப்பர்களைத் தவிர எதுவும் படிப்பதில்லை! தேசிய விஞ்ஞானக் குழுவின் சேர்மன் அவர். மாபெரும் விஞ்ஞானி. இரண்டு மாதம் முந்தி டைம் பத்திரிகை யில் இவர் படத்தை அட்டையில் போட்டிருந்தார்களாக்கும்!

"அவ்வளவு பெரிய விஞ்ஞானிக்கும் ஜெஃபுக்கும் என்ன சம்பந்தம்?"

சாப்பிட்டுக்கொண்டே ஜெஃபும் புரொபசரும் ரொம்பத் தீவிரமாகப் பேசிக் கெண்டிருந்தார்கள். அப்படி என்னதான் பேசுகிறார்கள்? பட்ஜுக்கும் அவன் சினேகிதர்களுக்கும் இருப்பே கொள்ளவில்லை.

ஒரு வழியாகப் புரொபசர் புறப்பட்டுச் சென்றார். ஜெஃபைத் தன்னருகே கூப்பிட்டான் பட்ஜ்.

"என்ன ஜெஃப், யார் அந்த ஆள்?"

*ஜெஃப் சிறிது விழித்தான். "அந்தப் புரொபசரைக் கேட்கிறாயா?"*

"ஆமாம். இரண்டு பேரும் அப்படி என்னதான் பேசிக் கொண்டிருந்தீர்கள்?"

*"ஓ... அதுவா... அது வந்து..."*

எதையோ அவன் மறைக்க முயலுகிறான் என்று பட்ஜுக்கும் அவன் தோழர்களுக்கும் தோன்றியது.

*"நான்... அவரைப் பற்றி ஒரு புத்தகம் எழுதலாம் என்று நினைத்திருக்கிறேன்... ரொம்பச் சுவாரசியமான மனிதர்..."*

*"நீ எழுத்தாளரா என்ன? எனக்குத் தெரியாதே?"*

*"எழுதிப் பார்க்கலாமே என்று ஒரு ஆசை,"* என்றான் ஜெஃப்.

மூன்று நாள் சென்றது.

அன்றைக்கும் ஜெஃப்புக்கு ஓட்டலில் ஒரு விருந்தாளி வந்திருந்தார். இருவரும் பேசியபடி சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

இந்த முறை வந்தவரை பட்ஜுக்குத் தெரியும்.

"அட! அவர்பெயர் ஜாரெட் இன்ட்டர்நேஷனல் கம்ப்யூட்டர் கம்பெனியின் சேர்மன். அவரிடம் ஜெஃப்புக்கு என்ன வேலை?" என்று திகைத்தான்.

ஜெஃப்பும் அவனுடைய விருந்தாளியும் ரொம்ப நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். வெகு சீரியஸான, வெகு தீவிர மான சம்பாஷணை.

ஜாரெட் விடை பெற்றுச் சென்றதும் ஜெஃப்பிடம் போனான் பட்ஜ்.

"ஜெஃப் கண்ணா, உனக்கும் அந்த ஜாரெட்டுக்கும் என்ன சம்பந்தம்?"

"சே, சே! ஒன்றுமில்லை!" சட்டெனப் பதிலளித்தான் ஜெஃப். "சும்மாதான்... அரட்டை..."

சொல்லிவிட்டு நகரப் போனவனைத் தடுத்து நிறுத்தினான் பட்ஜ்.

"என்கிட்டே கதை விடாதே கண்ணு. ஜாரெட் மகா பெரிய புள்ளி. ரொம்ப பிஸியான ஆள். அப்படிப் பட்டவர் சும்மா உன்னோடு அரட்டை அடித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பாரா?"

"வந்து... அதாவது, ஜாரெட் தபால் தலைகள் சேகரிக்கிறார். எனக்குத் தெரிந்த ஒருவரிடம் அபூர்வமான ஒரு ஸ்டாம்ப் இருக்கிறது. அதைப் பற்றி அவரிடம் சொன்னேன். அதுதான் உண்மை."

பட்ஜ் பல்லைக் கடித்துக் கொண்டான்.

தபால் தலையாவது கிபால் தலையாவது! உண்மையாம் உண்மை! ஜெஃப் அளக்கிறான். நிச்சயம்...

இதற்கு அடுத்த வாரம்.

இம்முறை சார்லஸ் என்ற ஒரு பெரும் தொழிலதிபருடன் ஒட்டலில் பேசிக்கொண்டிருந்தான் ஜெஃப். இருவரும் தலையோடு தலை சாய்த்து ஏதோ விவாதித்துக் கொண்டிருந்தார்கள்.

"என்ன பட்ஜ், உன் தோழன் பெரிய பெரிய ஆட்களுடனேயே சுற்றுகிறானே?" என்று சீண்டினான் தோழன் ஒருவன். "என்னமோ விவகாரம் நடக்கிறது என்னவாயிருக்கும்?"

பட்ஜுக்கு எரிச்சல். "எனக்கும் அதுதான் தெரியவில்லை. ஆனால் கண்டுபிடிக்காமல் விடமாட்டேன். ஜாரெட்டும் சார்லஸும் சம்பந்தப் பட்டிருக்கிறார்கள் என்றால் எக்கச்சக்கமாய்ப் பணம் புரளுகிற சமாசாரம் என்று அர்த்தம்!"

சார்லஸ் எழுந்தார். ரொம்ப உற்சாகமாய் ஜெஃபின் கையைக் குலுக்கினார். புறப்பட்டுச் சென்றார்.

பட்ஜுக்கு மண்டை வெடித்து விடும் போலாகி விட்டது. ஒன்றும் நடவாத மாதிரி அவனைத் தாண்டிச் செல்லும் ஜெஃபின் கையைப் பிடித்து நிறுத்தினான். "ஜெஃப், உட்காரப்பா, உன்னுடன் கொஞ்ச நேரம் பேச வேண்டும்."

"நான் ஆபீசுக்குப் போகணும் வேலை இருக்கிறது."

"சரிதாம்பா தெரியும். நீ என் ஆபீசில்தான் வேலை பார்க்கிறாய். உட்கார்."

ஜெஃப் உட்கார்ந்தான்.

"கொஞ்சம் முந்தி உன்னுடன் பேசிக் கொண்டிருந்தாரே, அந்த ஆசாமி யார்?"

ஜெஃப் தயங்கினான். "ஒன்றும் பெரிய விஷயமில்லை... அவர் எனக்குப் பழைய சினேகிதர்..."

"யார்? சார்லஸா? உனக்குப் பழைய சினேகிதரா?"

"ஆமாம்...? ஒருவகையில் சினேகிதர்"

"ஓகோ... நீயும் உன் பழைய சினேகிதரும் அப்படி என்ன தான் பேசிட்டிருந்தீங்க, கண்ணு?"

"வந்து... கார்களைப் பற்றி. பழங்காலத்துக் கார் என்றால் சார்லஸுக்குப் பிடிக்கும்... எனக்குத் தெரிந்த இடத்தில் ரொம்பப் பழைய கார் ஒன்று இருக்கிறது..."

"ஏய்! நிறுத்து உன் கட்டுப் கதையை!" சீறினான் பட்ஜ். "தபால் தலை, கார், வாழ்க்கைச் சரித்திரம்- எல்லாமே வெறும் அளப்பு! ரகசியமாய் வேறு ஏதோ வேலை செய்கிறாய். என்ன அது? உண்மையைச் சொல்லு..."

"அப்படி எதுவுமில்லை..."

"ஏதோ பண சமாசாரம்..."

"சே, சே! கிடையாது!" அவசரமாக மறுத்தான் ஜெஃப்.

பட்ஜ் அன்புடன் அவன் தோளைத் தட்டினான். "இதோ பார் ஜெஃப். நீ என் சகோதரியின் கணவன். நாமெல்லாம் ஒரே குடும்பம். மறந்துவிட்டாயா?" ஜெஃப்பை

இறுக்க அணைத்துக் கொண்டான். "நீ கொஞ்ச நாள் முன்பு சொன்னாயே, மோசடியே செய்ய முடியாத கம்ப்யூட்டரை யாரோ கண்டுபிடித்திருப்பதாக அதைப் பற்றித் தானே இவர்களுடன் பேசிக் கொண்டிருக்கிறாய்? என்ன, நான் சொல்றது சரி தானே?"

ஜெஃப் திருதிருவென்று விழிப்பதைப் பார்த்ததும் தங்கள் ஊகம் சரிதான் என்று பட்ஜும் அவன் சிநேகிதர்களும் அகமகிழ்ந்தார்கள்.

"வந்து... ஆமாம்,"

அப்பாடா! இவனிடம் உண்மையை வரவழைக்க எத்தனை பாடு!

"இந்தக் கம்ப்யூட்டர் சமாசாரத்தில் புரொபசர் ஆக்கர்மேன் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்று நீ ஏன் சொல்லவில்லை, ஜெஃப்?"

"உங்களுக்கு அதிலே அக்கறை இருக்காது என்று நினைத்தேன்..."

"அசடு, அசடு! உனக்கு நிதி உதவி தேவை என்றால் எங்களைப் போன்ற சிநேகிதர்களிடம் தானே வந்து சொல்ல வேண்டும்?"

"புரொபசருக்கும் எனக்கும் நிதி உதவி எதுவும் தேவையில்லை." என்றான் ஜெஃப். "ஜாரெட்டும் சார்லஸும் கொடுப்பதாக..."

"ஐயையோ! அந்த இரண்டு பேரும் பயங்கர முதலைகள்! உன்னை உயிரோடு விழுங்கி விடுவான்கள்," என்றான் பட்ஜின் தோழர்களில் ஒருவன்.

இன்னொருவனும் அதே தொனியில் "ஜெஃப், எங்களிடம் உதவி கேட்பதில் என்னப்பா உனக்குத் தயக்கம்?" என்றான் கனிவோடு.

"அது சரி, ஆனால் எல்லா ஏற்பாடும் முடிந்து விட்டதே?"

"இதோ பார், எதிலாவது கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கிறாயா?"

"இல்லை. ஆனால் வாக்குக் கொடுத்து விட்டேன்."

"வாயால்தானே சொல்லியிருக்கிறாய்? அப்படியானால் ஒன்றும் கெட்டுவிடவில்லை. ஜெஃப் பையா, பிஸினஸ் என்றால் மணிக்கு மணி மனசு மாறலாம் அது உனக்குத் தெரியவில்லையே?"

ஜெஃப் சிணுங்கினான். "இந்த விஷயங்களை யெல்லாம் நான் உங்களிடம் சொன்னதே தப்பு... புரொபசர் ஆக்கர்மேன் தன் பெயரே வெளியே வரக் கூடாதென்று சொல்லியிருக்கிறார். அவர் கவர்மெண்ட் வேலையில் இருப்பதால்..."

"புரிகிறது, புரிகிறது," என்றான் பட்ஜின் தோழன். "அந்தக் கம்ப்யூட்டர் சரியாய் வேலை செய்யும் என்று புரெபாபசர் சொல்கிறாரா?"

"சொல்வதா? சத்தியம் பண்ணுகிறார்."

"அவர் அவ்வளவு நிச்சயமாயச் சொல்கிறாரென்றால் நாமும் உறுதியாய் அதில் இறங்கலாம். என்ன சொல் கிறீர்கள்?" தன் சினேகிதர்களைப் பார்த்துக்கேட்டான் பட்ஜ்.

ஆமாம் என்று அவர்கள் கோரஸாகத் தலை யாட்டினார்கள்.

"இருங்கள், இருங்கள்," என்றான் ஜெஃப். "நான் விஞ்ஞானி இல்லை, ஆகவே என்னால் எந்தக் கியாரண்டியும் தர முடியாது. ஒரு வேளை இது பைசா பிரயோசனமில்லாத சமாசாரமாக ஆனாலும் ஆகும்."

"இருக்கட்டும், இருக்கட்டும். இந்தக் கம்ப்யூட்டர் நன்றாக வருகிறது என்று வைத்துக் கொள். அதை உற்பத்தி செய்ய எவ்வளவு பணம் தேவைப்படும்?"

"பட்ஜ், இந்தக் கம்ப்யூட்டர் உலகம் பூரா விற்கக் கூடியது. நான் நீ என்று விழுந்து விழுந்து வாங்கிக் கொள்வார்கள்.

ஆகவே அதன் மதிப்பை என்னால் நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை."

"இருக்கட்டும், ஆரம்பத்தில் எவ்வளவு பண உதவி தேவைப்படும் என்கிறாய்?"

"பூராவுக்குமாய்ச் சேர்த்து இருபது லட்சம் டாலர் தேவைப்படும். ஆனால் முதலில் இரண்டரை லட்சம் இருந்தால் போதும்," என்றான் ஜெஃப்.

## 39

மோசடியே செய்ய முடியாத புதுவகைக் கம்ப்யூட்டரைத் தயாரித்து விற்பனை செய்யும் உரிமைக்காக இரண்டரை லட்சம் டாலர் தரவேண்டும் என்று ஜெஃப் சொன்னதும்

பட்ஜூம் அவன் சகாக்களும் மகா குஷியானார்கள்.

"அவ்வளவுதானே... இதற்குப் போயா சார்லஸையும் ஜாரெட்டையும் பண உதவி கேட்டாய்? சுண்டைக்காய்க் காசு! நாமே ஏற்பாடு செய்து கொள்ளலாம். இந்தக் கம்ப்யூட்டர் உரிமை தயாரிப்பு சமாசாரத்தை நம் குடும்பத்துக்குள்ளேயே வைத்துக் கொள்ளலாம். என்ன நண்பர்களே, நான் சொல்வது சரிதானே?" என்று பட்ஜ் கேட்டதும் சரிதான் சரிதான் என்று அவர்கள் தலையாட்டினார்கள்.

பட்ஜ் கையைச் சொடுக்கினான். ஓட்டல் நிர்வாகியொருவர் விரைந்து வந்தார்.

"மிஸ்டர் ஜெஃபுக்கு ஒரு காகிதமும் பேனாவும் கொண்டு வாருங்கள்."

மறுகணமே காகிதமும் பேனாவும் வந்து சேர்ந்தன.

"தம்மாத்துண்டு விஷயம். இதை இங்கேயே முடித்து விடலாம்," என்றான் பட்ஜ். "அந்தக் கம்ப்யூட்டர் தயாரிக்கும் உரிமைகளை எங்களுக்கு விறறு விட்டதாக இதில் எழுது.

*நாங்கள் எல்லாரும் கையெழுத்துப் போடுகிறோம். நாளைக் காலையில் உன் கைக்கு இரண்டரை லட்சம் வரும். என்ன? சம்மதம் தானே?"*

ஜெஃப் தலையைச் சொறிந்து கொண்டான். "பட்ஜ்... நான் சார்லஸுக்கு வாக்களித்திருக்கிறேன்..."

"சார்லஸ் எக்கேடோ கெட்டுப் போகட்டும். உனக் கென்ன? நீ கல்யாணம் செய்திட்டிருக்கிறது என் அக்கா வையா, சார்லஸின் அக்காவையா? சொல்வதை எழுது!"

"இந்தக் கம்ப்யூட்டரைப் பற்றி இன்னும் அரசாங்கத் திடம் அனுமதி...."

"அதெல்லாம் அப்புறம்! இப்ப நீ எழுதப் போகிறாயா இல்லையா?" ஜெஃப்பின் கையில் பேனாவைத் திணித்தான் பட்ஜ்.

வேண்டா வெறுப்பாக ஜெஃப் எழுதத் தொடங்கினான்.

"SUCABA என்ற கணிதக் கம்ப்யூட்டர் தயாரிக்கும் என் சகல உரிமைகளையும் இதன் மூலம் நான் பட்ஜுக்கும் அவர் தோழர்களுக்கும் அளிக்கிறேன். இதன் மொத்தத் தொகை இருபது லட்சம் டாலர். இரண்டரை லட்சம் முன்பணமாகப் பெற்றுக் கொள்கிறேன். SUCABA கடுமையாகப் பரிசோதனை செய்யப்பட்டது. செலவில்லாமல் தயாரிக்கக் கூடியது. தொல்லை தராதது. தற்சமயம் மார்க்கெட்டில் உள்ள வேறெந்தக் கம்ப்யூட்டரைக் காட்டிலும் SUCABA குறைந்த மின்சாரத்தில் இயங்கக் கூடியது. பத்து வருட காலத்துக்கு எந்த உதிரிப் பாகமும் வாங்கத் தேவையில்லாத அளவுக்கு SUCABAவிற்குக் கியாரண்டி உண்டு."

ஜெஃப் எழுத எழுத, பின்னால் நின்று அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

பட்ஜின் தோழனொருவன் உற்சாகமாக, "அடேங்கப்பா! பத்து வருஷ கியாரண்டியா? எந்தக் கம்ப்யூட்டருக்குமே கிடையாது!" என்று கூவினான்.

ஜெஃப் தொடர்ந்து எழுதலானான்: "இந்தக் கம்ப் யூட்டரை நானோ புரொபசர் ஆக்கர்மேனோ இன்னும் அரசாங்கத்திடம் உரிமைப் பதிவு செய்து கொள்ளவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்..."

"அதைப் பற்றி நீ கவலைப் படாதே... அதற்கெல்லாம் என்னிடம் ஆள் இருக்கிறது."

ஜெஃப் மேலும் எழுதினான்: "ஒருவேளை இந்த SUCABA உபயோகமற்றதாக ஆனாலும் ஆகக் கூடும். இந்த உரிமையை வாங்கிக் கொள்கிறவர்களிடம் அதை நன்கு விளக்கி விட்டேன். அப்படி நேர்ந்தால் நானோ புரொபசர் ஆக்கர் மேனோ அதற்குப் பொறுப்பாளர் அல்ல."

எழுதி முடித்ததும் கையெழுத்திட்டு பட்ஜிடம் கொடுத்தான் ஜெஃப். "சரிதானா, பார்த்துக்கொள்."

"பத்து வருஷ காரண்டி என்று எழுதியிருக்கிறாயே? அது நிச்சயம் தானா?"

"சர்வ நிச்சயம்," என்றான் ஜெஃப். "இருங்கள். எனக்கும் ஒரு நகல் எடுத்துக் கொள்கிறேன்." கவனமாக இன்னொரு நகல் எழுதினான்.

அதில் பட்ஜும் அவனுடைய தோழர்களும் கையெழுத் துப் போட்டுக் கொடுத்தார்கள்.

பட்ஜின் முகம் பெருமையில் ஜொலித்தது. "ஜாரெட்டுக் கும் சார்லஸுக்கும் முகத்தில் அசடு வழியப் போகிறது. இந்த வியாபாரத்தில் அவர்களைக் கவிழ்த்து விட்டோமே!"

அவனுடைய சினேகிதர்கள் ஆனந்தத்துடன் சிரித் தார்கள்.

மறுநாள் காலை ஜெஃப்பிடம் இரண்டரை லட்சம் டாலருக்குச் செக் கொடுத்தான் பட்ஜ்.

"கம்ப்யூட்டர் எப்போது வரும்?"

"மத்தியானம் ஓட்டலுக்குக் கொண்டு வரும்படி ஏற்பாடு பண்ணியிருக்கிறேன். நாம் எல்லாரும் சேர்ந்து அதைப் பெற்றுக் கொண்டால் நன்றாயிருக்கும் என்று தோன்றியது."

*பட்ஜ் அவன் தோளைச் செல்லமாய்த் தட்டினான். "ஜெஃப், நீ ரொம்ப கெட்டிக்காரன். சரி, பகல் சாப்பாட்டின் போது சந்திப்போம்."*

*ஓட்டலில் பட்ஜும் அவன் தோழர்களும் காத்திருந் தார்கள்.*

*சரியாய் மணி பன்னிரண்டு அடித்தது.*

*ஓர் ஆள் ஓர் அட்டைப் பெட்டியை எடுத்துக் கொண்டு அவர்களை நோக்கி வந்தான்.*

*"பரவாயில்லையே! கையில் தூக்கிக் கொண்டு போகும் அளவுக்குச் சின்னதாய்க் கூட இருக்கிறதே!" என்று பிரமித்தான் பட்ஜின் கூட்டாளிகளில் ஒருவன்.*

*வந்தவன் பெட்டியை அவர்கள் முன் வைத்துவிட்டுப் போய் விட்டான்.*

*"ஜெஃப் வந்தபிறகு பிரிக்கலாமா?" என்றான் பட்ஜின் இன்னொரு கூட்டாளி.*

*"எதற்காக? இது இப்போது நமக்குத்தானே சொந்தம்?" பட்ஜ் பரபரவென்று பெட்டியின் வாயைப் பிய்த்து எறிந்தான்.*

*உள்ளே ஏகப்பட்ட வைக்கோல் அடைக்கப்பட்டி ருந்தது. எச்சரிக்கையுடன், பயபக்தியுடன் வைக்கோல்களை மெதுவே அகற்றினான்.*

*நடுவிலிருந்த பொருளை எடுத்தான்.*

*அனைவரும் அதைப் பார்த்து விழித்தார்கள்.*

*ஓர் அடி நீளமும் ஓர் அடி அகலமும் கொண்ட ஒரு சதுரமான சட்டம் அது. அதன் குறுக்கும் நெடுக்கும் கம்பிகள் இருந்தன. கம்பியில் நிறையப் பிளாஸ்டிக் மணிகள் கோக்கப் பட்டிருந்தன.*

*நீண்ட நேரம் அங்கே பயங்கர மௌனம் நிலவியது.*

*இறுதியில் ஒரு கூட்டாளி வாயைத் திறந்தான். "என்ன இது?"*

இன்னொரு கூட்டாளி சொன்னான்: "இதை ABACUS என்று சொல்வார்கள். ஒன்று இரண்டு என்று கூட்டுவ தற்காகச் சில ஆசிய நாடுகளில் இதை உபயோகிப்பார்கள்-" என்று சொல்லும்போதே திடீரென அவன் குரல் உரத்தது. முக பாவம் மாறிற்று. "இரு இரு! ABACUS என்பதைத் திருப்பிப் போட்டால் SUCABA! அது தான் ஜெஃப் சொன்ன கம்ப்யூட்டரின் பெயர்!"

"நம்மகிட்டே ஜெஃப் ஜோக் பண்ணுகிறானா என்ன?" இன்னொரு கூட்டாளி அலறினான்.

"அப்படித்தான் தோன்றுகிறது! பட்ஜ், பாங்க்கிற்குச் சொல்லி அந்தச் செக்குக்குப் பணம் தர வேண்டாமென்று உடனே சொல்ல வேண்டும்!"

டெலிபோனுக்கு எல்லாருமே ஓடினார்கள். செக்கைப் பற்றி விசாரித்தார்கள்.

பாங்க் மானேஜர், "தங்கள் செக்தானே? கவலைப்பட வேண்டாம். மிஸ்டர் ஜெஃப் காலையில் பத்திரமாய்ப் பணத்தை வாங்கிக் கொண்டு போய்விட்டார்."

வீட்டுக்கு ஓடினார்கள்.

"ஜெஃப் எங்கே?" என்று வேலைக்காரனை உலுக்கி னார்கள்.

"சூட்கேசுடன் காலையிலேயே கிளம்பிவிட்டார். சார். எங்கோ நீண்ட பயணம் போவதாகச் சொன்னார்," என்றான் வேலைக்காரன்.

அடுத்து புரொபசர் ஆக்கர்மேனைத் தேடினார்கள். சாயந்தரம் தான் அவர் அகப்பட்டார். அவரிடம் கேட்ட போது

"மிஸ்டர் ஜெஃப் உங்கள் சகோதரி கணவனா? ரொம்ப சந்தோஷம். புத்திசாலிப் பையன்," என்றார் புரொபசர்.

"அதிருக்கட்டும். நீங்களும் ஜெஃபும் என்னவோ விவாதித்துக் கொண்டிருந்தீர்களே, எதைப் பற்றி?"

"அதிலே ரகசியம் ஒன்றுமில்லை. என்னைப் பற்றி ஒரு புத்தகம் எழுத வேண்டும் என்றார் ஜெஃப். உலகம் என்னைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியதுஅவசியம் என்பது அவர் கருத்து... அதைப் பற்றித் தான் பேசினோம்..."

அவரை அத்துடன் விட்டுவிட்டுத் தொழிலதிபர் ஜாரெட்டை டெலிபோனில் கூப்பிட்டுக் கேட்டான் பட்ஜ்.

புரொபசர் மாதிரி அவர் இனிமையாகப் பேசவில்லை.

"இதோ பார், இப்படியெல்லாம் துப்பறிந்து கண்டு பிடிக்கலாம்என்று பார்க்காதே. ஜெஃப் சொன்ன மாதிரியான தபால் தலை உலகத்திலேயே ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது. அது தன் கைக்குக் கிடைத்ததும் எனக்கு விற்கிறதாய் ஜெஃப் சொல்லியிருக்கிறார். நீ அனாவசியமாய் மூக்கை நுழைக்காதே."

டொக்கென்று ரிசீவரை வைத்து விட்டார் அவர்.

அடுத்து, தொழிலதிபர் சார்லஸுக்குப் போன் செய்தான் பட்ஜ்.

"யாரைப் பற்றிக் கேட்கிறீங்க? ஜெஃபா? ஆமாம். நான் பழைய கார்கள் சேகரிக்கிறேன். அதைப் பற்றித் தான் ஜெஃபுடன் பேசிக் கொண்டிருந்தேன். 37'ம் வருடத்துக் கார்... நாலு கதவு... அதை ஒருத்தர் விற்கப் போகிறார், வேணுமா என்று ஜெஃப் கேட்டார். நான் சரியென்று..."

இந்தத் தடவை அவர் முடிக்கும்வரை காத்திருக்காமல் பட்ஜே வெறுப்புடன் போனை வைத்து விட்டான்.

ஜெஃபின் தந்திரம் புரிந்தது

புரொபசரிடமும் ஜாரெட்டுடனும் சார்லஸுடனும் என்ன பேசியதாக ஜெஃப் சொன்னானோ, அதைத் தான் நிஜ மாகவே பேசியிருக்கிறான். ஆனால் ஒரு கம்ப்யூட்டர் கருவிக்காகப் பேரம் பண்ணுகிற மாதிரி நடித்து, ரொம்ப சாமர்த்தியமாய் ஏமாற்றியிருக்கிறான்!

எல்லாருமாக அரசாங்க வழக்கறிஞரிடம் சென்றார்கள்.

"இரண்டரை லட்சம்டாலர் கொடுத்து நீங்கள் வாங்கியிருக்கிற பொருள் அரசாங்கத்திடம் உரிமைப் பதிவு பெறவில்லை என்றும், ஒருவேளை அது உபயோகமற்றதாக ஆனாலும் ஆகக்கூடும் என்றும் இதில் எழுதியிருக்கிறது. அதற்குச் சம்மதித்து நீங்களும் கையெழுத்துப் போட்டுத் தந்திருக்கிறீர்கள். அப்புறம் எப்படி அவனைக் குற்றம் சாட்ட முடியும்? அந்த ஜெஃப்பைச் சட்டப்படி நீங்கள் எதுவும் செய்ய முடியாது..." என்றார் அவர்.

ஜெஃப் குஷியாக வேறொரு மாநிலத்தில் குடியேறினான். விவாகரத்தும் பெற்றான்.

அந்தச் சமயத்தில் தான் நகை வியாபாரி மார்கன் அவனுக்குச் சினேகமானார்.

"நீ ஒரு சின்ன வேலை செய்ய வேண்டும், ஜெஃப்," என்றார் மார்கன்.

"சொல்லுங்கள்."

"நியூயார்க்கிலிருந்து ஸெயின்ட் லூயிக்கு ரயிலில் போகிறாள் ட்ரேஸி என்ற ஒரு பெண். அவளிடம் ஏகப்பட்ட நகைகள் இருக்கிறது, அவளை ஏமாற்றி அந்த நகைகளைப் பறிக்க வேண்டும்." என்று ஆரம்பித்து, எல்லா விவரங்களையும் ஜெஃப்புக்குக் கூறினார் மார்கன்.

அதன்படி தான் ஒரு கூட்டாளியைச் சேர்த்துக் கொண்டு ரகசியப் போலீஸார் மாதிரி வந்து ட்ரேஸியை மடக்கினான் ஜெஃப்.

ஆனால் ட்ரேஸி, அவனைத் திரும்ப மடக்கி, நகைப் பெட்டியைத் திரும்ப எடுத்துக்கொண்டு போய் விட்டாள்...!

விமானம் பறந்து கொண்டிருந்தது.

ட்ரேஸியின் சாமர்த்தியத்தை நினைக்க நினைக்க ஜெஃப்புக்குச் சிரிப்பு வந்தது.

பலமுறை அவள் வாழ்க்கையில் தானும், தன் வாழ்க்கையில் அவளும் குறுக்கிடப் போகிறோம் என்பது அன்று அவனுக்குத் தெரியாது.

# 40

ட்ரேஸி நியூயார்க்கிற்குத் திரும்பினாள்.

ஊரை அடைந்ததும் அவள் செய்த முதல் காரியம், மார்கனின் நகைக் கடைக்குச் சென்றதுதான். நகைகளைத் தன்னிடமிருந்து பறிப்பதற்காக ஜெஃபை அமர்த்தியவர் அவர்தான் என்று அவளுக்கு நிச்சயமாகப் புரிந்து விட்டது.

அவளைத் தன் அறைக்கு அழைத்துச் சென்று கதவைச் சாத்திக்கொண்டார் மார்கன். கைகளைத் தேய்த்துக் கொண்டார். முகத்தில் கவலை படர்ந்தது. "என்னம்மா நீ, ரொம்பக் கவலைப்படும்படி பண்ணி விட்டாயே? உனக்காக நான் ஸெயின்ட் லூயி ஸ்டேஷனில் காத்திருந்தேன். நீ வராததால்..."

"நீங்கள் ஸெயிண்ட் லூயிக்கு வந்தீர்களா என்ன? இல்லையே?" அமைதியாகச் சொன்னாள் ட்ரேஸி.

"என்னது! நான் வரவில்லையா? என்ன உளறுகிறாய்?" மார்கனின் கண்கள் படபடத்தன.

"உளறவில்லை. நீங்கள் ஸெயின்ட் லூயி ஸ்டேஷனுக்கு வரவில்லை என்று சரியாய்த்தான் சொல்கிறேன். அங்கே வந்து என்னைச் சந்திக்கும் எண்ணமே உங்களுக்குக் கிடையாது என்று சொல்கிறேன்!"

"இல்லேம்மா. வந்தேனே? உன்னிடம் நகைகளை-"

"நகைகளா! அதையெல்லாம் என்னிடமிருந்து பறிப்பதற்காக இரண்டு ஆள்தான் அனுப்பினீர்களே!"

மார்கனின் முகம் திகைப்பைக் காட்டியது. "எதுவுமே எனக்குப் புரியவில்லை," என்றார்.

"எனக்கும் முதலில் புரியவில்லை. நான் நகைகளைக் கொள்ளையடிக்கப் போகும் ரகசியத்தை உங்கள் ஆபீசில் தான் யாரோ வெளியிட்டிருக்கிறார்கள் என்று நினைத்தேன்.

நீங்கள் தான் வெளியிட்டிருக்கிறீர்கள். என் ரயில் டிக்கெட்டுக்கு நீங்களே ஏற்பாடு செய்திருப்பதாகச் சொன்னீர் கள். ஆகவே என் கம்பார்ட்மெண்ட்டின் எண் என்ன வென்பது உங்களுக்கு மட்டுமே தெரியும். நான் மாறு வேடம் அணிந்திருந்தேன். வேறு பெயர் கொடுத்திருந்தேன். அப்படி யும் கூட என்னை அந்த இரண்டு பேரும் மடக்கியிருக்கிறார் கள். நீங்கள் சொல்லாமல் அவர்களுக்கு எப்படித் தெரியும்?"

மார்கன் ஆச்சரியப்படுகிற மாதிரி நடித்தார்.

"அதாவது, உன்னிடமிருந்த நகைகளை யாரோ கொள்ளையடித்து விட்டார்கள் என்றா சொல்கிறாய்?"

ட்ரேஸி புன்னகை செய்தாள்.

"அவர்களால் கொள்ளையடிக்க முடியவில்லை என்று சொல்கிறேன்."

இப்போது மார்கனின் முகத்தில் நிஜமான ஆச்சரியம் தென்பட்டது. "ஓ, நகைகள் உன்னிடம் தான் இருக்கிறதா?"

"ஆமாம். உங்கள் ஆட்களுக்கு ரொம்ப அவசரமாய் விமானத்தைப் பிடிக்க வேண்டியிருந்தது. அதனால் நகை களை விட்டு விட்டுப் போய் விட்டார்கள்," என்றாள் கிண்டலாக.

அவளை ஒரு நிமிஷம் கூர்ந்து பார்த்தார் மார்கன். பிறகு, "கொஞ்சம் இரு," என்று சொல்லிவிட்டு அடுத்த அறைக்குச் சென்றார்.

ட்ரேஸி சோபாவில் ஹாய்யாகச் சாய்ந்து கொண்டாள்.

பதினைந்து நிமிடம் கழித்து மார்கன் திரும்பி வந்தார். ரொம்பக் கலக்கப்பட்டுப் போனவர் போல அவர் முகம் வெளிறியிருந்தது. "ஏதோ தவறு நேர்ந்திருக்கிறது ட்ரேஸி. பெரிய தவறு. நீ ரொம்பக் கெட்டிக்காரி. இருபத்தையாயிரம் டாலரைப் பாடுபட்டுத்தான் சம்பாதித்திருக்கிறாய். நகை களைக் கொடுத்து, இருபத்தையாயிரம் டாலரை..."

"ஐம்பதாயிரம் டாலர்."

"என்னது!"

"அந்த நகைகளை நான் இரண்டு தடவை திருடி யிருக்கிறேன். ஒரு தடவைக்கு இருபத்தையாயிரம் டாலர் என்று இரண்டு தடவைக்கு ஐம்பதாயிரம் டாலராகிறது மிஸ்டர் மார்கன்."

"முடியாது," என்று கண்டிப்புடன் மறுத்தார் மார்கன். அவர் குரலில் இனிமை மறைந்து கடுகடுப்புத் தென்பட்டது. "அவ்வளவு தொகை தர முடியாது."

"அப்புறம் உங்கள் இஷ்டம்." ட்ரேஸி எழுந்து கொண்டாள். "அந்த நகைகளுக்கு ஐம்பதாயிரம் டாலர் வேறு யாராவது கொடுக்கிறார்களா என்று முயற்சி செய்து பார்க்கிறேன்."

கதவை நோக்கி நடந்தாள் ட்ரேஸி.

மார்கன் தீனமாய்க் கேட்டார்.

"ஐம்பதாயிரம் டாலரா கேட்கிறாய்?"

ட்ரேஸி ஆமென்று தலையசைத்தாள்.

"நகைகளை எங்கே வைத்திருக்கிறாய்?"

"ஸ்டேஷனில் ஒரு லாக்கரில் பத்திரமாக இருக்கிறது. பணத்தை ரொக்கமாகக் கொடுங்கள். ஒரு டாக்ஸி கூப்பிடுங்கள். ஏறி உட்கார்ந்ததும் லாக்கர் சாவியைத் தருகிறேன்."

தோல்வியை ஒப்புக் கொண்டு ஒரு பெருமூச்சு விட்டார்.

"சரி."

"தாங்க் யூ," என்றாள் ட்ரேஸி உற்சாகமாக. "உங்களுடன் பிஸினஸ் செய்ததில் எனக்கு அலாதி சந்தோஷம் மிஸ்டர் மார்கன்."

ரெயினால்ட்ஸ் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி அமர்க்களப் பட்டுக் கொண்டிருந்தது. கோடீசுவரி லூயிஸின் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டதால் அதற்கான நஷ்டஈடு அவர்கள்

தான் தர வேண்டும். அது பற்றி விவாதிப்பதற்காக இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் பெரிய அதிகாரிகள் கூடியிருந்தார்கள்.

அந்த நிறுவனத்தின் துப்பறியும் நிபுணனான கூப்பர் அந்த மீட்டிங்கிற்குத் தாமதமாகவே வந்தான். மீட்டிங் என்றாலே அவனுக்குப் பிடிக்காது.

"இப்பவாவது வந்தாயே?" என்று அவனைக் கோபமாக வரவேற்றார் கம்பெனி அதிபரான ரெயினால்ட்ஸ்.

கூப்பர் பதிலேதும் சொல்லாமல் உட்கார்ந்தான்.

"லூயிஸ் வீட்டில் நடந்த நகைக் கொள்ளை பற்றி உங்கள் எல்லாருக்கும் ஏற்கெனவே சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறேன்," என்றார் ரெயினால்ட்ஸ், எல்லாரையும் நோக்கி. "இப்போது இன்னொரு புதிய பிரசினை. போலீஸ் கமிஷனருக்கு நெருங்கிய உறவாம் அந்த அம்மாள். அதனால் காச்சுமூச்சென்று கத்துகிறார்."

"ஏன், போலீஸ் என்ன செய்கிறதாம்?" என்று ஓர் அதிகாரி கேட்டார்.

"பத்திரிகைக்காரர்களைப் பார்த்தாலே ஒளிந்து கொள்கிறார்கள். பாவம், அவர்கள் முகத்தில் கரி. கொள்ளை நடந்த சமயம், கொள்ளையடித்த பெண்ணை நேருக்கு நேராய்ப் பார்த்திருக்கிறார்கள். அப்படியும் அவளைத் தப்ப விட்டு விட்டார்கள்."

"அதனாலென்ன? அவளை நன்றாக அடையாளம் சொல்ல முடியுமே?"

"அவள் போட்டிருந்த நைட்கவுனைத்தான் அடையாளம் சொல்ல முடியும்!" என்றார் ரெயினால்டஸ் எரிச்சலுடன். "அவள் அழகைப் பார்த்து வாயைப் பிளந்து விட்டார்கள். முகத்தில் கிரீம் தடவிக் கொண்டிருந்தாளாம். முடியில் கிளிப் செருகியிருந்தாளாம். சுமாராக இருபத்தைந்து வயது இருக்குமாம். இதற்கு மேல் நமக்கு எந்தத் தடயமும் இல்லை."

"இருக்கிறது." முதன் முறையாக வாயைத் திறந்தான் கூப்பர்.

அனைவரும் அவனை நோக்கித் திரும்பினார்கள். சிடுசிடுப்புடன் பார்த்தார்கள்.

"என்ன சொல்கிறாய் நீ?" என்றார் ரெயினால்ட்ஸ்.

"நகைகளைத் திருடிய பெண் யார் என்று எனக்குத் தெரியும்," என்றான் கூப்பர் அமைதியாக.

முந்தின தினம் கம்பெனியின் சுற்றறிக்கை கிடைத்ததுமே அவன் வேலையில் இறங்கி விட்டான்.

லாங் ஐலண்டுக்குக் காரில் சென்று கோடீசுவரி லூயிஸின் மாளிகையை ஒரு பார்வை பார்த்தான். காரிலிருந்து இறங்கவேயில்லை. அவனுக்குப் புரிந்து விட்டது.

அக்கம் பக்கத்தில் எந்தக் கட்டடமும் இல்லாமல் தன்னந்தனியாக இருந்தது மாளிகை. அங்கு செல்வதற்குப் பஸ் எதுவும் கிடையாது. ஆகவே திருடன் காரில்தான் வந்திருக்க வேண்டும் என்று கூப்பர் ஊகித்தான்.

இப்போது அந்தத் தகவல்களைக் கூறிவிட்டுத் தொடர்ந்து சொன்னான்: "சொந்தக் காரில் சென்றால் போலீசார் கண்டுபிடித்து விடுவார்கள் என்று திருடன் வாடகைக் கார்தான் எடுத்துச் சென்றிருப்பான். அல்லது ஏதாவது ஒரு காரைத் திருடியிருக்க வேண்டும். கார்களை வாடகைக்கு விடும் கம்பெனிகளில் முதலில் விசாரிக்கத் தீர்மானித்தேன். மன்ஹாட்டன் பகுதியிலிருந்து கார் வாடகைக்கு எடுப்பது சுலபம். ஆகவே அங்கே விசாரித்தேன்..."

ஓர் அதிகாரி பொறுமை இழந்தவராக, "நீ சொல்வதெல்லாம் சுத்த விளையாட்டுத்தனமாய் இருக்கிறது. மன்ஹாட்டன் பகுதியிலிருந்து தினம் தினம் ஆயிரக்கணக்கான பேர் கார்களை வாடகைக்கு எடுத்துப் போகிறார்கள்," என்றார்.

அவருடைய குறுக்கீட்டைக் கூப்பர் லட்சியம் பண்ணவில்லை. "எல்லா வாடகைக் கார் கம்பெனிகளிலும், காரை

யார் எடுத்துச் சென்றார்கள், அது எவ்வளவு மைல் சென்று வந்தது முதலிய விவரங்கள் கம்ப்யூட்டர் முறையில் பதிவாகின்றன. பெண்கள் வாடகைக் கார் எடுப்பது சொற்பம் தான். ஆகையால் நான் எல்லாக் கம்பெனிகளிலும் சுலபமாய் விசாரிக்க முடிந்தது. இந்தக் குறிப்பிட்ட பெண், 'பட்ஜெட்' என்ற கம்பெனியில் வாடகைக் கார் எடுத்திருக்கிறாள். கொள்ளை நடந்த இரவு எட்டு மணிக்கு ஒரு செவர்லே காரை எடுத்துச் சென்றிருக்கிறாள். விடிகாலை இரண்டு மணிக்குக் காரைத் திரும்பக் கொண்டு வந்து ஒப்படைத்தி ருக்கிறாள்."

"கொள்ளைக்கு உபயோகப்படுத்தியது அந்தக் கார்தான் என்று எப்படிச் சொல்கிறாய்?"

இதெல்லாம் முட்டாள் தனமான கேள்விகள் என்று கூப்பருக்குக் கோபம் வந்தது. அலுப்புடன் பதிலளித்தான்:

'மன்ஹாட்டனிலிருந்து லூயிஸின் மாளிகை சரியாய் முப்பத்திரண்டு மைல் தூரத்தில் இருக்கிறது. போக முப்பத்தி ரண்டு மைல், திரும்ப முப்பத்திரண்டு மைல். வாடகைக்கு எடுத்துப் போன செவர்லே கார் அன்று எவ்வளவு மைல் ஓடி யிருக்கிறது என்று பார்த்தேன். சரியாய் அறுபத்து நாலு மைல் ஓடியிருக்கிறது. அந்தப் பெண் எல்லென் என்ற பெயரில் காரை வாடகைக்கு எடுத்திருக்கிறாள்."

"அனேகமாய் அது பொய்ப் பெயராக இருக்கும்," என்றார் ஓர் அதிகாரி.

"ஆமாம். பொய்ப் பெயர் தான் அவளுடைய அசல் பெயர் ட்ரேஸி." என்றான் கூப்பர்.

அத்தனை பேரும் பிரமிப்புடன் அவனை பார்த்தார்கள். "எப்படித் தெரியும் உனக்கு?" என்றார் ரெயினால்டஸ்.

"பொய்யான பெயரும் பொய்யான முகவரியும் கொடுத்திருந்தாளே தவிர, வாடகைக் காருக்கான பாரத்தில் கையெழுத்துப் போட்டிருக்கிறாள். அதில் அவளுடைய கைரேகை பதிவாகியிருக்கிறது. அதைப் போலீஸ்

*ஸ்டேஷனுக்கு எடுத்துச் சென்று, பெண் குற்றவாளிகளின் கை ரேகைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கச் சொன்னேன். அந்தக் கைரேகையும் ட்ரேஸி என்ற குற்றவாளியின் கைரேகையும் ஒன்றாயிருந்தது. லூஸியானா பெண்கள் சிறையில் கொஞ்ச நாள் அடைபட்டிருந்தவள் இந்த ட்ரேஸி. ஒரு வருடத்துக்கு முன்பு அவளை நான் சந்தித்துப் பேசியிருக்கிறேன். உங்களுக்கும் நினைவிருக்குமே - ரெனாயிர் ஓவியம் திருட்டுப் போன விஷயம்?"*

*"ஆமாம், ஞாபகம் வருகிறது," என்றார் ரெயினால்ட்ஸ். "அவள் நிரபராதி என்று சொன்னாயே?"*

*"நிரபராதிதான் - அப்போது. இப்போது அல்ல. லூயிஸ் மாளிகையில் கொள்ளையடித்தவள் இவள் தான்," என்றான் கூப்பர்.*

*எல்லோரும் அவனைப் பிரமிப்புடன் பார்த்தார்கள்.*

## 41

*இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் நிர்வாகிகள் கூட்டத்தில்-*

*கோடீஸ்வரி லூயிஸின் நகைகளைத் திருடியவள் ட்ரேஸிதான் என்று துப்பறியும் நிபுணன் கூப்பர் சொன்னதும் -*

*ராஸ்கல்! எவ்வளவு பெரிய துப்பறியும் வேலை செய்து விட்டு, அது ஒன்றும் பிரமாதமில்லை என்பது போல் பேசுகிறான்! கூப்பரிடம் கம்பெனியின் தலைவருக்குப் பொறாமை கூட ஏற்பட்டது. அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. "அருமையாய் வேலை செய்திருக்கிறாய் கூப்பர். நிஜமாகவே பிரமாதமான வேலை. இனி அவளை மடக்கிவிடலாம். போலீசுக்குச் சொல்லி -"*

*"நடவாது! அவள் மீது என்ன குற்றம் சுமத்த முடியும்?" என்றான் கூப்பர். "காரை வாடகைக்கு எடுத்துப் போனாள்*

என்று சொல்லலாம். அது ஒரு குற்றமா? எந்தப் போலீஸ்காரனாலும் அவளை அடையாளம் காட்ட முடியாது. அவளுக்கு எதிராகக் கடுகத்தனை சாட்சியம் கூடக் கிடையாது."

ஓர் அதிகாரி அங்கலாய்த்தார்.

"பிறகு நாம் என்னதான் செய்வது? அவள் பாட்டுக்கு ஜாம் ஜாமென்று போகும்படி விட்டு விடுவதா?"

"இந்தத் தடவை விட்டு விடத்தான் வேண்டும்," என்றான் கூப்பர். "இனி அவள் சும்மா இருக்கமாட்டாள். மறுபடியும் திருட்டுப் புரட்டு வேலையில் இறங்குவாள். அவள் யாரென்று எனக்குத் தெரிந்து விட்டதால் நான் விட மாட்டேன். அடுத்த முறை அவளைப் பிடித்து விடுவேன்."

சொல்லிவிட்டுத் தன் பாக்கெட்டிலிருந்து ஒரு சிறிய கறுப்பு நோட்டை வெளியெடுத்தான். அதில் 'ட்ரேஸி' என்று கொட்டை எழுத்தில் குறித்துக்கொண்டான்.

'எனக்கு ஒரு புது வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டிய சமயம் வந்தாயிற்று.' ட்ரேஸி தீர்மானம் செய்து கொண்டாள்.

ஆனால் என்ன மாதிரியான வாழ்க்கை அமைத்துக் கொள்வது?

'நான் சூதுவாது அறியாதவளாக, கள்ளம் கபடமற்றவளாக இருந்தேன். சுத்த ஏமாளியாக இருந்தேன்.

இப்போது?

திருடியாகிவிட்டேன்.

ஆமாம். இப்போது நான் ஒரு திருடி.'

ரொமானோவும், ஆர்ஸெட்டியும், பெர்ரி போப்பும் ஜட்ஜ் லாரென்ஸும் அவளுக்கு நினைவு வந்தார்கள்.

'இல்லை. நான் திருடி அல்ல.

பழிக்குப் பழி வாங்கியவள். வஞ்சம் தீர்த்தவள். ஆம். அதுதான் நான். சாகசக்காரியாக, துணிச்சல்காரியாக மாறி

யிருக்கிறேன். போலீஸ்காரர்கள் கண்ணில் மண்ணைத் தூவி யிருக்கிறேன். மோசடித் திருடர்கள் இரண்டு பேரை மடக்கி, என்னை ஏமாற்றப் பார்த்த நகை வியாபாரியை ஏமாற்றி யிருக்கிறேன்.'

சிறைத் தோழியான நீக்ரோக்காரியையும், குழந்தை ஆமியையும் நினைத்துக் கொண்டாள். நெஞ்சில் ஒரு வலி உதித்தது.

ஓர் உத்வேகத்துடன் கடைக்குப் போய், ஒரு பொம்மலாட்ட செட் வாங்கினாள். அதை ஆமிக்கு அனுப்பி வைத்தாள். பொம்மைகளுடன் ஒரு கார்டு: "**உனக்காகச் சில புதிய சினேகிதர்கள் அனுப்பியிருக்கிறேன். உன்னை மறக்க முடியவில்லை. அன்புடன் ட்ரேஸி.**"

இன்னொரு கடைக்குச் சென்று நீக்ரோக்காரிக்கும் ஒரு பரிசு வாங்கி அனுப்பினாள். தனியாக, இருநூறு டாலர் மணியார்டரிலும் அனுப்பினாள். 'உனக்கு என் நன்றி எர்னி, - ட்ரேஸி' என்று மட்டுமே அதில் எழுதினாள்.

'நான் பட்ட கடனையெல்லாம் தீர்த்தாயிற்று' என்று எண்ணிக் கொண்டாள். உள்ளத்தில் தெம்பு ஏற்பட்டது. இனி எங்கே வேண்டுமானாலும் போகலாம். என்ன வேண்டுமானாலும் செய்யலாம்.

தன் சுதந்திரத்தைக் கொண்டாட வேண்டுமென்று தோன்றியது. உயர்தரமான ஒட்டலில் உயர்தரமான அறை எடுத்துக் கொண்டாள். நாற்பத்தேழாவது மாடி. அங்கிருந்து பார்த்தபோது பெரிய பெரிய கட்டிடங்களும் பாலமும் அற்பமானதாக, சின்னதாகத் தெரிந்தன.

முன்பு அவள் வசித்து வந்த மட்டமான, அழுக்கான இடம் இதோ சில மைல் தூரத்தில்தான் இருக்கிறது.

வேண்டாம். அந்த நினைப்பே வேண்டாம். 'இனி ஒரு போதும் அந்த இடத்துக்குத் திரும்ப மாட்டேன்' என்று சபதம் செய்து கொண்டாள்.

ஓட்டல் நிர்வாகம் தன் அன்பளிப்பாக அனுப்பியிருந்த ஷாம்பேய்ன் புட்டியைத் திறந்தாள். நகரத்தின் மாலைச் சூரியன் மங்குவதைப் பார்த்தபடியே மெல்ல மெல்ல உறிஞ்சினாள்.

வானத்தில் சந்திரன் எழுந்த போது அவளுள் ஒரு தீர்மானம் உருவாகியிருந்தது-

லண்டனுக்குச் செல்வதென்று.

ஆம். அனுபவிப்பதற்கு எவ்வளவோ ஆனந்தமான விஷயங்கள் காத்திருக்கின்றன. என் கடன்களைச் செலுத்தி யாகி விட்டது. இனிமேல் கொஞ்சம் மகிழ்ச்சியாக இருக்கலாம். அதற்கு எனக்கு உரிமை உண்டு.

படுக்கையில் படுத்து, டி.வி. யைத் திருப்பினாள்.

யாரோ இரண்டு பேரைப் பேட்டி கண்டு கொண்டிருந்தார் டி.வி. நிருபர்.

ஒருவர் பெயர் போரிஸ். ரஷ்யர். குள்ளமாயும் குண்டாயும், தொள தொளா உடையிலும் இருந்தார். மற்றவர் நேர் எதிர். ஒல்லியாய் உயரமாய் இருந்தார். அழகாக உடை தரித்திருந்தார். அவர் பெயர் பீட்டர், ருமேனியக்காரர்.

இருவருக்கும் பொதுவான விஷயம் என்ன இருக்க முடியும் என்று ட்ரேஸிக்குப் புரியவில்லை.

"செஸ் போட்டி எந்த இடத்தில் நடக்கப் போகிறது!" என்று கேட்டார் டி.வி. நிருபர்.

இருவரும் செஸ் சாம்பியன்கள் என்று ட்ரேஸிக்குப் புரிந்தது.

"கருங்கடலில் உள்ள ஸோச்சி என்ற அழகான ஊரில்," என்று பதிலளித்தார் போரிஸ்.

"நீங்கள் இரண்டு பேருமே சர்வதேசப் புகழ் பெற்ற கிராண்ட் மாஸ்டர்கள், சார். ஆகவே இந்தச் செஸ் போட்டி ரொம்பப் பரபரப்பு ஏற்படுத்தியிருக்கிறது!" என்றார் நிருபர் "உங்களுடைய முந்தைய போட்டிகளில் ஒருவரையொருவர்

வென்றிருக்கிறீர்கள். கடைசியாக நடந்த போட்டி யாருக்கும் வெற்றி தோல்வி இல்லாமல் டிராவில் முடிந்திருக்கிறது. மிஸ்டர் பீட்டர், உங்களிடம் ஒரு கேள்வி. மிஸ்டர் போரிஸ் தான் இப்போதைய சாம்பியனாக விளங்குகிறார். அவரை இம்முறை நீங்கள் தோற்கடிக்க முடியும் என்று நினைக்கிறீர் களா?"

"நிச்சயமாய்," என்றார் பீட்டர்.

"அதற்குச் சான்ஸே கிடையாது," என்று மறுத்துச் சொன்னார் போரிஸ்.

செஸ் விளையாடுவது பற்றி ட்ரேஸிக்கு எதுவும் தெரியாது.

ஆனால் இரண்டு பேரிடமும் தென்பட்ட அகங்காரம்! அவளுக்கு வெறுப்பு ஏற்பட்டது.

ரிமோட் கன்ட்ரோலை அழுத்தினாள். டி.வி. அணைந்தது. அவள் தூங்கலானாள்.

அடுத்த நாள் காலையிலேயே ஒரு டிராவல் ஏஜென்ஸிக்குச் சென்றாள் ட்ரேஸி.

'ராணி எலிஸபெத் 2' என்ற ஆடம்பரக் கப்பலுக்கு டிக்கெட் வாங்கினாள். அதில் சொகுசான அறையைப் 'புக்' செய்தாள்.

முதல் தடவையாக அவள் வெளிநாடு செல்கிறாள். குழந்தையைப் போலக் குதூகலித்தது அவள் மனம். அடுத்த மூன்று தினங்களைத் துணிமணிகளும், பெட்டிகளும் வாங்குவதில் செலவழித்தாள்.

புறப்படும் தினம் வந்தது. ஒரு படகு டாக்ஸியில் துறைமுகத்தை அடைந்தாள்.

ஆடம்பரக் கப்பல் நிறுத்தப் பட்டிருந்த இடத்தில் ஏகப்பட்ட கூட்டமாக இருந்தது. எங்கு பார்த்தாலும் புகைப்படக்காரர்களும் டெலிவிஷன் நிருபர்களும் நிறைந்திருந்தார்கள்.

முதலில் ட்ரேஸிக்குக் கலவரம் ஏற்பட்டது - தன்னைக் காணத்தான் வந்திருக்கிறார்களோ என்று.

பிறகுதான் கவனித்தாள். கப்பலுக்குச் செல்லும் வழியில் அந்த இரண்டு செஸ் வீரர்களும் நின்றிருந்தார்கள். அவர் களைத் தான் பேட்டி எடுத்துக்கொண்டிருந்தார்கள் நிருபர்கள்.

ட்ரேஸி அவர்களைத் தாண்டிக் கொண்டு நடந்தாள். நுழைவாயிலில் இருந்த கப்பல் அதிகாரியிடம் பாஸ் போர்ட்டைக் காட்டிவிட்டுக் கப்பலுக்குள் நுழைந்தாள். அங்கிருந்த அதிகாரி அவள் டிக்கெட்டைப் பார்த்து விட்டு அவளுடைய அறைக்குச் செல்ல வழிகாட்டினார்.

பிரமாதமான அறை, அவளுக்கென்று தனியே பால் கனியும் இருந்தது. ஏகப்பட்ட கட்டணம்தான். இருந்தாலும் கொடுத்தது தகும் என்று தோன்றியது.

லக்கேஜ்களை வைத்து விட்டுக் கப்பலைச் சுற்றிப் பார்த்தாள். பிரயாணிகளும் அவர்களை வழியனுப்ப வந்தவர்களும் பார்ட்டி நடத்திக்கொண்டிருந்தார்கள். ஷாம் பெய்னும் சம்பாஷணைகளும் சிரிப்பும் பொங்கி வழிந்தன.

மேல் தளத்தில் ஏறி நடந்தாள். வழியெங்கும் தன்னை விழுங்கி விடுவது போல் பார்க்கும் ஆண்களையும் பொறாமை யுடன் நோக்கும் பெண்களையும் அவள் கவனிக்கவேயில்லை.

'இறங்க வேண்டியவர்கள் இறங்குங்கள்!' என்ற எச்சரிக்கை ஒலித்தது. கப்பலின் ஊளை சிலீரென்று கேட்டது.

ட்ரேஸியின் உள்ளத்தில் ஒரு பரபரப்பும் எதிர்பார்ப்பும் நிரம்பின.

இது வெறும் கப்பல் பிரயாணமல்ல.

இன்னதென்று தெரியாததோர், எதிர்காலத்துக்கான பயணம்.

கப்பல் அசைந்தது. துறைமுகத்தை விட்டுக் கப்பல் நகரத் தொடங்கியது. மேல் தளத்தில் பிரயாணிகளுடன் பிரயாணி

யாகச் சற்று நேரம் நின்றிருந்தாள். சுதந்திரச் சிலை கொஞ்சம் கொஞ்சமாகப் பார்வையிலிருந்து மறைந்தது.

கப்பலின் ஒவ்வொரு பகுதியாகப் பார்த்தபடியே நடந்தாள்.

ஒரு தனியான நகரம் போல் விளங்கியது அந்தக் கப்பல். பதின்மூன்று அடுக்கு உயரம். தொள்ளாயிரம் அடி நீளம். நாலு ரெஸ்டாரண்டுகள், ஆறு மதுபான மண்டபங்கள், இரண்டு நைட் கிளப்கள், மஸாஜ் செய்யப்படும் இடங்கள், இருபது முப்பது கடைகள், நாலு நீச்சல் குளம், ஓர் உடற் பயிற்சி மைதானம், கால்ஃப் ஆடவும், ஜாகிங் செல்லவும் தனித் தனிப் பாதைகள்.

'அப்பப்பா! இந்தக் கப்பலை விட்டுப்போகவே எனக்கு மனசு வராது!' என்று ட்ரேஸி அதிசயப்பட்டாள்.

சிறியதாயும் வசதியாயும் இருந்த ஓர் இடத்தை ட்ரேஸி தேர்ந்தெடுத்தாள். சாப்பிட உட்காரலாம் என்று நினைத்த சமயம் -

"ஹலோ!" என்ற குரல் அவளைத் தடுத்தது.

நிமிர்ந்து பார்த்தாள்.

ரயிலில் அவளை ஏமாற்ற முயன்ற இருவரில் ஒருவன். இளைஞன்.

"என்ன மகிழ்ச்சிகரமான சந்திப்பு! நானும் உட்காரலாமா?" என்றான்.

"தாராளமாய்."

அவளுக்கு எதிரில் இருந்த நாற்காலியில் காலை நீட்டிக் கொண்டு, சாய்ந்து உட்கார்ந்தான் அவன். ட்ரேஸியைப் பார்த்துக் கவர்ச்சியாய்ப் புன்னகை செய்தான். "நாம் இரண்டு பேரும் சினேகிதர்களாக இருப்போமே? சொல்லப்போனால் இரண்டு பேருமே ஒரே நோக்கத்துடன் தான் இந்தக் கப்பலில் போகிறோம். இல்லையா?"

அவன் என்ன சொல்கிறானென்று ட்ரேஸிக்குப் புரியவில்லை. "இதோ பாருங்கள் மிஸ்டர் -"

“என் பெயர் ஜெஃப்,” என்றான்.

“எந்தப் பெயராயிருந்தாலும் சரி.” - ட்ரேஸி எழுந்திருக்க முயன்றாள்.

“கொஞ்சம் இரு,” என்றான் ஜெஃப். “அந்த ரயில் நிகழ்ச்சி பற்றி நான் உனக்கு விளக்க வேண்டும்.”

“அதிலே விளக்குவதற்கு என்ன இருக்கிறது? உங்கள் சதித்திட்டத்தை ஒரு முட்டாள் குழந்தைகூடப் புரிந்து கொள்ளும். நான் புரிந்து கொண்டேன்.”

“அந்த நகை வியாபாரிக்கு நான் கொஞ்சம் கடமைப் பட்டிருந்தேன்.” ஜெஃப் சிரித்தான். “அதனால் தான் அந்த மோசடி வேலையைச் செய்யலாமென்று பார்த்தேன். மனிதர் என்னிடம் இப்போது கோபமாக இருப்பார்.” மறுபடி சிரித்தான்.

அன்றைக்கு ரயிலில் எந்த இனிமையான, இளமையான பேச்சு அவளை மயக்கியதோ அதே பேச்சு! ‘பாவம், இவளுக்கு விலங்கு மாட்ட வேண்டாம். எங்கும் ஓடி விட்ட மாட்டாள்’ என்று தன் தோழனிடம் இவன் சிபாரிசு செய்தது ட்ரேஸிக்கு நினைவு வந்தது. கூடவே கோபமும் வந்தது.

“எனக்கும் உங்கள் மீது கோபம் தான்,” என்றாள். காட்டமாக, “அதிருக்கட்டும். கட்டுமரத்தில் போக வேண்டியவரல்லவா நீங்கள்! இவ்வளவு பெரிய கப்பலில் எப்படி வந்தீர்கள்?”

அவளுடைய கிண்டலை ரசித்துச் சிரித்தான் ஜெஃப். “மாக்ஸ்மிலியன் இந்தக் கப்பலில் வருகிறார். இந்தக் கப்பலெல்லாம் அவருக்கு கட்டுமரம் மாதிரிதான்... ரொம்பச் சாதாரணம்.”

“மாக்ஸ்மிலியனா? யார் அவர்?”

அவன் ட்ரேஸியைப் பார்த்துக் கேட்டான். “யார் என்றா கேட்கிறாய்? மாக்ஸ்மிலியனை நிஜமாகவே தெரியாது?”

“தெரியாது.”

*"மாக்ஸ்மிலியன் உலகத்தின் பெரும் பணக்காரர்களில் ஒருவர். தனக்குப் போட்டியாக முளைக்கிற கம்பெனிகளை அடித்து வீழ்த்துவது அவருடைய பொழுதுபோக்கு. பந்தயக் குதிரைகள், அழகான பெண்கள் அவரிடம் ஏராளமாக உண்டு. மூட்டை, மூட்டையாகப் பணம்..."*

*"அதிலே ஒரு மூட்டையை நீங்கள் அடிக்கலாமென்று இப்போது வந்திருக்கிறீர்களாக்கும்?"*

*"ஆமாம். ஒரு மூட்டை அல்ல. முடிந்தால் நாலைந்து மூட்டை!" என்றான் ஜெஃப்.*

## 42

*மாக்ஸ்மிலியன் என்ற கோடீசுவரரிடம் கொள்ளையடிப்பதற்காகவே தான் அந்தக் கப்பலில் வருவதாக ஜெஃப் சொன்னான்.*

*சொல்லிவிட்டு ட்ரேஸியைக் கண்களால் ஆராய்ந்தான். "ட்ரேஸி, இப்ப நாம் என்ன செய்ய வேண்டும் தெரியுமா?"*

*"தெரியாமலென்ன? ஒருவருக்கொருவர் குட் பை சொல்ல வேண்டும்!" என்றாள் ட்ரேஸி கண்டிப்புடன். அவனுடன் எந்த உறவும் வைத்துக் கொள்ள அவள் விரும்பவில்லை.*

*அவன் அவளையே கவனித்தபடி உட்கார்ந்திருந்தான். ட்ரேஸி உட்கார்ந்திருக்கவில்லை. எழுந்து வெளியேறினாள்.*

*கொஞ்சம் சந்தோஷமாக இருக்கலாமென்று அல்லவா இப்படிப் பயணம் புறப்பட்டோம்? இதை இவன் கெடுத்து விடுவான் போலிருக்கிறதே?*

*சாப்பாடு முடிந்த பிறகு கப்பலின் மேல்தளத்துக்குச் சென்றாள். என்ன அற்புதமான இரவு! வெல்வெட்டு வானத்தில் நட்சத்திரங்கள் மாயாஜாலமாக இறைந்து கிடந்தன. கம்பிகளைப் பிடித்துக் கொண்டு நிலவில் நின்றாள் ட்ரேஸி.*

மினுமினுக்கும் அலைகள் மென்மையாக மோதிக்கொண்டிருந்தன. இரவுக் காற்றின் ஓசையைச் செவிமடுத்துக் கொண்டிருந்த சமயம் -

ஜெஃப் அவள் பக்கத்தில் வந்து நின்று கொண்டான்.

"இந்த நிலவில் நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய் தெரியுமா?" என்றான். "ட்ரேஸி, கப்பல் பிரயாணத்தின் போது காதல்கள் உதிக்குமென்று சொல்கிறார்களே, அதில் உனக்கு நம்பிக்கை உண்டா?"

"ஓ, உண்டே! எனக்கு நம்பிக்கை இல்லாதது ஒன்றே ஒன்று தான்: அது நீங்கள் தான்." - படக்கென்று பதிலளித்து விட்டு, அந்த இடத்தை விட்டு நடக்க முயன்றாள் அவள்.

ஜெஃப் விடவில்லை. கூடவே வந்தான்.

"ட்ரேஸி, உனக்குச் செய்தி தெரியுமா? அந்தக் கோடீசுவரர் மாக்ஸ்மிலியன் வரவேயில்லை. கடைசி நிமிடத்தில் பிரயாணத்தை ரத்துச் செய்து விட்டாராம்."

"அடப் பாவமே! நீங்கள் செலவழித்ததெல்லாம் வீணாகி விட்டதே?"

"அப்படியும் சொல்லிவிட முடியாது." அவளை ஏற இறங்கப் பார்த்தான் ஜெஃப். "நீயும் நானும் சேர்ந்து இந்தப் பயணத்தின்போது கணிசமாகக் காசு பண்ண முடியும். என்ன நினைக்கிறாய்?"

'சரியான விடாக்கண்டனாக இருக்கிறானே' என்று நினைத்துக் கொண்டாள் ட்ரேஸி.

"ட்ரேஸி... போரிஸ், பீட்டர் என்ற இரண்டு பேரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா நீ?"

"நான் கேள்விப்பட்டிருந்தால் என்ன, கேள்விப் பட்டிருக்காவிட்டால் என்ன?"

"இரண்டு பேரும் பெரிய செஸ் ஆட்டக்காரர்கள். ஒரு செஸ் போட்டிக்காக ரஷ்யாவுக்குப் போய்க் கொண்டிருக் கிறார்கள் இந்தக் கப்பலில்," என்றான் ஜெஃப். "அந்த

இரண்டு பேருடனும் நீ செஸ் ஆடுவதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன். எக்கச்சக்கமான பணம் உனக்குக் கிடைக்கும். திருட்டு, தில்லுமுல்லு எதுவும் இல்லை. யோக்கியமான வரும்படி!"

நம்ப முடியாமல் அவனைப் பார்த்தாள் ட்ரேஸி. "என்ன சொல்கிறீர்கள்? அவர்களுடன் நான் செஸ் ஆடுவதா? அதற்கு நீங்கள் ஏற்பாடு செய்கிறீர்களா? இதற்குப் பெயர் தான் யோக்கியமான வரும்படியா?"

"அதெல்லாம் வேண்டாம். என் திட்டம் உனக்குப் பிடித்திருக்கிறதா இல்லையா?"

"ரொம்பப் பிடித்திருக்கிறது. ஆனால் ஒரே ஒரு கஷ்டம்."

"என்ன?"

"எனக்குச் செஸ் ஆடத் தெரியாது."

அவன் அவளைக் கனிவுடன் நோக்கிப் புன்னகை செய்தான். "அதைப் பற்றிக் கவலைப்படாதே. நான் உனக்குச் சொல்லித் தருகிறேன்."

"உங்களுக்குப் பைத்தியம் தான் பிடித்திருக்கிறது," என்றாள் ட்ரேஸி. "நான் ஒன்று சொல்கிறேன். கேட்கிறீர் களா? ஒரு நல்ல மனநோய் டாக்டரைப் போய்ப் பாருங்கள். குட் நைட்!"

**ம**றுநாள் காலை, ரஷ்ய செஸ்வீரர் போரிஸின் மீது ஏறத்தாழ மோதிக் கொண்டே விட்டாள்.

மேல்தளத்தில் அவர் ஜாகிங் வந்து கொண்டிருந்தார். அதே சமயம் ட்ரேஸி ஒரு வளைவில் திரும்பினாள். இருவரும் மோதிக் கொள்ளாத குறைதான்.

"இந்தாம்மா, கண் இல்லை!" என்று உறுமிவிட்டுப் போரிஸ் தன் ஓட்டத்தைத் தொடர்ந்தார்.

அவரைப் பார்த்தபடியே ட்ரேஸி ஓர் இருக்கையில் உட்கார்ந்தாள். 'சே! சரியான முரட்டு ஆசாமி!' என்று முணு

முணுத்தவாறு, தன் உடைகளை ஒரு முறை சரிசெய்து கொண்டு எழுந்தாள்.

'மனசை இனிமையாக வைத்துக் கொள்ள வேண்டும். யார் மீதும் கோபப்பட்டுப் பிரயாணத்தைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது,' என்று தன்னுள் சொல்லிக் கொண்டாள்.

தன் அறைக்குத் திரும்பிய போது, மேஜைமீது ஒரு குறிப்பு இருந்தது ஆறு முறை ஜெஃப் அவளைக் கூப்பிட்டதாக. ட்ரேஸி அதைப் பொருட்படுத்தவில்லை.

பிற்பகல் நீச்சல் குளத்துக்குச் சென்று சிறிது நேரம் நீந்தினாள். கொஞ்சம் புத்தகம் படித்தாள். மஸாஜ் நிலையத்துக்குப் போய் உடம்பு பிடித்துக் கொண்டாள். இரவுச் சாப்பாட்டுக்கு முன் லேசாக ஏதாவது அருந்தலாம் என்று பாருக்குள் சென்றாள்.

மனசுக்கு ஏகப்பட்ட உற்சாகமாக இருந்தது.

சில வினாடிகள் கனவில் மிதந்தாள். அதைக் கலைக்கிற மாதிரி, அருகில் ஒருவர் வந்து உட்கார்ந்தார் - ருமேனிய செஸ் வீரரான பீட்டர். ட்ரேஸி நிமிர்ந்து பார்த்ததும் அவர் எழுந்து வணக்கம் செலுத்தி, "நான் உங்களுக்காக ஏதாவது வரவழைக்கலாமா அழகான பெண்ணே?" என்றார்.

கொஞ்சம் தயங்கிவிட்டு ட்ரேஸி புன்னகை செய்தாள். "ஓ, நன்றி."

"என்ன சாப்பிடுகிறீர்கள்?"

ட்ரேஸி சொன்னாள்.

சர்வரிடம் ஆர்டர் கொடுத்தார் பீட்டர். "என் பெயர் பீட்டர்," என்றார்.

"தெரியும்."

"ஹாஹ்ஹா! தெரியாமலிருக்குமா? எல்லாருக்கும் தெரிந்தவனாயிற்றே நான்? உலகத்திலேயே பெரிய செஸ் சாம்பியன். எங்கள் தேசத்தில் நான் நாடறிந்த ஹீரோ வாக்கும்!" என்றார் பீட்டர். பிறகு ட்ரேஸியை இன்னும்

*நெருங்கி, அவள் தொடை மீது கை வைத்தார். "அது மட்டு மல்ல. நான் காதல் கலையிலும் மகா வல்லவன்!"*

*நமக்குத்தான் அவன் சொன்னது சரியாய்க் காதில் விழ வில்லையோ என்று நினைத்தாள் ட்ரேஸி. "என்ன சொன்னீர்கள்?"*

*"காதல் கலையிலும் நான் பெரிய ஹீரோ என்றேன்."*

*ட்ரேஸிக்குக் கோபம் வந்தது. கையிலிருந்த மதுவை அவன் மூஞ்சியில் வீசவேண்டும் போலிருந்தது. ஆனால் அடக்கிக் கொண்டாள். 'சீ! கையை எடு!' என்று சொல்ல வாயெடுத்தாள்.*

*அதற்குப் பதில் வேறொரு யோசனை தோன்றியது.*

*"மன்னியுங்கள். ஒரு சினேகிதரைப் பார்க்கப் போக வேண்டும்," என்று எழுந்து கொண்டாள்.*

*ஜெஃப் எங்கே இருக்கிறான் என்று தேடிக்கொண்டு சென்றாள். ரெஸ்டாரெண்டில் அவனைக் கண்டு பிடித்தாள்.*

*"ட்ரேஸி, என்னையா தேடிக் கொண்டு வந்தாய்?" என்றான் அவன் மகிழ்ச்சியுடன்.*

*"ஆமாம், போரிஸுடனும் பீட்டருடனும் நான் செஸ் விளையாடுவது பற்றி என்னமோ சொன்னீர்களே, அது தமாஷா அல்லது சீரியஸா?"*

*"பயங்கர சீரியஸ்! எதற்குக் கேட்கிறாய்?"*

*"இரண்டு பேருமே மரியாதை தெரியாதவர்களாக இருக்கிறார்கள். கொஞ்சம் தலையில் தட்ட வேண்டும் என்று தோன்றியது."*

*"மட்டம் தட்டுவதோடு, நாம் துட்டும் சம்பாதிக்க முடியும்."*

*"உங்கள் திட்டம் என்ன?"*

*"இரண்டு பேரையும் நீ செஸ் போட்டியில் தோற்கடிக்கப் போகிறாய்!"*

"நான் சீரியஸாய்க் கேட்கிறேன்."

"நானும் சீரியஸாய்த் தான் சொல்கிறேன்."

"முன்னமே நான் சொல்லிவிட்டேன். எனக்குச் செஸ் ஆடத் தெரியாது. ராஜாவுக்கும் சிப்பாய்க்கும் என்ன வித்தியாசம் என்று கூடத் தெரியாது."

"அந்தக் கவலை உனக்கு வேண்டாம்," என்றான் ஜெஃப். "நான் உனக்குச் சிறிது பாடம் சொல்லித் தருகிறேன். அதை வைத்தே இரண்டு பேரையும் நீ கசாப்புப் போட்டு விடலாம்."

"இரண்டு பேரையுமா?"

"ஓ, அதைச் சொல்ல மறந்து விட்டேனா? ஒரே சமயத்தில் நீ இரண்டு பேருடனும் ஆடப் போகிறாய்!" என்றான் ஜெஃப்.

ரஷ்ய ஆட்டக்காரரான போரிஸ் மதுவை உறிஞ்சிக் கொண்டிருந்தபோது ஜெப் அவர் பக்கத்தில் போய் அமர்ந்தான். மெதுவே ட்ரேஸியைப் பற்றிப் பேச்சுக் கொடுத்தான்.

"சார், அந்தப் பெண் பிரமாதமான செஸ் ஆட்டக்காரி." பெரிய ரகசியம் சொல்வதுபோல் அவன் குரல் தாழ்ந்து ஒலித்தது. "வேண்டுமென்றே மாறு வேடத்தில், பொய்ப் பெயரில் பயணம் செய்கிறாள்."

போரிஸ் கடுகடுத்தார்: "பெண்களுக்குச் செஸ் விளையாட வராது. அதற்கெல்லாம் மூளை வேணும்."

"இவளுக்கு நல்ல மூளை. தான் நினைத்தால் உங்களைச் சுலபமாய்த் தோற்கடிக்க முடியும் என்கிறாள்."

போரிஸ் கடகடவென்று சிரித்தார். "என்னையா! தோற்கடிப்பதா? அதுவும் சுலபமாகவா? ஹா ஹா!"

"உங்களோடும் பீட்டரோடும் அவள் ஒரே சமயத்தில் ஆடத் தயாராம். பத்தாயிரம் டாலர் பந்தயம் கட்டுகிறேன் என்கிறாள். குறைந்த பட்சம் ஒருத்தரையாவது ட்ரா பண்ணுவேன் என்கிறாள்."

மைதானத்தில் உடற்பயிற்சி செய்து கொண்டிருந்தார் ரூமேனிய செஸ் சாம்பியன் பீட்டர். ட்ரேஸி அவருடன் செஸ் விளையாட விரும்புகிறாள் என்று ஜெஃப் சொன்னதும் சிரித்தார்.

"அமெரிக்கப் பெண் என்றா சொன்னீர்கள்? எல்லா அமெரிக்கர்களும் பைத்தியங்கள்!" என்றார்.

"அவள் நல்ல செஸ் ஆட்டக்காரி சார்."

பீட்டர் சிரித்தார். "நல்ல ஆட்டக்காரியாயிருந்தால் போதாது, மிஸ்டர்! ரொம்பப் பிரமாதமான செஸ் சாம்பியனாக இருக்க வேண்டும். ஏனென்றால் நான் ரொம்பப் பிரமாதமான செஸ் சாம்பியன்!"

"அதனால் தான் அவள் உங்களுடன் விளையாட அவ்வளவு ஆர்வமாயிருக்கிறாள் சார்! நீங்கள் தோற்றுப் போனால், உங்கள் ஆட்டோகிராப் போட்ட போட்டோ ஒன்று கொடுத்தால் போதும். நீங்கள் ஜெயித்தால் பத்தாயிரம் டாலர் ரொக்கமாக உங்களுக்குக் கிடைக்கும்!"

"கற்றுக்குட்டிகளுடன் இந்தப் பீட்டர் விளையாட மாட்டான்!"

"அந்த ரொக்கத்தை நீங்கள் எந்த நாட்டுப் பாங்க்கில் போடச் சொல்கிறீர்களோ அங்கே போடத் தயார்!"

"எதுவும் தேவையில்லை."

"நல்லது," பெருமூச்சு விட்டான். "போரிசுடன் மட்டும் தான் அவள் விளைாட வேண்டியிருக்கும். என்ன செய்ய?"

"இரு, இரு! இந்தப் பெண்ணுடன் போரிஸ் விளையாடப் போகிறாரா?"

"ஆமாம். அதிலென்ன சந்தேகம்? முதலில் உங்கள் இருவருடனும் ஒரே சமயத்தில் விளையாட விரும்பினாள். நீங்கள் தான் மாட்டேனென்று சொல்லிவிட்டீர்களே. அதனால் -"

"இந்த மாதிரி ஒரு... ஒரு...." சரியான வார்த்தை கிடைக்காமல் திணறினார் பீட்டர். "ஒரு மண்டைக் கனம் பிடித்த

*பெண்ணை நான் பார்த்ததேயில்லை. உலகத்திலேயே பெரிய சாம்பியன்கள் நாங்கள். எங்களைப் போய்த் தோற்கடிக்கிறேன் என்கிறாளே! பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து தப்பி வந்தவள் போலிருக்கிறது!"*

*"கொஞ்சம் ஏறுமாறான பெண்தான்," என்று அவருக்குத் தலையாட்டினான் ஜெஃப். "ஆனால் செமை துட்டு. அத்தனையும் ரொக்கம்!"*

*"அவளைத் தோற்கடித்தால் பத்தாயிரம் டாலர் கிடைக்கும் என்றா சொல்கிறாய்?"*

*"ஆமாம்."*

*"சரி, பணத்துக்கு யார் பொறுப்பு?"*

*"இந்தக் கப்பலின் கஜானா அதிகாரி சார்."*

*பீட்டர் சிந்தனை செய்தார். அவ்வளவு தொகையைப் போரிஸ் மட்டும் தான் தட்டிக் கொண்டு போக வேண்டுமா? நாமும் சம்பாதித்தாலென்ன?*

*"நண்பரே, செஸ் போட்டிக்கு நான் சம்மதிக்கிறேன். எங்கே நடக்கப் போகிறது? என்றைக்கு?"*

*"வெள்ளிக் கிழமை இரவு சார், பத்து மணிக்கு, ராணி மண்டபத்தில்."*

***ஏ**ற்பாடுகள் முடிந்துவிட்டதென்று ஜெஃப் சொன்ன போது*

*ட்ரேஸியினால் நம்ப முடியவில்லை.*

*"அவர்கள் ஒப்புக் கொண்டார்கள் என்றா சொல்கிறீர்கள்?"*

*"ஆமாம், ஆமாம்."*

*"எனக்கு வயிற்றைக் கலக்குகிறது."*

*"இரு, ஒரு ஈரத்துணி எடுத்து வருகிறேன்," என்ற ஜெஃப் குளியலறைக்குச் சென்று ஓர் துணியைப் பச்சைத் தண்ணீரில் நனைத்து எடுத்து வந்தான்.*

*ட்ரேஸியின் நெற்றிமீது அதைச் சுற்றினான். "இப்ப எப்படி இருக்கிறது?"*

"இன்னும் மோசமாயிட்டுது! ஒற்றைத் தலைவலி வந்த மாதிரி இருக்கிறது."

"ட்ரேஸி, நான் சொல்வதைக் கேள். இந்த மாதிரி நிலைமையில் கொஞ்சம் படபடப்பாக இருப்பது சகஜம் தான்."

அவள் குபுக்கென்று எழுந்து கொண்டாள். நெற்றி மீதிருந்த துவாலையை வீசியடித்தாள். "இது மாதிரியான நிலைமையா? இந்த மாதிரியான நிலைமை எனக்கு என்றைக்கும் ஏற்பட்டது கிடையாது! சர்வதேசப் புகழ் பெற்ற இரண்டு செஸ் சாம்பியன்களுடன் நான் ஆடப் போகிறேன்! அதுவும் உங்களிடம் ஒரே ஒரு செஸ் பாடம் படித்துவிட்டு-"

"இரண்டு," என்று திருத்தினான் ஜெஃப். "செஸ் விளையாட்டில் இயல்பாகவே உனக்குத் திறமை உண்டு!"

"கடவுளே! கடவுளே! ஏன் தான் உங்களிடம் போய் மாட்டிக் கொண்டேனோ!"

"முதலில் கொஞ்சம் அமைதியாய் இரு. என்ன ஆகிவிடும்?"

"என்ன ஆகிவிடுமா? குடியே முழுகப் போகிறது! கப்பலில் இருக்கிற அத்தனை பேரும் என்னை வேடிக்கை பார்க்கப் போகிறார்கள்!"

"பார்க்க வேண்டும்! அதற்காகத்தான் இவ்வளவும்!" பூரிப்புடன் சொன்னான் ஜெஃப்.

அடுத்து, கப்பலின் கஜானா அதிகாரியிடம் போய் ஏற்பாடுகள் செய்தான். பந்தயப் பணமான 20000 டாலரை அவரிடம் ஒப்படைத்தான்.

செஸ் பந்தயம் பற்றிக் கப்பல் பூரா சேதி பரவிவிட்டது. பிரயாணிகள் ஜெஃப்பை மொய்த்துக்கொண்டு நிஜமாகத் தான் அப்படி ஒரு போட்டி நடக்கப் போகிறதா என்று விசாரித்தார்கள்.

"ஆமாம்," என்று எல்லாருக்கும் உறுதி கூறினான்.

ஒரு பிரயாணி முன்வந்து, "யார் ஜெயிப்பார்கள் என்று நான் ஒரு சிறு தொகை பந்தயம் கட்டலாமா?" என்று கேட்டார்

"ஓ! எவ்வளவு வேண்டுமானாலும் கட்டலாம்!" என்றான் ஜெஃப்.

அந்தப் பிரயாணி ஒரு சிறு தொகை கட்டினார் - ட்ரேஸி ஜெயிக்க மாட்டாளென்று. அவ்வளவு தான் கப்பலில் இருந்த அத்தனை பேரும் பணம் கட்டினார்கள். கப்பல் உயர் அதிகாரிகள் முதல் கூலிப் பையன் வரை பந்தயம் கட்டாதவர் யாருமில்லை. ஐந்து டாலர் கட்டியவரும் உண்டு. ஐயாயிரம் டாலர் கட்டியவர்களும் உண்டு. எல்லாருமே ரஷ்ய சாம்பியன் ஜெயிப்பார் என்றேதான் பந்தயம் கட்டினார்கள். ட்ரேஸி ஜெயிப்பாள் என்று யாருமே கட்டவில்லை.

கப்பலின் கஜானா அதிகாரிக்கு இதைப்பற்றிக் கொஞ்சம் சந்தேகம் ஏற்பட்டது. கப்பல் காப்டனிடம் போய்ச் சொன்னார். "இப்படி ஒரு அமர்க்களம் நான் பார்த்ததே யில்லை சார். ஒருத்தர் பாக்கி இல்லாமல் அத்தனை பேரும் பந்தயம் கட்டியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட இரண்டு லட்சம் டாலர் என்னிடம் சேர்ந்திருக்கிறது."

காப்டன் மோவாயைச் சொறிந்தார். "அந்த ரஷ்யர், ருமேனியர் இரண்டு பேருமே அசல் ஆசாமிகள்தானா? சும்மா ஏமாற்றுக்காரர்களாக இருக்கப் போகிறார்கள்?"

"இல்லை சார். அசல் பேர் வழிகள் தான்."

"இரண்டு பேரும் வேண்டுமென்றே தோற்றுப் போக மாட்டார்களே ?"

"ஒரு நாளும் மாட்டார்கள் சார். மகா கௌரவம் பார்க்கிறவர்கள். அத்தோடு, ஊர் பேர் தெரியாத ஒரு பெண்ணிடம் தோற்றுவிட்டுப் போனால் அவர்கள் நாட்டில் அவர்களைத் தீர்த்துக் கட்டிவிடுவார்கள்."

"என்னவோ எனக்கும் சந்தேகமாகத்தான் இருக்கிறது. ஆனால் ஒன்று. எந்த விளையாட்டிலும் மோசடி தப்பாட்டம் எல்லாம் உண்டு. ஆனால் செஸ்ஸில் மட்டும் கிடையாது," என்ற காப்டன், தன் பர்ஸைத் திறந்து பணம் எடுத்தார். "இந்தாருங்கள். என் பெயரிலும் ஐம்பது பவுன் கட்டுங்கள்," என்றார்.

வெள்ளிக் கிழமை இரவு.

மணி ஒன்பது.

ராணி மண்டபம் என்ற அறையில் முதல் வகுப்புப் பிரயாணிகள் நிரம்பி வழிந்தார்கள். இரண்டாவது மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளும், ட்யூட்டி முடிந்த கப்பல் சிப்பந்திகளும் எப்படியோ உள்ளே புகுந்து இடம் பிடித்தார்கள்.

இரண்டு தனித் தனி அறைகள் ஏற்பாடு செய்யும்படி ஜெஃப் கேட்டுக்கொண்டிருந்தான். ஒன்று இந்த ராணி மண்டபம். இங்கே ஒரு செஸ் மேஜை போடப்பட்டிருந்தது. அடுத்த அறையில் இன்னொரு செஸ் மேஜை.

"ஒருத்தரோட ஆட்டம் இன்னொருத்தரோட கவனத்தைக் கலைக்கக் கூடாது. அதற்காகத்தான் இப்படித் தனித் தனி அறை," என்று ஜெஃப் விளக்கம் சொன்னான்: பார்வையாளர்கள் தங்களுக்கு எந்த அறை பிடிக்கிறதோ அங்கே இருந்து கொள்ளலாம்.

மேஜைகளைச் சுற்றிக் கயிறு கட்டப்பட்டிருந்தது. அப்படியும் பார்வையாளர்கள் முண்டி மோதிக் கொண்டிருந்தார்கள்.

ட்ரேஸியைப் பற்றி அவர்களுக்கு எதுவும் தெரியாது. அவள் ஓர் அழகான அமெரிக்கப் பெண் என்று மட்டுமே கேள்விப்பட்டிருந்தார்கள். போரிஸும் பீட்டரும் உலகிலேயே தலைசிறந்த சாம்பியன்கள். அவர்களைப் போய் இந்தப் பெண் தோற்கடிக்கப் போகிறாளாம்! அல்லது ஆட்டத்தை ட்ரா பண்ணப் போகிறாளாம்! முடியுமா எங்காவது!

ஆட்டம் ஆரம்பிப்பதற்குச் சற்று முன் ட்ரேஸியை இருவருக்கும் அறிமுகம் செய்து வைத்தான் ஜெஃப். கிரேக்க நாட்டு ஓவியத்தில் காணப்படுகிற தேவதை மாதிரி மகா அழகாக விளங்கினாள் ட்ரேஸி.

பீட்டர் அவளைக் கூர்ந்து பார்த்துவிட்டு, "உன் நாட்டில் டோர்னமெண்ட்களில் விளையாடியிருக்கிறாயா?" என்று கேட்டார்.

"விளையாடியிருக்கிறேன்," என்றாள் ட்ரேஸி.

"உன் பெயரை நான் கேள்விப் பட்டதேயில்லை."

போரிஸும் முரட்டுத்தனமாகவே பேசினார்: "பணத்தை வைத்துக்கொண்டு என்ன செய்வதென்றே தெரியாது உங்களுக்கெல்லாம்! எப்படியோ, நான் ஒரு பெரிய தொகை ஜெயிப்பதைப் பற்றி என் வீட்டில் எல்லாரும் சந்தோஷப் படுவார்கள்."

"இன்னும் நீங்கள் ஜெயிக்கவில்லை மிஸ்டர் போரிஸ்," என்றாள் ட்ரேஸி அமைதியாக.

இடிபோல் போரிஸ் சிரித்த சிரிப்பு அந்த அறையெங்கும் எதிரொலித்தது. "மை டியர் லேடி, எனக்கு உன்னைப் பற்றித் தெரியாது. ஆனால் என்னைப் பற்றித் தெரியும். நான் மாபெரும் செஸ் சாம்பியன் போரிஸ்!"

**ம**ணி பத்து.

மேஜையில் போரிசுக்கு, எதிரே உட்கார்ந்தாள் ட்ரேஸி. 'என்ன மடத்தனத்தில் மாட்டிக் கொண்டு விட்டோம்!' என்று நூறாவது தடவையாக எண்ணிக் கொண்டாள்.

"இதிலே பயப்பட ஒன்றுமே இல்லை. என்னை நம்பு," என்று ஜெஃப் உறுதி கூறியிருந்தான்.

நான் ஒரு முட்டாள்! நம்பு என்று சொன்னதும் நம்பி விட்டேன்! எனக்குப் பைத்தியம்தான்!

இரண்டு மகத்தான செஸ் சாம்பியன்களுடன் அவள் விளையாடப் போகிறாள். செஸ்ஸைப் பற்றி அவளுக்கு எதுவுமே தெரியாது, நாலு மணி நேரம் ஜெஃப் ஏதோ சொல்லிக் கொடுத்ததைத் தவிர!

அவள் கால்கள் நடுங்கிக் கொண்டிருந்தன.

(முதல் பாகம் முற்றும்)